SWADESISM
AND
SWARAJ

சுதேசியமும் அன்னிய
விலக்கும்

திலகர், கோகலே, விருதை-
சிவஞான யோகிகள், விபின
சந்திர பாலர், ஆனந்தா குமார
சாமி, அன்னி பெசண்ட் ETC
சொற்பொழிவுகள்

Speeches & Essays of
Celebrated Indians

SWADESISM AND SWARAJ

ON

Madras.

Printed at the Swadesamitran Press.

1907.

Price As 8.] [Postage Extra.

பொருளடக்கம்.

பக்கம்.

முகவுரை.

ஸ்வராஜ்யம் இந்தியரின் லட்சியம் என்றும் சுதேசியமும் அன்னிய விலக்கும் அதற்கு உபாயங்களென்றும் இந்தியா முழுவதும் நம்மவர்க்குள் பொதுவாய் எண்ணம் உண்டாகி வருகிறது. இந்த லட்சியத்தைப் பற்றியும் இந்த உபாயங்களைப் பற்றியும் நம்மில் மகான்களான தேசாபிமானிகளும் மற்றோரும் பற்பல இடங்களில் சமயம் நேர்ந்தபோது பிரசங்கங்கள் செய்தும் வியாசங்களெழுதியும் வருகிறார்கள். ஆனால் இவைகள் ஆங்கில பாஷையிலேயே இருத்தல் அவசியமான படியால் ஆங்கில மறியாத ஜனங்களுக்கு இம்மகான்களுடைய அரும்பெரும் கருத்துகளும் வாக்கியங்களும் தெரியாமற் போகின்றன. நம் பெரியோர் அப்போதப்போது தெரிவிக்கும் கருத்துகளை நமது ஜனங்களறியாமற்போனால், அவர் மனது விசாலம் பெறுவதும் அவர்களுக்கு தேசாபிமானம் உண்டாவதும் கஷ்டம். ஆகையால் மேற்கண்டபடி மகான்களாகிய நம் தேசாபிமானிகள் ஆங்கிலத்தில் வெளியிட்டவைகளைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதியிருக்கிறோம். இந்த தேசாபிமானிகளில் இருவர் வெங்காளத்தைச் சேர்ந்தவரும், இருவர் புனாவைச் சேர்ந்தவரும், இருவர் சென்னையைச் சேர்ந்தவரும், இருவர் கூர்ச்சர நாட்டைச் சேர்ந்தவரும் இருவர் அன்னியருமாயிருக்கிறார்கள் இப்பத்துப் பேர்களில் இருவர் ஸ்திரீகளாயுமிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் தற்காலம் இந்தியரின் மனோரதங்களையும் அவர்களுடைய ஆவல்களையும் பற்றிச் சொல்லியிருப்பதை நம்மவர் அறியாமற்போவது பரிதாபமாகும். அங்கங்கே கிராமாந்தரங்களிலும் மற்ற இடங்களிலும் பிரசங்கங்கள் செய்வோர்க்கு இந்தப் புஸ்தகம் மிக்க உபயோகமாயிருக்குமென்று நம்பப்படுகிறது.

G. S.

பாபு சுரேந்திரநாத் பானர்ஜி பம்பாயில் செய்த பிரசங்கம்.

பம்பாய் க்ராண்ட் ரோட்டிலுள்ள ஜாவேரிஜி கட்டிடத்தில் நவம்பர் மாதம் 18-ந்தேதி பாபு சுரேந்திரநாத் பானர்ஜியவர்கள் ஸ்வதேசி வஸ்து ப்ரசாரிணி சபையாரின் ஆதரவில் சுதேசீயத்தைப்பற்றி ஒரு திவ்யமான பிரசங்கம் செய்தார். அப்பொழுது சுமார் 10,000 ஜனங்கள் வந்திருந்தார்கள். காலை 8 மணிக்குப் பிரசங்கம் என்று வெளியிடப்பட்டிருந்தபடி காலம் தப்பாமல் அவர் வந்து சேர அங்கிருந்த அத்தனைபேர்களும் 'வந்தேமாதரம்' என்னும் கோஷத்துடன் அவர் நல்வரவைக் கொண்டாடினார்கள். அப்பொழுது கனம் மிஸ்டர் கோகலே ஸி. ஐ. இ., மிஸ்டர் பால கங்காதர திலகர், ப்ரோபஸர் என். பி. ரானடே, மிஸ்டர் காட்கில் (பாரிஸ்டர்), மேற்படி சபையின் காரியதரிசியாகிய மிஸ்டர் ஜோஷி, அக்கிராசனாதிபதி டாக்டர் தசமுகர் ஆகிய இவர்கள் சகிதமாக பாபு சுரேந்திரநாத் பானர்ஜி தாங்கமாட்டாத நெருக்கத்தின் நடுவே நெருக்கியடித்துக்கொண்டு பிரசங்க மேடை வந்து சேர்ந்தார். இவர்களன்றி கனம் மிஸ்டர் கேர் முதலிய இன்னும் மற்றப் பிரமுகர்களும் அங்கே ஏற்கெனவே வந்து கூடியிருந்தார்கள். டாக்டர் தசமுகர் பிரேரபணையின் பேரில் மிஸ்டர் பாலகங்காதர திலகர் அம்மீட்டிங்குக்கு அக்கிராசனாதிபதியாக விருக்கத் தெரிந்தெடுக்கப்பட்டார் அவர்பொறுக்கி யெடுத்தாப்போல் சில வார்த்தைகளில் உபந்நியாசகருடைய பேரையும் கீர்த்தியையும் சொல்லி அவர் பிரசங்கிக்கத் தொடங்கலாமென்றார். அத்தருணம் அங்கிருந்த வங்காள கனவான்கள் சிலர் " வந்தே

மாதரம்'' என்கிறதேவி ஸ்தோத்திரத்தை கீதம்பாடி முடிக்க அங்கிருந்த ஜனங்களெல்லாரும் "வந்தே மாதரம்" என்று ஏகோபித்துக் கோஷித்தார்கள். இந்தக் கோஷமத்தியில் பாபு சுரேந்திரநாத் பானர்ஜி யெழுந்திருந்து நிற்க பின்னும் ஜனங்கள் "வந்தே மாதரம்" என்று கோஷித்துக் குதூகலப் பட்டார்கள். அப்பொழுது அவர் செய்த பிரசங்கம் பின் வருமாறு ;—

கனவான்களே ! இதோ என் பக்கத்திலிருக்கும் நேசர் (மிஸ்டர் திலகரைக் காட்டி) என்னைப் பற்றிப் புகழ்ந்துபேசி எனது குரல் பெரிது என்று சாமர்த்தியமாய்ச் சொல்லி விட்டாராயினும், இவ்வளவு பெரிய மஹா சபையில் நிறைந்திருக்கும் இந்த ஏராளமான ஜனங்கள் அனைவருக்கும் கேட்கும்படி பேசுவது சாத்தியமாகாதென்று அஞ்சுகிறேன். நீங்களெல்லாரும் "வந்தே மாதரம்" என்கிற உள்ளக்கிளர்ச்சி தரும் உண்மையான சங்குநாதம் போலொத்த கோஷத்தால் என்னை நல்வரவுகோரி யழைத்தது எனக்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. (ஜனங்களெல்லாரும் 'வந்தே மாதரம்' என்று பின்னும் கோஷிக்கலானார்கள்).

வந்தே மாதரம்!

என்பது சண்டைத் தொனியல்ல ; சச்சரவு செய்ய அடையாளமல்ல ! ஆனால் அது நம் ஸ்வஜாதிய சப்தம் ஸாத்வீக மந்திரம் (மனம் ஒரு வழிப்பட்டது மந்திரம்). இந்த மந்திரத்தை ஸ்பஷ்டமாய் உச்சரிக்கலாம். இது மாரக மந்திரமல்ல : இதை யுச்சரித்துக் கொண்டு நாம் இங்கிலீஷ்காரரோடு சண்டை போட்டு வெல்ல வேண்டுமென்று காளியைப் பிரார்த்திக்கிறோ மில்லை. பிறருக்கும் வர்மம் நினைத்து வேதனை விளை வினைச்சற்பனை சூழும் மந்திரமல்ல. ஆனால் இந்தமந்திரத்தின்பிரயோகமென்னவென்றால்,இத்தேசத்திற் பிறந்து வளர்ந்து இந்தியமாதுக்குப் பிள்ளைகளான பலவேறு பிரியனரென நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு தாய்

வயிற்றுப் பிள்ளைகளாய் சகோதர வாஞ்சையோடு நமது ஜன்ம பூமியாகிய இத்தேசத்தையே நம்மை யீன்ற மாதாவாகக் கொண்டு, அம்மாதாவுக்குப் பணிவிடை செய்து அவளுக்குத் தொண்டர்களாக விருக்கக் கடவோ மென்கிற பிரதிக்கினையும், அப்பிரதிக்கினையை நிறைவேற்ற நமக்கு வேண்டிய தீரமும் உறுதியுமளித்து ஸ்திர புத்தியைக் கொடுக்க வேண்டுமென்கிற உள்ளத்துணரவோ டெழும் பிரார்த்தனையை வாய்விட்டல றும் சிறு குழந்தையின் மழலைக் கெ ப்பான இனிய வசனமு மாம். இம்மந்திரோச்சாரணத்தின் உண்மைப்பிரயோக மிப்படியாக, இது எங்கும் பரவி இந்தியா முழுவதுமுள்ள ஜனங்களைத் தம் ஜன்ம தேசத்துக்குரிய ஸ்வதேச அன்பினால் ஒன்று சேர்த்துப் பிணைக்கு மோர் ஒப்பில்லா மந்திர சக்தி யாக வளர்வது அதிசய மல்லவே. ஏற்கெனவே இது வங் காளத்தின் ஸ்வஜாதிய கோஷமாகி விட்டது. பம்பாய் இராஜதானியிலும் அப்படியே. பின்னும் தூரத்திலுள்ள தக்ஷிணபாகத்திலும் இந்த மந்திரம் வியாபிக்கலாயிற்று. அங் கிருந்து வடக்கே ஹிமோத் பர்வதம் வரையில் இந்த இரண்டு வார்த்தைகளும் வாக்தேவியின் மஹிமையைப் போலவே எங்கும் வியாபித்துள்ள சக்திவசனமாயிற்று. இந்த மந்திர சக்தியால் இந்தியாவிலுள்ள பல வேறு ஜாதிகளும் "ஸ்வ ஜாதி" யென்கிற ஒரு கட்டில் அகப்பட்டவர்களாய் "ஸ்வ தேசி" என்கிற ஒரே கடமை பூண்டவராக ஆவார்களென்றும், அப்படியாக தேவி ஆசீர்வதிப்பாளென்றும் நம்புகிறேன். "ஸ்வதேசி" யென்றால் என்ன ? ஜன்ம பூமிக்குச் செய்ய வேண்டிய கடமையைக் குறைவின்றிச் செய்ய முயலு வதே "ஸ்வதேச" லக்ஷணம். இந்த லக்ஷணம் பொருந் தியவரே "ஸ்வதேசி" "ஸ்வதேச லக்ஷணம்" என்று சொன் னதே "தேசாபிமான" முமாம். "ஸ்வதேசி"யே "தேசாபி மானி"யுமாகையால் ஸ்வதேசி விருதம் எடுப்பதில் குற்றமொ ன்று மில்லை குறையுமில்லை ஈனமில்லை. க்ஷீணமுமில்லை. ஆனால் அவ்விருத மெடுப்பவருக்கு வீரமும் தீரமும்வேண்டும்

கனவான்களே! இந்தமஹா ஜனக்கூட்டம் கூடக் காரணமாயிருந்தது இங்குள்ள

“ஸ்வதேசிவஸ்து ப்ரசாரிணிசபை’.

இச்சபையார் ஆதரவில் தான் நாம் இன்று கூடியிருக்கிறோம். அச்சபையின் அக்கிராசனாதிபதியாகிய எனது நண்பராம் இவர் (மிஸ்டர் தசமுகரைக்காட்டி) உத்தம தேசாபிமானி. இவருடைய குன்றா முயற்சியினால் இச்சபை வெகு நன்றாக வேலை செய்து வருகிறதென்று அறிகிறேன். இச்சபையின் அக்கிராசனாதிபதி இது விஷயத்தில் தன் பிராணனைக் கொடுத்து ஹிருதய பூர்வகமாக உழைத்து வருகிறாரென்று சொன்னேன். ஜன்ம பூமிக்கு உழைக்க வேண்டியபடி உழைக்கும உண்மையாளரில் இவர் ஒருவர். இவருடைய விடா முயற்சியிலும் இச்சபையாருடைய உபதேசத்தாலும் “ஸவதேச முயற்சி” இப்பக்கங்களில் மிகவும் வலுத்திருக்கிறதென்று அறிகிறேன் சீக்கிரத்தில் தானே ‘ஸ்வதேசபண்டகசாலை’ யொன்று ஏற்படுத்தவேண்டுமென்றும், இந்தியர்களுக்குள் ‘மஹாபெரியவர், என்று பேர் பெற்ற மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி காங்க்ரெஸ் பிரெஸிடெண்டாக விருக்கும் பொருட்டு இங்கே வந்திறங்கும் பொழுது அவரால் அப்பண்டகசாலை முதல் முதல் திறக்கப்பட்டு வியாபாரம் செய்ய ஆரம்பிக்குமென்றும் அறிகிறேன். பின்னும் என் நண்பர்களோடு நான் சிறிது பேசிக்கொண்டிருந்ததிலிருந்து இந்த ஸ்வேதசவஸ்து ப்ரசாரிணிசபைக்கு முக்கியாதாரமாயிருக்கப்பட்டவர்கள் எல்லாரும் வாலிபர்களென்று அறியலானேன் இது ஸகஜமே. ஏனென்றால், நமது கிரகங்களில் குடித்தனப்பிரவர்த்தியாம் விடியற்காலையில குழந்தைகளின் இனிய மழலைச் சொல்லே காதில் விழுகின்றன (குழந்தைகளின் மழலைச் சொல் யாழிலும் குழலினும் இனியதல்லவோ!) அப்படியே ஸ்வதேசஸ்வஜாதியபிமான உதயமாம் விடியற்காலையில் இளைஞரான வாலிபர்களின் இனிய குரலும் உற்சாக முயற்சியும்

மூன்றாற் கேட்கத்தக்கது ! பின்னுல் குடும்ப வியவகாரத்தில் பெரியவர்களுடைய கஷ்ட நஷ்டங்களால் பிறகு கோபதாப மானவார்த்தைகளும்கல்லல்களும்கேட்கப்படுவதுபோல ஸ்வா ஜாதியபிமானம் முதிர்ந்து ஸ்வதேச லக்ஷணம் வளர வளர நமக்குள்ளும்வித்தியாசங்களும் வேறுபாடுகளும் உண்டாகும். ஆனுல அவை யெல்லாம் அபிவிர்த்தி லக்ஷணங்களே யன்றி அதற்குமாருன குறிகளல்ல. வங்காளத்தில் இளைஞர்களே இந்த ஸ்வதேச முயற்சியில் முன்னிற்பவர்களாக இருக்கிருர்கள். அவர்களே இம்முயற்சியில் வந்த கஷ்ட நஷ்டங்களையும் எதிரிகள் செய்யும் படாடோபங்களையும் பொறுத்துச்சகித்து அவற்றிற்குஈடுகொடுத்து வருகிருர்கள்.வங்காளத்தில் முளைத்துப் பயிராகிவரும்.

ஸ்வதேச விருக்ஷந்துக்த வாலிபர்களே தூநத்து

இதன் உண்மையை விளக்குவதற்கு ஒரு கதை செல்லுகிறேன் கேளுங்கள் இந்த விர்த்தாந்தத்தை நான் முதலில் கேட்டபோது அது என் உள்ளத்திற் பாய்ந்து பெரிதும் உருகச்செய்தது. நான் "பெங்காளி" பத்திரிகை ஆபீஸில் உட்கார்ந்து வேலை பார்த்துக்கொண்டிருக்கையில், இவ்வளவு உயரமுள்ள (கையினுல் ஒரு பையனைச் சுட்டிக் காட்டினுர்) 16 அல்லது 17 வயதுள்ள ஒரு பையன் திடீரென்று என் முன் வந்து நின்ருன். பையன்களிடத்தில் எனக்கு எப்போதும் பிரீதியும் வாஞ்சையு மதிகமாதலால் "அப்பா நீயார்? எங்கு வந்தாய் ? உனக்கு ஆகவேண்டியதென்ன ? என்னுல் என்ன உதவி செய்யக்கூடும் ?" என்று கேட்டேன். அதற்கு அச்சிறுவன் " நான் தான் இராஜேந்திரலால்ஷா" (ஜனங்கள் இப்பெயரை கேட்கவும் பிரமாதமாக ஆர்ப்பரித்துச் சந்தோஷித்தார்கள்) என்ருன் " இராஜேந்திரலால்ஷா" என்கிற பேரை நான் கேட்டிருக்கிறேன். அது ஸ்வதேசி முயற்சியில் ஒரு பெரிய தியாகியாகிய ஒரு வாலிபனுடையபேர் (கவனியுங்கள், கவனியுங்கள் என்று ஜனங்கள் இங்கே கூவினுர்கள்)

அவன் கல்கத்தாவுக்கு வந்தகாரணம் என்னவென்று கேட்டேன். அவன் தன்னுடைய கேஸ் ஹைகோர்ட்டில் அப்பீல் விசாரணையானதால் வந்ததாகவும், தனக்கு விரோதமாகத் தீர்ப்பு செய்திருப்பதால் தான் மறுபடியும் ஜெயிலுக்குப்போய் குறித்த காலம்வரையில் காவலிலிருக்கப் போகிறேன் என்றும் சொன்னான். அவன் வார்த்தையை உங்களுக்குச் சொல்வதில் எனக்கிருக்கும் உற்சாகம் உறுதி, சாந்தம் இவற்றைவிட அவன் அதிக உற்சாகமும் உறுதியும் சாந்தமு முள்ளவனாகக் காட்டினான். (கவனியுங்கள், கவனியுங்கள்) "அப்பா இப்படி நேர்ந்ததே யென்று மியசனமாயிருக்கிறதா?" என்று கேட்டேன். அதற்கு அவன் சொன்னதைக் கேளுங்கள். "இல்லை, இப்படியாவது நான் பிறந்த இந்த ஜன்மபூமிக்கு என்கடனைச செலுத்த கொடுத்துவைத்திருந்தேனே யென்று நான் சந்தோஷப்படுகிறேன்" என்றான் (கவனியுங்கள், கவனியுங்கள் என்கிற சப்தமும் வந்தே மாதரம் என்கிற கோஷமும் எதிரொலி கிளம்ப ஒலித்தன) மிமென்ஸிங் வாசிகள் நூற்றுக்கணக்காய்த் திரண்டு ஜெயில்வாசலில் கூடி ஜெயிலிலிருந்து விடுபட்டுவந்த ஒருவனை அன்று கொண்டாடினார்களே அவன் இவ்வாலிப வீரன்தான். போலீஸார் ஈகை இரக்கமின்றி பேடிகளைப்போல அவனைப் பிடித்து அன்று அடித்தார்கள். போலீஸாரைப் "பேடிகள்"—பெண் தன்மை யுடையவர்கள்—என்று நான் வேண்டுமென்றே நிதானித்துக் கூறுகிறேன். ஏனெனில் அன்று நடந்த குழப்பத்தில் போலீஸார் தாக்கினால் எதிர்தாக்கக் கூடாது என்று ஜனத்தலைவர்கள் உத்தரவு கொடுத்திருந்தது போலீஸாருக்குத் தெரியும் அப்படித் தெரிந்துதான் அடித்தால் அவன் திரும்பி யடிக்கமாட்டான் என்று உணர்ந்திருக்கையில் போலீஸார் மேல் விழுந்து பலரையும் அடித்து இச்சிறுவனையும் இப்படி நையப் புடைத்தார்களே! இவர்கள் பெண் தன்மையுள்ள பேடிகளன்றி, இவர்களைத் தீரர்களென்றும், சூரர்களென்றும எப்படிச் சொல்லுவது! அந்தப் பேடிகள் கிடக்கிறார்கள்.

வாலிபர்களே !

நீங்கள் சிறுவர்களா யிருந்தாலும் இந்த சுதேச முயற்சியில் உங்களுக்குள்ள உறுதி, உற்சாகம் எல்லாவற்றையும் செலுத்தி உங்களுடைய ஜன்ம பூமிக்கு நீங்கள் செய்யவேண்டிய கடமையைச் செய்யப் பின்வாங்காது நிற்கத் தயாரா யிருக்கிறீர்கள். ஸ்வதேசிய முயர்சியில் மாணாக்கர்கள் சேரக் கூடாது என்று சொல்லும் வீண்வார்த்தையைச் சிறிதும் நம்பாதீர்கள் உங்களை நல்வழி தப்பிக் குருட்டுவழியில் நடக்கச்செய்த சூழ்ச்சி அல்லது. பசப்புவார்த்தை ; அதைத் தள்ளிவிடுங்கள். சிறுவர்கள் ஸ்வதேசாபிமானம்பெற்று வளர ஸ்வதேசிய முயற்சியைப் பார்க்கிலும் மேலான வேறு பிரதம அப்பியாச சாதகம் இல்லை ஆகையால் இம் முயற்சியில் நூற்றுக் கணக்காகவும் ஆயிரக் கணக்காகவும, பதினாயிரக்கணக்காகவும் நீங்கள் சேர்ந்து உழையுங்கள். அதுமாத்திரமல்ல இம் முயற்சியில் உங்களுடைய மஹாராஷ்டிர தீரத்தையும், தைரியத்தையும், வீரத்தையும் மட்டுமல்ல. தியாக சக்தியையும் காட்டி உங்கள் முன்னோர் வழிப்பட்ட உத்தமர்களென்று காண்பியுங்கள். நீங்கள்மாத்திர மல்ல. ஸ்வஜாதி யபிமானத்தால் மற்ற ஜாதியார்களையும் உங்களைச் சேர்ந்தவர்களாகக் கொண்டு எல்லாரையும் ஏகமாக ஒன்றுபடச் செய்யும் ஸ்வதேசக் கட்டுப்பாட்டுக்குட்பட்டுழையுங்கள் குஜாராத்தியர், மஹாமதியர், மஹாராஷ்டிரர், பாட்டியாக்கள் (Bhatias) முதலிய எல்லாரும் இராஜாங்க சம்மந்தமான விஷயங்களில் வித்தியாச முள்ளவர்களா யிருந்தபோதிலும், இந்த ஸ்வதேசிய முயற்சியில் ஸ்வதேசக் கொடியின்கீழ் எல்லாரும் ஒன்று சேர்ந்து உழையுங்கள். (கவனம், கவனம்) இதுதான் நான் உங்களை உண்மையாகவும் உருக்கமாகவும கேட்டுக்கொள்கிறது ! உங்களுக்குச் சொல்லும் உண்மையான புத்திமதியும் இதுவன்றி வேறில்லை.

இவ்விடத்து வியாபாரிகளுக்கு

ஒருவார்த்தை சொல்லி வற்புறுத்த விரும்புகிறேன். (சிரிப்பு.) ஸ்வதேசிய முயற்சி சம்மந்தமாய் பம்பாய் மிகவும் முன்னுக்குவரக் கூடியதாயிருக்கிறது. (கேள். கேள்) இந்த ஸ்வதேச முயற்சியிலுண்டான ஆவேசம் வங்காளத்திலிருந்து வந்ததாயிருக்கலாம். இதைப் பூர்த்திசெய்து நிறைவேற்றுவது பம்பாயிலுள்ள உங்களையே பொறுத்ததாகவிருக்கிறது நீங்கள் இந்த ஸ்வதேசிய முயற்சி தலையெடுக்க நல்லதாக்கி வைத்தாலும் வைக்கலாம், அல்லது சீர்கெட அழித்தாலும் அழிக்கலாம். இப்படி ஆக்கவும் அழிக்கவும் சக்தி யுங்களிடத்திலிருக்கிறது பம்பாய், ஷோலாப்பூர், ஆமதாபாத் முதலான இன்னும் அநேக இடங்களில் எத்தனையோ பெரிய யந்திரசாலைகளிருக்கின்றன! உங்களுக்குள் பலவகைத் துணிகள் (பீஸ் கூட்ஸ்) நெய்துவிற்கிற பெரிய தொழில்செய்யும் வியாபாரிகள் எத்தனையோ பேரிருக்கிறார்கள். வியாபாரத்தொழிலிலிறங்கி வர்த்தகம் செய்கிறவர்களுக்கு அத்தொழிலில் பழக்கமில்லாதவர்கள் ஆலோசனை சொல்லத் துணிவது அதிகப் பிரசங்கத்தனமென்று நீங்கள் நினைக்கலாம் ஆனாலும் அவ்வளவு தூரத்திற்கு எனக்கு இடங்கொடுத்தால் நான் உங்களுக்கெல்லாம் சொல்ல விரும்புவது ஒன்றுண்டு அது என்னவெனில், நீங்கள் இந்தியாவிலுள்ள வியாபார மவ்வளவும் உங்கள் கைவசமாகும்படி பிடித்துக்கொள்ளவேண்டும். அது எப்படியென்றால், விலையைக்குறைத்து எல்லாவியாபாரத்தையும் நீங்கள் கைவசப்படுத்திக் கொள்ளவேண்டும். விலை சரசமாயிருக்கிற இடத்தில் ஜனங்கள் வாங்குகிறது சகஜமாகப் போய்விட்டபடியால் நீங்கள் அந்த வழக்கத்தை யநுசரித்து இந்தியா வியாபாரத்தை முற்றிலும் கைக்கொள்ளவேண்டும். இந்த ஸ்வதேசிய முயற்சியினால் செட்டு மட்டினால் செல்வத்தை விர்த்திசெய்ய வேண்டுமென்கிற உண்மையை ஒருக்காலும் மறக்கவொண்ணாது. விலை சரசமான விடத்தில் வியா

பாரம் பெருகும் என்பது திண்ணம். இறக்குமதி செய்த சாமான்களை விட, ஸ்வதேச வஸ்துகள் விலை யதிகமாயிருந்தால்வாங்குகிறவர்கள் விலையைக்கண்டு பயந்துகொண்டுவேறு சரக்குகளைவாங்கப் போய்விடுவார்கள். அதனால் ஸ்வதேசீய முயற்சியானது குன்றிப்போம். 1905-ம் வருஷம்துர்க்க பூஜை காலத்தில் பம்பாயிலுள்ள நெசவு யந்திரசாலைக் காரர்கள் சரக்கு முடுக்கா யிருக்கிறதென்று விலையை மிகவும் உயர்த்தி விட்டார்களென்கிற புகார் கிளம்பியது. அதைப்பற்றி நான் பம்பாய்க்கு எழுதி விசாரிக்க நிஜமென்று தெரிந்தது. அப்படிச் செய்தது மிகவும் பரிதபிக்கத்தக்கது. ஸ்வதேச விபத்தைக்கொண்டு விலையை உயர்த்தி லாபம் சம்பாதிப்பது ஸ்வதேசாபிமானமல்ல வென்று சொல்லவந்தேன். ஆனால் அவ்வளவு தூரம் சொல்லலாமோ வென்று, அப்படி சொல்லாமல் "பரிதாபம்" என்று மட்டும் சொன்னேன். இவ்விடத்து வியாபாரிகளுக்கு நான் சொல்ல விரும்பிய முதல்வார்த்தை இது. இரண்டாவதாக ஒருவார்த்தை சொல்ல விரும்புகிறேன். ஸ்வதேசீய முயற்சியைப் பரவச்செய்து எங்குபார்த்தாலும் ஸ்வதேசபண்டசாலைகள் ஏன் ஏற்படுத்தக்கூடாதோ வென்று கேட்கிறேன்? அனேக இடங்களில் ஒரு சுதேச பண்டக சாலைக்கு 10 விதேசி (வேறு தேசத்துச் சரக்குகளை விற்கும்) ஷாப்புகள் இருக்கிறதாகத் தெரிகிறது 10-சுதேசி பண்டக சாலைகளுக்கு ஒரு விதேசி ஷாப்பு இருக்கும்படியாக ஏன் இந் நிலை தலைகீழாக மாறும்படி செய்யக்கூடாது? இதை யனுசரித்து நடந்தால் நலமாயிருக்கும். வங்காளத்தில் மார்வாடி வியாபாரிகள் ஏராளமாக விருக்கிறார்கள். அவர்களிடம் சென்று அவர்களை வசப்படுத்த நாங்கள் என்னசெய்தோம் தெரியுமா? அவர்களை நெருங்கி, ஐயா, இப்பொழுது உங்களுக்குள் 6 கடைகளிருக்கின்றன. இந்த ஆறுகடைகளில் 3 ஸ்வதேசி ஷாப்பும், 3 விதேசி ஷாப்புமாகச் செய்தாலென்ன? சுதேசி ஷாப்புகளில் நல்ல வியாபாரம் நடக்கும்படி நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோ மென்று சொன்னோம். அவர்களு

மதற்கிணங்க, ஸ்வதேசமுயற்சி இதனால் மிகவும் பிரபலமாக நேரிட்டது, அப்படியே இங்கு செய்யலாம். முயற்சித்தாலாகாத தொன்றில்லை. விதேசி ஷாப்புகளைக் குறைத்து சுதேசி ஷாப்புகளை யதிகரிக்கச் செய்யவேண்டும். ஸ்வதேச சாக்குகள் எங்கும் ஏராளமாகச் செலவாகின்றன. ஜனங்கள் ஸ்வதேசிகளாகிவருகிறார்கள். ஸ்வதேசி வஸ்துகளுக்குக் காலம் பிறந்துவிட்டது. இச் சமயத்தை முன்னிட்டு ஸ்வதேசி சரக்குகளையும் ஸ்வதேசி வியாபாரத்தையும் எங்கும் பரவச்செய்ய வேண்டும்! இதுவே வழி. ஸ்வதேசீய முயற்சியை யநுசரித்தே நமது வியாபாரிகள் முன்னுக்கு வரவேண்டும். ஸ்வதேசி யெண்ணம் எல்லார் மனதிலும் உதித்துவளர்கிறது. சிறு ஊற்றுகளாக உண்டான எண்ணங்கள் வரவரச் சேர்ந்து, பெருகிப் பெருவெள்ளக் காடாகப்போகிறது. அந்தவெள்ளம் வீண்போகாமல் நமது வியாபாரிகள் ஸ்வதேச வஸ்துகளைப் பரவச் செய்வதற்கு இது ஏற்ற சமயமென்று நம்பி ஸ்வதேசீய முயற்சியைப் பரவச்செய்யவேண்டும். ஸ்வதேசி யெண்ணத்தை யாராலும் தடுக்க முடியாது. அவை யொட்டி யுழைப்பவர்கள் நல்ல ஸ்திதிக்கு வருவார்களென்பது நிச்சயம். அது மட்டுமா? ஸ்வதேசமும் அவர்களால் நல்ல ஸ்திதிக்கு வரும். இதை யுறுதியாக நம்பவேண்டும். இதுதான் நான் அவர்களுக்கு உண்மையாகச் சொல்லும் இரண்டாவது வார்த்தை. இதை நான் அவர்கள் மனதிற் படப் பன்முறையும் வற்புறுத்தி கூற விரும்புகிறேன்.

"ஸ்வதேசீய முயற்சியாம்"

என்று, நம் முயற்சியை வாஸ்தவமில்லாததுபோலும், பொய்ப்பேர் புனைந்து பித்தலாட்டம் செய்வதுபோலும் இராஜாங்க வியவகார வாதத்தில் நமது முயற்சியைப் பம்பாயிலுள்ளார், உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும் (ஆங்கில இந்தியப் பத்திரிகைகள் சம்பந்தப்பட்டவர்கள்) ஏளனமாய் இகழ்ந்து சொன்னதைக் கேட்டிருக்கிறேன். இப்படிச் சொன்ன

தற்குக் காரணம் இன்னதென்று முற்றும் எனக்கு விளங்கா
விட்டாலும், எனக்குத் தோன்றுகிற தென்னவென்றால்,
நமது முயற்சி, செட்டிமெட்டினால் செல்வ விருத்தியை நாடு
கிறோமென்கிற சாக்குப் போக்கைக்கொண்டு, உண்மையில்
இராஜாங்க ஸ்வதந்திரத்துக்காகப் பாடுபடுகிறோம் என்கிற
தப் பெண்ணங்கொண்டுசொன்னதாகவிருக்கலாம் என்பதே.
இது நிஜமானால் பத்திரிகைகள் இப்படி நம்மை நேரில் தாக்
காது, நமது பெயரை அயர் சார்பாயிகழ்ந்து பேசித் தூற்று
வது தப்பும் தவறுமான வழியாக விருக்கிறது. ஸ்வதேசீயம்
என்பது சமீபகாலம் வரையில் செட்டுமெட்டால் செல்வத்தை
விருத்திசெய்யும் முயற்சியை யொட்டினதன்றி வேறெதுவு
மில்லாததாக விருந்தது. எங்கள் இராஜதானியில் (வங்கா
ளத்தில்) இராஜாங்க சம்பந்தமாக நடந்த சில அநியாயங்க
ளால் இந்த ஸ்வதேசியம் முன்னிலும் மதிகமாக முன்னுக்கு
வரப் பெறலாயிற்று. வங்காளத்தை இரண்டாகப் பிரித்ததினா
லுண்டான அமளி குமளிக்கு வெகுகாலம் முந்தியே ஸ்வதே
சீயம் நாட்டில் நடைபெற்றுவந்தது. சொல்லப்போனால்
லார்ட் கர்ஸன் இராஜப்பிரதிநிதி வேலைக்கு வருமுன்னாகவே
ஸ்வதேசீய முயற்சி பிறந்து வளர்ந்து வந்தது என்பது வாஸ்த
வம். ஆனால் இடையில் நேர்ந்த சில விபரீத விஷயங்கள்
காலவிசேஷத்தால் ஜனங்களால் அதிகமாகக் கவனிக்கப்
பட்டுவர, இந்தப்பெரு முயற்சி யிளமைப்பருவத்தில் யாவ
ராலும் அவ்வளவாகக் கவனிக்கப்படாமலே போய்விட்டது.
போனாலு மென்ன? அது பிறந்து வளர்ந்ததில் குறை
யொன்றுமில்லை. அதுமட்டோ? வளர வளர அம்முயற்சி
திடமும் ஊக்கமும் பெற்று மற்ற எல்லா முயற்சியையும்
தன்னு ளடங்கினதாகக் கொண்டு தான் எங்கும் நிறைந்த
விசுவரூபியாக விளங்கும்படியான நிலைமைக்கு வந்துகொண்
டிருந்தது. சிலர் இராஜாங்க விஷயங்களுக்குக் காங்கிரெஸ்
எப்படியோ, அப்படியே செல்வச் சீர்திருத்த விஷயங்களுக்கு

ஸ்வதேசிய முயற்சி என்கிறார்கள். இவ்வளவுதானல்லவென்றும், இதிலும் மேலானதென்றும் சொல்லத்துணிகிறேன். இது செல்வச் சீர்திருத்தம் ஒன்றையாயாவது ஐஜாசார சீர்திருத்தமொன்றையேயாவது இராஜாங்கச் சீர்திருத்தத்தை மட்டுமாவது பொருத்ததாகவில்லை. ஆனால் இவையெல்லாம் அதனுளடங்கும் விசுவரூபியாக அது விளங்குகின்றது. நமது ஸ்வதேசிய ஸ்வஜாதி யபிமானம் முற்றும் வளர்ந்து பெருகி இந்தியஜன ஐக்கியத்துக்குக் கின்றியமையாக் குணங்கள் என்ன என்ன வுண்டோ அவ்வளவும் பொருந்தப்பெற்றதாக அது விளங்குகிறது ஆகையினால் கனவான்களே? இந்த ஸ்வதேசியமானது நமது ஸ்வதேச ஜனங்கள் அத்தனை பேர்களும் தங்கள் ஜாதிபேதம், மதபேதங்களை ஒருபுறத்து இருக்கவிட்டுப் பொதுஜன ஐக்கியம் பெற்று ஏகஜாதியாக விளங்கப் பெறுவதற்கு இன்றியமையாச் சாதனமாக விளங்குகிறது என்று நான் சொல்கிறேன். பரதேவதா ஸ்வரூபமொன்று நமது ஜன்ம பூமியாம். இந்த பாரத மாதாவின் ஆத்மேந்திரியத்தில் ஜீவன்வகையிலும் இராஜரீக வகையிலும் கடைத்தேற ஸ்வதேசியமே ஏற்ற சாதனமென்று அசரீரியாக நின்று ஆத்மோபதேசம் செய்துவிட்டாற்போல எனக்குத் தோன்றுகிறது. உண்மையாகவே அது எண்ணிறந்த பிரிவினைகளுக்குட்பட்ட இந்த தேசத்தார் ஒன்றுசேர்ந்து ஐக்கியப்பட்டு ஏகமாய் ஸ்வதேசாபிமானமும் ஸ்வஜாதி யபிமானமும் பூண்டு ஒரு தேசத்தவராக விளங்கும் ஸ்வதேசியராக வருவதற்கு இன்றியமையாத அனுகூல சாதனமாக விருக்கிறது. ஸ்வதேசிய முயற்சியும் அதன் நோக்கமும் கருத்தும் எல்லாருக்கும் ஸ்பஷ்டமாக விளங்குகின்றன. தக்ஷிணத்து ரயத்துகளும் வங்காளத்துக்குடிகளும், அதை இலகுவில் அறிவார்கள். ஏழைகளும் பணக்காரர்களும் அதன் நோக்கத்தை யுணர்வார்கள். பாமரஜனங்களுக்கு பிரதிநிதி துரைத்தனத்தின் மேன்மையைப்பற்றிச் சொன்னால் விளங்காது. ரெவினியூ மாஜிஸ்டிரேட் டதிகாரங்களைத் தனித்தனியாகப் பிரிக்க

வேண்டுமென்று. சொன்னால் அதன் குணாகுணத்தைக் கிரகிக்க முடியாது. ஆனால் எல்லா ஜனங்களும் நமது தேசத்துச் செல்வம் நமது தேசத்தைவிட்டு வெளிப்போகாதபடி பாது காக்கவேண்டியது நமதுகடமையென்று சொன்னால் உடனே சரியென்று ஒப்புக்கொள்வார்கள். இதற்காக அவர்கள் ஸ்வ தேசச் சரக்குகளைத் தான் வாங்கவேண்டும் அந்நிய தேச (விதேசி)ச் சரக்குகளை வாங்கக்கூடாதென்றால், ஆம் என்று ஒப்புக்கொள்வார்கள் இது விஷயமாக அவனுக்கு உண்மையை உள்ளபடி வற்புறுத்திச் சொல்லவும், அதை யவன் கிரகித்துக்கொள்ளவும் பிரமாத புத்திப்பிரகாசம் ஒன்றும்தேவையில்லை. அவனுக்குள்ள புத்தியைக்கொண்டு அவன் உண்மையை உள்ளபடி இலகுவில் கிரகித்துக்கொள்வான். இப்படி நீ ஸ்வதேசிய உபதேசமசெய்தால், எப்படிப்பட்ட ஏழை எளியவனும உன் பக்ஷமாகி உன்னைத் தன்னை ரக்ஷிக்கவந்த தீனதயாளு வென்று வந்தித்துத் தொழுவான்.

சுமார் 10-மாதங்களுக்கு முன் இப்பொழுது காலஞ் சென்றுபோன எனது அருமை நண்பர் மிஸ்டர் அநந்தமோஹன் போஸ் அவர்கள் ஒரு பெரிய உத்தியோகஸ்தரோடு பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது அந்த உத்தியோகஸ்தர் அவரிடத்தில் சொன்னதாவது: "மிஸ்டர் போஸ்! இங்கேயுள்ள சாதாரண ஜனங்களும் பொது விஷயத்தில் சிரத்தையெடுத்துக்கொள்வதாயிருந்தால், இத்தேசத்தின் துரைத்தன காரியங்களெல்லாம் இப்பொழுதுக்கு முற்றும் மாறுதலான வேறு கொள்கைகளை யனுசரித்து நடத்தப்பட்டு வரவேண்டும்" என்றார். ஸ்வதேசீயம் என்கிற கொடியின்கீழ் பண்டித பாமர ஜனங்கள் ஹிருதயபூர்வமாகச் செலுத்தும் விசுவசத்தை யாதாரமாகக்கொண்டு இத் தேசத்திலுள்ள எண்ணிறந்த ஜாதிகள் மதங்களைச் சேர்ந்தவர்களின் உண்மையான அபிமானத்தின்பேரில் சொல்லுவதான இந்தநவீன ராஜாங்க லக்ஷியத்தை யாவரு முணர விளங்கச் செய்யத் தீர் மானித்தோம். இதுதான் நம்முடையஅவா. நாம் நாடி யுழைக்

கும் உன்னத நாட்டம் இதுவே. ஸ்வதேசியத்துக்கும் இராஜாங்கச் சீர்திருத்த முயற்சிகளுக்கு முள்ளசம்பந்தம் இதுவே. கவனியுங்கள், (கவனியுங்கள்) நான் ஒன்றையும்ஒளிக்கவில்லை. எல்லாவற்றையும் வெளிப்படையாகச்சொல்லிவிட்டேன். இத்தேசத்திலிருக்கும் ஆங்கிலேய ஜனங்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அதுஎன்னவென்றால் படித்தவர்களுக்கும் பாமரர்களுக்கு முண்டாயிருக்கும் இந்த ஐக்கிய ஸாம்ராஜ்யம் மனுஷ யத்தனத்தா லுண்டானதல்ல, தெய்வயத்தனத்தா லுண்டானதாதலால், அது மனுஷ யத்தனத்தால் தடுப்பது சாத்தியமில்லை யென்பதை யவர்கள் நன்றாக அறியவேண்டும். காங்க்ரெஸ் எப்படிப் படித்தவர்களையெல்லாம் ஒன்று சேர்த்துவிட்டதோ அப்படிப்போல ஸ்வதேசியத்தால் படித்தவர்கள் பாமரர் எல்லாரும் ஒன்றுசேர்ந்து ஐக்கியமாகப் போகிறார்கள். "ஸ்வதேசியம்" தெய்வாதீனமாய்ப் பிறந்த தெய்வ ஆக்ஞையென்று நாங்கள் நினைக்கிறோம். அவன் "கர்த்தா" நாங்களெல்லாரும் அவன் கைக்கருவிகள். அவன் ஆட்டுபவன் நாங்களெல்லாம் ஆடுவோர்கள். அவன் சூஸ்திரதாரி, நாங்கள் சூஸ்திரப்பொம்மைகள். ஸர்வக்ஞனான அவன் எப்படி யாட்டுகிறானோ அப்படியெல்லாம் கிஞ்சிக்ஞர்களான நாங்கள் ஆடக் கடமைப்பட்டவர்கள். இதை மூடபக்தியென்று சொல்லலாம், மதவெறியென்று சொல்லலாம். பித்துப்பிடித்த பெயர்கள் என்று சொன்னாலும் சொல்லட்டும் சம்மதம்தான். இந்த நம்பிக்கையோடும் இவ்வளவு உள்ளுணர்ச்சியோடும் உழைக்கிறவனை, அவன் உண்மையென்று கொண்ட கொள்கைக்காகப் பிராணனையும் கொடுப்பானென்று தெரிந்துகொள்ளத் தவறினால், மனுகுல சரித்திரங்களைப் படித்தறிய வேண்டிய நீதிகளை வீணிற் கற்றவர்களாவீர்கள் என்பது திண்ணம் இது விஷயத்தில் எங்களுடைய அந்தக்கரண உண்மை இதுவே. இந்த ஆத்மிக வுணர்ச்சியினாலேயே நாங்கள் ஸ்வதேசியத்துக்குப் பாடுபட்டுழைக்கிறோம்.

"ஸ்வதேசீயம்"

இப்படித் தெய்வீகத்தன்மை பொருந்தினதாய் தெய்வ யத்தனத்தா லுண்டான முயற்சியாக விருப்பதால் அது அன்பே ஆதாரமாகக் கொண்டது. அதற்கு ஆதாரம் ஸ்வதேச அன்பு, ஸ்வதேச நேசம்என்றால் பரதேசவர்மம் என்று அருத் தம் ஆகாது. நான் இப்படிச் சொன்னால் இதற்கு ஆக்ஷேபனை உடனே செய்வார்களென்று எனக்குத்தெரியும். ஸ்வதேசீயம் பரவப்பரவ, ஜாதிவேற்றுமையும் விகாரமும் அதிகரிக்கலா யிற்றென்பார்கள். இப்படி நேர்ந்திருந்தால் அது நம்முடைய குற்றமல்ல. அதற்கு நாங்கள் உத்தரவாதியுமல்ல. ஜாதிவேற் றுமைக்கும் வித்தியாசத்துக்கும் இடமேயில்லை யென்றால் ஜாதிக்கு ஜாதி யுள்ள வர்மம் அதனால் விர்த்தியாயிற்றென்று சொல்வதெப்படி? நான் செய்த வஸ்து ஒன்றை நீ வாங்கா விட்டால் நீ என்னைத் துவேஷித்ததாக எப்படி ஏற்படும்? (ஏற்படாது). ஏற்படுமென்பதானால் நான் சமைத்த அன்னத் தை நீ புசிக்கமாட்டேனென்பதால் எனக்கும் உனக்கும் பகை யென்று சொல்லலாமே. ஆகையால் ஜாதி வேற்றுமைக்கும் வர்மத்துக்கும் இடமேயில்லை. ஆனால் ஒன்று.

சித்த சலனத்தைக் குறிக்கும் வார்த்தைகளை யுபயோ கிக்கும்பொழுது ஒரு குணத்தைக் கிரகித்ததாகக் காட்டினால் அதற்கு மாறான பொருளை நிக்கிரகித்ததாகக் காட்டும். உதா ரணமாக "நீதியில் பிரியம்" என்றால் அநீதியில் வெறுப்பு என்பதாகச் சொல்லாமலே விளங்கும். "சத்தியன்" என்றால் அசத்தியத்தில் அப்பிரியம் என்பதுதானே ஏற்படும். ஸ்வதேச வஸ்துவில் பிரியம்வைத்தால் விதேசி வஸ்துவில் வெறுப்பு என்பது இல்லையானாலும், அபிப்பிரியம் என்பது தானாக ஏற் படும். இப்படி ஸ்வதேசீய முயற்சியில் தன்மாத்திரையாக யெழும் அபிப்பிராயத்துக்கு நாமா உத்தரவாதி? அதற்கு எங் கள் பேரில குற்றஞ்சொல்லிப் பிரயோசனமில்லை. எல்லாவை யும் சிருஷ்டித்துக் காத்தழிக்கும் ஈசுவரனிடம் சென்று இப்

படி ஒன்றுளொன்று பொருந்தவைத்து வில்லங்கம் விளக்கி நீரே யென்று முறையிட்டுக் கொள்ளவேண்டும். ஆகையால் யின்னுமொருமுறை நான் சொன்னதையே சொல்லி வற்புறுத்துகிறேன்? ஸ்வதேசியம் என்பது ஸ்வதேசத்தின் மீது வைத்த அன்புகாரணமாக உதித்தமுயற்சியேயன்றிவேறல்ல. எங்கள் நோக்கமென்னவென்றால் ஸ்வதேசிய வஸ்துக்களையே ஜனங்கள் உபயோகிக்கும்படி அவர்களுணரப் போதித்து அதனால் ஸ்வதேச தொழில்களை விர்த்திசெய்து தேசம் வரவரா க்ஷணித்துப்போவதைத் தடுக்கவேண்டிய பிரயத்தனங்கள் செய்வதேயாம். உலகத்திலுள்ள தேசங்கள் எல்லாவற்றிலும் நமது தேசம் மிகவும் ஏழ்மைப்பட்டது.

இந்தப் பரம ஏழைப்பட்ட தேசம்

முன்போல் செல்வத்திற் சிறந்ததாகவில்லை. முற்காலங்களில் இதன் செல்வத்தைக்கேட்டு இதர தேசத்தார் பேராசை கொண்டு இங்கே ஓடிவந்தார்கள். இப்பொழுதோ இதன் வறுமை சொல்லி முடியாததாயிருக்கிறது. முற்காலத்து செல்வமும் செழிப்பும் இப்போது போய்விட்டதானாலும், எப்போதுமே திரும்பிவராமற் போய்விட்டதென்று இன்னும் சொல்வதற்கில்லை. இந்தியாவின் செல்வம் இத்தேசத்தைவிட்டுப் பல வழிகளில் வெளியே போய்க்கொண்டே யிருப்பதால், இத்தேசத்தின் வறுமை மேன்மேலும் விருத்தியாய்க்கொண்டு வருகிறது. இத்தேசத்துப் பணம் போகும் பல வழிகளில முதலாவது ஆங்கிலேயதுரைத்தனம் காரணமாக உத்தியோகஸ்தர்கள் மூலமாக வெளிப்போகும் செல்வம் அற்ப சொற்பமல்ல அவ்வழியோடு போகாமல் வியாபாரமூலமாக வெளிப்போகும் செல்வமும் இவ்வளவு அவ்வளவல்ல இப்படிப் பலதுறையாலும் இந்தியாவை விட்டு வெளிப்போகும் செல்வத்தின் போக்கைத் தடுக்கவேண்டியது அவசியம். கனவான்களே! அந்நியதேசத்து சரக்குகளை வாங்குவதில் நாம் எத்தனையோ கோடி செலவழிக்கிறோம். வங்காளத்தில் மாத்திரம் வெளிதேசத்திற் செய்துவரும் சரக்குகளை வாங்குவதில் நாம் வரு

ஷத்தில் 16-கோடி செலவழிக்கிறோம். அம் மாகாணத்தின் ஜனத்தொகையோ 8-கோடி. இப்படியாக நாம் ஸர்க்காருக்கு வரியாகச் செலுத்தும்தொகையோ அந்நியதேசச் சரக்குகளுக்காக அந்நிய தேசத்தாருக்குத் தலைக்கு 21 ரூபாய் விகிதம் தலைவரி போட்டுக்கொண்டது போல ஆகிறது. இப்படி நாமறியாமல் தானே நாம் செலுத்திவரும் இந்தத் தலைவரியை நிறுத்திவிடத் தீர்மானித்துவிட்டோம். அந்தத் தலைவரியை வங்காளத்தில் மட்டுமல்ல. இந்தியாவில் எங்கும் நிறுத்திவிடவேண்டும். அதற்காக நீங்கள் வேண்டிய உதவி செய்யவேண்டுமென்று உங்களைப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறோம். நேரமாய்விட்டது இனி நாம் பேசுவதை நிறுத்தவேண்டும் (இல்லை. இல்லை, மேலே பேசும்.) உங்களுக்காக இல்லாவிட்டாலும் எனக்காவது நிறுத்தவேண்டும். நான் உங்களுக்கு விளங்க வெடுத்துச் சொல்லியபடி,

ஸ்வதேசீய முயற்சி விசுவரூப ஸ்வரூபமானது,

வங்காளத்தில் அது எங்கள் எண்ணங்களையும் இலக்ஷியங்களையும் அறவே மாற்றிவிட்டது அங்கேனை முயற்சி, தொழில் முயற்சி, தன்னுறுதி என்னும் குணங்கள் தலையெடுத்து எங்கும் வியாபித்து வருகின்றன இப்படி ஸ்வதேசிய சாத்திய சாதனமான இலக்ஷிய இலக்ஷணங்களுக்குப் பொருந்த எல்லோரும் ஒத்துழைத்து ஒரு நிலையாய் நின்று தக்க ஏற்பாடுகள் செய்துவருகிறோம். வங்காளம் நேற்றைத் திருந்ததுபோல இன்றைக்கு இல்லை. வங்காளத்தை விபாகம் செய்யுமுன் னிருந்ததுபோல அது விபாகத்துக்குப் பின்னை இப்போது இல்லை.

வங்காளத்தின் விபாகத்தைப்பற்றி.

ஒரு வார்த்தை சொல்ல நேரிட்டதால் அதைக் குறித்து இன்னுமிரண்டொரு வார்த்தை சொல்லக் கோருகிறேன். ஸ்வதேசாபிமானமுள்ள பெங்காலி ஒவ்வொருவருடைய ஹிருதயத்திலு முள்ள உள்நோக்கம் இன்னதென்று சொல்

லுகிறேன் கேளுங்கள். மிஸ்டர் மார்லி (இந்தியா செக்ரிட்டெரி) வங்காளத்தின் விபாகம் "முடிந்துபோன காரியம்" என்று சொன்னார். அதை முடிந்துபோன காரியமாக நாங்கள் ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டோம்? அவரே அது தப்பு, மிகவும் தப்பு, என்று சொல்லியிருக்கிறார். அப்படிப் பட்ட பெருந்தப்பை ஒரு போதும் முடிந்து போனதாக ஒப்புக்கொள்ள மாட்டோம். அது ஸ்வதேசத்தார் அத்தனை பேர்களுடைய எண்ணத்தையும் பங்கப்படுத்தினதாக ஆகிறது. இந்த மாணபங்கத்தை ஒருக்காலும் முடிந்த காரியமாக ஒப்புக்கொள்ளோம்! அதைத் திருத்தியே தீரவேண்டும். செய்த காரியம் தப்பு என்று ஏற்பட்டு விட்டபடியால், தப்பைத் திருத்தியே தான் தீர வேண்டும். அதற்காக நாமெல்லோரும் சேர்ந்துழைக்க வேண்டும். நீங்கள் இங்கே ஆயிரக் கணக்காகக் கூடியிருக்கிறீர்கள். நீங்களெல்லாரும் எங்களோடு அனுதாபம் பாராட்ட வேண்டுமென்று கோருகிறேன். நீங்களெல்லோரும் இந்தத் தப்பைத் திருத்தும் விஷயத்தில் எங்களோடு சேர்ந்துழைக்க வேண்டும். இந்த விஷயத்தைப் பற்றிக் காங்கிரெஸில் முக்கியமாகப் பேசவேண்டும். இதைக் காங்கிரெஸ் சபையார் முக்கியமாகக் கவனிக்க வேண்டு மாதலால், நீங்கள் அனுப்பும் காங்கிரெஸ் பிரதிநிதிகளும் இது விஷயத்தைப்பற்றி நன்றாக கவனிக்கும்படி நீங்கள் தாக்கீது கொடுத்தனுப்பவேண்டும். காங்கிரெஸ் பிரதிநிதிகளுக்கு ஏன் இப்படி

"தாக்கீது கொடுக்க வேண்டும்"

என்றால், ஆலோசிக்க வேண்டிய விஷயம் சின்னதல்ல. ஒரு மாகாணத்தை இரண்டாகப் பிரிப்பதா, ஒன்றாக வைப்பதா என்பது கேள்வியல்ல. இது மாகாண சம்பந்தமான விஷயமல்ல. இதில் ஸ்தானிக சுய ஆட்சி சம்பந்தமான ஒரு மூலக்கொள்கையாக கவனிக்கப்பட வேண்டியிருக்கிறது. அது என்ன வென்றால், ஒரு பெரிய மாகாணத்தின் பொது

ஜன அபிப்பிராயத்தைமதிக்காமல் ஹீனம்செய்து இகழ்ந்து தள்ளி; அம்மகாகாணத்துக்குப் பிராணப்ரதமா யிருக்கும் ஒரு முக்கிய விஷயத்தில் அவ்வபிப்பிராயத்துக்கு விரோதமாக நடந்து கொள்வது இராஜரீகத்துக் கழகா? ஸ்தானீக சுய ஆட்சியின் மூலக்கொள்கைகளில் ஒன்றாகிய இதைத் தான் காங்கிரெஸ் சபையில் கவனித்துத் தீர்மானிக்க வேண்டும். இதன் முக்கியத்தைப் பற்றி இன்னமும் நான் வற்புறுத்திப் பேச வேண்டியதில்லையே. கனவான்களே! மகா ஜனங்களே! ஸ்வதேசியத்தைப்பற்றிப் பின்னுமொரு முறை வற்புறுத்திக் கூறுகிறேன்! கேளுங்கள். நீங்கள் எல்லாரும் ஆயிரக்கணக்காகவும் லெக்ஷக்கணக்காகவும் சேர்ந்து,

"சுதேசிய முயற்சியை யாதரித்து வாருங்கள்"

அதன் கொடியை உயர்த்தி, அது எங்கும் பறக்கச்செய்யுங்கள். கிராமங்கள் தோறும் ஜில்லாக்கள்தோறும் சென்று அக்கொடியை நாட்டுங்கள். நாடெங்கும் இந்தச் செய்தியைப் பரவச்செய்யுங்கள். நம் ஜனனபூமியாகிய இப்புண்ணிய பூமியைப் பஞ்சம், பெருவாரி, முதலிய மற்றுமுள்ள வறுமை நோய்கள் பிடிக்காது காக்க வேண்டுமானால் சுதேசியத்தைக் கைவிடாது பற்றுங்கள். சுதேசியத்தைச் சுற்றிக் கூடுங்கள். சுதேச விரதம் எடுங்கள். தொழில் விருத்தி செல்வவிருத்தி செய்யுங்கள். தொழில் வகையிலும் துரைத்தன வகையிலும் ஸ்வதந்தர மளிக்கவேண்டிக் கோருங்கள். மெய் மொழி மனமென்னும் திரிகரண சுத்தியாக சுதேசியத்தைக் கைப்பற்றுங்கள்.

ஆரியவர்த்தத்திலிருந்த பூர்வ ரிஷிகள்

எவ்வளவு பக்தி சிரத்தையோடும் திரிகரண சுத்தியோடும் ஸர்வ பற்றுகளையும் தியாகம் செய்து நிஷ்காமமா யுழைத்தார்களோ அப்படி அவர்களைப் போலுழைக்க ஹிருதய சுத்தமும், மனோதைரியமும், புத்தித் தெளிவும் உண்டாகும்படியும் ஜகத்குரு தேவி யருள்புரியும்படி ஸதா பிரார்த்தியுங்கள்.

பூர்வத்தில் நமது முன்னோர்களுக்கிருந்த ஸத்குண சம்பத்து களெல்லாம் நமக்கு முண்டாக வேண்டுமென்று அவைகளைப் பெறப் பாடுபட் டுழையுங்கள். [சந்தோஷ கரகோஷம்] இந்தியா வெல்லாம் புனர் ஜன்ம மெடுத்ததுபோல் அதன் ஒவ்வொரு நாடி நரம்பிலும் பிராணன் துள்ளிக் குதிப்பதைப் பாருங்கள், கிழக்கே

சூரியோதயமாயிருக்கிறது பாருங்கள்,

அந்த வெளிச்சங் காண நம் கண் திறந்து விட்ட புண்ணியம் ஜப்பான் தேசத்ததாரது, கிழக்கே உதயமாயிருக்கும் சூரியன் மேலேற வேற மத்தியான வேளையில் நம் தலைக்கு மேலேதான் வரவேண்டும். அதற்கு நீங்களெல்லாரும் தயாராயிருங்கள். சித்த சுத்தியோடு சுத்தமாகப் பற்று களை யெல்லாம் விட்டு ஜன்ம பூமிக்கு ஹிருதய பூர்வமாக உழைப்பதாகக் கங்கணங் கட்டிக் கொள்ளுங்கள், பூர்வீகமாயுள்ள இந்தப் புண்ணிய பூமியாம் நம் தேசத்துக்குழைக்க நாமெல்லாம் கங்கணம் கட்டிக் கொள்வோம் வாருங்கள். இந்த ஜன்ம பூமியாம் நம் மாதாவுக்காக நாம் ஸர்வத்தியாகியாய் எல்லாவற்றையும் விட்டு அவள் நன்மை யொன்றே நோக்கமாய்க் கொண்டுழைப்போம். ஸ்வய நலம் ஸ்வய காரியம் இவ்விரண்டும் நாம் சுத்தமாகப் பாராட்டவே வேண்டாம். நமக்குள்ளிருக்கும் வேற்றுமை வித்தியாசங்களை யெல்லாம் விட்டு, அவைகளை மண்ணில் மறையப் புதைத்து விட்டு "ஜகத்ஜநநீ ஸ்த் குரோபாஹி' என்று ஜன்ம பூமிக்கே நம்மை அர்ப்பிதமாகக்கொடுத்து நம் சுதேச க்ஷேமத்துக் குழைப்போமாக. நமக்குரிய பதவியை நாமடைவோமாக வென்று தேவியைக் குறித்துப் பிரார்த்திப்போம். நம்பிரார்த்தனை வீண்போகாது "சுதேசியம்" அந்நியர்களுடைய உத்தம நோக்கங்களை யங்கீகரிக்கக்கூடா தென்பதில்லை ஆனால் அங்கிருந்துவந்த நோக்கங்களை கிரகித்து நமது பூர்வ வாசனைக் கேற்ப அவைகளை யனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதே

சுதேசியமாம். புதியனவற்றைப் பழையனவோடு பொருந்த வைத்துப் புதியன பழையன இரண்டும் தாதாத்மியமாகப் பொருந்தப்பொருத்தி அப்பொருத்தத்திற்கு நிமித்தமான தத்துவத்தோடு நாமும் பொருந்தி யுழைப்பதே உண்மை சுதேசியமாம். தானுண்ட உணவு தன்மய மாவதுபோல, தான் கொண்ட எண்ணமும், கிரகித்ததோர் உயர் நோக்கமும் தன் மயமாகத் தன்னுள் ஜீரணிக்கச் செய்து, அதன் உண்மையை உள் நின்றும் தானாக வளரச் செய்வதுவே புற நோக்கங்களை ஸ்வீகரிக்கும் சரியான வழியாம். ஸ்வதேசியத்தை முன்னிட்டு ஸ்வதேசியத்தின் பேரால் பின்னுமொரு முறை உங்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். நீங்களெல்லாரும் இன்று முதல் சுதேசி விரதம் பூண்டு, சுதேசியத்துக்காக உடல்பொருள் ஆவியையும் தத்தம் செய்து உழைப்பதாகப் பிரதிக்ஞை செய்து கொள்ளுங்கள். எடுத்த விரதத்துக்கு பங்கம் வராமல நடந்து கொள்ளுங்கள். அதனால் கடவுளின் மகிமை விளங்கட்டும். அவருடைய அருள் வெளி யுங்களைச்சூழ்ந்து உங்களுக்கு ஊக்கத்தையும் தைரியத்தையும் உண்மை வழியில் நடக்க உறுதியையும் கொடுக்கட்டும். வந்தேமாதரம். ஜகத்ஜநநீஸத் !

ஸ்ரீயுக்த பால கங்காதர திலகர் மஹோபந்யாஸம்.

நவீனக் கக்ஷியாரின் கொள்கைகள்.

நமது ராஜ தந்திர விஷயமாய் இரண்டு புதிய பதங்கள் சமீப காலத்தில் உண்டாயிருக்கின்றன. அவை 'மிதவாதிகள் (Moderates), 'அமித வாதிகள்' (Extremists) என்னும் பதங்களாம். இப்பதங்களுக்கும் அவை பிரயோகிக்கப்படும் காலத்துக்கும் ஒரு விசேஷ சம்பந்தம் இருக்கின்றமையால், அக்காலம் மாறுந்தோறும் அப்பதங்களின் பொருளும் மாறிக் கொண்டே வரும். இன்றைக்கு அமிதவாதிக ளெனப்படுவோர்கள் நாளைக்கு மிதவாதிகளாய் விடுவார்கள். அஃதெப்படி யெனில், இன்றைக்கு மிதவாதிளெனப்படுவோர் நேற்று வரையில் அதமிவாதிகளா யிருந்தது போலாம். நாஷனல் காங்க்ரெஸானது முதல் முதல் ஆரம்பிக்கப் பெற்ற காலையில், இப்பொழுது மிதவாதிகளின் அபிப்பிராயங்களெனக் கொள்ளப்படும் ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியின் கருத்துகள் வெளியிடப்பட்ட பொழுது, அவரை யெல்லோரும் அமிதவாதி யென்றார்கள். இதனால் அமிதவாதி (Extremist) என்ற பதம் காலபேதத்தை யொட்டி அர்த்த விர்த்தி கொள்ளும் சொல்லென்று விளங்குகின்றது. இன்றைக்கு நாங்கள் அமிதவாதிகளா யிருக்கின்றோம். எங்கள் பிள்ளைகள் அவர்கள் காலத்தில் தங்களை அமிதவாதிக ளென்று சொல்லிக்கொண்டு எங்களை மிதவாதிகளென்று எண்ணுவார்கள். ஒவ்வொரு நவீனக் காட்சியும் மிதவாதக் கட்சியாய் ஆரம்பித்து, அதே மிதவாதக் கட்சியாய்

முடிகின்றது. ராஜ தந்திர சங்கதிகள் அநுபோகத்தில் அறிந்து சொல்லக் கூடாதபடி அளவு கடந்தவையல்ல இன்னும் ஆயிர வருஷத்துக்குள் இன்னது தான் நடக்கும் நடக்காதென்று திட்டமாய் அறிந்து சொல்வது அசாத்தியமாயிருந்தாலும் பலவகைப்பட்ட விசித்திர சீதோஷ்ண பேதங்களை யுகந்தோறும் அடைந்துவரும் இப்பூமண்டலத்தின் கால விசேஷத்தால் ஒருவேளை வெள்ளை மூஞ்சி யென்பதே சுத்தமாய் இல்லாமல் அடித்துக்கொண்டு போய் விட்டாலும் விடலாம். ஆகவே. நாம் இக்கால நிலையை நன்காராய்ந்து இப்பொழுதுள்ள ஸ்திதிக்குத் தக்கபடி நடக்க வேண்டிய காரிய பத்ததி யொன்றை உண்டாக்க வேண்டும். எனக்கேற்பட்டிருக்கும் சொற்ப நேரத்தில் இவ்விஷயத்தை விபரமாய் எடுத்து விளக்குவது அசாத்தியம். ஆயினும், ஒன்று மாத்திரம் நிச்சயம். அதாவது, இந்த துரைத்தனம் நமக்கு சரிப்படவில்லை யென்பதாம். ஒரு நாட்டை வேறொரு நாட்டார் ஆள்வதானது ஆளப்படுவோருக்கு ஒருபோதும் அநுகூலமாய் வாய்க்காதென்றும், ஆனதுபற்றியே அவ்வாட்சியானது நிரந்தரமாய் இருக்க முடியாதென்றும் ஒரு சிறந்த ராஜதந்திரி சொல்லியிருக்கின்றார். இந்த மூலாதாரமான கோட்பாட்டைப் பற்றிப் பழைய கட்சியாருக்கும், புதிய கட்சியாருக்கும் அபிப்பிராயபேதம்கிடையாது. இந்த அந்நிய அரசாட்சியானது நாட்டை நிர்மூலமாக்கி விட்டதெனபதே எல்லோரும் ஒப்புக்கொண்டதோர் அம்சம். ஆதியில் நாமெல்லோரும் திடீரென திக்பிரமையாய் அகப்பட்டுக்கொண்டு, அந்நியர் கைவசமாய் விட்டோம். அந்த ஸ்திதியில் அநேகமாய் நமக்குக் கண் கூசிப்போய் விட்டபடியால் ஆளுவோர் செய்யும் ஒவ்வொரு காரியமும் நம்முடைய க்ஷேமத்திற்காகவே யென்றும், இந்த இங்கிலீஷ் கவர்ன்மெண்டானது நம்மைத் தாமர்லேன், ஜெங்கிஸ்கான் முதலிய கொள்ளைக்காரர்களின் படை யெழுச்சியினின்று காப்பாற்றுவதற்காகவும், இன்னும் அவர்கள் சொல்வதுபோல் அயலாரின் படை யெழுச்சியினின்று மாத்

திரமல்லாமல் நமக்குள்ளேயே நடக்கும் உட்புற வெளிப்புறக் கலகத்தினின்றும், சண்டை சச்சரவுகளினின்றும் கூடக் காப்பாற்றுவதற்காகவுமே மேக மண்டலத்திலிருந்து அவதரித்து வந்ததென்றும் நாம் நினைத்தோம். சில காலம் நமக்கு அது சுகமாகவே இருந்தது. ஆனல் இந்நாட்டில் ஸ்தாபிக்கப்பட்ட சமாதானமானது வேறோர் ஆபத்தை உண்டாக்கி விட்டதென்ற சங்கதி சீக்கிரம் தெரிய வந்தது. அதாவது. ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி ஓரிடத்தில் செல்லியுள்ளபடி நாம் நமக்குள்ளேயே ஒருவர் கழுத்தை ஒருவர் முறிக்காதபடி அயல் நாட்டார் நம்மைத் தடுத்ததற்குக் காரணமென்ன வெனில், அவ்வயல் நாட்டாரே நம்மெல்லார் கழுத்தையும் முறிக்கும் பொருட்டேயாம். இந்நாட்டில் பிரிட்டிஷாரின் சமாதான ஆளுகை ஸ்தாபிக்கப்பட்ட தன் கருத்து, இந்நாட்டைப் பரதேசத்தார்கள் கொள்ளையிடும் பொருட்டேயாம். இது தான் பிரிட்டிஷ் சமாதான அரசாட்சியின் பயனென்பது வரவர நமக்கு அனுபோகமாய்க் கொண்டுவருகிறது. இன்னும் முன்னதாகவே இது நமக்குத்தெரியாது போனது நம் தௌர்ப்பாக்கியமே. நம்மை ஆள்வோரின் காருண்ய சிந்தையில் நாம் நம்பிக்கை வைத்தோம். ஆனல் ராஜ தந்திரத்தில் காருண்யமென்பது கிடையாது. வெளிக்கு சர்க்கரைப்பூச்சு போட்டுப் பகட்டி ஸ்வய காரியத்தை சாதித்துக்கொள்வதற்காகவே காருண்யம் உபயோகிக்கப்படுகிறது. ஆகவே கொழுத்த ஸ்வயகாரிய துரந்தரத்தன்மையை உள்ளே மறைத்து வெளியே காட்டப்பட்ட போலிக் காருண்யத்தைக் கண்டு நாம் அந்தக் காலத்தில் ஏமாந்து போனேம். அது தான் நமக்கு அப்பொழுதிருந்த ஸ்திதி. ஆனல், சீக்கிரத்திலேயே நாம் மாறத் தலைப்பட்டோம். இங்கிலீஷ் படிப்பினலும், கிரமமாய் அதிகரித்து வரும் வறுமையினின்றும், நம் துரைத்தனத்தாருடன் நமக்கு உண்டாய் வரும் முன்னிலும் அதிகமான பழக்கத்தாலும், நாம் கண்விழித்துக் கொண்டோம். கொள்ளவே, நம் ஜனத்தலைவர்களே—அதிலும் சமீ

பத்தில் நடந்த காங்க்ரெசுக்குத் தலைவராய் விளங்கிய பெரியவர்—துரைத்தனத்தார் நம் நாட்டை வற்றடித்து அதிலுள்ள பணத்தைத் தம் நாட்டுக்குக் கொண்டுபோவது நம் நாட்டுக்கு நாசகரமானதென்றும், இத்தகைய பண இழவு தொடர்ந்து நடந்துகொண்டே இருக்குமாயின், ஏதோ ஒரு பெரிய உற்பாதம் சம்பவிக்கப்போகிறதென்றும் சொன்னார். இச்சங்கதியின் உண்மை அவரது மனதில் அவ்வளவு பயங்கரமாய்த் தைத்தபடியால், அவர் இங்கிருந்து இங்கிலாந்துக்குச் சென்று நம் விஷயத்தில் செய்யப்படும் அநீதியை ஆங்கிலேய ஜனங்களின் மனதில் படும்படி எடுத்துச் சொல்ல முயலும் பொருட்டுத் தம்வாழ்க்கையில் 25 வருஷகாலம் அந்நாட்டிலே கழித்தார். அவர் அதற்காக அந்நாட்டிலே கஷ்டப்பட்டு உழைத்தார். அன்றியும் ஸ்டேட் செக்ரிட்டெரிகளையும், பார்லிமெண்டு மெம்பர்களையும் கண்டு பேசினார். அவ்வளவு செய்தும் பயனென்ன? அவர் தம் கோரிக்கை யெல்லாம் சுத்தமாய் பங்கமாகி விட்டதென்ற சங்கதியை நமக்குச் சொல்லத் தமது 82-ம் வயதில் இங்கே திரும்பி வந்திருக்கிறார். அவர் என் சிநேகிதர். இதுதான் அவரது யோக்கியமான அபிப்பிராயமென்று நான் நம்புகிறேன். ஸ்ரீ கோகலேக்கு இன்னும் ஆசாபங்கம் உண்டாகவில்லை. ஆனால் அவர் ஸ்ரீ தாதாபாயைப்போல் ஆசாபங்கமடைகிறவரையில் இன்னும் ஒரு 80-வருஷம் காத்திருக்க சித்தமாயிருக்கிறார். அவர் பாலியர்; என்னைவிட பாலியர். சுமார் ஒரு வருஷப் பழக்கத்துக்குள் ஏற்பட்ட (இங்கிலீஷ் ராஜாங்கத்தின் இந்தியமந்திரி முதலானவர்களின்) அறிமுகத்தால் அதற்குள் அவருக்கு ஆசாபங்கம் உண்டாகி விடாதென்று வெகு நன்றாய் அறிந்து கொள்ள என்னலாகும், தாதாபாய் நௌரோஜியே ஆசாபங்கமடைந்தாரென்றால், கோகலேயும் இன்னும் 20-வருஷம் கழித்து அந்தமாதிரி ஆசாபங்கம் உற மாட்டாரென்பதற்கு என்ன காரணமிருக்கிறது? இங்கிலாந்தில் உதாரக்கட்சி அல்லது பிரஜாநுகூலக்கட்சி (Liberals)

யார் அதிகாரத்துக்கு வந்திருக்கிறார்களெனச் சொல்லுகிறார்கள். ஆனால் அந்தக்கட்சி எவ்வளவு காலம் நீடித்திருக்கப் போகிறது. அடுத்த வருஷமே அவர்களுக்கு அதிகாரம்போய் விடலாம், அதற்கப்புறம் இன்னொரு உதார கட்சி அதிகாரத்துக்கு வருகிறவரையில் நாம் காத்திருக்கவேண்டுமே? அப்புறம் அதுவும் அதிகாரத்தைவிட்டு நீங்கினால், மூன்றாவது உதாரக் (Liberal) கட்சிவரும்போலும்! இவ்வளவுக்கும் கடைசியில் லிபரல் கவர்ன்மெண்டாரால் என்ன செய்துவிடக்கூடும்? காங்க்ரெஸின் பிதாவாகிய மிஸ்டர் எ ஒ ஹ்யூம் சொல்லியுள்ள ஓர் அபிப்பிராயத்தை எடுத்துக்கூறுகிறேன் கேளுங்கள். 1903-ம் வருஷத்தில் அவர் சொன்னதாவது: 'கவர்ன்மெண்டானது ராஜாநுகூலக்கட்சி (Conservative) யாயிருக்கட்டும், பிரஜானுகூலக் கட்சி (Liberal) யாயிருக்கட்டும்—அது எப்படி யிருந்தபோதிலும் அவர்கள் தாங்களாய் இஷ்டப்பட்டு உங்களுக்கு ஒன்றும் கொடுக்கமாட்டார்களென்பது திண்ணம். உதார துரைத்தனம் அதாவது 'லிபரல் கவர்ண்மெண்ட்' என்றால், அந்த துரைத்தனத்தைச் சேர்த்தவர்கள் உதாரக் கொள்கை யுள்ளவர்களென்று கருத்து. ஏனெனில், அவர்கள் தங்கள் நாட்டின் ஆளுகை அவ்வுதார கொள்கைகளின்படி நடக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள், அவர்கள் தங்கள் நாடாகிய இங்கிலாந்து தேசம் சம்பந்தப்பட்டவரையில் தான் உதார வாதிகளாவார். அவ்வளவே யன்றி, இங்கிலாந்தில் உதாரவாதிகளாயிருந்து இங்குவந்தபின் புசர்க்கார் உரிமைகளைப்பாதுகாக்கும்வழிகளை அநுசரிக்கின்றவராய் (கன்ஸர்வெட்டிவ்களாய்) விடுகின்றதை நான் பார்த்திருக்கிறேன். சிவிலியன் உத்தியோகஸ்தருள் பலரும ஸ்கூல்களிலும், காலேஜ்களிலும் தங்கள் வித்தியாப்பியாசத்தை முடித்து வெளியேறும்பொழுது உயர்ந்த உதார வாதிகளாகவே இருக்கின்றனர். பிறகு ஆங்கிலோ இந்திய மாதர்களை மணம்புரிந்து கொள்வதாலும் மற்றக்காரணங்களாலும் அவர்கள் தம் அபிப் பிராயங்களை மாற்றிவிடு

கிறார்கள். கடைசியில், இந்தியாவை விட்டுத் திரும்பிப்
போகும் காலையில் அவர்கள் கன்ஸர்வெட்டிவ்களாய் விடு
கிறார்கள். இதுவே எங்கு பார்த்தாலும் அநுபவ சித்த
மாய் ஏற்பட்டிருக்கிறது. சில ஆங்கிலேய தத்துவ சாஸ்
திரிகள் தங்கள் நாட்டின் ஆளுகைக்கு உட்பட்ட அந்
நிய நாட்டு ஜனங்களுக்குக் காலக்கிரமத்தில் எல்லா உரிமை
களையும், சுதந்திரங்களையும் அளிக்கத்தகும் என்று சாஸ்திர
நியாயமாக ஒத்துக்கொண்ட போதிலும், அந்த உரிமைகளை
யும், சுதந்திரங்களையும் நமக்களிப்பதற்கு அவர்கள் லிபரல்க
ளாயினும், கன்ஸர்வெட்டிவ்களாயினும் சித்தமாயிருக்கிறார்
களா என்பதே முக்கியமான அம்சம். தத்துவ சாஸ்திரிகள்
சொல்வது ஏட்டு சமாசாரம். தத்துவ சாஸ்திரியும், ராஜ
தந்திரியுமாயுமுள்ளவர், தனக்கு நியாயமெனத் தோன்றும்
காரியங்களைச் செய்தே தீரவேண்டுமென்ற நிபந்தமில்லை. ஆக
வே, மிஸ்டர் மார்லி இந்தியா செக்ரிட்டெரியாக நியமிக்கப்
பட்டதைப்பற்றி சந்தோஷங் கொண்டாடுவதற்காகக் கல்கத்
தாவில் சபை கூடினார்களென்ற விருத்தாந்தத்தை நான்
படித்தபொழுது எனக்கு சிரிப்புவந்தது. மார்லி துரை
இயற்றியுள்ள நூல்களிலிருந்து சில அம்சங்களை எடுத்துப்
படித்தனர் சிலர். மார்லி கிளாட்ஸ்டன் மந்திரியின் சரித்திர
மொன்று எழுதியிருக்கிறாரே, அதில் இன்ன இன்ன
மாதிரி சொல்லியிருக்கிறா ரென்றும் அந்த மாதிரி
பேசி யிருக்கிறாரென்றும், அவர் 30 வருஷத்துக்கு முன் ஒரு
பத்திரிகையின் ஆசிரியராயிருந்தபோது இன்னின்ன மாதிரி
யாகக் கூறியிருப்பதாகவும், அந்த சபையில் கூடியிருந்தவர்
கள் பேசினார்கள் அந்த சங்கதிகளையெல்லாம் படிக்கும்
போது எனக்குத் தோன்றியதாவது, அப்படியானால் அதற்
காதாரமாக பகவத்கீதையிலிருந்து கூட சில சுலோகங்களை
எடுத்துக் காட்டியிருந்தால், இன்னும் நன்றாயிராதாவென்று
எனக்கு நானே கேட்டுக்கொண்டேன். நான் சொல்வ
தென்னவெனில், தத்துவ சாஸ்திரிக்கும், ராஜதந்திரிக்கும்

உள்ள பேதத்தை அந்த சபையிற் பேசினவர்கள் சிறிதேனும் கவனித்தவரேயல்லர். ராஜதந்திரியானவன் தற்காலத்து ஸ்திதியை யறிந்துகொண்டு எந்த உரிமைகளை யளிப்பது இன்றியமையாத தென்பதைக் கவனிக்க வேண்டியவனே யன்றி சாஸ்திரவிதியை யநுசரித்து எது சரி, எது தப்பு என்று பார்க்கமாட்டான். அவன் உபயபக்ஷத்தின் காரியத்தையும் ஆலோசிக்க வேண்டியவன். ஒரு பக்கத்தில் சுயகாரியாபிமானிகளாகிய ஆங்கிலோ இந்தியர்கள் இருக்கின்றனர். ஸ்டேட் செக்ரிட்டெரி (Secretary of State)யாயிருப்பவன் ஆங்கிலோ இந்திய உத்தியோகஸ்தர்களின் ஆளுகைக்குத் தலைவனுதலால் அவர்களுக்குப் பிரதிநிதியாகிறான். ஆங்கிலோ இந்திய உத்தியோகஸ்தர்கள் அத்தனை பேரும் உங்ளுக்கு விரோதமாயிருக்கும்போது, இந்தியா செக்ரிட்டெரியானவர் அவ்வுத்தியோகஸ்தர்களை யெல்லாம் அலட்சியம் செய்து விட்டு உங்களுக்குரிய சுதந்திரங்களை யளிப்பாரென்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவருக்கு அந்த அதிகாரம் இருக்கிறதா? அவர் அப்படிச் செய்தால், அவரை நீர் போய் வரலாமென்று தாம்பூலம் கொடுத்தனுப்பி விடமாட்டார்களா? ஆகவே, பார்லிமெண்டு எலெக்ஷனுக்காக "வோட்" கொடுக்கும் பிரிட்டிஷ் மகா ஜனங்களே நமக்கனுகூலமாகச் செய்யவேண்டுமென் றேற்படுகிறது. ஆகையால், இங்கிலாந்தில் "வோட்" கொடுக்கும் பாத்தியதையுள்ள ஜனங்களை யெல்லாம் உங்களுக்கனுகூலமாயிருக்கும்படி நீங்கள் திருப்பவேண்டும். அப்படித்திருப்பி, லிபரல் கட்சியாரில் பெரும்பான்மையோரும் பார்லிமெண்டு மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, அவர்களும் இந்தியாவுக்கு எப்படியாவது நன்மை செய்யவேண்டுமென்ற தீர்மான முள்ளவர்களாயிருந்து, அவர்கள் மிஸ்டர் மார்லியைப்போல் நல்லவரான ஒரு ஸ்டேட் செக்ரிட்டேரியை நியமித்தால், அப்பொழுது பழைய ஏற்பாடுகளை யனுசரித்து ஏதோ சில சுதந்திரங்களைப் பெறலாமென்று ஆசை கொண்டிருக்கிறீர்கள்

இந்தக் கஷ்டங்களையெல்லாம் நமது நவீனக் கட்சியார் நன்கறிந்து கொண்டிருக்கிறார்கள். கிரேட் பிரிட்டன் தேசத்தில் வோட் கொடுக்கும் மகா ஜனங்களத்தனை பேரையும் பிரசங்க வாயிலாக உங்களுக்கனுகூலமாய்த் திருப்பியாக வேண்டும். அவர்கள் பணத்தையாவது, சுதந்திரத்தையாவது பாதிக்கத்தக்கவிதமாய் நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது. நீங்கள் சொல்லும் 'ஏட்டுச்சுரைக்காய்' சாஸ்திரப் பிரசங்கத்தைக் கேட்டுத் தம் நஷ்டத்தைக்கூடப் பாராமல் உங்களுக்கு சகாயம் செய்வதற்கு அவர்கள் என்ன மூடர்களா? பிரசங்கம் நன்றாய்த்தானிருக்கிறது. ஆனால் அதற்காக எம் சுகத்தையும், சுதந்தரத்தையும் போக்கடித்துக் கொள்ளப் போகிறதில்லை என்பார்கள். ஒரு கதை சொல்லுகிறேன் கேளுங்கள். இங்கிலாந்தில் பிரசங்கிக்கப் போயிருந்த என் நண்பர்களில் ஒருவர் இந்தியாவின் கஷ்ட நிஷ்டூரங்களையும், துன்பங்களையும் பற்றி ஒரு பிரசங்கம் செய்தபொழுது சபையிலிருந்தவன் ஒருவன் உபந்யாஸகரைநோக்கி, உங்கள் ஜனத்தொகை எவ்வளவு என்று கேட்டான். அதற்குப் பிரசங்கியார் 30 கோடி என்று விடையளித்தார். அப்படியானால் யாதொரு சகாயம் பெறுவதற்கும் யோக்கியதை யில்லையென்றானாம் அவன். இந்த எண்ணத்துடன் தான் இங்கிலீஷ் வேலைக்காரன் இந்த விஷயத்தை நோக்குவான். எப்பொழுதும் இங்கிலாந்தில் ஏற்பட்டுள்ள உழைப்பாளர் (labouring class) கட்சியிலிருந்து ஏதோ பிரயோசனம் வந்து விடப்போகிறதென்று எண்ணுகிறீர்கள். அவ்வுழைப்பாளிகளுக்கு அவர்களின் சொந்த கஷ்ட நிஷ்டூரங்கள் தலைக்கு மேலிருக்கின்றன. ஆனால் அவர்கள் கூட உங்களை மற்றவர்களைவிட மேலான விதமாய் ஒன்றும் நடத்தப் போகிறதில்லை. வேண்டுமானால் உங்களை இன்னும் அதிக கேவலமாயும் நடத்துவார்கள். ஏனெனில், பிரிட்டிஷ் உழைப்பாளிகள் தாங்கள் செய்யும் சரக்குகளை உங்களுக்கு அனுப்பி யல்லவோ, அவர்களுக்கு ஜீவனம் நடக்க வேண்டியிருக்கிறது?

இதுதான் வாஸ்தவமாயுள்ள ஸ்திதி. இதை நம்மவர் படிப்படியாய் இப்பொழுது உணர்ந்து வருகிறார்கள். ஸ்ரீ கோகலேயைப் போல் இங்கிலாந்துக்குப்போன பாலியவயதுள்ளவர்களுக்குள் லாலா லஜபத் ராயைப் போன்ற தீர புருஷர்களிருந்தபோதிலும், அவர்களுக்கு இன்னும் நம்பிக்கைக்குறைவு உண்டாகவில்லை. நபர்களின் பெயர்களைக் குறிப்பிடுவது மநுசிதமென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அவர்களெல்லோரும் எனக்கு மித்திரர்களே. அவர்களின் பேரைச் சொல்லி விஷயத்தை எடுத்துக்காட்டினாலன்றி, நான் சொல்வது நன்றாய் விளங்காதாகையால், அவர்கள் பெயரை சொல்லவேண்டி வருகிறது. ஆகவே இதுதான் உள்ளபடியே இருக்கிற சங்கதி. இந்தப் பிரயத்தினமெல்லாம் வியர்த்தமென்று நவீனக் கட்சியாருக்குப் புலப்படுகிறது. இங்கிலாந்தில் வோட்டு கொடுப்பவர்களை யெல்லாம் உங்கள் பக்கமாய்த்திருப்புவதும், அதன்பின் பார்லிமெண்ட் மெம்பர்களை உங்கள் பக்ஷமாமாயிருப்பதற்கு வேண்டிய முயற்சிகளையெல்லாம் சுற்றிச்சுற்றிச்செய்வதும், அவர்கள் இந்தியாவுக்கு அநுகூலமான மந்திரிகளைத் தேர்ந்தெடுப்பதும், அதன் பின்பு பார்லிமெண்ட் பூராவும் லிபரல் கட்சியாரும் மந்திரிகளும் சேர்ந்து இந்தியாவை ஆளும் ஆங்கிலோ-இந்திய உத்தியோகஸ்தர்களைத் தங்களுக்கிணங்கி நடக்கும்படி செய்வதும் ஆகிய இவைபெல்லாம் ஒருக்காலும் சாத்தியமாகப் போகிறதில்லை; வீணாசையே யென்று நாங்கள் சொல்லுகிறோம். இப்பொழுது பழைய கட்சிக்கும் புதிய கட்சிக்கும் உள்ள பேதம் இன்னதென்றும் உங்களுக்குத் தெரியவரும். ஆங்கிலோ-இந்திய உத்தியோகஸ்தரைப் பிரார்த்திப்பதில் பிரயோசனமேயில்லை யென்பதைப் பழைய கட்சியாரும், புதிய கட்சியாரும் ஆகிய உபய பக்ஷத்தாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சீமையிலுள்ள பிரிட்டிஷ் மஹா ஜனங்களைப் பிரார்த்தித்தால் பிரயோசன முண்டென்று பழைய கட்சியார் நம்புகிறார்கள்; நாங்கள் அப்படி நம்பவில்லை. எங்கள்

பக்ஷம் அவ்வாறிருக்கின்றமையால், நாம் காரிய சித்திக்காக வேறொரு பத்ததி யநுசரிக்கவேண்டிய தவசிய மென்று யிற்று. அப்படிப்பட்ட உபாயதந்திரம் ஒன்றிருக்கிறது. நாங்கள் சும்மா உட்கார்ந்து கொண்டிருக்கப் போகிறதில்லை. நம் கோரிக்கை ஈடேறுவதற்கு வேண்டிய வேறொரு காரியோபாயத்தை யனுஷ்டிப்போம். எங்கள் காரியத்தில் எங்களுக்கு அவநம்பிக்கையில்லை. எங்கள் காரியம் எங்கே நிறைவேறுமற் போய்விடுமோ என்ன சம்சயமே எங்களுக்கில்லை. எமது சொந்தப்பிரயத்தனங்களால் இந்தக் காரியத்தைச் சாதிக்கலாம் என்ற நம்பிக்கையே இந்தப்புதிய கட்சியின் உற்பத்திக்குக் காரணமாம்.

ஆள்வோர் ஆளப்படுவோருக்குச் சுதந்திரங்களைத் தாராளமாய் அளிப்பதால், எந்த ராஜ்யமும் அழிந்து போய் விடாது. அப்படி அழிந்ததாக உலக சரித்திரத்தில் எங்கும் காணப்படவில்லை. மிதமிஞ்சின சுகபோகத்தாலும், ஜனங்களின் சம்மந்தமின்றி அளவுக்கு மிஞ்சி சகலத்தையும் ராஜாங்க உத்தியோகஸ்தர்களைக் கொண்டே ஆண்டு வருவதாலும், தங்கள் சக்தியிலேயே அளவு மீறின நம்பிக்கை வைப்பதாலும், இவை போன்ற பிற காரணங்களாலும் ராஜ்யங்கள் அழிந்து போகின்றனவே யன்றி, ஆள்வோர் ஆளப்படுவோருக்கு அதிகாரத்தைக் கொடுத்ததினுல் எந்த ராஜ்யமாவது ஒரு போதும் அழிந்து போனது கிடையாது.

மஹாராணியின் பஹிரங்க சாஸன பத்திரிகை (Queen's Proclamation) நமக்குக் கிடைத்திருக்கிறதல்லவா? அது வெகுதூரம் சிந்தையுள்ள சாஸனம் தான். ஆனல் அது காங்க்ரெஸ் இல்லாமலே கிடைத்தது. ஜனங்கள் அளவு கடந்து கலகம் செய்கிறவராய்க் கொண்டு வந்தமையால், அவர்களை சமாதானப் படுத்தும் பொருட்டு அந்த சாஸனம் அளிக்கப்பட்டது. அது ஒருவரும் கேட்காமலும், காங்க்ரெஸ் இன்றியும், சட்ட சம்மதமான கலக்கமொன்றும் (Constitu-

tional agitation) இன்றியுமே கிடைத்தது. ஜனங்களுக்கு அரசாட்சியாரிடத்தில் ஆசையும், நம்பிக்கையும் உண்டாக்கத் தக்க வண்ணமாய் அந்த சாஸனத்தில் பதப்பிரயோகம் பண்ண வேண்டுமென்று மஹாராணியார் மிகவும் கவலை கொண்டிருந்தார்களாம். அந்தக் கவலையெல்லாம் சட்டசம்மந்தமான கலக்கத்தினின்று உண்டாகவேயில்லை * 1858-ம் வருஷத்திற்குப் பிறகு தான் சட்ட சம்மந்தமான கலக்கமென்பது ஆரம்பித்தது. அதன் பயன் என்னவெனில், மஹாராணியின் சாஸனப்பத்திரிகை ஏட்டுச்சுரைக்காயாகவே இருந்து வருகின்றது. ஏனெனில், அந்த சாஸனம் ஏற்படுவதற்கு ஹேதுவாயிருந்த நிலைமைகள் மறைந்து போய் விட்டமையால், அதை நிபந்தமாய் அமுலுக்கு வரச்செய்வதற்கு நமக்குத் திறமையில்லாமற் போய்விட்டது. அந்த சாஸனத்தில் செய்யப்பட்டிருந்த வாக்குத்தத்தை நிபந்தமாய் நிறைவேற்றிக் கொள்வதற்கு வேண்டிய வல்லமை உங்களிடம் இல்லாமற் போயிற்று. நாட்டை ஆளும் உத்தியோகஸ்தர்களின் பக்ஷம் ஜயமடைந்து விட்டபடியால், அவர் ஸ்தாபித்த ஆட்சி முறையில் மஹாராணியின் சாஸனத்தை நிறைவேற்றுவது அசாத்தியமாய்ப்போய் விட்டது. லார்ட் கர்ஸன் அந்த சாஸனத்தை எள்ளி நகைத்து கேலி செய்யலாயினர். இன்னொரு 'லாயர்' அந்த சாஸனம் சட்டசம்மதமானதன்று, பார்லிமெண்ட் சபையில் பர்வானா செய்யப் பெறாமையால் என்றார். அவர் பெயர் ஸர் ஜேம்ஸ் ஸ்டீவென் இது இல்பர்ட் பில் ஏற்பட்ட காலத்தில் நடந்தது. இப்பொழுதோ அந்த ராணியின் சாஸனத்துக்கே வேறு அர்த்தம் சொல்லித்தட்டிவிடப் பார்க்கிறார்கள். மிஸ்டர் மார்லி அந்த சாஸனத்தை நிறைவேற்றப் போகிறாரா ? அதற்கு அவர் எவ்வாறு பொருள் கூறுகிறாரென்பது நமக்கு நிமித்தமில்லை. அதை நிறைவேற்றும்படி அவரை யெதனால் கட்டாயப்படுத்தலாமென்பதே நாம்

* 1858-ம் வருஷத்தில் சிப்பாய்க் கலகம் நடந்தது.

விசாரிக்க வேண்டியது. கேட்டாலன்றி கிடைக்கா தென்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனல் நாம் கேட்பது மறுதலிக்கப்படாதென்ற நிட்சயத்துடன் நாம் கேட்க வேண்டும். நமக்குக் கிடைக்க வேண்டியதை (அதிகாரத்துடன்) கேட்பதற்கும், விண்ணப்பம் செய்துகொள்வதற்கும் பெருத்த பேதமிருக்கின்றது. சம்போக வயது நிர்ணய மசோதா, நிலவரி, புறக்குடி விஷயம் (Tenancy question) முதலியவற்றின் விஷயமாய் நடந்ததை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். நமக்கு எப்பொழுதாவது குறைகள் இருக்குமாயின், அதற்காக சபைகள் கூட்டி விண்ணப்பம் செய்தும், நம் கஷ்டங்களை யெடுத்துச் சொல்லப் பிரதிநிதிகளை யனுப்பியும், பத்திரிகைகளில் முறையிட்டும் வருவதுண்டு. அவ்விஷயத்தில் சர்க்கார் தீர்மானம் இன்னதென்று தெரிந்துவிட்டால், பிறகு எல்லாரும் வாயை யடக்கிக்கொண்டு அந்தத் தீர்மானத்தை ராஜ பக்தியுடன் ஒப்புக்கொண்டு விடுவோம். அது தான் சர்க்கார் காரியங்களின் அநுபவம். அவ்விதமாகத் தான மிஸ்டர் மார்லிக்கும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எழுதியிருப்பார்களென்று நான் நம்புகிறேன். வங்காளத்துண்டிப்பைப் பற்றி அவர்கள் மிஸ்டர் மார்லியை நோக்கி, "நீர் கொஞ்சகாலம் சும்மா இரும்; எல்லாம் சரிப்பட்டுப் போய் விடும். இப்பொழுது உண்டாயிருக்கும் கூக்குரலுக்கு சில கலகக்காரரே ஆஸ்பதமாயுள்ளவர். காலம் செல்லச் செல்ல அது அடங்கிவிடும்; பிறகு (வங்காளத்) துண்டிப்பை எல்லோரும் ஒப்புக்கொண்டு விடுவார்கள். உம்மைவிட எங்களுக்கு இத்தேசத்து ஜனங்களின் சுபாவம் நன்ருய்த்தெரியும். நாங்கள் அவர்களை இதுவரையில் ஆண்டிருக்கிருேம்; இன்னும் ஆளுவதாய் உத்தேசித்திருக்கிருேம். ஆதலால் எங்கள் அநுபோகத்தில் உமக்கு மதிப்பிருக்குமாகில், அவர்களின் கலகக்கூப்பாட்டுக்கு நீர் சிறிதும் இணங்கக் கூடாதென்று நாங்கள் புத்திமதி கூறுவோம்" என்று அநேகமாய் எழுதியிருக்கின்றனர் போலும். மிஸ்டர் மார்லியின் ஆலோசனை

மந்திரிகள் ஆங்கிலோ இந்தியர்களானமையால், அவர்கள் இவ்வாறு சங்கதியை அவர் முன் வைத்திருக்கின்றனர். இப்படி ஆளுகையில் அநுபோகமுள்ள உத்தியோகஸ்தர்களனைவரும் ஒரே மனதாய் அபிப்பிராயப் படும்போது, அதைத் தள்ளி நடப்பதும் அசாத்தியமென்று அவர் (மிஸ்டர் மார்லி) நினைக்கின்றார். அவர் தத்துவ சாஸ்திரியா யிருக்கட்டும் இல்லாது போகட்டும்; தேசத்தை ஆளவேண்டிய முறைமையில் அவர்கள் சொல்லுகிறபடியே நடக்கவேண்டி யிருக்கின்றமையால், அவரும் உலகத்திலுள்ள மற்றவர்களைப்போலவே யோக்கியமான எண்ணத்துடன் அவ்வாங்கிலோ இந்திய உத்தியோகஸ்தர்களின் சொற்படி நடக்கின்றார். இதுதான் உண்மையான சங்கதி. புதிய கக்ஷியார் இவற்றை யெல்லாம் நிறுத்த வேண்டு மென்கிறார்கள். நாங்கள் ஓர் உபாயத்துடன் முன் வந்திருக்கிறோம். அதை நீங்கள் அங்கீகரிப்பீர்களாயின், இந்தக்கஷ்டங்களை யெல்லாம் சுலபமாய்ப் பரிஹரிக்க முடியும். உங்கள் கைத்தொழில்கள் சுத்தமாய்க் கெட்டுப் போய்விட்டன; அந்நிய அரசாட்சியால் அழிந்து போய்விட்டன. உங்கள் செல்வம் நாட்டைவிட்டு வெளியே போய்விடுகின்றது. மனிதர்கள் எவ்வளவு கீழாகத் தாழ்ந்து போகக்கூடுமோ அவ்வளவு தாழ்ந்த மட்டத்துக்கு இப்பொழுது நீங்கள் இழிந்து வந்து விட்டிருக்கிறீர்கள். இந்த ஸ்திதியில் உங்களுக்கு சகாயம் செய்யும்படியான பரிஹாரம் வேறேதாயினும் இருக்கின்றதா? அந்தப் பரிஹாரம் அந்நிய வஸ்துக்களை விலக்குவதே யன்றி விண்ணப்பம் செய்து கொள்வதன்று. நாங்கள் சொல்வதெல்லாங்கூட, உங்கள் பலத்தையெல்லாம் ஒன்று சேர்த்து உங்கள் சக்திகளையும், அதிகாரத்தையும் ஒழுங்குபடுத்தி உருவாக்குங்கள்; பிறகு நீங்கள் முயன்று வேலை செய்தால், நீங்கள் கேட்பதை அவர்கள் மறுதலிக்க முடியாது. மஹா பாரதத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் சந்தி செய்வதற்காகக் கௌரவரிடம் தூது அனுப்பப்பட்ட பொழுது ஒருவேளை சந்தியாகாமற் போவதாயிருந்தால்,

அதற்குத் தயாராயிருப்பதற்காகப் பாண்டவர்களும் கௌர வர்களும் தத்தம் சைனியங்களைச் சேகரம் பண்ணிக்கொண் டிருந்தார்களென்று கூறப்பட்டிருக்கிறது. இதுதான் ராஜ தந்திரம். நீங்கள் கேட்பது மறுதலிக்கப்படுமாயின், நீங்கள் இவ்விஷயத்தில் போராடுவதற்குத் தயாராயிருக்கிறீர்களா? தயாராயிருந்தால் நீங்கள் கேட்பது மறுதலிக்கப்பட மாட்டாதென்று நிச்சயங் கொள்ளலாம்; தயாராயிரா விட்டாலோ, நீங்கள் கேட்பது கட்டாயமாய் மறு தலிக்கப் படுமென்பது நிச்சயம்; ஒருவேளை எப் போதுமே கிடைக்காமற் போனாலும் போகலாம். நமக்கோ ஆயுதமில்லை. ஆகவே, ஆயுதங்களின் ஆவசியமும் இல்லை அதைவிட பலமான ஆயுதம் ஒன்று நமக்கிருக்கின்றது. அது தான் ராஜதந்திர சம்பந்தமான 'பாய்காட்டு' அல்லது 'அந் நிய விலக்கு' எனும் ஆயுதம். இந்த நம் நாட்டின் ஆளுகை அவ்வளவும் கைக்குள் அடங்கத்தக்க சொற்பத் தொகையின ரான சில ஆங்கிலேயரால் நம் சகாயத்தைக்கொண்டே நடத் தப்படுகின்றதென்னும் ஒரு சங்கதி நமக்கு நன்றாய்த் தெரிகிறது. நாம் எல்லோரும் தாழ்ந்த உத்தியோகங்களில் இருக்கிறோம். துரைத்தனம் முழுவதும் நம்முடைய சகாயத் தைக் கொண்டே நடக்கிறது. அப்படியிருந்தும், அவர்கள் நமக்குள் ஒருவருடன் ஒருவன் சேர்ந்து ஒத்துழைக்கும் சக்தி நமக்கிருக்கிறதென்பதை நமக்குத் தெரியவொட்டாமல் வைத்திருக்கப் பார்க்கிறார்கள். ஏனெனில், அந்த சக்தியைக் கொண்டு நம் கையிலிருப்பதை நமக்கே யுரியதாய்ப் பண்ணிக் கொண்டு நாமே ஆளுகையை நடத்துவோமாகையால், அது அவர்களுக்கிஷ்டமில்லை. உண்மை சங்கதியாவது:—ஆளு கை முழுவதும் நம் கையிலேயே இருக்கிறது. என் வீட்டின் சாவியை என் கையில் வைத்துவிட வேண்டுமென்கிறேன். கேவலம் ஓர் அந்நிய தேசத்தானை மாத்திரம் அதிலிருந்து வெளியே துரத்திவிட்டால் போதாது; ஸ்வராஜ்யமே எங்கள்

அபீஷ்டஸ்தானம். நமது ஆளுகை யந்திரத்தின் அதிகாரம் நம்கையிலிருக்க வேண்டும். குமாஸ்தாக்களாவதற்கும், குமாஸ்தாக்களாகவே இருப்பதற்கும் எங்களுக்கிஷ்டமில்லை. இப்பொழுது நாம் அயல் நாட்டு துரைத்தனத்தாரின் கையில் அகப்பட்டுக் கொண்டு, நமக்கு நாமே நாசத்தை உண்டு பண்ணிக் கொள்ளும் கருவிகளாய் அமைந்திருக்கிறோம். அந்த துரைத்தனமும் நம்மை ஆள்வது தனக்குள்ள பலத்தைக் கொண்டன்று ஆனால், மேற் சொன்ன சங்கதியை நமக்குத் தெரிய வொட்டாமல் வைத்து நம்மைக் குருடாக்கியே யாள்கின்றது. ஸீலீ பண்டிதர் இதே அபிப்பிராயங் கொண்டிருக்கிறார். இங்கிலீஷ்காரர் இந்நாட்டில் கைப்பிடியில் அடங்கத்தக்க அவ்வளவு சொற்பத்தொகையுள்ளவர்களென்பதை அவர்கள் அறிந்து கொண்டும் நாம் பலவீனர்களென்றும், அவர்களே பலவான்களென்றும் நம்மை நம்பச் செய்து ஏமாற்றுவதே பிரதி ஆங்கிலேயனுடைய வேலையென்றும் ஒவ்வொரு இங்கிலீஷ்காரனும் நம்புகிறான். இதுதான் ராஜதந்திரம். இத்தந்திரத்தால் நாம் இதுவரையில் ஏமாற்றப்பட்டு வந்தோம். நவீனக் கக்ஷியார் உங்களை செய்யும்படிக் கேட்பதெல்லாம் இதுதான். உங்களது முன்னேற்றம் முழுமையும் உங்கள் கையிலேயே யிருக்கிறதென்பதை நீங்கள் உணரவேண்டுமென்பதே. சுதந்திரவான்களாய் இருக்க வேண்டுமென்று உங்களுக்கு எண்ணமிருந்தால் நீங்கள் சுதந்திரவான்கள் ஆகக்கூடும். சுதந்திரமாயிருக்க உங்களுக்கிஷ்டமில்லையாகில், நீங்கள் கீழே விழ வேண்டியவர்களே. அப்புறம் உங்கள் கதி அதோகதிதான் ஆகவே நீங்கள் எல்லோரும் ஆயுதங்களை விரும்பவேண்டிய அவசியமில்லை. நேராய் எதிர்த்து நிற்க உங்களுக்கு சக்தி யில்லாவிட்டாலும், இந்த அந்நியநாட்டு துரைத்தனத்துக்கு உங்கள் மேல் ஆளுகை செலுத்துவதற்கு சகாயம் செய்யாமலிருக்கத் தக்க அவ்வளவாயினும் உங்களை யடக்கி நடந்துகொள்ளும் சக்தி உங்களுக்கில்லையா? இதுதான் பாய்காட்டு என்

னும் அந்நிய விலக்கு. பாய்க் காட்டானது ராஜதந்திர சம்பந்தமான ஆயுதமென்று சொல்லுவதின் கருத்தும் அது தான். அவர்கள் சாமான் எமக்கு வேண்டாம். சர்க்கார் பணம் வசூல் செய்வதிலும், சமாதானத்தைப் பரிபாலிப்பதிலும் நாம் அவர்களுக்கு சகாயமாயிருக்கவேண்டாம் இந்தியாவின் எல்லையைத் தாண்டி இந்திய ரத்தத்தைச் சிந்தி இந்தியர் பணத்தைச் செலவழித்து யுத்தம் பண்ணுவதற்கு அவர்களுக்கு சகாயம் செய்யாமலிருப்போம். நியாயபரிபாலனம் செய்வதற்கு நாம் அவர்களுக்கு சகாயம் புரியாமலிருப்பொம். நாம்நம் சொந்த நியாயஸ்தலங்களை வைத்துக்கொள்வோம். சயயம்வந்தால் வரியும் செலுத்தமாட்டோம். உங்கள் ஒற்றுமையான முயற்சியால் நீங்கள் அவ்வளவு செய்வீர்களா? செய்வீர்களாயின், நாளை முதற்கொண்டே நீங்கள் சுதந்திரமுடையவராவீர். இன்று சாயங்காலம் பேசின கனவான் அரைரொட்டியையும், முழுரொட்டியையும் பற்றிப்பேசினார். நான் சொல்வதாவது எனக்கு முழு ரொட்டியும் வேண்டும் அதுவும் உடனே வேண்டும் ஆனால் எனக்கு முழுதும் கிடைக்காவிட்டால், எனக்குப் பொறுமை யில்லையென்று நினைக்கவேண்டாம். அவர்கள் கொடுக்கும் பாதிரொட்டியை வாங்கிக்கொண்டு மீதியுள்ள பாதிக்காகவும் முயல்வேன்.

இவ்விதமான கருத்திலும் காரியத்திலும் தான் நீங்கள் பழகித் தயாராகவேண்டும். வெறும் உற்சாகத்தினால் நாங்கள் இந்த கோஷத்தை எழுப்பவில்லை. அதை யுக்தி யுக்தமான உற்சாகமென்றறிக. அந்த யுக்தியை அறிந்துகொள்ள முயலுங்கள். பிறகு அந்த உற்சாகத்தை உங்கள் தர்க்கயுக்தியைக்கொண்டு பலப்படுத்த முயலுங்கள். எங்களைக் குருட்டுத்தனமாய்ப் பின் பற்றுங்கள் என்று உங்களுக்கு நான் சொல்லவில்லை. இந்த விஷய முழுவதையும் உங்களுக்குள்ளேயே யோசித்துப் பாருங்கள். நீங்கள் எங்கள் யோசனையை ஒப்புக்கொள்வீர்களாகில், அதன் மூலமாய் நமக்கு மீட்சி உண்டாகுமென்று எங்களுக்குநிச்சயமாயத் தோன்றுகின்றது.

இதுதான் நவீனக்கக்ஷியாரின் புத்திமதி பழைய தூரபிமானங்கள் தொலைவது வெகுகடினம். உபயபக்ஷத்தாருள் எவரும் காங்கரெஸை சின்னாபின்னப்படுத்தக் கோரவில்லை ஆகவே, நாங்கள் ராஜியாய்ப் போய்விட்டோம். எங்கள் கொள்கைகளில் சிலவாவது ஒப்புக்கொள்ளப்பட்டதைப்பற்றி நாங்கள் திருப்தியடைந்திருக்கிறோம். அதனால் நம் கொள்கைகள் முழுவதும் ஒப்புக்கொள்ளப்பட்டனவா ா. அடுத்த வருஷம் நாம் இன்னுமோர் அடி முன்னே எடுத்துவைப்போம். அப்படியேபோகப்போக இன்னும் சில வருஷங்களுக்குள் நம் கொள்ைகள் இன்னுமதிகமாய் ஒப்புக் கொள்ளப்படும். அவை யெவ்வளவு வரையில் ஒப்புக்கொள்ளப்படுமென்றால் நமக்குப் பின்னால் வரும் தலைமுறையார் நம்மை மிதவாதிகளெனக் கருதும்படியாயிருக்கும். இவ்விதமாகத்தான் ஒரு பெரும்ஜன (Nation) அபிவிர்த்தி யடைகின்றது. ஜன உணர்ச்சி அபிவிர்த்தி யடைவதும் இவ்விதமாகத்தான். இது தான் இப்பொழுதும்நடந்து கொண்டிருக்கும் போராட்டத்திலிருந்து நாம் கற்றுக்கோள்ள வேண்டிய பாடம். இது தான் அபிவிர்த்தி யடையும் மார்க்கத்தை போதிக்கும் பாடம், கூடுமானவரையில் ஸ்வயம் ஸஹாயத்தைக் கற்பிக்கும் பாடம். அதன் சாரதத்துவத்தை மாத்திரம் நீங்கள் உண்மையாய் உணர்வீர்களானால், இந்த யுக்திகளால் நாங்கள் சொல்வது உண்மையென உங்களுக்குப் படும் பட்சத்தில், அப்பொழுதுதான் இந்த அந்நியர் ஆளுகையினின்றும்—எதில் அகப்பட்டுக்கொண்டு நீங்கள் இந்த சமயம் தவிக்கிறிர்களோ—அந்த அந்நியர் ஆளுகையினின்றும் உங்கள் மீட்சியைச்சாதிப்பது சாத்தியமாகும்.

இன்னும் எவ்வளவோ அம்சங்களைப்பற்றிப் பேசவேண்டியிருக்கிறது. அவற்றை யெல்லாம் ஒருமணி நேரப் பிரசங்கத்தில் விளக்கி உபந்யசிப்பது அசாத்தியம். உங்களுக்குத் தப்பான அபிப்பிராயம் ஏதாவது உண்டாயிருந்தால், இங்கே உங்கள் சம்சயங்களைத் தெரிவித்துக்கொண்டு போங்கள்

பிரதி ஆக்ஷேபணைக்கும் சமாதானம் சொல்வதற்கும் பிரதி சந்தேகத்தையும் தெளிவிப்பதற்கும், நாங்கள் சொல்லும் ஒவ்வொரு பேச்சையும் நிருபணம் செய்து காட்டுவதற்கு. நாங்கள் ஆயத்தரா யிருக்கின்றோம் உங்கள் ஒத்தாசை எங்களுக்கு வேண்டியிருக்கிறது. உங்கள் சகாயமன்றி நாங்கள் தன்னந்தனியராய் யாதொன்றும் செய்ய முடியாது. இவ்விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்யும்படியாயும் இந்த சந்தர்ப்பத்தை நோக்கும்படிக்கும், நோக்கி அதன் தன்மை முழுவதும் மனதில் வாங்கிக்கொண்டு அதன் பின்னர் எங்கள் சகாயத்துக்கு வந்து, நமது கூட்டு சகாயத்தால் இத்தேசத்தின் மீட்சிக்கு ஒத்தாசைபுரியும்படியாயும் உங்களை நாங்கள் கெஞ்சி மன்றாடிக்கேட்டுக் கொள்ளுகிறோம்.

சுவாமி விருதை சிவஞான யோகிகள்.

சுதேசீய சபை.

ஆஜர்.

பிரஸிடெண்டு—ஸ்ரீலஸ்ரீ சுவாமி விருதை சிவஞான யோகிகள்.

வைஸ்பிரஸிடெண்டு—மிஸ்டர் குமாரெட்டு நாயக்கர் அவர்கள்.

ஸெக்ரிட்டெரிகள்— மெஸஸ் ப சுப்பிரமணியப்பிள்ளையவர்கள், க. ஆண்டியப்பபிள்ளையவர்கள்.

மெம்பர்கள்—ஆர் ஸ்ரீநிவாசய்யங்கார், இராமசாமி அய்யா, நாகஞ் செட்டியார், பீர்முகைதீனராவுத்தர்,

சு குருநாதையர்

இச்சபை 15-10-06ல் கூடி சுதேசி நிதிக்காக எட்டயபுரம் நடுவிற் பட்டிகளில் தீபாவளி, தைப் பொங்கல், கலியாண முதலிய சுப சோபனங்களில் தருமம் வசூல்செய்து உலகோபகாரமாகக் கைத்தொழில், அதற்குரிய சாஸ்திரங்கள் இவற்றை விருத்திபண்ண ஏற்பட்டிருக்கும் சென்னை சுதேசீய நிதிக் கனுப்ப வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. சுமார் 500 ஜனங்கள் வந்து கூடினார்கள். சாயந்திரம் 4 மணி முதல் 7 மணி வரை பிரெசிடெண்ட் தமிழ்ப் பிரம்ம சூத்திராசிரியராகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமி விருதை சிவஞான யோகிகள் பிரசங்கித்தார்கள். அது வருமாறு :—

வந்தேமாதரம் என்ற மந்திரம்—மாதரம் மாதாவை (தாயை) வந்தே வணங்குகின்றேன்—என்ற பொருளுடையது. தாய்என்பது யாவும் வெளிப்படுவதற்குக் காரணமாகிய உற்பத்தி ஸ்தானமாதலால், தாயை வணங்குகின்றேன் என்பதில் சர்வலோக மாதாவாகிய பரம்பொருளை வணங்குகின்றேன் என்றஉட்பொருளுளது. இது "தோற்றமுதல் விதற்கெதினின்று" என்ற பிரமசூத்திரத்தால் விளங்கும். அந்தப் பொருள் சைவம், வைஷ்ணவம், கிறிஸ்துவம், மஹமதியம் முதலிய எல்லா மதத் தெய்வங்களுக்கும் பொதுவாதலால், எல்லா மதத்தினரும் இம்மந்திரத்தை யுச்சரிக்கலாம். இப்போது மந்திரத்தை எல்லா மதத்தினரும் தியானித்தலால் தெய்வத்தியான லனும் புண்ணியமு மெய்துவர். ஒருவரையொருவர் காணுந்தோறும் இம்மந்திரங் கூறுவதால் அவ்வவர் தெய்வ ஞாபகமுண்டாவதில்லை யமின்று.

இனி அதன் "வெளிப்பொருள்", இந்து தேசத்திற் பிறந்து அதில் வசிக்கும் பல மதத்தினராகிய எல்லா இந்தியர்களுக்கும் பிறத்தற்கிடமாகிய இந்து தேசத்தை கனம் பண்ணுகின்றேன் என்பது. இந்து தேசம் பல அந்நிய நாடுகளைக் காட்டிலும் முன்னரே கைத்தொழில், சிற்ப சாஸ்திரம், வான சாஸ்திரம், பூத தத்துவ சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், யோக சாஸ்திரம், ஞானசாஸ்திரம் முதலிய அரிய நூல்களிலும் மிகச்சிறப்புற்றிருந்தது. இதற்குப் பல நூறு வருடங்களுக்குப் பின்னர் மிருகப்பிராயமாயிருந்த பல அந்நிய நாட்டார் கொஞ்சம் கொஞ்சம் சீர்த்தேற்ற மடைந்து இப்பொழுது இந்து தேசத்தாரைக் காட்டிலு மிக்க மேலான முயற்சியும் நாகரீகமும் அடைந்தவர்களாய்விட்டனர். இந்து நாட்டில் ஆகாரத்துக்குரிய பல தானியங்களும் காய் கறிகளும், ஜாதிக்காய் ஏலம் முதலிய வாசனைத் திரவியங்களும், தங்கம், வெள்ளி முதலிய லோகங்களும், வைரம் பச்சை, சிவப்பு முதலிய எல்லா வகை ரத்தி

னங்களும், இரும்பு மண்களும், கண்ணாடி செய்தற்குரிய மண்களும், கைத்தொழில் செய்வதற் குபயோகமான சமசீதோஷ்ணமும் இருந்தும், அவற்றைக் கைத்தொழில் முதலிய முயற்சியால் பயன் படுத்தும் ஊக்கம் இன்மையாலும், இத்தேசத்தின் செல்வத்தை விரும்பி அந்நிய நாட்டார் சுமார் இரண்டாயிர வருட காலமாய்ப் பல தடவை படையெடுத்து வந்து கொள்ளையடித்ததால் செல்வத்தையும் பல நூல்களையும் பறிகொடுத்து ஒற்றுமையும் சுதந்திரமும் இழந்துவருந்தியதாலும், வைதிகர் சுதேச நன்மையைக் கருதாதொழிந்ததாலும், ஆன்மதத்துவ சாஸ்திரங்களிற் றேர்ந்த அறிஞர்கள் சர்வ சங்க பரித்தியாகஞ் செய்து உலகினர்க்கு உலக விடயங்களை அறிவுறுத்தும் உபகாரத்தைக் கைநெகிழவிட்டதாலும், இந்தியர் வறுமை யடைந்து விட்டனர். நமது தாய் நாட்டை கனம் பண்ணும் முயற்சி யில்லாமையானே அங்ஙன மாகியது.

ஆதலால் இந்துக்கள், நாயனார் "உடைய ரெனப் படுவ தூக்கமஃ தில்லாருடைய துடையரோ மற்று", "முயற்சி திருவினையாக்கு முயற்றின்மையின்மை புகுத்திவிடும்" என்ற திருவாக்குக் கிலக்கியமாயினர். ஆகவே இனி இந்நாட்டிற் பரவிய வறுமையை நீக்குதற்கு ஊக்கமும், முயற்சியும் அவசியம் வேண்டற் பாலனவாய் நமது தேசத்தைக் கவனியாதிருந்தமையை யொழித்து, நம் நாட்டார் க்ஷேமமடைதற்காக நமது தேசத்தை கனம் பண்ணவேண்டு மென்பதே இம்மந்திரத்தின் கருத்தாம். நீண்டகாலம் நம் நாட்டார் ஊக்கமும் முயற்சியும் சுதேசத்தைப் பேணு முறையும் மறந்து இருந்தமையால் இனி ஒவ்வொருவர் மனதிலும் நன்கு ஞாபக முண்டாகி நினைக்கும் பொருட்டு ஒருவரையொருவர் பார்க்குந்தோறும் சுதேச மாதாவை கனம் பண்ணுகின்றேன் என்று பொருளுடைய வந்தே மாதர மந்திரத்தைக் கூறல் வேண்டும். தொகுத்துக் கூறுமிடத்து, இரட்டுற

மொழிதலென்னும் யுக்தியால் உலக மாதாவாகிய கடவுளை வணங்கி (அவனருளால்) சுதேசமாகிய தாயைக் கனம் பண்ணுகின்றேன் என்பது பொருளாம்.

இம்முயற்சி தோன்றாத் துணையாகிய கடவுள் உதவியோடு லெப்டினெண்ட் கவர்னர் புல்லர் முயற்சியால் இந்திய மந்திரியாகிய ஜான் மார்லிப் பிரபு மூலமாய் சுதேசீய முயற்சிக் கிடுக்கண் செய்யவாவது, சுதேசிகள் வந்தே மாதரங் கூறலைத் தடுக்கவாவது கூடாதென் றுத்திரவளித்த ஆங்கிலக் காருண்ய கவர்ன்மெண்டார் உதவி தோன்றாத்துணையாகவே யிருத்தலால், இடையூறின்றி நன்கு முடியுமென்பதில் லையமின்று.

இங்கிலந்தில் இரும்பும் தகரமும், சிலேட்டுக்கல்லும், நிலக்கரியுந்தான் விசேஷமாய் அகப்படுவன. இந்தியாவில் தங்கம், வெள்ளி, இரும்பு முதலிய லோகங்களும், வைரம், சிவப்பு முதலிய ரத்தினங்களும், தானிய வகைகளும், சம்பாரதிரவியங்களும், வாசனைத்திரவியங்களும், பட்டு, ரோமம், நூல் முதலிய வஸ்திரங்களுக்கு வேண்டும் பொருள்களும் விசேடமாய்க் கிடைக்கும். அத்தகை ஐசுவரிய முடையராயிருந்தும் இந்துக்கள் ஊக்கமும் முயற்சியும் இல்லாததால் இல்லாதவராயினர். எல்லாமில்லாவிடினும் ஊக்கமு முயற்சியு முடையராகிய அந்நியர் உடையவராயினர். இவ்விஷயத்தில் "உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லாருடைய துடையரோ மற்று" என்ற திருமொழி யெவ்வளவுண்மை யென்பது இவ்வனுபவத்தால் நன்கு விளங்கும். ஆதலால் நாம் ராஜவிசுவாசமுடையரா யிருத்தல் போல கைத்தொழில் வியாபாரம் முதலிய முயற்சியுடையவராகவும் வேண்டும். அங்ஙனம் செய்யவே நாம் நம் தேசத்தில் இயற்பொருட் செல்வமிக்குடையராதல்போலச் செயற்பொருட் செல்வமு மிக்குடையராவோம். எப்பொழுது இயற்பொருள்களை அந்நிய நாட்டாருக்குக் கொடுத்தல் போலச் செயற்பொருள்களையும் அந்

நிய நாட்டாருக்குக் கொடுக்கும் பாக்கிய முடையராவோம்.

உலகத்தில் தாழ்ந்த லோகங்களாகிய இரும்பு, செம்பு முதலிய லோகங்களை உயர்ந்த லோகமாகிய வெள்ளி தங்கமாக்குதல் ரஸவாத மென்னப்படுகின்றது. இவ்வித்தையைக் கற்றுக்கொள்ள விரும்பிப் பல ரஸாயன சாஸ்திரிகளும் வைத்தியர்களும், பேராசைக்காரர்களும் தங்கள் கைப்பொருளையும் ஆயுளையும் செலவழித்தும், சிலர் அவற்றோடு கண்ணிழந்தும் வருந்துகின்றனர். அந்தோ! அன்னவர் கைத்தொழில் ரஸவாதப் பெருமை யுணர்ந்திலர் போதிலும்

இரஸவாதத்தில்.

I பங்கு இரும்பு செம்பானால் 18 பங்கு விலை பெறும். I பங்கு இரும்பு வெள்ளியானால் 360 பங்கு விலைபெறும். I பங்கு செம்பு வெள்ளியானால் 20 பங்கு விலை பெறும். I பங்கு செம்பு தங்கமானால் 600 பங்கு விலை பெறும் I பங்கு வெள்ளி தங்கமானால் 30 பங்கு விலை பெறும்.

கைத்தொழிலில்.

I ரூபாய்க்கு இரும்பு பலம் 120. அதாவது $120 \times 6 = 720$ தோலா.

ராஜர்ஸ் பேனாக்கத்தி 1-க்குத் தோலா $1\frac{1}{2}$, அதாவது I ரூபாய் இரும்புக்கு, 480 கத்தி. கத்தி I-க்குக் கிரயம் ரூபா 1-4-0 வீதம் 480 கத்திக்கு ரூபா 600 ஆகிறது.

I ரூபாய்க்கு இரும்பு பலம் 120. இதனாற் செய்யப்பட்ட 2 பைசைகிளின் கிரயம் 700.

I ரூபா இரும்பினாற் செய்யப்பட்ட டபில் பால் உயர்ந்த துப்பாக்கி 4க்குக் கிரயம் ரூபா 1200.

இது செம்பைத்தங்கமாக்கல் போன்ற கைத்தொழில் ரஸாயநம்.

5 ரூபாய்க்கு இரும்பு துலாம் 5. இதனாற் செய்யப்படுகிற தையல் யந்திரம் I-க்குக் கிரயம் ரூபா 125 முதல் 200 வரை.

1000 ரூபாய்க்கு இரும்பு 1000 மணங்கு. அதனாற் செய்யப்படும் ரெயில்வே இன்ஜின் பாயலர் கிரயம் ரூபா 20,000 முதல் 40,000 வரை ஆகின்றது.

1 அணு மண் 1 ரூபாய்க் கண்ணாடி யாக்கப்படுகிறது. அது குளோபு லஸ்தர்களாக்கப்பட்டால் 5 முதல் 250 ரூபா வரை கிரயமாகிறது. அதே கண்ணாடியாற் செய்யப்பட்ட தூரதிருஷ்டிக் கண்ணாடியின் விலை ரூபா 50 முதல் 400 ரூபா வரை.

பஞ்சு ராத்தல் (பவுண்டு) I-க்கு கிரயம்		0 5 0
காரிக்கம் துணி ராத்தல் I க்கு	,,	1 8 0
லாங்கிளாத்து ராத்தல் I-க்கு	,,	1 7 0
மல் ராத்தல் I-க்கு	,,	1 4 0
சீட்டி ராத்தல் I-க்கு	,,	2 0 0
வெள்ளை ரோமம் ராத்தல் I-க்கு	,,	0 8 0

வெள்ளை பிளானல் ராத்தல் I-க்கு ரூபா 3 முதல் 6 வரை.
கறுப்பு ரோமம் மோட்டா ராத்தல் I க்கு ,, 0 8 0
கறுப்பு பிளானல் டுவிட் ராத்தல் I-க்கு ரூபா 2 முதல் 6 வரை.
கறுப்பு ரோமம் மிருதுவானது ராத்தல் I-க்கு 0 12 0 முதல் 1 0 0 வரை.
உயர்ந்த கறுப்பு பிளானல் டுவிட் ராத்தல் I-க்கு ரூபா 3 முதல் 10 வரை.

கோதுமை ராத்தல் I-க்கு ,, 1 4 0
பிஸ்கோத்து ராத்தல் I-க்கு 0 0 முதல் ரூபா 2 0 0 வரை.

இவற்றின் செய்கூலி முதலியன எல்லாவற்றாலும் காற்பங்குக்கு மேலாகவே மாட்டா. ஆகையால் மீதமனைத்தும் லாபமேயாம்.

இந்தக் கைத்தொழில் ரஸவாதம் அனைவராலும் செய்யத்தக்கதே. ஆதலால் கைத்தொழில் செய்கின்ற அந்நிய நாட்டார், ஊக்கம், முயற்சியென்னும் மருந்துகளால், மண்ணையும், மயிரையும்கண்ணாடி, இரும்பு, ரோமத்தால் நெய்யப்பட்ட வஸ்திரங்கள்இவைகளையும் வெண்பொன்னையும், செம்பொன்னையும் ஆக்குகின்றனர். இந்த கைக் கைத்தொழில் முயற்சியைக் கைவிட்டு தரித்திரத்தில் வருந்தும் நம் நாட்டார் மண்ணாலும், மயிராலும் செய்யப்படுகிற அந்நியநாட்டுக் கைதொழிற் சாமான்களைத் தங்கள் திரவியங்கொடுத்து வாங்கிச்சோம்பல், அறியாமை யென்னும் மருந்துகளால் தங்கள் வெண்பொன்னையும், செம்பொன்னையும் மண்ணும், மயிருமாக்குகின்றனர்.

இவ்வாறு நம்மவர் முயற்சியின்மையால் விளைந்த செல்வக்குறைவால் தாழ்த்தப்பட்டிருக்கும் தாய்நாட்டை முயற்சியால் உயர்த்த அல்லது சனப்படுத்த வேண்டுமென்பதே வந்தேமாதா மந்திரத்தின் உள்ளக்கிடை. இவ்வந்தேமாதா மந்திரோச்சாரணத்தினலுண்டாகும் பலனை விசாரித்துழி.

1-வது வந்தேமாதா மந்திரம் ஆஸ்திகபுத்தியும், அதன் மூலமாய் ராஜ விசுவாசமுமுண்டாக்குகின்றது.

2-வது ஒருவருக்கொருவர் சிநேகத்தை யுண்டுபண்ணி, சைவர், வைஷ்ணவர், மஹமதியர், கிறிஸ்தவர், புத்தர், சமணர் என்ற வேற்றுமையைப்போக்கி ஒற்றுமையை யுண்டுபண்ணுகின்றது.

3-வது இந்தியர்களாகிய நாம் பூர்வீக நாகரீகமும் நிறைந்த செல்வமு முடையவரா யிருந்து, இடையில் இந்துக்களின் செல்வத்தைக் கொள்ளையடித்த பல கொள்ளைக்கார

ரால் சுயாதீனத்தையும், செல்வத்தையும், கைத்தொழில்களை யும் இழந்தோம். சில கொடுங்கோன் மன்னர் கீழ்ப்பட்டுச் சிதறுண்டு வாழ்க்கை யிழந்து கைத்தொழில் தேச விசுவாச முதலியன மறந்து வருந்திஞேம். இப்பொழுது காருண்ய ஆங்கில அரசாட்சியின்கீழ்ப் பழையபடி செல்வமடைய அவ காசம் பெற்ருே மென்றறிவுறுத்துகின்றது.

4-வது நம்மிடம் அடங்கிக்கிடந்த ஊக்கமும், மனக் கிளர்ச்சியுமாகிய பயிர் முளைக்கச் செய்கின்றது.

5-வது கைத்தொழில் முற்று மிழந்து நம் நாட்டிற பெரும்பாலார் தரித்திரமடைந்து வருந்துவதை யொழித்து, செல்வமும் சுகமுமடையச் செய்யப் பலவகைத் தொழில் களை யாரம்பிக்க வேண்டுமென்ற ஆவலாகிய மலர் மலரச் செய்கின்றது.

6-வது "முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை யின்மை புகுத்தி விடும்" என்ற திருவாக்கை அடிக்கடி நினைப் பூட்டி, முயற்சியாகிய காய் காய்க்கச் செய்கின்றது.

7-வது முயற்சி பெருகவே, அதஞல் உண்டாகும் கைத் தொழிலாகிய பழம் பழுக்கச் செய்கின்றது.

8-வது கைத்தொழில் முதலிய முயற்சி மிகுக்கவே, மத் தியில் வந்து நமது நாட்டாரை வருத்துகின்ற தரித்திரம் நீங் கிச் செல்வமும், சுகமும், சமாதானமும் தலையெடுக்கச் செய் கின்றது.

9-வது நமது தேசத்தியயற்பொருள்களாகிய தானியங் கள், வாசனைத் திரவியங்கள், தங்கம் வைரம் முதலிய ரத் தினங்கள் முதலியவற்றையும், அந்நிய நாட்டாரிடம் செயற் பொருள்களை யாசியாது சுதேசக்கைத்தொழிற் பொருள்களை யும் நாம் நன்ருயனுபவித்து, அந்நிய நாட்டாருக்கும் கொடுக் கும் பாக்கியத்தை அடையச் செய்யும்.

10-வது நாம் ஆன்ம தத்துவ சாஸ்திரத்திலும், நுண்ணறிவிலும், புராதனமானநாகரீகத்திலும், இயற்பொருளிலும் செயற்பொருள்களுக் குபயோகமான வஸ்துக்களிலுங் குறைவற்றவராயிருந்தும், ஊக்கம் முயற்சி கைத்தொழில்களின்மையால் அந்நிய நாட்டார் நம்மைப் பஞ்சைகளாக நினைக்கும் அவமதிப்பை நீக்கி, இந்தியர்கள் கல்விச் செல்வம் போலப் பொருட் செல்வமும், தொழிற் செல்வமும், ஊக்கச் செல்வமும் முயற்சிச் செல்வமும் உடையரென உலக முழுதும் புகழத்தக்க பெருமையுந் தரும்.

ஆகையால், இந்தியர்களாகிய சகல ஜாதியாரும் சகல மதத்தினரும் இம்மஹா மந்திரத்தை யொருவரை யொருவர் காணுந்தோறும், தேச நன்மைக் கென்று கூடும் பொழுதும், ஒருவரை யொருவர் பிரியும் பொழுதும் கூறுதல் ஒப்பத் தக்கதே யாகின்றது இந்த மந்திரத்தை நாம் கூறுதலாலும் நாம் கைத்தொழில் முயற்சிகளிற் றேர்ந்து செல்வமடைதலாலும் நமது ஆங்கில ராஜாங்கத்தாருக்கு யாதொரு விரோதமுமில்லை. இதில் ராஜாங்க சட்ட திட்டங்களுக்காவது அல்லது ராஜாங்கத்துக்காவது கீழ்ப்படியாத அல்லது விரோதமான செயலொன்றுமில்லை. "சமன் செய்து சீர் தூக்குங் கோல்போலமைந்தொருபாற், கோடாமை சான்றோர்க்கணி" என்ற திருவாக்குக்கிணங்கநமது இராஜாங்கத்தார்நடுநிலைமையுடையார். இங்கிலந்து தேசத்தாரும் இந்தியர்களும் ராஜாங்கத்தாருக்கு சமமான குடிகளே. விதித்தபடி யெல்லாம் அதிக வரி செலுத்தலாலும். அதிகக்கீழ்ப்படி வுடைமையாலும் இந்துக்கள் தாம் ராஜாங்கத்தாருக்கு அதிகப் பிரியப்படத் தக்க குடிகள். அத்தகை நெறியில் காருணிய ராஜாங்கத்தார் இதுகாறும் மாறுபட்டது மின்று. தங்கள் லாபத்தையே பெரிதெனக் கருதிய ஆங்கில வர்த்தகர்களும், அவர் வயப்பட்ட சில ஆங்கில வர்த்தகர்களும், சிற்சில விடங்களில் இந்தியர் தங்கள் க்ஷேமத்துக்காகச் செய்யும் கைத்தொழில்

விருத்தியை யபேக்ஷித்த சுதேசீய முயற்சிக்கு விரோதமாகக் கிளம்புவது அன்னவர் பொறாமை, அறியாமை காரணமா யுண்டாவது. அவை நாம் நமது ராஜாங்கத்தாரிடம் முறை யிட்டுத் தீர்த்துக் கொள்ளத் தக்கன. அதற்கு பாரிஸாலில் லெப்டினெண்ட் கவர்னர் புல்லர் செய்த அநீதிகளைக் கண் டித்துக் கல்கத்தா ஹைகோர்ட்டாரும், ராஜாங்கத்தாரும் செய்த தீர்ப்புகளே சான்றாம்.

இப்பொழுது சென்னைச் சுதேசீய நிதிக்கும் கைத்தொழிற் சங்கத்திற்கும்.

பிரஸிடெண்டு—திவான் பகதூர் கே. கிருஷ்ணசாமி ராவ் அவர்கள் C. I. E.; இவர்கள் திருவாங்கூர் ராஜ்யத் துக்குப் பூராவும் பிரதிநிதியாகிய திவானுகை விருந்து பென் ஷன் பெற்ற கனவான்.

வைஸ் பிரஸிடெண்டு—திவான் பஹதூர் பி. ராஜரத் தின முதலியார் அவர்கள் C. I. E.; இவர்கள் சென்னை ரிஜிஸ்தரார் ஜெனரலாயிருந்து ஆங்கில கவர்ண்மெண்டால் ராஜ தந்திரத்திற் சிறந்தவரென மதிக்கப் பெற்ற பென்ஷன் கனவான்

மிஸ்டர் N. சுப்பராவ் பந்துலு அவர்கள் B. A. B. L. ஹைகோர்ட்டு வக்கீல்.

டிரஸ்டிகள்—ஆனரெபில் நவாப் ஸய்யத் மஹமத்ஸாயப் பஹதூர் அவர்கள்; இவர்கள் வைஸராய் சட்டசபை மெம்பரா யிருப்பவர். திப்பு சுல்தான் பேராயிருப்பதோடு.

மிஸடர் V. கிருஷ்ணசாமி அய்யர் B. A B. L. ஹைகோர்ட்டு வக்கீல்.

செக்ரிட்டெரி மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய அய்யரவர்கள், சுதேசமித்திரன் பத்திராசிரியர்; முன் ஹிந்து எடிட்டரா யிருந்த கனவான்.

மிஸ்டர் D. V. ஹநுமந்தராவ் பந்துலு அவர்கள், கமிஷன் ஏஜெண்டு.

பொக்கிஷதார் மிஸ்டர் ஸ்ரீநிவாசா சாரியார் ஆதலால் இச்சுதேசீய முயற்சி கவர்ன்மெண்டுக்கு விரோதமல்லாதது நம் நாட்டில் கைத்தொழிலும் அதற்குரிய சாஸ்திரப்பயிற்சியும் விருத்தியடையும்படி செய்து தரித்திரத்தால் வருந்தும் இந்திய ஏழைகளை நன்னிலைக்குக் கொண்டு வந்து காக்கும் நனேக்கமுடைய தருமச்செயல். "நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை". ஆதலால் இத்தரும காரியத்துக்கு ஆஸ்திக சிந்தையுடையாரனைவரும் முன்வந் துபகரித்தல் அத்தியாவசியம்.

இந்த வந்தே மாதர மந்திரத்தை மிகுதியும் உலகுக் குபகரித்த கனம் சுரேந்திர நாத் பானர்ஜி யவர்களுக்கும், சுதேசீய விருத்தி விஷயமாய் இங்கிலந்தில் முயன்று கொண்டிருக்கும் கனம் தாதாபாய் நௌரோஜி, கனம் ரோமேஷ் சந்திரடட், கனம் கோபால கிருஷ்ண கோகலே, நமக்குயிர்த் துணைவராயிருக்கும் ஸர் ஹென்ரி காட்டன் பிரபு முதலியவர்களுக்கும் சர்வாபீஷ்ட சித்தியும், நீண்ட ஆயுளையுந்தர நாமெல்லோரும் ஒரு மனதாய்ப் பரமேசுரனைப் பிரார்த்திப்போமாக.

ராஜவிசுவாச தேசவிசுவாசங்கள்.

இவ்வுலகிலுள்ள மேன்மக்களனைவரும் ராஜவிசுவாசிகள், தேச விசுவாசிகள், ராஜ தேச விசுவாசிகள் (ராஜ விசுவாசம் தேச விசுவாசம் இரண்டுமுடையவர்,) குடியரசு விருப்பினர் என நால்வகைப்படுவர். காட்டு மிருகங்களும் எறும்பு முதலிய சிறு ஜெந்துகளும் தங்களுக்குள்ளொரு தலைவனை வைத்ததன் கருத்துக்கிணங்கிக் கீழ்ப்படிந்து நடத்தல் கண்கூடாகக் காண்டலிற் பகுத்தறிவுடைய மனிதற்கு ஒரு தலைவனாகிய அரசு ஒரு தலையான் வேண்டற்பாலனே. ஒரு ராஜா

வேண்டா மென்பவரும் மெம்பர்களாகிய பல அரசரின் கீழ்ப் படிந்து வாழ்கின்றனர். மெம்பர்கள் மாறிவோட்டெடுக்குங் காலத்தில் வரம்பின்றிக் கலகமுங் கொலையும் உண்டாகின் றன. ஆதலால் குடியரசு விருப்பம் எவ்வாற்றானும் வெறுக் கத் தக்கதேயாம். ஹிந்துக்கள் "முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட், கிறையென்று வைக்கப்படும்" என்ற குறட்படி தெய்வத்தைப் போல அரசனிடத்தில் விசுவாச முடையவர்கள். அவர் வைதிக நூல்களு மங்ஙனமே கூறுகின் றன. ஆதலால் குடியரசு விருப்பினரை யொழித்து ராஜ தேச விசுவாசிகளின் பேதத்தையே யிவண் விசாரிப்பாம்.

ராஜ விசுவாசம்.

இராஜ விசுவாசமும் உத்தம மத்யமம் அதமம் என மூவகைப்படும். பல கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்கள் தாங்கள் உத்தியோகப் பதவியில் அல்லது பட்டங்கள் பெறு வதில் உயரவேண்டுமென்று விரும்பி குடிகளுக்கு ஞாயமாய்க் கிடைக்கவேண்டிய நன்மையைச் செய்யாது ராஜாங்கத்தா ருக்கு ஞாயமற்ற லாபங்காட்டக் கருதி நடக்கின்றனர். இது அந்த மகாராஜ விசுவாசம். 2. உயர்ந்த பட்டங்களைக் கவர்ன் மெண்டாரால் பெற விரும்பிய சில ஜமீன்தார்களும் கன வான்களும், ராஜாங்கத்தார் தெரியும்படி சில தருமங்களைச் செய்தல ராஜாங்கத்தாரிடம் பக்தியுடையாரைப்போல நடித்து ராஜாவின் பேரால் சில தருமங்களைச் செய்தல், ராஜா வின் ஜென்மதினம், பட்டாபிஷேக தினம் முதலியவற்றைக் கொண்டாடுதல் முதலியன மத்யம ராஜ விசுவாசம். (உண் மையான ராஜ விசுவாசிகள் செயலை யிவண் குறித்தனம்) 3. கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தராயிருந்து கவர்ன்மெண் டுக்காகவாவது குடிகளுக்காகவாவது தாக்ஷண்யத்துக்காக அல் லது கைக்கூலிக்காக ஞாயங்கோணாது ஞாய வழியில் நடந்து தங்களுக் கன்னமிடும் ராஜாங்கத்தாருக்காகக் குறைவற

வுழைத்து ராஜபக்தியுடைத்ததாதலும், குடிகள் வேறு கொடுங்கோலரசர் கீழ்ப்பட்டு, நாம் வருந்தினோம், இப்பொழுது நீதியாய்ப் பக்ஷபாதமின்றிக் குடிகளைக் காத்துத் திருடர் பகைஞர் முதலியாரிட மிருந்து நம்மை ரக்ஷித்து நமக்கு ஞாய மான சுதந்தரங்களைக் கொடுத்து ஆள்கின்றனர் என்று ஆங்கில வரசாட்சியின் நன்மையை யுணர்ந்து, உண்மை விசுவாச முடையாராய் அந்தரங்கத்தோடு புகழ்தலும் உத்தம ராஜ விசுவாசம்.

தேச விசுவாசம்.

I. தங்கள் உத்தியோகம் அல்லது முயற்சி, அந்நியர் சிநேகம் சரீரசுகம் திரவியங்களுக்கு எவ்வாற்றானும் குறைவு அல்லது செலவின்றி சுதேச நயம் பாராட்டி வார்த்தை மாத்திரம் பேசுதல் அதம தேசவிசுவாசம். 2. மேற் கூறிய வற்றுக்குச் சிறிது இடைஞ்சலும் செலவும் வந்தாலும் அதற்குட்பட்டுச் சுதேச நயம் பாராட்டிப் பேசி முயலுதல் மத்யம தேசவிசுவாசம், 3. மேற் கூறியவற்றுக்கு முற்று மிடைஞ்சலும் நஷ்டமும் உண்டானாலும் அதைச் சற்றுங் கருதாது, சுதேசிகள் கைத்தொழில் முதலிய முயற்சிகளை யிழந்து வறுமையால் வருந்தலுக்கிரங்கி சுதேசிகள் நன்மை யடையும் மார்க்கங்களைப்பற்றிப் பலர்க்கும் பிரசங்கவாயிலாக் கூறி அந்நன்மைகளுக்காக தம் வாழ்நாளை லோகோபகார மாகக் கழிக்கக் கங்கணம் பூண்டு ராஜவிசுவாசமுங் குறையா மல் இடைவிடாது முயலுதலும், மற்றவர்களையு முயல்வித் தலும் உத்தமதேச விசுவாசம். இவர்களும் சந்நியாசிகள் ஞானிகள் அல்லது ரிஷிகளுக்குச் சமான நிலையையுடையவர். ஆனால் உத்தமதேச விசுவாசிகள் பரோபகார தருமத்தையே மெய்ப்பொருளாய்க் கொண்டவர். சந்நியாசிகள் அல்லது ஞானிகள் பிரமத்தையே மெய்ப்பொருளாய்க் கொண்டவர். ரிஷிகள் அவ்விரண்டையு மெய்ப்பொருளாய்க் கொண்டவர்.

ராஜ தேச விசுவாசம்.

1. ராஜ விசுவாசம் தேச விசுவாசம் இரண்டிலும் அதமத்தன்மையுடைத்தாதல் அதம ராஜதேச விசுவாசம், 2. அவற்றின் மத்யத்தன்மை யுடைத்தாதல் மத்யம ராஜ தேச விசுவாசம், 3. அவற்றின் உத்தமத் தன்மை யுடைத்தாதல் உத்தம ராஜ தேச விசுவாசம். இவர்களில் மற்றொரு சாரார் சுவராஜ்யாபிமானிகள் என்னப் படுகின்றனர். அன்னவர் ராஜ பக்தியிற் குறைவின்றி ஆங்கில ராஜாங்க அதிகார வரம்புக்குட்பட்டு ராஜ தந்திரங்களுக் குரிய பொறுப்புகளை சுதேசிகள் பெற்று நடத்தி வர அநுமதி விரும்புவர். இது ஆங்கில ராஜாங்கத்தாரின் பூரண கிருபையாற் பெறத்தக்கது.

தற்காலம் உத்தம ராஜ தேச விசுவாசிகளா யுள்ளார் ஸ்ரீமான், தாதாபாய் நௌரோஜி, ஸ்ரீமான், சுரேந்திர நாத் பானர்ஜி, ஸ்ரீமான், ரோமச்சந்திரடட், ஸ்ரீமான், கோபால கிருஷ்ண கோகலே, ஸ்ரீமான், ஜி. சுப்பிரமணிய அய்யரவர்கள் முதலியோர்.

இப்பொழுது உத்தம ராஜ தேச விசுவாசிகளாகிய இந்தியர் வேண்டிய சுதந்திரங்கள் எவ்வாற்றானும் ஆங்கில கவர்ன்மெண்டாரால் மறுக்கத் தக்கனவல்ல. அவை வருமாறு.

1. ஆங்கிலப் அரசாட்சிக்கும் சட்ட திட்டங்களுக்கும் எல்லா வாற்றானும் கீழ்ப்படிந்து ராஜ பக்தியுடைய தாங்களும் உயர்ந்த உத்தியோக பதவிகளை அடைய வேண்டுமெனல்,

2. ஆங்கிலப் பார்லிமெந்து சபையில் ஹிந்துக்களும் இடம் பெறவேண்டல்,

3 கிராமங்களிலும் நகரங்களிலும் நடக்கும் கிரிமினல் குற்றங்களிலும் சீவில் வியாச்சியங்களிலும் அவ்விடங்களிலுள்ளவர்க்கு உண்மை நன்றாய்த் தெரியுமாதலால் அவ்விடங்களிலுள்ள பஞ்சாயத்தார் பிரதமவிசாரணைகளைச் செய்தால்

உண்மை தேர்ந்து ஞாயந்தீர்க்க முடியும். அங்ஙன மின்றி வேற்றிடங்களிலுள்ள அதிகாரிகள் பிரதம விசாரணை செய்தால் அவர்கள் சாட்சிகளை மாத்திரம பற்றி விசாரிக்க வேண்டியிருப்பதால், கைக்கூலி பெற்ற பகைமை, அல்லது ஒரு கட்சி சார்ந்து கூறும் சாட்சிகளால் நியாயம் பிறழ்ந்து விடவும் நேரிடுகின்றது. ஆதலால் கிராமப் பஞ்சாயத்து நகரப் பஞ்சாயத்து வேண்டு மெனல்,

4 1883-ஆண்டில் ஈஸ்ட் இந்தியா கம்பெனிக்காலத்தில் பிறந்த பார்லிமெண்ட் சட்டப் படிக்கும், மாட்சிமை தங்கிய குயின் விக்டோரியா சக்கிரவர்த்தினி யவர்கள் 1858-ஆண்டில் செய்த அறிவிக்கைப் படிக்கும், மாட்சிமை தங்கிய ஏழாவது எட்வார்ட் சக்கிரவர்த்தி யவர்கள் 19-2-1903 ல் மகுடாபிஷேக மகோற் சவசமயமானபொழுது செய்த உறுதிமொழிப் படிக்கும், இங்கிலந்தில் பிறந்து வசிக்கும் குடிகள் போலவே ஹிந்து தேசத்திற் பிறந்து வசிக்கும் குடிகளும் சகல சுதந்திரங்களையும் பெறவேண்டு மெனல்,

5. இந்தியாவின் வரும்படி இந்தியாவின் பொருட்டே செலவழிக்க வேண்டு மெனல்,

6. இந்தியாவில் தரித்திரத்தால் வருந்தும் ஏழைக் குடிகளைக் காக்கும்பொருட்டு, கைத்தொழில், விவசாயம், வியாபாரம், கப்பல் வியாபாரம் முதலியவைகளுக்கு ஆங்கில கவர்ன்மெண்டாரும் அவசியமான உதவி புரிய வேண்டு மெனல்,

7. கல்வி யிலாக்காக்களுக்கு இங்கிலந்துபோல் சுதந்திரம் வேண்டு மெனல்,

8. ஏழை யிந்தியர் பொறுக்க முடியாது வருந்தும் வரிகளைக் குறைக்க வேண்டு மெனல்,

9. ஆங்கிலேயர் போல தங்கள் அபிப்பிராயங்களை பார்லிமெந்தில் பேச இடம் பெறவேண்டு மெனல், முதலிய வைகளே.

இவ்வேண்டுதல்கள், தாம் மிக விசுவசிக்கின்ற விருப்பங்களை நிறைவேற்றி யருளக் கேட்டும் பிரார்த்தனை போன்றனவே யாகின்றன. ஆதலால் இப்பிரார்த்தனைகளும் ராஜ விசுவாசத்தின பாற்பட்டனவேயாம்.

என்றும் விவரமாய் நீண்ட அர்புதமான பிரசங்கஞ் செய்தார்கள். பிரசங்கம் முடிந்தவுடனே கரகோஷமும், வந்தேமாதர மந்திரோச்சாரணமும் 15 நிமிஷம் கடல் முழங்கியதுபோல முழங்கியது. சுரோதாக்க ளனைவரும் சுதேசிய நன்மை இத்தன்மையதென்றுள்ளவா றுணர்ந்தார்கள். பல எளியவர்கள் தாமே முன் வந்து உண்டியலிற்றுட்டுகளைப் போட்டு நமஸ்கரித்தார்கள். பலர் ஆனந்தா வேசங்கொண்டு சித்திரப்பிரதிமைபோ லசைவற்றிருந்தனர். வைஸ் பிரெசிடண்டு மிஸ்டர் குமாரெட்டு நாயக்கரவர்கள் தாமே தருமவசூலுக்கு சுவாமிகளுடன் வருவதா யொப்புக்கொண்டார்கள்.

பின்னர் பிர்மஸ்ரீ ராஜா ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்கள் சுவாமிகள் பிரசங்காமிர்த மழையைப் பொழிந்தாகள். அவ்வமிர்துண்டு வெறித்திருக்கும் யாங்கள் யாது சொல்லக்கூடும் யாது சொல்லற்குளது என்று சுவாமிகள் பிரசங்கத்தைப் புகழ்ந்து கூறிப் பின்னர் நம் நாட்டிற் பிறந்தாரனைவரும் சுதேசிய விஷயத்தில் ஒற்றுமையோடுழைக்க வேண்டுமென்றும், இப்பொழுது சுவாமியவர்கள் பிரசங்கத்தால் இதற்கு முன் சுதேசிய மின்னதென் றறியாத பலர் ஊக்கத்தோடு வேலைசெய்ய முன் வந்திருக்கின்றனர். ஆதலால், நம் நாட்டிலுள்ள அறிஞர்களாகிய வித்வான்கள் தங்கள் வயிற்றுக்கும், தங்கள் பெண்டு பிள்ளைகளுக்கும் சம்பாதிக்கும் கவலையே பெரிதெனக்கருதி சுயநயம் பாராட்டி அறிவிக்க வேண்டியவற்றை அறியாத ஜனங்களுக்கு அறிவித் [illegible] காத காரணத்தால தான் இந்நாடு கைத்தொழில் முயற்சி முதலியவற்றை விடுத்து இல்லாமை யெய்த நேரிட்

டது என்றும், இவ்வாறு ஊர்கள் தோறும் ஒவ்வொரு படிப்பாளியும் தம் சொந்தக் காரியத்துக்கு மாதத்தில் 29 நாள் போக்கினலும், சுதேச நன்மைக்காக ஒரு நாளில் ஒரு மணிநேரமாவது சுதேசிய விஷயத்தைப் பற்றிப் பிரசங்கிப் பாராணுல், நம் நாடு அதி சீக்கிரம் முன்னுக்கு வருமென்ற விவரமாய்ப் பிரசங்கஞ் செய்தார்கள். கடாசியாய் மிஸ்டர் குமாரெட்டு நாயக்கர் அவர்கள் வைஸ் பிரசிடெண்டு ஸ்தானத்தை யொப்புக் கொண்டமைக்காகப் பல வந்தனமும் களிப்பும் கூறினார்கள். இவ்வாறு இரவு 8½-மணிக்கு சபை கலைந்தது. சுவாமி யவர்களை அவர்கள் ஜாகாவுக்கு வந்தே மாதரக் கொடியுடனும், கோஷத்துடனும் அழைத்துக் கொண்டு போய் விட்டு விடை பெற்றும் போயினர்.

ஸ்ரீமதி

அன்னி பெஸண்ட் அம்மை.

ஜன நிர்மாணம். (Nation-Building)

'இந்தியாவானது பூகோள சம்பந்தமான ஒரு வெறும் சொல் மாத்திரமே" என்று இந்தியாவைப்பற்றிப் பலகாலும் சொல்லப்படுகிறது. இது போலவே இதலி (Italy)தேசத்தைப் பற்றியும் முன்சொல்லப்பட்டது எனினும், ரோமாபுரியானது அகண்ட பூமண்டலத்திலும் ஏகாதிபத்தியம் வகித்து ஆண்ட காலத்திலும், ஒரு 'நேஷன்' அல்லது ஜனமாய் இல்லாத இதலியானது அனைவருக்கும் ஞாபகம் இருக்கத்தக்கதான சமீபகாலத்திலேயே அத்தகைய ஒரு நேஷனாயிற்று. இனி இந்திய மக்களும் இப்பொழுது யௌவனத்தால் ஜ்வலித்துக் கொண்டிருக்கும் தங்கள் கண்கள் கிழத்தனத்தால் பூத்துப் போகு முன்னமே ஒரு ஏகீபாவமுற்ற இந்தியாவையும் இந்திய நேஷனையும் காண வாழ்ந்திருக்கலாம். இப்படியே ஜர்மனியைப் பற்றியும் அது வெறும் பூகோள சம்பந்தமான சொல் மாத்திரமேயென்று அனைவருக்கும் ஞாபகம் இருக்கக் கூடிய அவ்வளவு சமீப காலத்திலேயே சொல்லியிருக்கலாம்; எனினும் ஜர்மனி கூட, தனித்தனியே பிரிந்து அடிக்கடி ஒன்றுடனொன்று சண்டையிடும் பல நாடுகளின் பிண்டமாயிருந்ததை விட்டு ஒரு நேஷனாகக் கிளம்பிற்று. அப்படியிருக்க, இதலியும் ஜர்மனியும் செய்து முடித்ததை இந்தியாவும் செய்து முடிக்கலாமென்ற நம்பிக்கையுடன் இந்திய நேஷனைப் பற்றி யாம் பேசினாலும் அதை ஆசையுடன் எதிர்பார்த்தாலும், அதனை அநுபவ சாத்திய மாகாததோர் கனவென்று ஏன் கருதவேண்டும்?

ஒரு நேஷன் உளதாதற்கு அவசியமானவை யாவை யெனில்: (1) பாதுகாக்கக்கூடிய ஒரு சௌகரியமான தேச விஸ்தீர்ணம் (2) அனைவருக்கும் பொதுவானதொரு பூர்வகாலப் பெருமை (3) ஒரு பொதுவான எதிர்கால நிலைமையில் நம்பிக்கை,—ஆகிய இவைகளேயாம். இவை இந்தியாவில் சாத்தியமானவையா? சாத்தியமெனின், நேஷன் அல்லது ஜன நிர்மாணமும் சாத்தியமே யாகையால் அதற்குரிய சாதனங்கள் பரியாலோசிக்கத் தக்கனவாம்.

[1) பாதுகாக்கக்கூடிய ஒரு சௌகரியமான தேச விஸ்தீர்ணம்:—இஃது இந்தியாவுக்குள்ள தென்பது நிர்விவாதமானது. இந்தியா ஒரு பெரிய தீபகற்பம். அதைக் கடலானது மூன்று பக்கத்திலும் வலயம் போல் சூழ்ந்திருக்கப் பர்வதோத்தமமாகிய மலைத்தொடரானது அதன் நான்காம் பக்கத்தைக் காவல் காத்துக்கொண்டு நிற்கின்றது. இப்பர்வதத்தை வெளியிலிருந்து எவரும் பிளந்து கொண்டு வராதபடி எளிதிற் செய்து கொள்ளலாம். இந்த மஹத்தான ஹிமாலய சிகரங்களைப்போன்ற அரண்களைக் கட்ட எந்த மானிடக் கையாலும் முடியாது. எத்தனை விபரீதமான சத்துரு பலங்கள் மீறி எதிர்த்து வந்தாலும் அவர்கள் கைக்ககப்படாமல் இம் மால்வரையிலுள்ள கணவாய்களை (Passes) நல்ல துப்பாக்கிகளைக்கொண்டும் தைரியமுள்ளவீரர்களைக் கொண்டும்பாதுகாக்கலாம். இந்தக் கணவாய்களின் மூலமாகத்தான் பூர்வத்தில் எண்ணிறந்த சேனை வெள்ளங்கள் பாய்ந்து வந்தன. ஆனால் அப்பொழுது அக்கணவய்களைாக்கட்டிப்பிடித்துக் காக்க ஏகீபவித்த 'நேஷன்' இல்லாது போயிற்று. அன்றியும் இந்தியாவானது வெளிப்புறத்திலிருந்துஒருகாலும் வெல்லப்படவில்லை. இந்திய மாதாவின் சொந்த மக்களுக்குள்ளாகவே சிலர் தம் சகோதரர்களுக்கு விரோதமாக எதிரியுடன் சேர்ந்து சண்டை யிட்டதினாலேயே இந்தியா வெல்லப்பட்டது. அவளை வென்றது எப்பொழுதும் இந்திய வாள்களேயாம்.

(2) பொதுவானதோரு பூர்வகாலப் பெருமை:—பரஸ்பரம் போர்புரிந்து வரும் பல ஜாதியார்களையுடைய இந்தியாவிலே இது சாத்தியமா? பூர்வ காலத்திலே இந்நாட்டின் பல மாகாணங்களிலும் இடைவிடா யுத்தங்கள் தொடர்ந்து நடக்கவில்லையா? மாராட்டியர் ராஜ புத்திரரோடும், பஞ்சாபிகள் சீக்கியரோடும், வங்காளிகள் ஹிந்துஸ்தானிகளோடும், தென்னாட்டார் வட நாட்டாருடனும் சமர்புரியவில்லையா? புரிந்ததுண்டு, அதனாலென்ன? இந்தச் சண்டைகள் (ஐரோப்பாவிலுள்ள) டஸ்கன் மாருக்கு விரோதமாய் நியபாலிடன் மாரும் ஹானோவீரியருக்கு விரோதமாய் பிரஷ்யரும் செய்த சண்டைகளை விட விபரீதமானவையா? எல்லா நேஷன்களும் தத்தம் உற்பத்திக் கிரமத்திலே யுத்தமாகிற உலைக்களத்தில் உருக்கி யெடுக்கப்படவேண்டும்; போரெனும் பட்டடையில் சம்மட்டியடி யுண்டு உருவாகவேண்டும். இவைகளெல்லாம் ஒரு நேஷன் அல்லது ஜனத்தின் அமைப்புக்கு அநுகூலமாய்ப் போய் நிற்கின்றமையால், 'நேஷன்' எனும் பாவனை மேலிட்டு விளங்கும் பொழுது, அதற்கு முன் ஒவ்வொரு பக்ஷத்திலுமுள்ள வீரர்களால் செய்யப்பட்ட விக்கிரமச் செயல்கள் யாவும், இப்பொழுது ஒரே நேஷனாய் அமைந்து விட்ட ஏகீபவித்த ஜனங்களின் பொதுப் பெருமையாய் விளங்கும். இந்தப் பெருமையுணர்ச்சியை எவ்வாறு தூண்டி எழுப்பலாம் என்பதை சீக்கிரத்தில் ஆராய்வோம். ஆனால், இந்நாட்டின் உண்மையான சொந்தக்காரர்கள், அதாவது வாஸ்தவமான இந்தியர்கள், எனக் கருதப்படுவதற்கு இத்தேசவாசிகளின் பெரும்பாலாரா யமைந்துள்ள ஹிந்துக்களுக்கன்றோ முற்பட பாத்தியம் இருக்கின்றது? முற்காலத்தில் இந்நாட்டின்மேல் படையெடுத்து வந்தவர்களை எதிர்காலத்தில் ஏற்படப்போகும் நேஷனில் சேர்த்து ஒன்றுக்கலாமோவெனின், ஏன் கூடாது? இங்கிலாந்திலே நார்மன் ஜாதியார் ஸாக்ஸன் ஜாதியாரை வெல்ல வில்லையா? இப்பொழுதுள்ள இங்க்லிஷ் நேஷனிலே அவ்விரு ஜாதியாரும்

கலந்திருக்க வில்லையோ? பர்கண்டியர்களும் (Burgun dians) காஸ்கேன்களும் (Gascons) பிரான்சு தேசத்தின் மத்திய பாகத்தையும் வட பாகத்தையும் ஓயாமல் எதிர்த்துப் போரிடவில்லையா? அப்படியிருந்தும் தற்காலத்திய பிரெஞ்சு நேஷனிலே அவர்கள் கலந்திருக்க வில்லையோ? அதுபோல, மகம்மதியர்களும் இந்துதேச சரித்திரத்தின் பல அத்தியாயங்களை எழுதி யிருக்கின்றனரே; அவர்கள் தங்கள் இனத்திலே பல கோடி ஹிந்துக்களைச் சேர்த்துக் கொண்டு இந்திய நிலத்திலே அழுந்தி வேரூன்றி யிருத்தலால், அவர்கள் மொகலாயரென்ன, ஆப்கானியரென்ன, துருக்கியரென்ன, இன்னும் எந்த எந்த ஜாதியாரிடத்திலிருந்து தாங்கள் ஆதியில் உற்பத்தியானதாகச் சொல்லிக்கொண்ட போதிலும், இப்பொழுதுஇந்தியர்களாகவே இருக்கின்றனர். அத்தகைய வெவ்வேறான அம்சங்கள் கூடிக்கலந்து நேஷன்களாய் அமைவது அவற்றின் பரஸ்பர அநுகூலத்தின் பொருட்டேயாம். ஆங்கிலேயநேஷனைப்பற்றித் தேன்னிசன் மகா கவி (Tennyson),

> Saxon and Norman and Dane are we
>
> ஸாக்ஸனும் நார்மனும் தேனரும் ஆவேம்

என்று பாடியது போல, இந்திய நேஷனைப் பற்றியும் இனி யொரு மகா கவி தோன்றி

> Hindu and Muslim and Parsi are we,
> But all of us one in our worship of Thee,
> Our Mother.

> ஹிந்துவாய் முஸ்லிமாய்ப் பார்ஸியாயிருப் பினும்
> நின்னையாம் தொழும்பொழு தேகமா யிருப்போம்,
> எங்கள் தாயே

என்று பாடுவான்.

ஏனெனில் பாரத தேவியானவள் ஸகலருக்கும் மாதாவன்றோ? அந்த நேஷனிலே மாற்றாந்தாய்க் குழந்தைகளும் உண்டோ?

அஃதெல்லாம் சரிதான், ஆனால் இத்தனை வெவ்வேறான மதங்களும், இவற்றால் விளையும் கொடிய மதத்துவேஷங்களும் இருக்கின்றனவே யெனில், இப்படியிருக்கும் தேசம் இந்தியா ஒன்று மாத்திரம் தானோ, என்று நான் மறுபடியும் கேட்கின்றேன். ஐரோப்பாவிலே மதபேத ரீதிகளை யொட்டித்தான் 'நேஷநாலிட்டி' என்னும் ஜனத்துவங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ? மேரி மஹாராணி ப்ரோடெஸ்டாண்டு மதஸ்தர்களை எரித்தாள், எலிஜபெத்தும் (Eligabeth) க்ரோம்வெலும் (Cromwell) ரோமன் காத்தலிக்கரைக் கொன்றனர் ப்ரான்ஸிலே லூயி (Louis) அரசன் ஹ்யூகநாட்டுகள் (Huguenots) என்ற ப்ரோடெஸ்டாண்டு மதஸ்தர்களை தேசத்திலிருந்து அகற்றிக்கொலைபுரிந்தனன், ஆல்வா (Alva) என்பவன் லூதரன் மதஸ்தரை (Lutherans) ஸம்ஹரித்து, கால்வின் மதஸ்தரை Calvinists) சித்திரவதை செய்தான், கால்வின் மதஸ்தர் உலோகாயதர்களை வதை செய்தார்கள், இப்படியே முடிவின்றி எவ்வளவோ உதாரணங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம் இப்பொழுதோ அவர்களெல்லோரும் சமாதானமுள்ள நகரப்பிரஜைகளாய் அடங்கி அமர்ந்து வாழ்கின்றனர். ஆகவே தேச ஜனத்துக்கு ஒரு பொதுவான ஆபத்து வந்து பயமுறுத்தும் பொழுது, ஒவ்வொரு ஜனத்திலுமுள்ள, ரோமன் காத்தலிக்கரும் ஆங்க்லிகன்களும், எண்ணித் தொலையா மதபேதங்களைச் சேர்ந்த ப்ரோடெஸ்டாண்டு மதஸ்தரும், மெதடிஸ்டுகளும், காங்க்ரிகேஷனர்க்களும், இன்னும் பலரும் அனைவரும் ஒரு ஜனமாக எழுந்து "நான் ஆங்கிக்லேயன்!" 'நான் ஜெர்மன்!" "நான் ப்ரெஞ்சுக்காரன்!" "நான் இதாலியன்" என்றும் தத்தம் சுஜன சம்பந்தத்தை மேற்கொண்டு கோஷிக்கின்றனர். அதுபோலவே ஹிந்துக்களும் மஹம்மதியர்களும், கிறிஸ்வரும், பார்ஸியரும் ஒரு ஜனமாய் எழுந்து "நான் இந்தியன்' என்று ஒவ்வொருவரும் கோஷிக்கும் படியான நாளொன்று உதய மாகுமென ஆசையுடன் நம்பி யிருப்பது மட்டுக்கு மிந்

சிய சங்கதியாமோ? இனி அதற்குச் சாதனங்களை நாம் ஆராய்வோம்.

3. பொதுவான வொரு எதிர்கால நிலைமையில் நம்பிக்கை:—இந்த நம்பிக்கையைத் தேசாபிமானமுள்ள ஆசிரியர்களும் உபந்யாஸகர்களும் சகல இந்திய ஹ்ருதயங்களிலும் ஆழமாய்ப் பதித்து ஆவேச முண்டாகச்செய்ய வேண்டும். அப்படிச் செய்வதற்காகத் தாய் நாடாகிய சித்திரப்படத்தைப் பளபளவென்று ஜொலிக்கும் வர்ணங்களால் தீட்டியும், அதிலுள்ள பேதப் பிரிவுகளைக் கொண்டு அப்படத்துக்குச் செழுமையையும் சௌந்தரியத்தையும் அமைப்பதற்கு மாத்திரம் உபயோகப்படுத்துவ தன்றி மற்ற டி அப்பிரிவுகளைக் கவனிக்கா தொழித்தும், இவ்வாறாகத் தேசமாதாவின் மகிமையை வர்ணிக்க வேண்டும். நேஷன் என்பது பிரத்யக்ஷ சாத்தியமாவதற்கு முன், அஃதொரு சம்பூர்ண பாவனையாய் இருத்தல் வேண்டும். அதுவே நேஷனை நேராய் நிர்மாணம் செய்யும் முறைமை யாதலால் அதனை யாராய்வோம்

முதலாவது, நேஷன் என்ற சம்பூர்ண பாவனையை நாடெங்கும் பிரசங்கிக்க வேண்டும். உலக சரித்திரத்தி லிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் இதுவேயாம். இதாலிய நேஷன் என்பதொன்று ஏற்படா திருக்கையிலேயே இதாலிய ஆசிரியர்கள் இதலியின் மகிமைமையைப்பற்றி எழுதினர். இதாலிய கவிராயர்கள் அத்தேவியைப் புகழ்ந்து பாடினர். இதாலியாவைத் தாய்நாடெனக் கருதி இதாலியர்களின் ஹ்ருதயங்கள் உள்ளக்கிளர்ச்சியுற்றுத் துள்ளித் துடிக்கும் வரையிலும் இதாலியாவானது சம்பூர்ண பாவனையாகச் சித்திரித்துப் புகழ்ந்தோதப்பட்டது. அது வரையிலும் இல்லாமல் அப்பொழுது தான் மாஜினி (Mazzini) கரிபால்டி (Garibaldi), கவோர் (Cavour) ஒன்னும் தேசபக்த சிரோமணிகள் பிறந்தனர். மஹா ஞானியாகிய மாஜினி அக்நி மயமாய் ஜொலிக்கும் வசனங்களை யெழுதினன்; கன வீரனாகிய கரிபால்டி கத்தியை யுருவிக்கொண்டு சமர்புரிந்தான்; ராஜதந்

திர நிபுணனாகிய கவோர் என்பவன் இதாலிய அரசாட்சி வகையை அமைத்தான். அப்பொழுது இதாலியா அவதரித்தனள். அவள் பரோக்ஷமாகிய காரண பிரபஞ்சத்தினின்றும் பிரத்தியக்ஷமாகிய காரிய பிரபஞ்சத்திற்கு இறங்கி வந்தாள்.

ஜர்மனியின் விஷயமும் அப்படியே. எத்தனையோ வருஷங்களாகச் சண்டைகளிலும் மதப்போராட்டங்களிலும் அவஸ்தைப்பட்டு, சுவாதீன ஆட்சிப் பிரியத்தை ஒடுக்கியாண்டவர்களின் கொடுங்கோன்மைக்குள் அகப்பட்டு, பொருமைகளாலும் துவேஷங்களாலும் துன்பமுற்று, பிரிவுக்கும் பேதத்துக்கும் ஆஸ்பதமாயிருந்தசகலத்துக்கும் உட்பட்டிருந்த அந்நாட்டின் ஆசிரியர்களும் கவிராயர்களும் ஜர்மானிய பிதுர் பூமியை (German Fatherland) பஹிரங்கமாய் உத்கோஷித்தனர் பாவனாகாரண பிரபஞ்சத்தினின்றும் ஜர்மனி தேவி ஜர்மானியர்களை அழைக்க, அவள் ருரலானது அவளது அவதாரத்தை ஆவலாய் எதிர்பார்த்திருக்கும் பிராணி லோகத்தில் கணீர் கணீரென்று கம்பீரமாய் எங்கும் ஒலிக்கவே, உவில்லியமும், பிஸ்மார்க்கும், மோல்ட்கேயும் (William and Bismarck and Moltke) ஏன் ஏன், இதோ இருக்கிறோம், இதோ இருக்கிறோமென்று விடை யுரைக்கவும், ஜர்மனி தேவி பிரத்தியக்ஷமான உலகத்தில் அவதரித்தாள்.

இந்தியா விஷயத்திலும் அப்படித்தான் இருக்க வேண்டும். பாரதவர்ஷம் நமது மாத்ருபூமி, ஜன்மபூமி, தாய்நாடு என்ற சம்பூர்ண பாவனையை எங்கும் பிரசங்கிக்க வேண்டும். ஏனெனில் விசார சீலர்களான ஞானிகள் இந்த சம்பூர்ணபாவனைக்கு உருவமைக்க வேண்டும். பேசும் வல்லமை பெற்ற வாசாலகர் அதை சர்வ ஜனங்களுக்குள்ளும் பிரசங்கித்துப் பாவச்செய்ய வேண்டும். அனந்தரம் அப்பாவனை யானது பல கோடி ஜனங்களின் ஹிருதயங்களிலேயும் நிலை கொண்டு விளங்கவேண்டும். அதன் பிறகுதான் ராஜதந்திர நிபுணர்கள் அதை இம் மண்ணுலகத்தில் பிரத்தியக்ஷ சாத்தியமாக்கக்

கூடும். இவ்வழிகளை யநுசரித்து வேலை செய்பவருள் ஏதோ சிலர் புத்திக்குறைவாகப் பேசவாவது நடக்கவாவது செய்யக்கூடுமென்ற காரணத்தால் ஒருவரும் இந்தக் காரியத்தைச் செய்யத் தயங்கக்கூடாது. அமிதவாதிகள்' உக்கிரமாயிருக்கிறார்களென்றும், அதினால் தமது பொதுக் காரியத்துக்கு அகௌரவத்தை உண்டாக்கி வைக்கிறார்களென்று மெண்ணிக்கொண்டு 'மிதவாதிகள்' இக்காரியத்தைச் செய்யப் பலகாலும் பயப்படுகின்றனர். அப்படியிருந்த போதிலும் 'அமிதவாதி' களெனப்படுவோர் இம்முயற்சிக்கு முன்னிராத ஒருவித பலத்தையும் வேகத்தையும் உதவி, அதற்கு முன் இருந்த குறைகளைப் போக்குகின்றனர். அன்றியும் இப்படிப்பட்ட கக்ஷிபேதங்கள் ஒவ்வொரு முயற்சியிலும் சம்பவிக்கும். உத்தேசம் நிறைவேறிவிடும்பொழுது தவறுகள் மறந்து போய்விடும். வாதப் பிரதிவாதங்களால் உண்டாகும் உக்கிரமான ஆத்திரத்திலும் ஆக்ரோஷத்திலும் மிதமிஞ்சின செயல்கள் எப்பொழுதுமே விளையும். அவை உபய பக்ஷத்திலுந்தான் விளையும். எப்பொழுதுமே உசிதமெனச் சொல்வதற்கில்லாத ஏதோ சில உக்கிரமான காரியங்களிலே 'வந்தே மாதரம்' என்ற சத்தம் கிளப்பிவிடப்பட்டிருக்கலாம், அதன் பொருட்டு எதிர்க்கட்சியிலுள்ளவர்களும் கூழுக்கு மாங்காய் தோற்றதா என்றபடி பிடிவாதத்தில் புதுக்கட்சியாருக்குப் பின்னிடையாதவராய் அதை ராஜத்துரோஹமென்று நிந்தித்து மிருக்கலாம், இவற்றையெல்லாம் ஒரு காரணமாக வைத்துக்கொண்டு, இந்நிலையில்லா ஆத்திரம் உண்டாவதற்கு முன் முதல் தேச மாதாவுக்குக் கலங்காமல் கைங்கரியம் புரிந்து வந்தவர்கள், இப்பொழுது தாய் நாட்டின் வணக்கத்தையும் அவ்வணக்கத்தின் பஹிரங்க உத்கோஷத்தையும் மறுத்து நிற்கவேண்டுமோ?

தாய் நாடெனும் கருத்தானது இந்தியரின் இருதயங்களிலே பிரவேசித்துப் பிரதித்வனி கொண்டிருப்பது எவ்

வளவோ மேலானது. அக்கருத்து நேற்றுண்டான இங்கிலையற்ற வெம்மை தணிந்து போனவுடனே, நிரந்தரமாய் நிலைத்து நிற்கும். தேவர்கள் தம் காரிய முறைகளை நிறைவேற்றப் பலவகைச் சாதனங்களையும் உபயோகிக்கின்றனர். மனிதரது புண்ணியங்களைப் போலவே பாபங்களையும், அவர்களின் நிஸ்ப்ருஹமான ஆசைகளைப் போலவே ராகதுவேஷாதி தீக்குணங்களையும் தேவர்கள் கைக்கொள்ளுகின்றனர். ஞானவான்களாயுள்ளவர் இந்தக் காரிய முறையிலே யுக்தமான எல்லா வழிகளாலும் கலந்துழைத்து, தீவினைகளையும் நற்காரியங்களுக்குப் பயன்படுமாறு திருப்பும் தேவர்களின் மேலான ஆழ்ந்த ஞானத்தை வியந்து கொண்டாடட்டும்.

இதற்கடுத்ததாக, தேசத்துக்குப் பொதுவான பூர்வகாலப் பெருமையை எடுத்துக்காட்டி அதை அடிக்கடி வற்புறுத்தி வரவேண்டும். இதற்குக் கல்வியின் உதவியைக் கைக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு பாடசாலையிலும் சரித்திர நூலானது புது மாதிரியாகக் கற்பிக்கப்படவேண்டும். இப்பொழுது வழக்கத்திலிருக்கிற இந்துதேச சரித்திரங்கள் சாரமற்ற வெறும் திப்பிகளுக்குச் சமானமாயிருக்கின்றன. இந்தியாவை நமது பிள்ளைகள் அலக்ஷியமாக மாத்திர மல்ல, இகழ்ச்சியாயுங் கருதுமாறு செய்யும்பொருட்டே அச்சரித்திர புஸ்தகங்கள் ஏற்பட்டிருக்கலாம். அதனால் அவற்றை யெழுதினவர் அப்படிப்பட்ட நோக்க முடையவர்களென்று நான் சொல்ல வரவில்லை. அவர்களுக்கு நம் விஷயத்தில் ஒற்றுணர்ச்சியாவது அக்கரையாவது இல்லையென்று மாத்திரம் தெரிகிறது. ஆகையால் இந்து தேச சரித்திரத்தை இந்தியர்களே எழுதவேண்டும். பாலருக்காக எழுதும் சரித்திர ஆசிரியர்கள் இந்தியாவின் பூர்வகால வைபவக் கதையினிடத்தில் அன்பும் ஆர்வமும் பாராட்டித் துள்ளித் துடிக்கும் தேசாபிமானிகளா யிருத்தல் வேண்டும்.

நமது பாடசாலைச் சரித்திரங்கள் ஜீவகளை பெற்று விளங்கவேண்டும். செத்தப் பிணமாயிருத்தலாகாது; அவை எல்லாப்பிரிவுகளையும், எல்லா மதங்களையும், எல்லா இனத்தாரையும் சேர்ந்த இந்தியரின் வீரத்தன்மையை வெளியிடும் கதைகளால் நிறைந்திருத்தல் வேண்டும். பல் வேறு மதங்களையும் சேர்ந்த பாலருக்கும் பாலிகைகளுக்கும் பிருதிவிராஜனையும், பிரதாபனையும், சாங்காவையும் அக்பரையும், நாநக் குருவையும், மான சிங்கனையும், சிவாஜியையும் சாந்த்பீபியையும், அஹல்யாபாயியையும் சரிசமானமான பெருமையுணர்ச்சியுடன் கருதும்படிக் கற்பிக்கவேண்டும். இந்தியாவை உண்டாக்கினவர்களல்லரோ அவர்கள்! இன்னும் பன்னூறு பேர்களிருக்கிறார்கள் அவர்களைப் போல். ஒவ்வொரு இந்தியரும் அவர்களெல்லோரையும் தம் இருதயத்தில் போற்றிக் கொண்டாடி, அவர்களைப்பற்றிப் பெருமை பாராட்டி, அவர்களை இந்திய மாதாவின் அருமைக் குழந்தைகளெனக் கருதிப் பெருமைப்படுத்த வேண்டும். இவ்விதமாகச் சரித்திரமானது நமது பாடசாலைகளிலே கற்பிக்கப்படுமாயின், அப்பாடசாலைகளில் தேசாபிமானிகளை நாம் வளர்த்து வருவோம்.

ஆனால் அந்த அந்த மதத்துக்குவெவ்வேறு பாடசாலைகளும் வித்தியாலயங்களும் இருக்க வேண்டுமென்று பரிந்து பேசுவதானது இந்தியர்களை ஒன்றாய்க் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக பிரித்து வைக்க வன்றோ ஹேதுவாகும்? என்றாலோ,—நான் அப்படி நினைக்கவில்லை. ஆனால் அத்தகைய ஸ்தாபனங்களிலே சமரஸத் தன்மையின்றி, மதக்கக்ஷியாவேசமே முற்பட்டு நிற்குமாயின், அபாய முண்டாகு மென்பதை மாத்திரம் நான் ஒப்புக்கொள்ளுகின்றேன். எனக்குத் தோன்றும் உத்தமமான ஒழுங்கென்ன வெனில், எல்லா மதங்களுக்கும் பொதுவான ஒரு பாடசாலை அல்லது வித்தியாலயம் இருக்கவேண்டும். அதில் இரண்டாவதற்ற ஏகஸ்வ ரூபத்தின் ஸ்தோத்திர வழிபாடு தினந்தோறும் நடக்கவேண்டும். அத்

துடன் மதபோதனைக்காக வாரத்திற் கிருமுறையாக ஒரு மணி நேரம் பிரத்யேகமாய் ஏற்படுத்தி, அதில், ஒவ்வொரு மதக் கொள்கையையும் சேர்ந்த பிள்ளைகளை வகுப்புவகுப்பாய்ப் பிரித்து ஒவ்வொரு வகுப்புக்கும் அதற்குரிய மதக்கொள்கை அந்த மதப்பாட மணி நேரத்தில் கற்பிக்கவேண்டும். மற்றைப் பாடங்களெல்லாம் எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும் ஒன்றுய்க் கலந்து கற்கலாம். ஒவ்வொரு மதத்துக்கும் தனித் தனிக் கூட்டுச் சாப்பாட்டு வசதிகளும் இருக்க வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட வித்தியாலய மொன்று ஏற்படுமாயின் அஃதொரு திவ்யக்ஞான (தியசாபிகல்) காலேஜாக அல்லவோ இருக்கும்?

அது கஷ்ட சாத்தியமாயின், அதற்கடுத்த படியில் சாத்தியமாகக் கூடியது அந்த அந்த மதத்துக்கும் வெவ்வேறு பாடசாலைகளையும் வித்தியாலயங்களையும் ஏற்படுத்துவதாம். ஏனெனில் பிள்ளைகளுக்கு மதத்தையும் ஒழுக்கத்தையும் கற்பிக்கவேண்டியது இன்றியமையாத காரியமாயிருத்தலால் அப்படிப்பட்ட கல்வியை அவமதிப்பது நம் ஜனத்தை நாமே தற்கொலை புரிந்ததாகும். தேசாபிமான மென்பது மதத்தில் மலரும் அழகிய புஷ்பங்களில் ஒன்றுய் எக்காலத்திலும் திகழ்கின்றமையால், மதப்பாடத்துடன் சமரஸ பாவமும் கற்பிக்கப்பட்டு, மதங்களின் சகோதர தத்துவமும் நிலையாய் உபதேசிக்கப் பெற்று வருமேயாயின், பிள்ளைகள் அந்த அந்த மதத்திற்குரிய வெவ்வேறு கலாசாலைகளில் படித்தாலும், அவர்கள் ஏககாலத்தில் ஒருங்கே மதாபிமானிகளாயும் விசாலமான சமரஸ புத்தியுள்ளவர்களாயும் வளர்ந்து வருவார்கள். நான் இந்த விஷயத்தை யெழுதிக்கொண்டிருக்கையில் ஒரு பாலிய முஹம்மதிய நண்பன் உள்ளே வந்து என்னிடம் சம்பாஷிக்கத்தொடங்கி, காசி சென்ட்ரல் ஹிந்து காலெஜ் பிள்ளைகள் முகம்மதியர்களிடத்தில் அதிக நேசம் காட்டி வருகிறார்களென்றும், அதேகாசியில் மஹாராணி காலெஜ் (Queen's

College) என்ற மற்றொரு கலாசாலையில் மதப்பாடமின்றி மாணுக்கர்கள் கற்பிக்கப்படுகின்றமையால் அவர்கள் முகம்மதியர்களிடத்தில் அவ்வளவு ஸ்நேகபாவம் காட்டுவதில்லை யென்றும் சொன்னான். உண்மை யென்னவெனில், எங்கள் பிள்ளைகளுக்கு ஹிந்து மதத்தைக் கிரமமாய்க் கற்பித்து வருவதுடன் அதன் கொள்கைகளோடு கூட அதன் ஒப்பற்ற சமரஸ மாட்சியையும் கற்பித்து வருகின்றோம். அன்றியும், இந்தியாவின் பல வேறு மதபேதங்களையும் ஜாதி பேதங்களையும் விட அதன் ஐக்கியமே அதிகமாய் வற்புறுத்தப்பட்டு வருவதை அவர்கள் கேட்டுப் பழகி யிருக்கின்றார்கள். ஜன்மபூமி யென்ற ஜாஜ்வால்யமான பாவனையே அவர்களுக்கு எப்பொழுதும் பிரஸன்னமாயுள்ள சத்தியமாயிருக்கிறது அந்தத் தேஜோமயாகாசத்தில் எல்லாமத பேதங்களும்கரைந்து ஒரே தேச பக்தியாக உருக்கொண்டு அன்பெனும் வானவில்லிற் கலந்த நானாவித வர்ணங்களென விளங்குகின்றன. இந்தியாவானது ஒரு ஜனக்கட்டுள்ள தேசமாய் ஏற்றமடைய வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்பதில் ஹிந்து மாணுக்கர்கள் காட்டும் அவ்வளவு அதிகமான ஆர்வத்தையும் உற்சாகத்தையும் காசி ஹிந்து காலேஜில் தவிர வேறெங்கும் என் அனுபோகத்தில் நான் கண்டதில்லை. அவர்களுக்குத் தேசாபிமான மென்பது அவர்கள் மனத்தைக் கவர்ந்த ஓர் காமாவேச மாகவும் அவர்கள் சுவாசிக்கும் ஆகாயமாகவும் அவர்கள் உடம்பில் சுற்றியோடும் இரத்தமாகவும் இருக்கின்றது. அத்தகைய தேசாபிமானம் எல்லா இந்தியர்களையும் தழுவி நிற்றலால் அதில் மதபேதங்கள் கிடையா.

இந்த முடிவை எய்துவதற்குக்கூட, மதமானது தன் ஞானபாகமான சாராம்சத்தில் ஒரே ரூபமாயும் அகண்ட வடிவமாயும் விளங்குந் தன்மையதென்றும், பல் வேறு மதங்களாய் உள்ளன வெல்லாம் ஒரே சாரதத்துவமான உண்மையின், அவரவர் புத்தி பக்குவத்துக் கேற்ற,

வேறு பாடுகள் மாத்திரமே யென்றும் கற்பிக்கப்பட வேண்டும். ஒன்றான அந்த ஸர்வ ஜனம் ஞான மதத்திலே மற்ற சமயபேதங்களெல்லாம் கேவல உட்பிரிவுகள் மாத்திரமேயாம். ஹிந்து மதத்துக்கும் அதன் உட்பிரிவுகளாகிய சைவ வைஷ்ண மதங்களுக்கும், முகம்மதிய மதத்துக்கும் அதன் உபபேதங்களாகிய ஷியா சுன்னி மதங்களுக்கும், கிறிஸ்து மதத்துக்கும் அதன் உட்பிரிவுகளாகிய கிரீக்காதலிக், ரோமன்காதலிக், பிரோடஸ்டான்ட் மதங்களுக்கும் என்ன சம்பந்த முண்டோ, அந்த சம்பந்தம் தான் அவ்வொன்றான ஸர்வஜன ஞானமார்க்கத்துக்கும் உலகத்தின் சமயபேதங்களுக்கும் உள்ளதாம். ஒன்றான மூலாதார ஞானதத்துவமாவது கடவுளின் ஏகதத்துவமேயாம். அதுவே உயிர்க்குயிராய் விளங்குவது எல்லா உயிர்களும்அவ் வோரே உயிரினின்று தான் உண்டாகின்றன. அதைத்தவிர்த்து வேறொன்றுமில்லை. அவ்வேகதத்துவத்துக்கும் அதினின்றும் உண்டான ஜீவகோடிகளுக்கும் உள்ள சம்பந்தத்தையும், அவை வாழ்ந்து வரும் பிரபஞ்சத்தின் செயல்களையும் எடுத்து விளக்கும்பொருட்டாகஅவரவர்புத்திபக்குவவேறுபாட்டிற்குத் தக்கபடி செய்யப்பட்ட முயற்சிகளே மற்ற மதக்கொள்கைகளாய்த்தோன்றுகின்றன. மனிதரின் புத்தி பேத முற்றிருப்பதுபோல், மேற்சொன்ன மதக்கொள்கைகளின் நிரூபணமும் அவசியமாய் வேற்றுமைப்பட்டு நிற்கும். ஆனால் பொதுவான ஞானமார்க்கத்துக்கும் மற்றசமயபேதங்களுக்குமுள்ள சம்பந்தத்தை மேற்சொன்னவாறு அறிந்து கொண்டால், சமயபேதங்களால் யாதொரு தீங்கும் விளையாது நின்றுவிடும்.

மேற்சொல்லியவாறு ஜன்மபூமி யென்னும் பாவனையை அடிக்கடி வற்புறுத்திவருவதும்; முற்காலப் பெருமையைப் பொதுவான உரிமையாகவும் பல்வேறு மதங்களையும் ஒரு ஞான ஐக்கியத்தில் அடங்கினவாகவும் கொண்டு பிள்ளை

களுக்குக் கல்வி பயிற்று வித்தலும்—ஆகிய இவ்விரு சாதனங்களுக்கும் துணையாக வேறு உபசாதனங்களும் வரவேண்டும். கலாசாலை மாணுக்கர்கள் ஆசாரம், கைத் தொழில், நகரபரிபாலனம், பொது ஜன க்ஷேமம்—எனும் இவற்றிற்குரிய விஷயங்களை ஆராய்ந்து தர்க்கம் செய்யுமாறு அவர்களைத் தூக்கிவிட வேண்டும். அவர்கள் பொது ஜன சம்பந்தமான ராஜாங்க காரியங்களை விவரிக்கப்பயில்வதற்கு நகரபரிபாலன (முனிசிபல்) காரியங்களில் பழகுவது ஆவசியக மென்றும், சின்ன அளவுக்குட்பட்ட காரியங்களின் நிர்வாகத்தில் அனுபோகமற்றவர்கள் பெரிய அளவுக்குட்பட்ட காரியங்களை நிர்வகிக்கத்தகார் என்றும் அவர்களுக்கெடுத்துக் காட்டவேண்டும் நகரபரிபாலன சபையே (முனிசிபல் போர்டு Municipal Board) மகாஜன மண்டலத்துக்கு (National-Assembly) த் தயாராக்கும் பயிற்சிக் கூடமாம். மனோ ராஜ்ய சீலர்கள் உத்தம பாவனைகளை உருவாக்குவதில் உபயோக முள்ளவராவரேயன்றி, காரிய நிர்வாகத்துக்கு அநுபோகசாலி களே அவசியமாய் வேண்டி யிருக்கிறார்கள். சேம்பர்லென் துரை பார்லிமென்டிலும் மந்திரி சபையிலும் பிரவேசிப்பதற் காகப் பர்மிங்ஹாம் முனிசிபாலிடியில் முன்னர்ப் பயிற்சி யடைந்தார். ஆங்கிலேயர் முதலில் முனிசிபாலிட்டிகளிலும், போர்டுகளிலும், ஸ்தானிக நியாய பரிபாலன ஸ்தலங்களிலும் சுயாராஜ்யப்பயிற்சி யடைந்து அதன் பின்னரே தேசமுழுவதை யும் தாமாயாளும் ஸ்வராஜ்யப் பேறு பெற்றனர்.

அன்றியும் மாணுக்கர்களில் தேக பயிற்சிக் காகவும் கல்வி யாராச்சிக்காகவும் ஏற்பட்டுள்ள சிறு சங்கங்களையும் சபைகளை யும் அவர்கள் தாமாகவே நிர்வாகம் செய்யப் பயிற்சி யடைய வேண்டும். இக்காரியங்களி லெல்லாம் உபாத்தியாயர்களும் போதகர்களும் பிள்ளைகளுக்கு உதவி புரிய வேண்டுமேயன்றி அவர்களை அடக்கி யாளக்கூடாது. வாலிபர்கள் தவறுகள் செய்யவே செய்வார்கள். ஆனாலும் அத்தவறுகளினின்றும்

அவர்கள் காரியங்களின் தன்மையைக் கற்றுக்கொண்டு உலக விவகாரங்களை நிர்வஹிக்கும் சாமர்த்தியத்தை விர்த்தி செய்து கொள்வார்கள்.

வெவ்வேறு மாகாணங்களிலு முள்ள ஜனங்கள் பரஸ்பரம் தாராளமாய் கூடிப் பழகுவதை பலப்படுத்துவதற்கு ஒரு பொதுவான பாஷையும், அதை விட ஒரு பொதுவான லிபியும் பிரபலமாக வேண்டும். வடமாகாணங்களிலுள்ள பாஷைகளில் ஒன்றேனும் தெரிந்தவர்கள், அவைகள் ஒரு பொதுவான லிபியில் எழுதப்பட்டால், அவற்றைக் கூடியவரையில் சுலபமாய் வாசிக்கலாம். அவ்வளவு ஒத்திருக்கின்றன அவ்வெழுத்துக்கள். அப்படிப்பட்ட பொதுவான லிபி தேவநாகர லிபியாகவே யிருக்கவேண்டும்; ஏனெனில் முகம்மதியருக்குள் வழங்கும் உருது லிபிபாரசீக எழுத்தாயும், ஆங்கிலேயர் வழங்கும் ரோமன் லிபி ஐரோப்பிய சம்பந்தம் பெற்றும் இருத்தலாலென்க. ஆகவே, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் தேவநாகரிலிபியைச் சொல்லிவைக்கவேண்டும். தென்னிந்தியாவிலும், ஜனங்களிற் பெரும் பான்மையோர் ஹிந்துக்களாதலாலும்,அவர்களுக்கு அது ஸம்ஸ்கிருதபாஷையைக் கற்பதற்காக ஏற்கனவே தெரிந்திருக்க வேண்டுமாதலாலும், அந்தலிபியை அங்கீகரிக்கலாம். தேசபாஷைப்புஸ்தகங்கள் அனைத்தும் தேவநாகரி லிபியில் அச்சிடப்படுமாயின், தேசத்தின் முன்னேற்றத்தில் ஒருபெரிய அடி எடுத்து வைத்த படியாகும் அன்றியும் ஹிந்திபாஷையானது பொதுவான தேசபாஷையாக எங்கும் கற்பிக்கப்படவேண்டும். வங்காளிகளையும், மகாராஷ்டிரரையும், தமிழரையும் தெலுங்கரையும், அவர்களது பலத்த இலக்கியங்களை விட்டுவிடச்சொல்வது அநியாயமாகும். அப்படிச்செய்தல் தேசத்தை ஏழ்மைப்படுத்திவிடும். ஆனால் அவரவர்கள் தத்தம் பாஷைகளைக்கற்பதுடன் தேசஜன ஐக்கியத்திற்காக ஹிந்திபாஷையை இரண்டாம் பாஷையாகக் கற்கும்படி கேட்பது அநியாயமன்று. அப்

படிச் செய்யாவிட்டால் ஆங்கில பாஷையே பொதுவான தேச பாஷையாய் விடும். ஏனெனில் அவ்வொரு பாஷை தான் எல்லா பாஷைகளைப் பேசுவோருக்குள்ளும் படித்தவரா யுள்ளோர் பேசுவதற்குப் பொது பாஷையாய் இப்பொழுது அமைந்திருக்கிறது. இந்திய ஜன ஐக்கியத்துக்கு முக்கிய மானது ஒரு பொது பாஷையுடைமையாம். இந்தியாவிலுள்ள முகம்மதியரெல்லாம் உருது பாஷை பேசுகின்றார்கள். உருது பாஷை யென்பது ஹிந்தி பாஷையுடன் சில பார்சிபாஷை விகுதிகள் சேர்வதால் உண்டான கலப்பேயன்றி வேறன்று. ஹிந்திபாஷை அறிந்தவன் உருது பாஷை தெரிந்தவனுடன் பேசலாம். ஆனால் அவ்விருவரில் ஒருவரும் தமிழ் தெரிந்தவ னுடனாவது தெலுங்கு தெரிந்தவனுடனாவது பேசமுடியாது. இந்திய முகம்மதியர்களெல்லாம் உருது பாஷையைக் கற்பது போல், இந்திய ஹிந்துக்களெல்லாம் ஹிந்தி பாஷையை ஏன் கற்கலாகாது?

தேக ஆரோக்கியம், தேகபலம் ஆகிய இந்த விஷயத்தை யும் ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும். தற்காலத்திய நிலைமைகளென்ன, போட்டி போட்டுப் போராடும் நாக ரிகங்களென்ன, இவற்றின் பாரத்தைத் தாங்கமாட்டாமல் இந்தியரின் தேகங்கள் வலியிழந்து நிர்ஜீவனாகி வருகின்றன இங்க்லிஷ் படித்தவருக்குள்ளே நாற்பது வயதில் சம்பூர்ண ஆரோக்கிய திடகாத்திரராய் இருப்பவர் எத்தனை பேர்? கல்வி சமாப்தியாகும் வரையிலும் ப்ரம்மசரிய விரதம் அநுஷ் டிக்கவேண்டுமென்கிற பூர்வீய விதியை மறுபடியும் வழக்கத்துக்குக் கொண்டுவந்து வற்புறுத்தவேண்டும். ஆண் பெண்கள் வாலிபப் பருவத்திலேயே தாய் தந்தையராவதை அவைதிகச்செயலென்றும், தேசாபிமானத்துக்கு விரோத மான காரியமென்றும் பொது ஜனவாக்கியம் கண்டிக்க வேண்டும். பிள்ளைகளுக்குச் சிறுபொழுது முதற்கொண்டு அதிக ருசியும் காமோத்தீபநமுமான பக்ஷணவகைகளை

மாமிச வகைகளுடன் சேர்த்து ஊட்டிக் கொழுக்க விடுவது கொடுமையென்றும், அதனால் அவர்களுக்கு அகாலமெளவன முண்டாகிப் பலதீங்குகளுக்கும் அவர்களையுட் படுத்துகிற தென்றும். அவர்களின் தாய்மார்களுக்கு நன்றாய் எடுத்துக் காட்டவேண்டும் தேகப்பயிற்சியை வற்புறுத்தவேண்டும். இக் காலத்திய ஒழுங்கையொட்டியும் அதிக செலவு பிடிப்பதுமா யுள்ள இங்கிலிஷ் விளையாட்டுகளில் மாத்திரம் பயில்வது போதாது. இந்நாட்டில் ஏற்பட்டு, தேகத்திலுள்ள கைகால் கண் மாத்திரமல்லாமல், மற்ற எல்லா அங்க அவயவங்களையு மே பலப்படுத்துவதற் கேற்றதா யமைந்துள்ள சுதேச சிலம் பத்திலும் பழகவேண்டும். கவாய்த்து சர்வ சாதாரண மாய் எல்லாரும் பழகவேண்டும். பென்ஷன் உத்தி யோகஸ்தர்கள் எத்தனையோ பேர் இதைக் கற்பிக்க சித்தமா யிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த வேலை கிடைக்கும் பக்ஷத் தில், பிறருக்குப் பிரயோஜன முண்டாவதன்றி அவர்களுக்குக் கிடைக்கும் குறைந்த பென்ஷனோடு இன்னும் கொஞ்சம் வரும் படி வருவதற்கும் இடமாகிறது குஸ்தி, லக்டி, கொடிக் கவாய்த்து (Flag drill) இவை யெல்லாம் அப்பயிற்சியில் வரவேண்டும். தன் தேகத்தைக் காத்துக் கொள்ளத் தன் தேகத்தை இன்னபடி உபயோகிக்க வேண்டுமென்றறியாமல் எந்தப்பிள்ளையும் கலாசாலையை விட்டுவரக்கூடாது. ஜீவனற்ற சவலைகளால் ஒரு ஜனங்கத்தை நிர்மாணம் செய்யமுடியாது.

ஒரு ஜனங்கத்தை நிர்மாணம் செய்வதற்கு வேண்டிய வழி கள் எப்படி யிருக்க வேண்டுமென்பதற்கு உதாரணமாகச் சில வற்றை எனக்குத் தோன்றிய மட்டில் மேலே யெடுத்துக் கூறினேன். அவற்றின் வழியாகவே இப்பொழுது இந்திய ஜனங்கமொன்று நிர்மாணமாய்க் கொண்டு வருகிற தென்றும் சொல்லலாம். தேகபலம், மனோபலம், உத்தமசீலம், உதார பக்தி, விசாலஹிருதயம், எனும் இவையே ஒரு நற் பிரஜைக்கு இன்றியமையாதிருக்க வேண்டிய குணங்களாம். நற் பிரஜைகளின்றி ஒரு மஹா ஜனங்க முண்டாதல் அசாத்தியம்

அப்படிப்பட்ட பிரஜைகள் ஒரு ஐக்கியமான இந்திய நாட்டின் பிரஜைகளாக இருப்பதுடன், உலகமுழுவதும் பரவி வரும் மஹாராஜ்யத்தின் பிரஜைகளாகவும் இருப்பர். அந்த மஹாராஜ்யமோ சுதந்திர ஜனங்களாகிய ஜாதியார்களின் சேர்க்கையாயிருக்குமேயன்றிவேறெவ்விதமாயும் இருத்தல் அமையாது. கத்தியின் பலத்தால் கட்டப்பட்ட பூமண்டல ஆதிபத்தியங்களெல்லாம் அழிந்து போயின; அவை கத்திக்கே இரையாகி மடிந்தன. கத்திகள் கட்டடத்துக்கு வேண்டிய பொருள்களைச் செய்து கொடுப்பினும், அவை கட்டடம் அமைப்பதற்கு தக்க கற்கருவிகளல்ல. இப்பொழுது உருவாகவேண்டிய உலக ராஜ்யமானது அன்பெனும் பாசத்தாற் கட்டுண்டு, நியாயத்தையும் பரஸ்பர கௌரவத்தையும் ஆதாரமாகக் கொண்ட சுவாதீனத்தையும் ஸ்வராஜ்ய சீலமுமுடைய ஜனக்கட்டுடையோராலேயே நிருமிக்கப்படவேண்டும்.

அப்படிப்பட்ட ஜனசங்கங்களுக்குள்ளே இந்தியாவும் ஒன்றாயிருப்பள். அந்த மஹாகாரியத்தை நிறைவேற்றத் தகுதி பெறும் பொருட்டு அவள் தன்னை யொரு ஜனக்கட்டுடைய தேசமாக்கிக் கொள்ளவேண்டும் அதுதான் அவள் உடனே செய்யவேண்டிய காரியமாகும்.

மஹாதேவனென்றும், விஷ்ணுவென்றும், அல்லாவென்றும், ஹாரமஸ்தென்றும், ஜெஹோவாவென்றும், தேவனென்றும் எவ்வெப்பெயர் கொண்டழைத்தாலும் ஸர்வாந்தர்யாமியாய் விளகுங்ம்பகவானனவர், இந்தியாவிலுள்ளபலஜாதியார்களும் ஒரு ஜனசங்கமாய் விளங்குமாறு எல்லா பேதங்களுக்கும் நடுவே தம்முடைய ஏகதத்துவத்தின் உணர்ச்சியை யுண்டாக்கி அருள் புரிவாராக.

கல்கட்டா இந்திய மாதர்களின் சங்கத்தில்

பரோடா மஹாராணியார்

செய்த உபந்நியாசம்.

என் பிரியமுள்ள சகோதரிகாள்! இந்த மாதர் சங்கத்தில் என்னை அக்கிராசனாதிபத்தியம் வகிக்கக் கேட்டுக்கொண்டதால், எனக்கு ஒரு மேன்மையைத் தந்தவர்களானீர்கள். "மஹில சமிதியார்" நான் பரோடாவிலிருந்தபொழுது என்னை இந்தச் சங்கத்தின் அக்கிராசனாதிபத்தியத்தை வகிக்கக் கேட்டுக்கொண்டபொழுது என்னைவிட இவ்விடத்தில் அனுபோகமுள்ளவர்களிருப்பதால், இந்த அனுமதிக்கு சம்மதியற்றவர்களாக முதலில் இருந்தேன். ஆனால் இப்படிச் செய்தால் அது நீங்கள் விசுவாசத்துடன் மேற்கிலிருக்கும் என்னை அழைத்ததற்கு தக்க ஈடாகமாட்டாதென்று நினைத்தேன். இதனாலே, வங்காள சகோதரிகாள், இந்த அழைப்பை ஒப்புக்கொள்ளும்படி தூண்டப்பட்டேன். உங்களில் யாராவது ஒருவரை அக்கிராசனாதிபதியாக நியமித்திருந்தால் எவ்வளவு திருப்திகரமாக விருக்குமோ அவ்வளவு திருப்திகரமாக இராவிட்டால் என்னை மன்னிக்கவேண்டும். ஏனெனில், நீங்களே என்னை அக்கிராசனாதிபதியாகத் தெரிந்தெடுத்தீர்கள்.

முதலில் நான் இப்பொழுது உங்களுடைய மத்தியிலிருப்பதனாலுண்டாகும் சந்தோஷத்தைத் தெரிவிக்கிறேன். நான் சிலநாளைக்கு முன்தான் பிரான்சு, இங்கிலாந்து, இட்டலி, கிரீசு, ஜர்மனி, ஆஸ்திரியா, சுவிட்ஸர்லாந்து, அமெ

ரிக்கா முதலிய தேசங்களிலிருந்து திரும்பிவந்தேன். அவ்விடத்திலுள்ள சித்திர வேலைகளையும், தொழில்களையும், ஆசாரங்களையும், கலாசாலைகளையும், பார்த்ததினால் அதிக கவலையுள்ளவளாகவும், சிரத்தை யுள்ளவளாகவுமிருக்கிறேன். ஆனால் நான் உங்களிடம் வரும்போது வேடுபெறியாகச் சென்ற ஒருவன் திரும்பக் குடும்பத்தைக் காணுவதுபோல உங்களிடம் சேருகிறேன். ஏனெனில், நமக்குள் பந்தமிருப்பதால் நாமெல்லோரும் ஒன்றாகி இந்தியாவின் எப்பாகமும் நமது வீடாகின்றது, இரண்டுவருஷங்களுக்கு முன் என்னை ஆதாவுடன் வரவேற்றீர்கள். ஒரே தாய் நாட்டிற் பிறந்த புத்திரிகளா யிருப்பதாலும், ஒரே காரியத்தில் பிரயத்தனப்பட்டிருக்கும் சகோதரிகளுக்கு மத்தியிலிருப்பதாலும் நான் பரோடாவி லிருப்பதுபோல வங்காளத்திலிருப்பதை யெண்ணுகிறேன்.

உங்களுடைய "மஹிலசமிதி" இந்த எண்ணங்களைக் கொண்டதாக விருக்கிறது. இதனுடையநோக்கமாவதுஎல்லா மதத்திலுமுள்ள இந்தியமாதர்கள் ஜாதி மதபேதமின்றி ஒன்றாக்கும் எண்ணமுடையது. நம் ஆடவர்கள் வருஷத்துக்கு வருஷம் கொஞ்சம் கொஞ்சமாகக் காங்கிரெஸ்,கான்பரென்ஸ்கள் மூலமாக நெருங்கி யனுபவம் பெறுகிறார்கள். தேசக்கட்டுப்பாடு பலப்படுவதற்கு ஆடவர்கள் பிரயத்தனப்படுவதைப் பார்க்கிலும், நம்முடைய முயற்சி அதிகம் வேண்டும் நாம் ஒருவரை யொருவர் வீட்டுக்குள்ளேயே பார்க்கிறோம் அங்கேயே ஒருவரை யொருவர் மரியாதையாக வரவேற்று உபசரித்து, அதன் மூலமாக ஒரு ஜாதிமானக்கட்டை பலப்படுத்துகிறோம். நாம் ஒருவருக் கொருவர் வெகுதூரத்தில் - ஆயிரமைலுக்கப்பால்—இருந்தபோதிலும் ஒரேவிதமான எண்ணங்களாலும், பிரயத்தினங்களாலும் கட்டுப்பட்டவர்களாயிருக்கிறோம். உயர்ந்தவரானாலும் சரி தாழ்ந்தவரானாலும் சரி, தனவந்தனானாலும் சரி, ஏழையானாலும் சரி—நம்முடைய புரா

தனங்களைப் பற்றி நாம் பெருமையடைகிறோம். வருங் காலத்தை ஆசையுடனும் விருப்பத்துடனும் எதிர் பார்க் கிறோம். ஆகையினாலே இந்த மஹிலசமிதியின் கொள் கையாக இத்த சங்கம் கூட்டப்பட்டதே சந்தோஷகரமான செய்தியாகும். அடிக்கடி சந்திப்பதாலும், அநேகர் ஒன்றாகச் சேருவதாலும், ஒருவரோ டொருவர் நெருங்கிப் பழகுவதா லும் நம்முடைய எண்ணங்களை நிறைவேற்ற சௌகரிய மாகும்.

"மஹில சமிதி"யின் மற்றொரு நோக்கமாவது இந்திய பாஷாபி விருத்தியும் சரித்திர விருத்தியும். இந்த விஷ யத்தில் கூட ஸ்திரீகளாகிய நமக்கு அதிக செல்வாக்குப் புருஷர்களைவிட இருக்கிறது. நாம் நம்முடைய குழந்தை களை இளமைப்பருவத்தில் பயிற்றுவிக்கிறோம். அக்காலத்தி லேயே புராதன சரித்திரத்தின் பேரில் ஆசையும், அதன் மூலமாய் கௌரவத்தையும், அது காரணமாக வித்தியாபி விருத்திக்கு இடத்தையும் தேடலாம். இந்தப் புண்ணிய பூமியில் நூல்களியற்றிய ஸ்திரீகள் இருக்கிறார்களென்று நம்புகிறேன். ஆனால் நம் யாவர்க்கு அந்த சக்தி யில்லா விட்டாலும், நம்முடைய சந்ததியாரை சரித்திரத்தில் ஆசைப் படும்படி செய்யலாமென்னும் சந்தோஷத்தை யடையலாம்; பெரியவர்களாகிக் கல்விபயிலுவதைக் காட்டிலும், இளமை யில் சொல்லியது நன்றாகப் பதியுமென்னும் போது நம்புங் கள். பின் சந்ததியாரை விருத்தி யம்சத்திற் பார்க்க வேண்டி யது நமது கடமை; ஆகையால், தாய்மார்களாகிய நாம் பின் சந்ததியாராகிய ஆடவர்களையும், மாதர்களையும் இந்தியாவுக் குப் பாடுபடும்படிப் பயிற்றுவிப்போம். கடைசியாக, மஹிலச மிதியின் நோக்கம் இந்தியாவின் தொழில் விருத்திகூட வென்று நினைக்கிறேன். இப்பொழுது வங்காள முழு மையும், பஞ்சாப் மாகாணத்திலும், பம்பாய், சென்னை மாகா ணங்களிலும், தக்ஷிணத்திலும் சுதேசியம் பரவும்படி செய்த தற்கு நீங்களும் ஆதாரணையென நம்புகிறேன்.

இந்தியா முழுவதும் இந்த தேசாபிமானக் கிளர்ச்சியில் சேரும்வரை நீங்கள் தைரியத்துடனும் பெருந்தன்மையுடனும் எதிர்பாராதபடி கட்டிக் காத்துவந்ததை ஒவ்வொருவரும் சந்தோஷத்தோடும் கவனித்துவருகிறார்கள். ஒவ்வொரு மாகாணத்திலும் இந்திய பண்டசாலை ஏககாலத்தில் உண்டாகிறது. இயந்திரசாலைகள் மேற்கிந்தியாவில் விருத்தியாகின்றன. இந்தியப் பாத்திரங்களைக் குடும்பத்திற்கு உபயோகப்படுத்துவது அபரிமிதமாகிறது. தறிகளையும் உலோகவேலைகளையும் நிறுத்திக் கஷ்டப்பட்ட அநேக ஆயிரவர் சந்தோஷத்துடன் தங்களுடைய பழைய தொழிலுக்குத் திரும்புகிறார்கள். உட் கிராமாந்தரங்களிலுள்ள ஏழ்மை சகோதரிகள், ஏழைத் தொழிலாளிகளின் சம்சாரங்களும், தாய் தமக்கைகளும் கிளர்ச்சியுடனும், குதூகலத்துடனும் வேலை செய்கிறார்கள். சரித்திரம் ஜனாபிவிருத்தியைக் குறிப்பது நிஜமானால், இந்த சுதேசிய அற்புதக்கிளர்ச்சியில் ஒவ்வொருவரும் சிரமத்துடன் நிலை நிற்கும்படிப் பாடுபடுவதை எழுதிவைக்க ஸ்திரீகளாகிய நாமும் சந்தோஷத்துடன் கலப்போம். நம்முடைய வாழ்க்கைக்குரிய உடை, உணவுகளில் நம்மால் ஏழைத்தொழிலாளிகளின் கஷ்டங்களை நிவர்த்திக்கக் கூடியதாக விருக்கிற அவர்களால் செய்யப்பட்ட சாமான்களை அன்புடனும், ஆதரவுடனும் நமக்கும், நம் பிள்ளைகளுக்கும் வாங்குவோம். நாம் எங்கு வசித்தபோதிலும் சரி, எம் மதத்தினராயினும் எக்கொள்கையினராயினும் சரி, நாம் நம் தேச க்ஷேமகாரத்தின் பொருட்டு சந்தோஷத்துடன் பாடுபடுவோம். ஒரு புதிய நூற்றாண்டுடன் புது உணர்ச்சியு முண்டாகிறது. நம்முடைய ஒப்புயர்வற்ற தாய் நாட்டிற்கு நல்லகாலம் விடிந்து நிலைத்து எந்நாளும் மேலோங்கும்படி எல்லாம் வல்ல கருணாநிதியான முழுமுதற் கடவுளைப் பிரார்த்திப்போமாக.

இலங்கை டாக்டர் ஆனந்த

குமாரசாமி முதலியார் அவர்கள்

மகாஜன சபையில் செய்த பிரசங்கம்

இலங்கையிலிருந்து வந்திருக்கும் டாக்டர் ஆனந்த குமாரசாமி, D, Sc. அவர்கள் மவுண்டுரோட்டிலுள்ள மகாஜன சபை மண்டபத்தில் சென்ற புதன்கிழமை மாலை கூடிய சபையில் "இந்தியக்கலைகளும் கைத்தொழில்களும், மேற்றிசை நாகரிகமும்" என்ற விஷயமாய் மனோஹரமான பிரசங்கமொன்று செய்தார். அப்பொழுது, ஸ்ரீமத் சி. சங்கரன் நாயர் அவர்கள் சபாநாயகராக இருந்தார். பிரசங்கத்தைக் கேட்க அநேகர் வந்திருந்தனர். அவர்களுள் முக்கியமானவர்கள் மெஸர்ஸ் சி விஜயராகவாசாரியார், சுப்பாராவ் பந்துலு, கே. நாராயணராவ், ஆனரேபில் கொல்லங்கோடு ராஜா பி என். ராமன்பிள்ளை, ப்ரொபெஸ்ஸர் லக்ஷ்மிநரசு, வீ. ரைகு நம்பியார், ஜெ. கிருஷ்ணராவ், ஸ்ரீ எல். கோவிந்ததாஸ், ராவ் பஹதூர் எம். ஆதிநாராயண ஐயர், எ. ராஜகோபால் பிள்ளை, டாக்டர் யூ. ராமராவ், எஸ். குருசாமி செட்டியார், டிவான். பகதூர் பி. ராமசாமி செட்டியார் ராஜா சர் ராமசாமி முதலியார், சி. திருமலைநாயடு, பி. வி. துரைசாமி முதலியார்.

சபாநாயகர் பீடிகையாக சில வார்த்தைகள் சொல்லிய பின்னர், உபந்நியாசகர் எழுந்து ஒரு மணி நேரம் பிரசங்கித்தார். அப்பிரசங்கத்தின் சுருக்கம் வருமாறு:

"இந்தியக்கலைகளும் கைத்தொழில்களும், மேற்றிசை நாகரிகமும்"

கனவான்களே! நான் இங்கிலாந்தில் 20, 25 வருஷ காலம் வாசமாயிருந்து மேற்றிசை நாகரிகத்தைப் பற்றிக் கொஞ்சம் அறிந்திருக்கிறேனாகையால், அதுவே இந்த விஷயத்தைக் குறித்துப் பேசுவதற்குரிய அதிகாரத்தை எனக்குக் கொடுத்திருக்கிறது. மேற்றிசை நாகரிகத்தில் உள்ளதையெல்லாம் அது நல்லதாயிருந்தாலும், கெட்டதாயிருந்தாலும் மேற்குத் தேசங்களில் நடக்கிறபடிப் பின்பற்றுவதே இந்நாட்டு ஜனங்களுக்கு இப்பொழுது சகஜமாய் விட்டது. சென்ற ஐம்பது வருஷங்களுக்குள் ஒரு தேசத்து நாகரிகம் மற்றொரு தேசத்தின் நாகரிகத்தின் மேல் எவ்வாறு பாவுகிறதென்ற விஷயத்தை ஜாக்கிரதையாய் ஆராய்ந்து பார்க்கையில், மேற்றிசை நாகரிகமானது கிழக்கு தேசங்களின் சிற்பம் சித்திரம் முதலிய கலைகளுக்கும், கைத்தொல்ழிகளுக்கும் நஷ்டத்தை விளைக்கத்தக்க விதமாய்ப் பிரவர்த்திக்கிறதென்று தோன்றுகிறது. ஜனாசார விவகாரங்களிலும், கலைகளிலும், கைத்தொழில்களிலும் நாம் க்ஷீணித்துப் போயிருப்பதற்கு நாம் தான் காரணம். நம் நெசவுத்தொழில் க்ஷீணித்துப் போவதற்கு முக்கிய காரணம் நம் சித்திர சிற்ப வேலைகளின்மேலும், கைத்தொழில்களின் மேலும் விதிக்கப்பட்ட ஏற்றுமதி வரிகளேயாம். இன்னொரு காரணம் என்னவெனில், முற்காலத்தில் நமது ராஜாக்கள் ராஜாங்கத்தின் பொதுப்பணத்திலிருந்து ஆஸ்தான பண்டிதர்கள், சிற்பிகள், நெசவுக்காரர் முதலான அவ்வக்கலைகளிலும், தொழில்களிலும்வல்லவர்களை ஆதரித்து வந்தனர். நமது கவர்ன்மெண்டார் வித்தியாபிவிர்த்தி விஷயமாய் எவ்வளவோ செய்திருந்த போதிலும், அவர்கள் பழைய ஐதிகங்களைக் கெடுக்காமல் வைத்திருக்க யாதொன்றும் செய்யாதிருப்பதைப்பற்றி விசனிக்கின்றேன். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளவேண்

டிய தென்னவெனில், நாமனைவரும் தேசாபிமானம் மேற்கொண்டு ஒன்று கூடி, நம் பழைய ஐதீகங்களைக் கெடுக்காமல் பாதுகாக்க முயலவேண்டுமென்பதேயாம். சில நாளைக்கு முன் நான் தஞ்சாவூருக்குப் போயிருந்தபொழுது, அங்கே முன்னாளில் நடந்துவந்த நல்ல வேலைகள் ஒன்றாவது இப்பொழுது நடக்கக் காணவில்லை. தஞ்சாவூரிலிருந்து மியூசியம் என்ற விசித்திரப் பொருட்காட்சி சாலையில் கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களையும் பார்த்தேன். அவை புராதானமான இந்திய சிற்ப சித்திரவேலைகளானமையால் அவற்றின் மேன்மையை உத்தேசித்து, அவை யெந்த தேசத்திலிருந்தாலும் அத்தேசத்துக்கு ஒரு பெருமையை யுண்டாக்கும் தன்மையனவா யிருக்கின்றன. முற்காலத்தில் இந்தியாவானது சிறந்த ரத்னக் கம்பளம் செய்வதில் பிரசித்தி பெற்றிருந்தது. அத்தொழில் சென்ற 50 வருஷங்களுக்குள் எவ்வளவாய் க்ஷீணகதியை யடைந்துவிட்டதென்பதைப்பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. இந்த க்ஷீணகதிக்கெல்லாம் காரணம் மகமதியரின் அரசாட்சியென்று சிலர் சொல்வார்கள். ஆனால், அக்பர் சக்ரவர்த்தியின் ஆளுகையைப் பார்க்கும்பக்ஷத்தில், அவர் இந்தியாவிலிருந்து எவ்வளவு எடுத்துக்கொண்டாரோ, அவ்வளவு மீண்டும் கொடுத்தா ரென்று தெரியவரும். கலைகளும் கைத்தொழில்களும் சம்பந்தித்த வரையில் மேற்றிசை நாகரிகத்தின் கூட்டுறவைப்பற்றி யோசிக்குங்கால், சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டே நம் நாட்டுக்கு மகா கெட்டகாலமென்று சொல்லலாம். ஏனெனில், பன்னிரண்டாவது நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரையில் ஒவ்வொரு நாட்டாரும் பிற நாட்டாரிடத்திலிருந்து அவசியமாய்த் தெரிந்து கொள்ள வேண்டியதைக் கற்று, தங்கள் பழைய ஐதீகங்களையும் பாதுகாத்துக் கொண்டு அதன்மேல் அபிவிர்த்தி யடைந்து வந்தார்கள். ஆனால் பதினாறாம் நூற்றாண்டுமுதல் இங்கிலாந்திலே கைத்

தொழில் விஷயமாய் உண்டான புரட்சியால் கலைகள் கைத்தொழில்களின் விருத்தி வெகுவாய் மாறிவிடவே, பரம்பரை ஐதீகங்கள் நிலை குலைந்து பழைய ஏற்பாடுகளே முழுவதும் குன்றிப்போய்விட்டன. ஜனங்கள் லாபத்திற்காக சாமான்களையும் சரக்குகளையுஞ் செய்யக் கருதினார்களேயன்றி நல்ல சாமான்களைச் செய்ய வேண்டுமென்ற சிரத்தை போய்விட்டது. கிழக்கு தேசங்கள் கைத்தொழில் விஷயத்தில் இன்னும் ஆரம்ப தசையிலேயே யிருந்து கொண்டிருந்தும், ஒரு நூறு வருஷங்களின் ஏற்றத்தை முற்பட்டு அடைந்திருக்கும் மேற்கு தேசங்களைப்போல் ஆய்விடப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. நமக்கு சொந்தமாயுள்ள பழைய ஐதீகங்களையே நாம் பற்றியிருந்திருப்போமாகில், நம் கைத்தொழில்களைக் கண்டிப்பாய் அபிவிர்த்தி செய்திருப்போம். பிறரைப்பார்த்து அவர்கள் போல் வேஷம் தரித்து நடிப்பதாகிய 'பரானுகரணம்' என்ற இந்தத் தற்கால முயற்சியில் நாம் இன்னும் 15,20 வருஷம் மாத்திரம் விடாமல் நடிப்போமாயின், நமது கலைகள் கைத்தொழில்களின் புராதன ஐதீகங்களெல்லாம் இருந்த விடம் தெரியாமல் அடியோடே மறைந்துபோய் விடும். ஐரோப்பியக் கல்விமான்கள் அப்படிப்பட்டவைகளைச் சித்திரப் பொருட் காட்சி சாலையில் சேர்த்து வைப்பார்களாகையால், அங்கு மாத்திரம் அவற்றை ஒரு வேளை பார்த்தால் பார்க்கலாம். ஆகவே, இப்படிப்பட்ட பொருட்காட்சி சாலை வைத்திருப்பதற்காக நம் ஐரோப்பியரிடம் நன்றி பாராட்டவேண்டும். நமது பூர்வ கலைகளிலும், கைத்தொழில்களிலும் இந்நாட்டுக்குச் சமமாக வேறெந்தநாடும் பிரசித்தி பெறவில்லை யாகையால் இந்தியராகிய நாம் அக்கலைகளையும் கைத்தொழில்களையும் அபிவிர்த்தி செய்ய முயலவேண்டும். அவை பிறநாட்டாருக் குள்ளவற்றைவிட வேறானவையா யிருக்கலாமே யன்றி, அவற்றிற்குத் தாழ்ந்தவையாயிரா. இக்காலத்தில் நாம் ஐரோப்பியரின் நடை யுடை பாவனைகளை

அடிமைத்தனமாய்ப் பின்பற்றி வருகிறோம். இதுவே நம் க்ஷீணகதிக்கு முக்கிய காரணம்.

இப்பொழுது இந்தியா மஹா ஜாதி முழுவதையும் கிளப்பி எழுச்சி கொள்ளச் செய்து கொண்டு வரும் சுதேசிய முயற்சியை இந்த சமயத்தில் நீங்கள் கவனிக்கவேண்டும். சுதேசிய மென்றால் அந்நிய தேசச்சாமான் விலக்கென்பது என் கருத்தன்று. ஆனால், ஒரு காலத்தில் இந்தியாவின் பெருமைக்கும் புகழுக்கும் காரண பூதமாயிருந்த இந்நாட்டுப் பலவகைக் கலைகளையும், கைத்தொழில்களையும் விர்த்திசெய்ய வேண்டுமென்ற மேலான சிந்தையே சுதேசிய மென்பது என் அபிப்பிராயம். இப்பொழுது நீங்கள் ஸ்டீல் நிப்புகள், பென்சில்கள் முதலியவை செய்வதற்காக யந்திரசாலைகளை ஸ்தாபிக்க வேண்டுமென்று நான் சொல்ல வரவில்லை. நாட்டுக் கைத்தொழில்களை முதலில் அபிவிர்த்தி செய்ய வேண்டு மென்பதே என் தாத்பரியம். நடை உடை உண்டல் முதலிய வாழ்க்கை வழிகளில் ஐரோப்பியரை அநுகாரணம் செய்வது அவர்களைப் பரிகாசம் செய்வதாயாகுமே யன்றி வேறன்று. ஆகவே, இந்தியர்கள் முன் காலத்தில் எந்த விதமாய் நடந்தார்களென்பதை நீங்கள் உணர்ந்து அவ்வழியே உங்கள் சக்தி சாமர்த்தியங்களை விர்த்திபண்ணிக் கொண்டு உலகத்தில் சமுதாய ஞானச்செல்வ நிதிக்கு உங்களாலான சகாயம் புரியவேண்டும். சுதேசிய முயற்சியைத் தாங்கிக் கொள்ளத் தக்க ஆதாரம் இப்பொழுதாயினும் ஏற்பட்டிருக்கிறதா என்ற ஒரு சந்தேகம் உண்டாகலாம். வெளியிலிருந்து இதை நோக்குகிறவன் எவ்வளவு ஒற்றுணர்ச்சியுள்ளவனா யிருந்தாலும், அதன் சிலதுர் பல சூசகமான அடையாளங்களைக் கண்டு பிடிக்கக்கூடும். இந்திய ஜாதியத்தில் (Indian Nationalism) எனக்குப் பூர்ணபிமானம் உண்டு. ஆனாலும், இப்பொழுது சுதேசியத்தின் ஓர் அம்சத்தைப்பற்றி மாத்திரம் இந்தியாவிலும் இலங்கையிலும் நான் உற்று நோக்கிய சங்கதிகளை யாதாரமாகக் கொண்டு பேசுவேன். சுதேசிய முயற்சியின்

உத்தேசமாவது:—அயல் நாடுகளினின்று இறக்குமதியாகும் சாமான்களை வாங்குவதால் இந்தியாவின் செல்வம் அந்நிய தேசங்களுக்குப்போய் விடுவதைத் தடுக்கும் பொருட்டு அந்நிய சாமான்களை இந்நாட்டிலேயே செய்யவேண்டு மென்பதும், நமது செல்வம் இந்தியா தேசத்தைவிட்டு வெளி நாடுகளுக்குக்கொண்டு போகப்படுவதை நிறுத்த இந்தியாவின் எல்லைகளுக்குள்ளாகவே நமது பணத்தைப் பரிவர்த்தனம் செய்ய வேண்டு மென்பதுமேயாம். அது நல்ல காரியந்தான். ஆனால் இவ்வாறு செய்யப்படும் சாமான்களின் தன்மை என்னவென்று சிறிது விசாரிப்போம். அவற்றால் நமக்கு உண்டாகும் பிரயோசனத்தை உத்தேசித்து அவற்றை இரண்டு விதமாக வகுக்கலாம். சில நாட்களுக்கு முன் நான் கேள்வியுற்ற சமாசாரம் ஒன்றைச் சொல்லுகிறேன் கேளுங்கள். ஓர் இந்திய இளவரசர் ஐரோப்பிய நண்பனொருவனுடன் தன் அரண்மனையிலுள்ள சாமான்களைப்பற்றி ஆலோசிக்கத் தொடங்கி இவ்வாறு சொன்னனம். "இதோ பார், நீ எனக்கு வெகு நாளைய சிநேகிதன். நீ என் அரண்மனையைச் சுற்றிப்பார்த்து அதிலுள்ள ஐரோப்பிய சாமான்களில் எவை எவை யாதொரு காரியத்துக்கும் உதவாமல் ஐரோப்பியரால் கேலி செய்யப்படுவதற்கு மாத்திரம் ஹேதுவாயிருக்கின்றனவோ அவற்றையெல்லாம் ஒழித்துவிட வேண்டும்" என்றனனம். அப்படிப் பார்த்ததில் இரண்டு லக்ஷத்துக்கு மேல் பொறும்படியான சாமான்களை உபயோக மற்ற குப்பையாகக் கல்கத்தாவில் விற்கும்படியாயிற்றாம். இந்தியர்கள் வாங்கும் ஐரோப்பிய பண்டங்களில் அநேகமாய் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு விகாரமாக வேனும், உபயோக மற்றதாக வேனும் அல்லது அவ்விரண்டு மாகவேனும் இருக்கின்றது. வெள்ளைக்காரனைப் போல் வேஷந் தரிக்க வேண்டுமென்ற பரானுகரண விச்சையால் நாம் சுகபோகத்துக்காக வாங்கும் வஸ்துக்களின் பெரும்பான்மையும் முழுவதும் அநாவசியமாயிருப்பதோடு சில சமயம் கெடுதலை உண்டாக்குவனவாயு மிருக்கின்றன. அப்படிப்

பட்டவைகளை நம்நாட்டிலேயே செய்து அவற்றை நாம் வாங்கி இன்னும் அதிகமாய்க் கெட்டுப்போவதை விட, அவற்றை உபயோகிக்காமலே விட்டுவிடுவோமாகில் நமக்கு எவ்வளவோ லாபமுண்டாகும். கிழக்குத்தேசத்து விற்பனைக்கென்றே சில நயமான கசுமல சாமான் தினுசுகள் ஏராளமாய்ச் செய்யப்படுகின்றன. கல்வியும் நாகரிகமுமுள்ள எவனும் அவற்றை இங்கிலாந்திலே வாங்குவதில்லை. ஐரோப்பிய 'தாஹா' வாக தங்கள் வீடுகளை அலங்கரிக்க விரும்பும் இந்தியர்கள் அந்தப்பண்டங்களை வெகு ஆவலாய்ப்போய் வாங்கிவிடுகிறார்கள். அதுவும் கொஞ்சமாக வாங்குகிறார்களா? அவர்களுடைய "ட்ராயிங் ரூம்" களைப்பார்த்தால் சிறு ஷாப்புகளைப் போல் தோன்றுமே யன்றி வாசயோக்கியமான அடையாளம் ஒன்றாவது கிடையாது. நமது பரிசுத்த ஆலயங்கள் கூட வெளிப்பகட்டான ரஸகுண்டுகளென்ன, டப்பமான இங்கிலீஷ் டிராங்குளென்ன, இவற்றின் உபத்திரவத்தினின்றும் தப்பவில்லை. நமது பித்தளை வெண்கலப் பாத்திரங்கள் இருந்த ஸ்தானத்தை நயமான கிளாசு (கண்ணாடி) சாமான்களும் விகாரமான எனுமல் பாத்திரங்களும் ஆக்கிரமித்து விட்டன. இவ்விஷயத்தில் ஏழைகளைப்போலவே பணக்காரரும் அநியாயம் செய்கிறார்கள். பணக்காரர் செய்யும் அழும்பு தான் அதிகம். ஏனெனில், அவர்களிடத்தில் பணம் ஏதேஷ்டமாயிருக்கிறபடியால், தங்களுக் கிஷ்டமான வரைக்கும் இந்த உபயோகமற்ற விகாரமான பண்டங்களை வாங்கி வைத்துக்கொள்ளுகிறார்கள். இவ்வளவும் வீண் பணச் செலவுதானே. அப்படியிருக்க அப்பண்டங்கள் செய்யப்படும் ஸ்தானத்தை இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு மாற்றி விடுவதால் நமக்கு வந்து விடப்போகிற லாபமென்ன? ஒரு லாபமும் கிடையாது. இது நிச்சயம். இது நிற்க, ஐரோப்பிய சில்லரை ஜவுளி சாமான்களைப்பற்றி யோசிப்போம். இவைகள் வருஷம் 1-க்கு 187-லக்ஷத்துக்கு மேல் நம் தேசத்து

க்கு இறக்குமதியாகின்றன. இது என்ன விபரீதம்? நம குழந்தைகளுக்கு கம்பளிக் குல்லாய்களாம், பூட்ஸுகளாம், புருஷருக்கு டொப்பிகளாம், நெக்டைகளாம், காலர்களாம்; இன்னும் நம் பெண்டுகளில் சில லேடிமாருக்கு வெள்ளைக்கார துரைசானிகள் போடும் 'கார்செட்' என்ற ஷோக்ரவிக்கைகளாம், இன்னும் நம் வீடுகளுக்கு இங்கிலீஷ் திரைச்சீலைகளாம், படுதாக்களாம், அம்மம்ம! இன்னும் என்ன என்ன அவலக்ஷணங்களெல்லாமோ இருக்கின்றன. இவையெல்லாம் பிறரைப்போல வேஷம் தரிக்க வேண்டுமென்ற பரானுகரணத்தால் விளைந்த தீமைகளன்றி வேறென்ன? இத்துர் வழக்கங்களை யெல்லாம் நிவர்த்தி செய்து விட்டு நம் பெரியோரது டம்பமற்ற சுத்தமான சாதாரணவழக்கங்களைக் கைக்கொண்டு நடப்போமாகில், வருஷந்தோறும் எவ்வளவோ பணம் மீத்தலாமே! ஆகவே சுதேசியத்திலும் உயர்தரமான சுதேசியம் ஒன்றிருக்கின்றது. அதன்படி நாம் சில அந்நிய சாமான்களை அவசியம் பாய்கட்ட (விலக்க) வேண்டியது தான். ஆனால் அப்படி பாய்கட்டுகிறதற்கு அவை வாஸ்தவத்தில் உபயோகமற்றவை யென்பது காரணமாகுமேயன்றி அவற்றின் பரதேச உற்பத்தி காரணமாகமாட்டாது.

இது நிற்க, மற்றொரு வகை சாமான்களாகிய ஸூல் நிப்புகள், எழுதும் கடுதாசிகள், சாஸ்திரக்கருவிகள், கடியாரங்கள், கைக்கடியாரங்கள் இன்னும் எவ்வளவோ யந்திரங்கள் இவற்றை யெடுத்துக்கொள்வோம். இவற்றுள் சில அதிக கஷ்டத்தின்மேல் இந்தியாவிலேயே செய்யப் பட்டிருக்கின்றன. ஆனால், அவ்வுள்நாட்டு சாமான்களின் குணம் பரிதாபகரமாயிருக்கிறது. வாஸ்தவத்தில் இந்த சுதேசிய முயற்சியானது சில கைத்தொழிலாளிகளுக்கு சமய சஞ்சீவியாய் உதவுவதாயிற்று. அவர்கள் உண்டாக்கும் எப்படிப்பட்ட சாமான்களும் எவ்வளவு மட்டமாயிருந்தாலும், நயமாயும், 'சுதேசி' என்ற

சீட்டுள்ளதாயும் மட்டும் இருந்து விடும் பக்ஷத்தில் அவை யெல்லாம் விற்பனையாய் விடுகின்றன. நான் சொல்வ தென்னவெனில், விதேசிய சாமான்களைவிட தாழ்வா யிராமல் உயர்வாயிருந்தா லன்றி, விதேசியக் கைத் தொழிலால் யாதொரு பிரயோசனமுமில்லை. ஆனால் எந் தெந்த கைத்தொழில்களில் இது சாத்தியமோ அத்தொழி லில் தான் சுதேசியம் பலிக்காமல் போகிறது. உதாரணமாக, ஆனிலைன், ஆலிஜவரன் என்ற சீமைச் சாயங்கள் இந்தியா வுக்கு வருஷந்தோறும் 75 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள சரக்கு இறக்குமதியாகிறது. இச்சாயங்களை விட்டு இந்திய சாயங் களை உபயோகிப்பது நல்லது என்ற எண்ணம் திவலையேனும் நம்மவர்களுள் எவர் மனதிலாவது உண்டானதாகத் தோற்ற வில்லை என்றாலும், ஒற்றுணர்ச்சியுள்ள ஐரோப்பியர்கள் எத்தனையோ தடவை அதன் ஆவசிகத்தைப் பற்றி வற்புறுத்தி யிருக்கிறார்கள். அது போகட்டும். சுதேசிய முயற்சியில் விசேஷித்துத் தோன்றும் நெசவு வர்த்தகங்களைப் பார்ப் போம். இவ்விஷயமாகச் சென்னையில் என்ன நடக்கிறது? மிகவும் கீழ்த்தரமான மான்செஸ்டர் துணிகள் இந்த நிமிஷத் தில் நம் நாட்டில் செய்த சித்திராலங்கார ஆடைகளை வேக மாய்த்துரத்தி வோட்டிக்கொண் டிருக்கின்றன. சென்னை யில் நடந்த 1903-ம் வருஷத்திய பொருட்காட்சியிலே பற்பல வகையான சிறந்த ஆடைகளின் பக்கத்தில் உபயோகமற்ற ஐரோப்பியத் துணிகளும் வைக்கப்பட்டிருந்தன. க்ஷீணித் துப் போகும் கைத்தொழில்களை ஆரம்பித்துச் செய்தால், பணம் நிச்சயமாய் வருமென்று தெரிந்திருக்க, அவற்றை ஆரம்பிப்பதற்கு ஒரு முயற்சியும் செய்யாமல் ஜனங்கள் ஏன் கைகட்டியிருக்கிறார்கள்? ஏற்கெனவே ஜனங்களுக்கு இந்த விஷயத்தில் ருசி கெட்டுப் போய்விட்டது. இதைப் பார்க்க வேண்டுமானால், பட்டண வாசத்துக்கு சமீபத்திலுள்ள கிரா மங்களுக்குப் போனால் போதும். மான்செஸ்டரிலும் ஜெர் மனியிலும் செய்யப்பட்ட பகட்டான வர்ணத் துணிகளை

ஏராளமான ஜனங்கள் அணிந்துகொண்டு போவதை எவ்வளவு வேண்டுமானாலும் பார்க்கலாம். வெகு சமீபகாலம் வரையிலும் எல்லோராலும் உபயோகிக்கப் பட்டு வந்ததும், 19-ம் நூற்றாண்டின் மத்திய காலம் வரையில் பற்பல வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதுமான கையால் நெய்யப்பட்ட அழகிய வெள்ளை வஸ்திரங்களையும் சாயமடிகளையும் மேற்படி அந்நிய நாட்டுத் துணிகள் துறத்திவிட்டு அவற்றின் ஸ்தானத்தை வேகமாய் ஆக்கிரமித்துக் கொண்டு வருகின்றன" என்று ஹாரிஸ் துரை எழுதியிருக்கிறார்.

சுதேசியமானது மேற்குத் தேசங்களோடு போட்டி போட்டுப் புதிய கைத்தொழில்களை ஸ்தாபிக்கப் பெரும் பிரயத்தனங்கள் செய்வதற்கு முன் ஏற்கெனவே இருக்கிற கைத்தொழில்களை உயர்ப்பித்து விர்த்தி செய்ய முயலவேண்டும். நெசவு வஸ்திரங்களை நமக்கு மாத்திரம் செய்துகொண்டால் போதாது. அதற்கு எற்றுமதி வர்த்தகத்தையும் நாம் திரும்ப உண்டாக்கவேண்டும். ஆனால், தற்காலத்து நாகரீகத்தில் முழுகியிருக்கும் இந்தியர்களுக்கு 'ருசி' என்பதே சுத்தமாய்ப் போய்விட்ட படியால், மேற்சொல்லிய உத்தேசமானது நிறைவேறுவதற்குக் கொஞ்சங்கூட முடியாமலிருக்கின்றது.

இனி சங்கீத வாத்தியங்களைப் பற்றி யோசிப்போம். வருஷந்தோறும் 13 லக்ஷம் பெறுமான வாத்தியங்கள் இறக்குமதியாகின்றன. அவை பியானோ, பிடில், ஹார்மோனியம், கிராமோபோன் முதலிய ஐரோப்பிய வாத்தியங்களே. (ஐயோ! கிராமோபோனைக்கூட சங்கீத வாத்தியமென்று சொல்லவேண்டியிருக்கிறதே! அது கேவலம் ஒரு சாஸ்திர சம்பந்தமான கருவியும், குழந்தையின் விளையாட்டுச் சாமானுமாய் மாத்திரம் இருக்கக்கூடுமே தவிர வேறென்ன?) இவ்வெல்லா ஆயுதங்களுக்குள்ளும் ஹார்மோனியமே விசேஷமாய் எங்கு பார்த்தாலும் பரவி சுதேச சங்கீதத்தையும், சுதேச வாத்தி

யங்களையும் தள்ளுபடியாக்கிக் கொண்டு ஓங்கி வருகிறது. தென்னிந்தியாவிலே தஞ்சாவூரை விட்டால் வேறெங்கும் சுதேச வாத்தியக் கருவிகள் அகப்படா அங்கே கூட இந்த வர்த்தகம் இப்பொழுது க்ஷீணித்துக் கொண்டு வருகிறது. மற்ற சுதேசக் கலைகள் விஷயமாயும், கைத்தொழில் விஷயமாயுங் கூட நாம் இவ்விதமாகவே சமீபத்திலுள்ளதை அசட்டை செய்துவிட்டு நமக்குத் தெரியாததும், லாபகரமாயும் அநுகூலமாயும் உபயோகப்படுத்த முடியாததுமான வெளிநாட்டு வஸ்துக்களைத் தேடிச் செல்கின்றோம். இந்த ஸ்திதியில் நாம் ஏழைகளாயிருப்பது ஆச்சர்யமல்லவே. ஆனால் இன்னும் அவலட்சணமான தென்னவென்றால், நாம் புத்தியிலும் ரசஞ்ஞானத்திலும் கூடக் கரம்பு பற்றி வருகின்றோம்.

ஆகவே, இந்த சுதேசிய முயற்சியில் மேலிட்டு நிற்கும் சுத்த வர்த்தக உணர்ச்சியையே நாம் குறை கூற வேண்டியிருக்கிறது நாம் நம் தேசத்து வஸ்துக்களை உபயோகிப்பது நமது கடமையாயிற்றே. ஆகையால், உபயோகிக்க வேண்டுமென்ற கஷ்ட வுணர்ச்சி காரணமாயிருக்கக்கூடாது; (அப்படி நாம் செய்தால் நமது அபிமானத்தைப் பிரயோசனப் படுத்திக் கொண்டு சில தந்திரசாலிகளான நாட்டுக் கைத்தொழிலாளர் லாபமடைவதுதான் பலன்) ஆனால் அவை சிரேஷ்டமானவை யென்றும், நமது குறைகளைத் தீர்ப்பதற்கு அவைகளே ஏற்றவை யென்றும், நாம் இன்னொன்று நம் சுயரூபத்தை எடுத்துக் காட்டுவதற்கு அவைகளே பொருந்தியிருக்கின்றன வென்றும் நாம் உணரும் உணர்ச்சியே நமது சுதேசிய முயற்சிக்குக் காரணமாயிருக்க வேண்டும் நமக்கு பாவனைகளிலும், சங்கீதத்திலும், சிற்பசித்திரங்களிலும் சுதேசியம் வேண்டும். அதற்கு மேல் வர்த்தக சம்பந்தமான சுதேசியம் கட்டாயமாய் வந்தே தீரும். பாவனைகளில் சுதேசியம் வேண்டு மென்றதால், பரதேச பாவனைகளை விலக்க (பாய்காட் செய்ய) வேண்டுமென்பது என் கருத்

தன்று. ஆனால் என் கருத்தென்ன வெனில் இந்தியர்கள் தங்கள் சொந்த பாவனைகளையும், சித்திர சிற்பங்களையும், சங்கீதத்தையும் நன்றாய் அறிந்து அவற்றின் சுவையை உணர்ந்தாலன்றி, அயல்நாட்டு பாவனை யாதிகளைத் தக்க வாறு உணர்ந்து சுவைக்கத் தம்மால் முடியா தென்பதை இன்னும் அறிந்துகொள்ள வேண்டி யிருக்கிறார்கள். டென் மார்க்கு, ஐர்லாந்து முதலிய மற்ற தேசங்களில் நடந்தேறி வரும் சுதேசியத்தையும் இந்தியர்கள் ஆராய்ந் தறியவேண் டும். அந்நாடுகளிலே இந்த ஜாதீய உணர்ச்சியானது இன் னும் ஆழமாயும், விசாலமாயும் வேரூன்றி யிருக்கின்றது. உதாரணமாக, ஐர்லாந்து சுதேசியானவன் வர்த்தகத்திலும், ஆளுகையிலும் மாத்திரம் சுதேசியம் பாராட்டுகின்றவ னல் லன்; அந்த சுதேசிய உணர்ச்சியைக் கொண்டே அவன் ஐர் லாந்து பாஷையையும், அதன் இலக்கியத்தையும் அபி விருத்தி செய்திருக்கிறான். அப்படிச் செய்ததின் பிரயோ சனம் ஐரிஷ்காரனுக்கு மாத்திர மல்லாமல், மற்ற உலக முழுவதுக்குமே பரிஷ்காரமாய்த் தெரிந்திருக்கிறது. நாம் நமக்கு மாத்திர மல்லாமல் உலகத்துக்கும் ஒரு கடமையைச் செலுத்தவேண்டி யிருக்கிறோ மென்பது ஞாபகத்தி லிருக்கட் டும். அந்தக் கடமையாவது நமக்குள்ள சக்தி சாமார்த்தியங் களை அழிந்து போம்படி விட்டு விடாமல் விர்த்திசெய்வ தாம்.

இனி சுதேசியத்தின் மற்றோர் அம்சத்தைப்பற்றி யோ சிப்போம். நாம் மேற்கு பிராந்தியத்தோடு போட்டி போட்டு இங்கிலாந்திலுள்ளது போன்ற வர்த்தகசாலை (Fac- tory) ஒழுங்கை ஏற்படுத்தி, தொழில் விளைவுக்கு சாதன மான பணத்துக்குப் பணக்கார முதலாளிகளை சொந்தக்கார ராய்ச் செய்து விடுவோமா? ஐரோப்பா சண்டத்தின் கைத் தொழில் சரித்திரத்தைப் பரிசீலனம் செய்ய இங்கே எனக்கு அவகாசமில்லை. அது மொத்தத்தில் விசனகரமான தென்று

மாத்திரம் சொல்லலாம். மேற்கு பிராந்தியமானது அங்கு வழங்கிவரும் பாக்டொரி முதலிய வர்த்தக ஒழுங்குகளின் மகா கொடிய தீமைகளினின்று இப்பொழுது தான் மெல்ல மெல்லத் தன்னை விடுவித்துக் கொள்ளத் தொடங்கி யிருக்கின்றது. நல்ல நிலைமைக்கு வருவதற்கு வேண்டிய அறிகுறிகள் மேற்கு பிராந்தியங்களில் இல்லாமலில்லை. ஜனங்களின் கையில் நாட்டின் ஆட்சி இருக்க வேண்டுமென்று வாதிப்பவராகிய டெமோக்ராட்டுகளென்ன, (Temocrats) சகலருக்கும் சுக சௌகரியங்களைப் பெற ஏற்றத்தாழ்ச்சியின்றி சமான சந்தர்ப்பங்கள் இருக்க வேண்டுமென்று வாதிக்கும் ஸோஷியலிஸ்டுகளென்ன—இவர்களது மனோரதங்கள் சீக்கிரத்திலாவதுகொஞ்சங்கழித்தாவது ஈடேறும். அப்படிப்பட்ட நல்லகாலம் ஒன்று வரும்பொழுது அவரவர்கள் செய்தற்குரிய காரியங்கள் எல்லாருக்கும் ஏர்படும். மிதமிஞ்சின கஷ்டமும், கவலையுற்ற வாழ்க்கையும், ஒழியும். மானிட ஜாதி வாழ்ந்து தழைப்பதற்குத் தகுதியான நிலைமைகளும் உண்டாகும். இந்தமனோரதங்களின் பெரும்பான்மையும் இந்தியாவில் வழங்கிவரும் கைத்தொழில் முறைகளில் ஏற்கெனவே சாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு ஜாதியும் ஒவ்வொரு தொழில் செய்யும் ஜனங்களின் கூட்டமாய் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒவ்வொரு ஜாதிக்கும் ஏற்பட்டுள்ள அமைப்பிலே அதிற் சேர்ந்த எல்லா ஜனங்களுக்கும் சமான பாத்தியதைகளும், தனித்தனி மனிதருக்கும் மொத்தத்தில் ஜன சமுதாயத்திற்கும் வேண்டிய சகல சௌகரியங்களும் அடங்கி யிருக்கின்றன. முதலாளிகளைச் சேர்த்துக் கூட்டு வர்த்தகம் செய்யும் முறையில் தொழில் விளைவிக்குஞ் சாதனமாகிய தனத்துக்குச் சிலர் மாத்திரமே சொந்தக்காரரா யிருப்பதால், அச்சிலர் பலருடைய சொத்தையும் அடித்துக்கொண்டு போவதற்கு ஏதுவாயிருக்கின்றது. இந்த முறையின் பலன்கள் மேற்குப் பிராந்தியங்

களில் வெகு பிரதிகூலமா யிருப்பதாலும், அப்படிப்பட்ட பிரதி கூலங்களைத் தடுத்து மீண்டும் நல்ல ஸ்திதிக்கு வருவதற்காக அம்மேற்குத் தேசங்களிலுள்ள பிரயத்தனங்கள் நமக்கு சுத்தமாய்த் தெரியாதிருப்பதாலும், நாம் அம்மேற்குத் திசையுடன் போட்டி போடுவது புத்திசாலித்தனமான காரியமாகுமா வென்று நாம் கண்டிப்பாய் ஆக்ஷேபிப்பது உத்தமமாகும். இந்தியக் கைத்தொழில்கள் கேவலம் சில முதலாளிகளுக்கே பிரயோசனப் படுவதாயிராமல், இந்தியாவிலுள்ள சமஸ்த ஜனங்களுக்கும் உபகரித்து வர வேண்டுமானால், அவை முற்காலத்தில் கிராமங்களிலும் குடிசைகளிலும் உண்டான கைத்தொழில்களாகவே இருக்க வேண்டும். அவற்றிற்கு உண்மையாய் அவசிய மெனத் தோன்றும் திருத்தங்களை மாத்திரம் அமைத்துக் கொண்டால் போதும். ஆனால் மேற்கு தேசமானது யந்திரங்களை எப்போது உபயோகிக்க வேண்டும், எப்போது விலக்கவேண்டும் என்ற விஷயத்தை இப்பொழுது தான் கற்றுக்கொள்ள ஆரம்பித்துக் கொண்டிருக்கிற சங்கதியை நீங்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டும், உதாரணமாக, கையால் நெய்த வஸ்திரங்களை விட யந்திரத்தால் நெய்த வஸ்திரங்கள் அரைவாசி காலத்திலேயே கிழிந்து போவதா யிருந்தால், அப்படிப்பட்ட வஸ்திரங்களைப் பாதி விலைக்கு யந்திரத்தால் செய்வதில் பயனில்லை. அது நஷ்டமேயாகும். ஏனெனில், ஒரு வஸ்து எவ்வளவு காலத்துக்கு அதிகமாய் நீடித்து நிற்குமோ, அதற்குத் தக்கபடி யல்லவோ நாமும் அதை ஒழுங்காய் அலங்கரிக்க இஷ்டப்படுவோம். சாதாரணமாய் நமக்கு வேண்டிய வஸ்துக்களில் அநேகம் இனி யந்திரத்தைக் கொண்டுதான் செய்தாக வேண்டு மென்பதற்கு சந்தேகமில்லை. ஆனால் அதற்கும் ஒரு வரம்பு வேண்டும். எல்லாவற்றையும் நாம் யந்திரத்தால் செய்து கொள்ள வேண்டியதில்லை.

உதாரணமாக, ஸ்டீல் நிப்புகள் செய்யும் விஷயத்திலே தண்ணீர் சேந்துவதும், கட்டை வெட்டுவதும் போன்ற இந்த அற்ப சேவகவேலையை நாம் அயல் நாட்டாருக்கு விட்டுவிட்டு, நம் நாட்டில் சரியாய் ஆதரிப்பாரின்றி எங்கும் க்ஷீணித்துக் கொண்டு வருகிற நம் சொந்தக் கைத்தொழில்களையே நமக்கு வேண்டிய அளவுக்கு மாத்திரமன்றிப் பிறநாடுகளுக்கும் ஏற்று மதி செய்யத்தக்க விதமாக மீண்டும் ஆரம்பித்துச் செய்வதில் நாட்டத்தைச் செலுத்துவோம். இவ்விஷயத்திலும் பணக் காரர்களையே நாம் மறுபடியும் குறைகூற வேண்டியிருக் கிறது. ஏனெனில், அவர்கள் தான் அந்நிய தேசத்து சாமான் களை, அதிலும் உபயோகமற்ற அந்நிய தேசச் சாமான்களை வாங்கித் தங்கள் வீடுகளை நிறைத்து வைக்கிறார்கள் இந்திய ஜனங்கள் அயல் நாட்டுப் பொருள்களை விட நம் நாட்டுப் பொருள்களே சிறந்தவை யென்றுணர்ந்து, அவற்றின் அரு மையை யதார்த்தமா யறிந்து, இந்தியக் கலைகளையும், கைத் தொழில்களையும் ஆதரிக்காத வரையில் சுதேசிய முயற்சி யானது அகல விரிந்து பூர்த்தியடையாது. இந்தியர்களுக்குத் தங்கள் வீடுகளை அலங்கரிப்பதற்கும், சாமான்களை ஜோ டிப்பதற்கும், கல்கத்தாவிலும், பம்பாயிலுமுள்ள ஐரோப்பிய ஷாப்புகளுக்கு ஓட வேண்டிய அவசியமில்லை யென்ற எண் ணம் உண்டாகும் காலம் எப்பொழுதாவது வருமாயின், அது வருவதற்கு வெகு காலம் செல்லும்போல் எனக்குத் தோன்று கிறது. சுதேசிய முயற்சி நிறைவேறி விட்டதாகச் சொல்ல லாம். அப்படிக்கின்றி, அவர்கள் பிரஸ்ஸெல்ஸ் நகரத்தி லிருந்து வரும் டகட்டான ரத்னக் கம்பளங்களையும், இங்கி லாந்திலுள்ள டாட்டன் ஹாம் கோர்ட்டு ரோட்டிலிருந்து வரும் மேஜைமுதலிய சாமான்களையும், நயமான இட்டாலி தேசத்துச் சித்திரவர்ண சலவைக்கல்லுகளையும், பிரான்சு தேசத்துத் தைலவர்ணப் படங்களையும், ஆஸ்திரியா தேசத்து லஸ்தர் குளோப்களையும், ஜர்மனிதேசத்து சரிகைப் புடவை

களையும், நயமான சித்திரப் பட்டாடைகளையும் மேலானவை யென வாங்கித் தங்கள் அரண்மனைகளை நிரப்பி வரும்வரை யில் சுதேசியத்தில் அதிக ஆசைவைப்பதற்கில்லை. ஆகையால் இந்தியாவிலுண்டா யிருக்கும் சுதேசிய மென்ன, ஜாதீய உணர்ச்சி யென்ன—இவற்றில் பூரண அநுதாபத் தோடு நான் தைரியமாய் உங்களுக்கு சூசிப்பிக்கிற தென்ன வெனில்—அயல் நாட்டுக் கைத்தொழில்களை இங்கே ஸ்தா பிப்பது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு இந்நாட்டில் க்ஷீணகதியை எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிற சுதேசக் கைத்தொழில்களை ஆதரித்துத் தழைக்கச் செய்தலும், ஈன ஸ்திதியில் தடமாடிக் கொண்டிருக்கும் கைத் தொழில்களை சுத்தப்படுத்தி சீர்பெறச் செய்வதும், நாட்டைச்சேர்ந்த தாலு லும், சீமையிலேற்பட்டதானலும், உபயோக மற்ற வீண் சுக போகங்களை வெறுத்து விலக்குதலும் முக்கிய காரியங்க ளாம். சுதேசிய ஊக்கமானது விரிந்த பல முகங்கொண்ட ஜாதீய உணர்ச்சியின் ஆவேச முற்றிருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட உணர்ச்சியிருக்கு மிடத்தில் சுதேசிய மானது எவ்வித பிரயத்தினமும், தவறுதலு மின்றித் தன்னி யல்பாய் உற்பத்தியாகும். சுதேசியம் கேவலம் வர்த்தக சம் பந்தமாயிருத்தல் கூடாது. அது இலக்கியத்திலும், நீதி தத்துவத்திலும், ரஸக் ஞானத்திலும் நிறைந்திருக்க வேண் டும். அந்தத் துறைகளில் தன் நம்பிக்கை உண்டாயின், அது வர்த்தக விஷயத்திலும் தன்நம்பிக்கை உண்டாவதற்கு வழிகாட்டும்.

பிரசங்க முடிவில் சபா நாயகர் எழுந்து, இப்படிப்பட்ட இனிமையான பிரசங்கத்தைச் செய்ததற்காக டாக்டர் குமார சாமி அவர்களுக்கு வந்தனம் செலுத்தி, அவருக்கும் தனக்கு முள்ள சில அபிப்பிராய பேதங்களை எடுத்துச் சொல்லிய பின் சபை கலைந்தது.

ஸ்ரீமத்

கோபால கிருஷ்ண கோகலே

அவர்கள் லாகூரில் செய்த

'சுதேசியப்' பிரசங்கம்.

ஸபா நாயகருக்கும், இங்கு கூடியிருக்கும் குலமாதருக்கும் கனவான்களுக்கும் விஞ்ஞாபனம்.

இன்று 'சுதேசியம்' என்ற விஷயத்தைப் பற்றிப் பேச உத்தேசிக்கிறேன். இப்பொழுது தேச மெங்கணும் எல்லாத் துறைகளிலும் காணப்படும் அபிவிர்த்தியின் மங்கள காமான சந்தோஷ சூசகங்கள் பலவற்றிலும், சுதேசிய உணர்ச்சியே விரைவில் வளர்ந்து வருவதால், அதை விட நமக்கு அதிக நம்பிக்கையை உண்டாக்குவது வேறொன்றையுங் காணேம். 'சுதேசியம்' என்பதற்கு முதலில் நாட்டுத் தொழில்களின் அபிவிர்த்தி என்பதே சரியான பொருளாயிருப்பினும், கேவலம் நாட்டுக் கைத்தொழில்களின் க்ஷேமாபி விர்த்திக் கநுகூலமான காரியங்களைச் செய்வதோடு மாத்திரம் அமையாமல், அதற்கப்பாலும் சென்று ஒருவன் தன் நாட்டை நேசிப்பதென்பதே 'சுதேசியம்' என்பதின் விரிந்த கருத்தாகும். ஆகவே நாட்டுத் தொழில்களின் அபிவிர்த்தியில் மாத்திரமன்றி மேலான ஜன்மபூமியின் பக்தியாகவும் இந்த சுதேசியத்தை நாம் போதிக்க வேண்டும். இந்தத் தேச பக்தி யானது மனிதாது ஹிருதயங்களிற் பற்றி அவர்களுக்கு ஆவேசத்தை உண்டாக்கிவிடும் பக்ஷத்தில், பிறகு இந்நாட்டில் வாழும்

ஜனங்களெல்லோரும், ஹிந்துக்களாயினும், முகம்மதியராயினும், சீக்கியராயினும், கிறிஸ்தவராயினும், பார்சியராயினும் யூரோஷியராயினும் யாதொரு பேதமுமின்றி பிரீதியெனும் பட்டுச்கயிற்றால் கட்டுண்டு நிற்பர். இந்த எண்ணம் மாத்திரம் ஜனங்களின் மனத்தில் குடிகொள்ளும் பக்ஷத்தில் அது முதல் அவர்கள் எப்படிப்பட்ட கஷ்டம் வந்தாலும் தைரியத்தைக் கைவிடாமல தேச நன்மைக்காக எவ்வித மஹா சங்கடங்கள் நேரிடினும் அவற்றை யொரு பொருட்டாய்க் கருத மாட்டார்கள். உத்தமமான அபீஷ்டங்களெல்லாம் பூர்த்தியாய் ஈடேறும் வரையிலும் இந்த எண்ணமானது நம்மைச் சிறிதேனும் சும்மா விருக்க வொட்டாமல் முன்னேக்கிச் செல்லுமாறு ஏவிக்கொண்டே யிருக்கும். சுதேசியக் கிளர்ச்சி தொடங்கியது முதல், இந்நாட்டில் ஒரு நவீன அருணேதயம் உண்டாயிருக்கிறது. அது கிரமங் கிரமமாய் ஓங்கி வளர்ந்து பரிபூரண சூரியப் பிரகாசமுள்ள தினமாய் விளங்குமென்க. சுதேசியத்தைப் பற்றிப் பேசுவதில் என்னுடைய உத்தேசமாவது நம் நாட்டின் பொருளாதார நிலையைப்பற்றிப் பேசவேண்டுமென்பதேயாம். ஒரு ஜாதியார் மற்றொரு ஜாதியாரை இரண்டு விதத்தில் அடக்கி யாளக்கூடும். முதலாவது ராஜாங்கத்திலும், இரண்டாவது கைத்தொழிலுமாம். ராஜாங்கத்தில் பராதீனம் சம்பவிக்கும் பொழுது அதை ஜனங்கள் உடனே கவனிப்பார்கள். கைத்தொழிலில் நேரும் பராதீனத்தையோ அவ்வளவு சீக்கிரத்தில் உணர மாட்டார்கள் ஏனெனில், முதலாவதில் உங்களுக்குத் தாழ்மை உண்டாகி உங்கள் தன்மதிப்பு பாதிக்கப்படுவதால் அதை நீங்கள் வெகு தீவிரமாய் உணர்வது சகஜம் இரண்டாவதிலோ, பிறநாட்டாரின் நடை உடை பாவனைகளை யோசனையின்றிப் பின்பற்று மவ்வளவு தாழ்மைக்கு வரும் பொழுது, அதை நீங்கள், அதிகமாய்க் கவனிக்கத் தலைப்படுகிறீர்கள். இப்பொழுது காங்க்ரெஸ் ஏற்பட்டு கால் நூற்றுண்டாகிறது. அதன் ஆரம்பத்தில் கைத்தொழில் அபி

விர்த்தியைப் பற்றியும் ஆலோசிக்கப்பட்டாலும், ராஜாங்க ஸ்திதியே நம்மை அதிகமாய்த் தாக்கிய படியால், நமது கவனத்தை யெல்லாம் ராஜாங்க விஷயத்திலேயே செலுத்த வேண்டிவந்து, கைத்தொழில் விஷயத்தில் சுத்தமாய் அக்கறையில்லாமற் போய்விட்டது. சென்ற இரண்டு வருஷங்களாகத் தான் நமது உற்சாகக் கடல் பொங்கி கைத்தொழி லபிவிர்த்தி வழியில் அலைவீசி உயரக் கிளம்பத் தொடங்கி ஜனங்களின் கவனத்தை ஜாஸ்தியாய்க் கவர்ந்து வருகிறது.

இனிக் கைத்தொழில் விஷயமாக நாம் எவ்வளவு வேலை செய்ய வேண்டியிருக்கிறதென்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும். ராஜாங்க விஷயம் சம்பந்தித்த வரையில் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆளுகையால் விளைந்த பலனனைத்து கலப்படமாகவே இருக்கிறது. ஒரு பக்கம் லாபமிருந்தால் ஒரு பக்கம் நஷ்டமும் கூடவே விளைந்திருக்கிறது. ஆனால் கைத்தொழில் விஷயத்தில் விளைந்ததெல்லாம் அவ்வளவும் பீடையும் பெருநஷ்டமுமேயாம். அஃதெப்படி யென்பதை நானிப்பொழுது உங்களுக்கு விளக்கிக் காட்டுகிறேன். நான் சொல்வதைக் கவனமாய்க் கேளுங்கள். முதலாவது நம் நாட்டின் பூர்வ கால ஸ்திதியைப்பற்றி நீங்கள் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். பூர்வகாலப் பெருமைகளைத் திருப்பித் திருப்பிப் பாடுகிறதில் நான் பிரியமுள்ளவனல்லன். கேவலம் பூர்வ காலத்திலேயே மனதைச் செலுத்துவதால் வாஸ்தவத்தில் ஆகும் பிரயோஜனம் ஒன்றுமில்லை. ஆனால் பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வருவதற்கு முன் இத்தேசம் எந்த ஸ்திதியில் இருந்ததென்பதை நாம் விசாரிக்க வேண்டும். இந்த விஷயத்தைப்பற்றி நேரான ஆதாரம் ஒன்றுமில்லாவிடினும், பூர்வத்தில் இந்தியாவுக்கு வந்து போன பிரயாணிகள் தங்கள் அபிப்பிராயங்களை எழுதி வைத்த பழைய நூல்கள் இருக்கின்றன. இத்தேசத்தின் செல்வத்தால் இழுக்கப்பட்டே அவர்கள் இங்கே வந்தார்களென்பதை ஒருவரும் சந்தேகிப்பதற்

இல்லை. அக்காலத்தில் நாம் மற்றத் தேசத்தாரை விடக் கைத் தொழிலில் எவ்வளவோ மேலான ஸ்திதியில் இருந்திருக் கலா மென்பதை நான் பயமின்றி சொல்லக்கூடும். அக்காலத் தில் இங்கிருந்து அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி வர்த்தகம் அவ்வளவு அதிகமா யில்லாவிடினும், சுமாராய் நடந்து வந்த தென்பதில். சந்தேகமில்லை. ஆனல் அதற்குக் காரணம் வேறு. யந்திரங்களை உபயோகிக்கத் தொடங்குவதற்குமுன் பெரும் பணம் சேர்ப்பது அசாத்தியம். பெரும் பண மெல் லாம் பின்னல் ஏற்பட்டதேயாம். விவசாயத்திலும் இந்தியா வானது செழித்தோங்கி யிருந்தது. விவசாயத்தில் நாம் அதிக சம்பத்தடைந்திருந்தோம். மற்ற நாட்டார்களைப் போலவே நாமும் மேலான நிலையில் இருந்திருக்க வேண்டும் இந்த மாதிரி ஸ்திதி 19-ம் நூற்ருண்டுவரையிலுமிருந்தது. ஆனல் பிரிட்டிஷ் ஆளுகை ஏற்பட்டது முதல் எல்லாம் தலைகீழாய் மாறிவிட்டது. அக்காலத்திய கும்பெனி உத்தியோகஸ்தர் கள் அநுசரித்த வியாபார முறை இந்தியாவின் வர்த்தகத்தை நாசம் செய்து விட்டது. இந்த முறையை அமெரிக்காவி லும் ஐர்லாந்திலும் கூட பிரிட்டிஷார் அநுசரித்த போதி லும், அமெரிக்கா இங்கிலாந்தின் அதிகாரத்தைத் தள்ளி விட்டு சுவாதீன மடைந்து தானே முயன்று பாடுபட்டுக் கைத் தொழில்களை விர்த்தி செய்து க்ஷேமமடைந்தது. ஐர்லாந்து மாத்திரம் இந்த வர்த்தக முறையால் அதிகமாய் சங்கடப்பட் டது. இது முதல்படி.

பிறகு Free trade (வரியில்லா வர்த்தகம்) என்ற முறையை இந்தியாவின் மேல் சுமத்தினர்கள். இங்கி லாந்தானது தன் சொந்த கைத் தொழில்களை மாத் திரம் காப்பாற்றத் தீர்மானித்துக் கொண்டு மற்ற நாட்டு வர்த்தக விவகாரங்களி லெல்லாம் Tree trade என்ற வரியில்லா வர்த்தக முறைமையை விதித்தது. இந்த முறைமையால் இங்கிலாந்துக்கு லாபமேயாயினும், இந்தி

யாவின் கைத் தொழில்கள் நிலைகுலைத்து நாசமாய்ப் போய் விட்டன. இருப்புப்பாதைகள் எல்லாப் பக்கங்களிலும் பரவிய படியால், சிறு கைத் தொழில்களெல்லாம் நீராவி யந்திரத்தின் முன் தலைகாட்ட முடியாமற் போயின. பயிரிடுவதையே முக்கிய தொழிலாய்க் கொண்ட ஒரு தேசமானது உலகத்திலுள்ள மற்ற நாகரிக தேசங்களுடன் வர்த்தகத்தில் போட்டி போட்டு முன் நிற்குமாயின், அதன் கைத் தொழில்களைக் கவர்ன்மெண்டார் கைகொடுத்துக் காப்பாற்றினாலன்றி, அத்தொழில்கள் அழிந்தே போகவேண்டும். அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்களும், ஐரோப்பாவில் இங்கிலாந்தைத் தவிர மற்றெல்லாத் தேசங்களும் இந்த முறையையே அநுசரிக்கின்றன

கவர்ன்மெண்டார் இவ் விஷயத்தில் தங்களுக்கிஷ்டமான முறையை அனுசரிப்பதற்கு வேறு காரணங்களும் உள. ஆங்கிலேய வர்த்தகர்களின் லாபங்களை பலப்படுத்த வேண்டு மென்பதே அவர்களின் கருத்து. நமக்குப் பொருள் வருவாய்கள் சமிருத்தியாயிருந்தும், இவ்வுலகத்திலே நம்மைப் போல் பிறர் கையை எதிர் பார்த்திருப்பவர் வேறெந் நாட்டாருமில்லை. நம் நித்தியப்படி தேவைகளுக்கு வேண்டிய பொருள்களில் 100ல் 60-பங்கு வெளிநாடுகளினின்று இறக்குமதியாகின்றன. நாம் ஏற்றுமதி செய்யும் சரக்குகளிலே 100-க்கு 70-பங்கு இயற்கைப் பொருள்களே (raw materials). இவ்வியற்கைப் பொருள்களிலே பெரும்பான்மையும் பிறநாடுகளிலே இயந்திரங்களில் வேலை செய்யப்பட்டு உருவாகிப் பகட்டாய்த் திரும்பி வருகின்றன. இந்தியாவைப் போல் கைத்தொழில் நசித்துப் போயிருக்கும் தேசம் உலகத்தில் வேறெதுவும் கிடையாது. வருஷா வருஷம் அது பெருமிதமான நஷ்டத்துக்குட்பட வேண்டியதாகிறது. இந்த நஷ்டத்தின் அளவு இவ்வளவு வென்பதைக் காட்ட உங்களுக்குக் கணக்கு திட்-

டங்கள் எடுத்துக் காட்டுகின்றேன். நாம் வருஷாவாரியில் 100-கோடி ரூபா பெறுமான பொருள்களை இறக்குமதி செய்கிறோம். 150 கோடி ரூபா பெறுமான சாக்குகளை ஏற்றுமதி செய்கிறோம். சென்ற வருஷம் நாம் எவ்வளவு இறக்குமதி செய்தோமோ அதைவிட அதிகமாக 30 கோடி ஏற்றுமதி செய்தோம். தேசமானது க்ஷேமமாய்த் தழைத்தோங்கி இருக்க வேண்டுமாயின் இறக்கு மதியும் ஏற்றுமதியும் சரி சம மாயிருக்கவேண்டும். இந்த நஷ்டம் ஒரு வருஷம் மாத்திரம் சம்பவிப்பதானால் பாதகமில்லை. ஆனால் வருஷப் பிரதி வருஷம் இப்படியே போய்க் கொண்டிருக்கிறது. ராஜ தந்திர நிபுணராகிய லார்டு ஸாலிஸ்பரி யானவர் இதைக் கவனித்து இவ்வாறு தான் இந்தியாவானது வெட்டுண்டு இரத்தங் கொட்டிக் கொண்டிருக்கிற தென்று சுட்டிக் காட்டினார். இந்த மாதிரி இரத்தம் கொட்டி வருவதை உலகத்திலே மஹா பலிஷ்டரான ஜனங்களத்தாரும் வெகு காலம் தாங்கி நிற்க முடியா தென்றால், இந்தியா மாத்திரம் எத்தனை நாளைக்குத் தாங்கும். இந்த இரத்தங் கொட்டுதலை நிறுத்தும் வரையிலும், இந்தியாவிலே ஒருவரும் க்ஷேமமா யிருக்க வழியில்லை. இந்த மாதிரி இரத்தம் கொட்டிக்கொண்டே போனால் தேச ஜனங்களின் பெரும்பான்மையோரும் வர வரத் தாழ்ந்து அதோ கதியடைவது திண்ணம்.

ஆனால் இந்த நஷ்டத்தையெல்லாம் முற்றிலும் நிறுத்திவிட லாமென்றும் அதுவும் உடனே நிறுத்தி விடலா மென்றும் நினைப்பது கூடாதகாரியம். இந்த நஷ்ட மவ்வளவும் கைத்தொழில்களின் க்ஷீணகதியினாலேயே விளைந்ததன்று. இந்தநஷ்டத்தில் 20 கோடிக்குக் காரணம் ராஜாங்க காரியங்களே. மற்ற 10 கோடிக்குத் தான் கைத்தொழில்கள் காரணமாய் நிற்கும் பிரதி வருஷமும் ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களின் பென்ஷன் களுக் கென்றும் பர்லோ (Furlough) ராஜா சம்பளங் களுக் கென்றும், சீமையிலுள்ள இந்தியா ஆபீசு உத்தியோ

கஸ்தர்களின் சம்பளத்துக்கென்றும் 20 கோடி செலவழிகின்றது. இந்தப் பொருளிழிவை எவ்வளவு கைத்தொழிலேற்றத்தாலும் நிறுத்த முடியாது.

இதுவரையில் நம்மைச் சூழ்ந்துள்ள தீங்கின் அளவைப் பற்றிப் பேசினேன். இனி அதற்கு பரிஹாரங்களை எடுத்துக் கூறுகின்றேன். நாம் செய்ய வேண்டியிருக்கும் காரியம் வெகு சுலபமானதல்ல. நமது தேசத்தின் விளைபொருள்கள் அபரிமிதமானதென்பது அவ்வளவும் உண்மையே. ஆயினும் அன்னிய நாட்டார்கள் அவற்றை அடித்துக் கொண்டு போவதினால் நாம் அவதிப் படுகின்றோம். கவர்ன்மெண்டார் கடைப்பிடித்திருக்கும் Free trade (வரியில்லா வர்த்தகம்) என்ற முறைமையால் நாம் பிறநாட்டு வர்த்தகர்களுடன் போட்டி போட முடியாதவர்களாயிருக்கிறோம். மேலும் அந்நிய நாட்டார்கள் யந்திர சக்தியால் எல்லாச் சரக்குகளையும் உயர்ந்த வேலைப் பாடுடையன வாய்ச் செய்துவிற்கின்றமையால் அவர்களுடன் போட்டி போடுவது நமக்கு இன்னும் அதிகக் கஷ்டமாய் விடுகிறது. அன்றியும் நம்தேசத்திலுள்ள சொற்பக் கைத்தொழில் முயற்சிகளும் அந்நியர் கையில் இருக்கின்றன. காப்பிப்பயிரென்ன, தேயிலைப்பயிரென்ன, இவைகளெல்லாம் பிறநாட்டார் கையில் தானே இருக்கின்றன. கான்பூரில் ஏற்பட்டிருக்கும் வியாபாரமும் சுத்த சுதேசியமன்று. அது பிற நாட்டாரால் நடத்தப்பட்டு, அதனால் வரும் லாபத்தை அப்பிற நாட்டாரே மடியில் போட்டுக் கொள்ளுகிறார்கள். ஆங்கிலேயர் தங்கள் மூலதனத்தைத் தாராளமாய் இத்தேசக் கைத்தொழில் வர்த்தக முயற்சிகளிலே கொண்டுவந்து போட்டுத் தங்களுக்குக் கிடைக்கும் வேலைகளிலெல்லாம் கூடிய வரையில் லாபம் சம்பாதித்துக் கொண்டு போகப் பார்க்கிறார்கள். அவர்கள் சாமர்த்திய சாலிகளானபடியால், நாம் உண்மையாயும் சிரத்தையோடும் பாடுபட்டுழைக்க முயன்றாலன்றி அவர்களுக்குச் சரியாய் நிற்க நம்மால் முடியாது.

நம்மிடத்தில் நான்கு குறைகளிருக்கின்றன:—(1) கைத்தொழிற் கீழ்மை, அதாவது இதர தேசங்களிலே கைத்தொழில் எவ்வாறு விர்த்தியாகிற தென்பதைப் பற்றி பொதுவாய் நமக்குள்ள அறிவுக்குறைவு (2) கைத்தொழில் முதலிய முயற்சிக்குவேண்டிய சாஸ்திர ரீதியானபடியில்தேர்ச்சியுள்ள நிபுணர்களின் குறைவு (3) மூலதனக் குறைவு. நமக்கு வருஷவாரியில் மீதமாய் நிற்பது 8 முதல் 10 கோடி ரூபாய்க்கு மேலில்லாமையால் நமது தனம் சொற்பமாகவே இருக்கிறது. இதனால் Joint Stock என்ற ஐக்கிய திரவிய வியாபார முயற்சிகள் நமக்குள் வலியற்றிருக்கின்றன. (4) மற்றதெல்லாம் நமக்கனுகூலமா யிருந்தாலும் கூட, நாமிப்பொழுது செய்யும் பொருள்கள் அந்நிய நாட்டார்கள் செய்யும் சரக்குகளைக் காட்டிலும் மட்டமாகவே இருந்து தீரும். அன்றியும் துரைத்தனத்தாரும் நமக்கு சகாயம் செய்வதில்லை. ஆகவே விவசாய மொன்று தான் நமக்கிப்பொழுது முக்கியத் தொழிலாய் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அதுகூடத் தாழ்ந்த நிலைமையிலேயே இருக்கின்றது. இப்பொழுது ஒரு ஏகரா நிலத்தில் விளையும் விளைவு ஆக்பர் பாதுஷா ஆண்ட காலத்தில் விளைந்த விளைவுக்கு எவ்வளவோ குறைந்திருக்கிற தென்பது, ஆயின்-இ-அக்பாரி என்ற நூலைப்படித்தால் தெரியவரும். விவசாய விஷயத்திலும் நாம் எவ்வளவோ அபிவிர்த்தி செய்ய வேண்டி இருக்கிறது. இந்த வகையில் நம் இளைஞர்களே, ஏதாகிலும் முயன்று செய்ய வேண்டும். சாஸ்திர ரீதியான பயிரிடும் முறைகளைக் கற்றுக்கொண்டு மற்றவர்களுக்கும் கற்பிக்க வேண்டும். அப்படிச் செய்தால், உங்கள் தாய் நாட்டுக்கு நீங்கள் விலை கடந்த விசேஷ கைங்கரியம் புரிந்தவராவதன்றி உங்கள் உதாரணத்தைப் பிறரும் பின் பற்றி நடப்பதற்கு வழிகாட்டிகளாவீர்கள்.

நாம் வருஷந்தோறும் உபயோகித்து வரும் துணிகளின் மொத்த மதிப்பான ரூபா 40 கோடி ரூபாயில் 10 கோடி ரூபா பெறுமான வஸ்திரங்கள் மாத்திரமே நம் தேசத்தில் நம்மால் செய்யப்படுகின்றன. இந்தத் துறையில் நாம் முயற்சி செய்து லாபம் பெறலாம் மற்றத் தேசத்து விளைபொருள்களுடன் நம் தேசத்து விளைபொருள்களை ஒப்பிட்டுப் பாத்தால் நம் தேசத்து விளை பொருள்களே அதிகமானவை யென்பதில் சந்தேகமில்லை. நமது தேச முழுவதிலும் கைத்தொழிலிற் போட்டிருக்கும் மூலதனம் 16 அல்லது 17 கோடியே. ஆனால் இங்கிலாந்தில் லங்காஷைர் என்கிற ஓர் ஊரில் மட்டும் 300 கோடி ரூபாய் யந்திரங்களில் போடப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கும் நமக்குமுள்ள பேதம் அஜகஜாந்திரமாயிருக்கின்றது. ஆகவே நம்தேசம் கைத்தொழிலின் மேன்மையடைய வேண்டுமாயின், சுதேசியமானது வெறும் விருப்பமாய் மாத்திரம் இருந்தால் போதாது. ஒவ்வொருவனும் தன்னுடைய தாய் நாடு விருத்திக்கு வர வேண்டு மென்ற விருப்பத்துடன் தன்னு லியன்ற வரையிலும் கைத்தொழிலை விர்த்தி செய்வதற்கான முயற்சிகளுக்கு உதவி புரிய முற்பட வேண்டும். இவ்விஷயத்தில் நாம் இனி செய்ய வேண்டிய காரியம் அவ்வளவு சுலபமான தன்றாகையால் அதைச் சரிவர நடத்திக் காரியசித்தி பெறுவதற்கு எல்லா விடங்களிலிருந்தும் பலரும் ஒன்று கூடி சகாயம் புரிய வேண்டும். சுதேசிய விஷயமாய் அநாவசியமான அருவெறுப்பைக் கிளப்பி விடப் பார்க்கக்கூடாது அப்படி முயல்வதால் கெடுதிக்கு மேல் கெடுதலாய் வந்து முடியுமே யன்றி வேறில்லை. இதற்காக சுதேசியத்தில் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் நடக்கக் கூடாதென்பது வாஸ்தவமாயினும், நம் காரியத்திலே அநாவசியமான கஷ்டங்களைச் சுமத்திக் கொள்வது சுத்த பைத்தியக் காரத்தனமே யாகும். ஒரு காலத்தில் நாம் மிகவும் அழகான வஸ்திரங்களைச் செய்யக்கூடிய ஸ்திதியிலிருந்தோம். அப்

பொழுது வெகு நேர்த்தியான பருத்தியும் நம் தேசத்திலே விளைந்தது. இப்பொழுது பம்பாய் கவர்ன்மெண்டார் இஜிப்டு தேசத்துப் பருத்தியை சிந்து தேசத்திற்கு வரவழைத்துப்பயிரிட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சிந்து தேசத்தின் பூசாரமும் இஜிப்டு தேசத்தின் பூசாரமும் ஒரே மாதிரியாயிருக்கிறதாம். அதற்குள் அதனால் உண்டான பலன்கள் ஆச்சரியப்படத் தக்கனவா யிருக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட விஷயங்களில் நீங்கள் கவர்னமெண்டின் சகாயத்தையும் பெறலாம். இந்தத் துறைகளிலெல்லாம் அந்நியர்கள் இறங்கி தொழில் முழுவதையும் தங்கள் சுவாதீனம் செய்து கொள்ளு முன்னமே நீங்கள் அவை முழுவதையும் இப்பொழுதே கைப்பற்றிக்கொள்ள முயல வேண்டும்.

இனி சர்க்கரைத் தொழிலிருக்கிறது. ஒருகாலத்தில் நாம் வெளி நாடுகளுக்குச் சர்க்கரை ஏற்றுமதி செய்து வந்தோம். இப்பொழுதோ 7 கோடி ரூபா பெறுமான சர்க்கரையை வெளிநாடுகளிலிருந்துஇறக்குமதி செய்கிறோம்.இதைஉடனே தடுத்துவிடக்கூடும். வங்காளத்துக்கு வெளி நாடுகளிலிருந்து உப்பு இறக்குமதியாகிறது. இதையும் உடனே நிறுத்தி விடலாம். சென்ற வருஷம் 20 லக்ஷம் ரூபா பெறுமான குடைகளையும். 30 லக்ஷம் ரூபா பெறுமான சோப்பையும், 50 லக்ஷம் ரூபா பெறுமான தீக்குச்சிகளையும், 60 லக்ஷம் ரூபா பெறுமான கடுதாசிகளையும் இறக்குமதி செய்தோம், இவற்றை யெல்லாம் உடனே நிறுத்தி விடலாம். ஆனால் இந்தப் போராட்டம் லகுவானதல்ல. அது ஒரு பிரமாண்டமான உருவமுள்ள ராக்ஷஸனோடு ஒரு குள்ளன் சண்டை போடுவதற்குச் சமானமாகும். நமது ஸ்திதியோ நிலையற்றதாயிருக்கிறது. நமது தேசத்தில் சரியான தொழில் ஸ்தாபனங்கள் இல்லையா. ஆகையால் நாம் எல்லா வற்றையும் சாதிக்க முடியாது. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டையே நமக்குத் தொழிற்படிப்பைக் கற்பிக்கும்படி நாம் கட்டாயப்படுத்த வேண்டும்.

(கரகோஷம்) இந்தியாவானது எவ்வளவு தாழ்ந்த நிலைமையி லிருக்கிற தென்பது இங்கிலாந்திலே வருஷவாரி இறக்குமதி வீதம் நபர் 1-க்கு 15 பவுனுனல் இந்தியாவிலே 7 ஷில் லிங்கு மாத்திரமே என்பதனல் தெரியவரும். இந்தியாவி லுள்ள எல்லா பாங்கிகளிலும் வைக்கப்பட்டிருக்கும் டிபா சிட்டு மொத்தம் 50 கோடி ரூபாய்க்கு மேலில்லை. இந்தியா வின் 6-ல் 1-பங்கு ஜனத்தொகையை மாத்திரம் உடைய இங்கிலாந்திலோ 1200 கோடி டிபாசிட்டுகள் பாங்கிகளில் இருக்கின்றன. இதையெல்லாம் பார்த்தால் நாம் செய்ய வேண்டிய காரியம் எவ்வளவு கஷ்டமானதோ பார்த்துக் கொள்ளுங்கள். ஆனல் இந்தக் கஷ்டங்களை யுத்தேசித்து நாம் அதைரியப்படக் கூடாது. சுதேசிய தத்துவத்தின்படி நாம் செய்யவேண்டிய தென்ன வெனில்: நாம் வெளி தேசங் களுக்குச் சென்று உலக முழுவதிலுள்ள கைத்தொழில்களைப் பற்றி எல்லா விவரங்களையும் நன்ருய் அறிந்து கொள்ள வேண்டும். இந்த விஷயத்தில் கவர்ன்மெண்டார் செய்யும் உபகாரம் வெகு சொற்ப மென்பது தெரிந்தே யிருக்கிறது. சென்ற வருஷம் நம் மாணவர்களை வெளி நாடுகளுக் கனுப்பு வதற்காக 10 ஸ்காலர் ஷிப்புகள் (மாணவவேதனம்) மாத் திரமே சர்க்காரால் கொடுக்கப்பட்டன; வங்காளத்திலே சாஸ் திரீய தொன்முயற்சி ஞான சங்கத்தார் (Society for Technical and Scientific Knowledge) எவ்வளவோ நல்ல வேலை செய்து வருகிருர்கள். அச்சங்கத்தார் சென்ற வருஷம் சுமார் 100 மாணவர்களைப் படிப்புக்காக வெளி நாடுகளுக் கனுப்பி னர். வெளி நாடுகளுக்குப் போகிறவர்களும் அவர்களுக்குப் பணங்கொடுத்து உதவி புரிய முன் வரும் முதலாளிகளும் ஆகிய இவ்வுபய பக்ஷத்தாரும் சுதேசியத்துக்குக் கைங்கரியம் செய்கின்றவர்களே யாவர். நித்தியப்படி உபயோகத்துக்கு வேண்டிய வஸ்துக்களை இங்கேயே செய்ய வேண்டும். அவை மட்ட குணமுள்ளனவயா யிருந்தாலும் நாம் அவற்றை அபி

மானித்து அவசியம் வாங்க வேணடும். இதில் தான் உங்கள் தேசாபிமானத்தைக் காட்ட வேண்டும். சுதேசிய வஸ்துக் களையே உபயோகித்து, நம் சொந்த தேசத்தில் உற் பத்தியானவற்றை மாத்திரமே நாம் வழங்கி வருவோ மாயின் அதுவே சுதேசிய ஸேவை யாகும். இவைக ளெல்லாம் தான் சுதேசியத்துக்குத் தொண்டு புரியும் வழிகள். நாம் எப்பொழுதும் விசாலமான புத்தியுடன் விஷ யங்களை நோக்கிப் பழகவேண்டுவதுடன் நாம் போகு மிடங் களிலெல்லாம் அந்த நோக்கத்துடனேயே நடந்து, இந்த மே லான முயற்சியால் நம்மால் கூடுமான எந்த விதத்திலாவது தொண்டு செய்யக் கடவோம், நம்முடன் கூட இராதவர்கள் நமக்கு விரோதிகள் என்பது நம் கொள்கை யாயிருத்தல் கூடாது. ஆனல் நமக்கு விரோதமாயிராத வர்களெல்லாம் நம் முடன் கூட இருப்பவர்களே என்பது தான் நம் கொள்கை யாயிருக்க வேண்டும். நாம் செய்ய வேண்டிய காரியம் மகா கஷ்டமானது. அதைச் செய்வதில் நமது சர்வ சக்தியையும் விநியோகிக்க வேண்டும். நம் வழியில் வேறு கஷ்டங்களும் இருக்கின்றன. நம் காரியங்களுக்கு நாம் யந்திரங்களை நம்பி யிருக்க வேண்டி யிருக்கின்றது. அவைகளோ வெளி நாடுகளி லிருந்து வரவேண்டும். அவற்றிலோ புதிய புதிய மாறுதல் கள் உண்டாய்க் கொண்டே யிருக்கின்றன. ஆங்கிலேயர் புதிய யந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் அவ்வப்பொழுது கண்டு பிடித்து நம்மை மிஞ்சி மேலே போய்க் கொண்டிருக் கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் நமக்கு அநாவசிய மான கஷ்டங்கள் வந்து சேரும்படியான காரியம் ஒன்றை யும் நீங்கள் செய்ய வேண்டாம். இப்பொழுது நாம் சாமான்ய ஜீவனம் செய்துவரும் ஏழைகளைப் புதிய கைத்தொழில்களுக்கு உதவி புரியும்படி கட்டாயப்படுத்தக்கூடாது. தனவந்தர்களே இதற்கு சகாயம் செய்ய முன்வர வேண்டும். அந்நியர்கள் நமது தொழில்களிலும் வர்த்தகத்திலும் பிரவேசித்து வருகிற படியால் நம் இப்பொழுதே நம் முதலாளிகளே முன் வந்து

இம்முயற்சிகளுக்குப் பணங்கொடுத் துதவும்படித் தூண்ட வேண்டும். நாமே இத்துறைகளில் இறங்கி முழுவதும் வியாபகம் பெற வேண்டும். நமது வர்த்தகத்திலிருந்து வெளிநாட்டுச் சாமான்களை விலக்குவது மெதுவாகத்தான் நடக்கும். ஆனால் அதில் மாத்திரம் நமக்கு நிச்சயமாய்க் காரியம் ஜயமாகும் பக்ஷத்தில், நமக்கு உண்டாயிருக்கும் நஷ்டத்தில் கைத்தொழில் சம்பந்தித்த வரையில் 10 கோடி ரூபாய் வீணாய் வெளிப்போவதை நிறுத்தலாம். மற்ற 20 கோடி ரூபாய் நஷ்டம் ராஜாங்க சம்பந்தமாய் ஏற்பட்டிருப்பதால் அது அப்படித்தான் நிற்கும். சில சமயம் அதிக மானாலும் ஆகும். நம் தேசத்தின் கைத்தொழி லபி விர்த்தியைக் கொண்டே இத்தீங்கில் அதிக பாகத்தை நிவர்த்திக்க முடியாது. சுதேசியத்தின் உயர்ந்த தத்துவமான தாத்பரியத்தைப் போதித்தால் தான் ராஜாங்கச் சிக்கை விடுவிக்கலாம். ஆகவே, ஓ சிறுவர்களே! பற்பல விடங்களுக்கும் நீங்கள் திரள் திரளாய்ச் சென்று எல்லா வியவகாரங்களிலும் சுதேசியத்தைப் பிரசாரம் செய்யுங்கள். இந்த வேலை பயங்கரமா யிருந்தாலும், உங்கள் சர்வ சக்திகளையும், இதற்கு சமர்ப்பித்துப் பாடுபட வேண்டும். உங்கள் தேசம் சீர்ப்படுவதற்காக நீங்கள் இவ்வளவு கஷ்டப்பட் டுழைப்பதும் உங்கள் க்ஷேமத்துக்கும் உங்கள் ஜன்மபூமியின் க்ஷேமத்தின் பொருட்டுமேயாம். நீங்களே இனி எங்களுக்குப் பின் வரும் மனிதர்களாகையால் எங்கள் அபீஷ்டங்களெல்லாம் ஈடேற உங்களையே நம்பி யிருக்கிறோம்.

ஸ்ரீ விபின சந்திரபால்

காசிப் பிரசங்கம்.

சுதேசியமும், ஸ்வராஜ்யமும்.

கனவான்களே !

இன்று மாலை யென் (பிரசங்க) விஷயம் "சுதேசியமும் ஸ்வராஜ்யமும்". எவ்வளவு கொஞ்சமென்றாவது, எவ்வளவு பெரிதென்றாவது சொல்ல முடியாத இந்திய ஜனங்களின் ஒரு பிரிவார் கொஞ்ச காலமாக சுதேசியத் தன்னாட்சி உரிமை (National Autonomy) யே தங்கள் முடிவான நோக்க மெண விளம்பரப்படுத்தி யிருக்கின்றனர். தன்னாட்சி யெனப் பொருள் படுவதே ஸ்வராஜ்யமென்னும் வட மொழி யாகும். கொஞ்ச காலமாக இந்த தேசியத் தன்னாட்சி உரிமை நோக்கத்தையே தீர்மானப் படுத்திக் கொண்டிருக்கிறோம். இந் நோக்கத்தின் தீர்மானத்துக் காகவே இங்கும் மற்றெங்கு முள்ள ஜனங்களின் சில பகுதியாரால் நமக்கே இடையூறுகள் நேர்ந்திருக்கின்றன. நாம் முதலில் அதைத் தீர்மானித்த போது நம் சொந்த ஜனங்களுக்குள்ளேயே ஒரு பெரிய கலக்க மாயிற்று. நம்மவர்களில் சிலர் அதை விரும்ப வில்லை. நம்மதி காரிகளி லனேகர் அதை விரும்பவில்லை. ஆயினும், சில வருஷங்களாக, அம்மொழி ஓரளவில் கெடுதே யில்லாத தென்பது, தங்கள் நோக்கமாக அதைத் தீர்மானித் திருந்தார்கள். இழி வாயில்லாவிட்டாலும் அசட்டையாய் ஒதுக்கி வைக்கப்படலா மென்றும் அவர்கள் நினைத் திருந்த தாகத் தெரிகிறது. இத்

தன்னாட்சித் தீர்மானம் பதப்பிரயோகத்தவறுள்ள தென்றும், தன்னாட்சி யென்பதற்கு நாம் கொண்ட பொருளாவது பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக் கடங்கிய தன்னாட்சி யென்பதே யெனவும் சிலர் நினைத்தார்கள். ஆகவே நாம் அம்மொழியை வழங்குவதில் அவர்கள் தடுமாறினார்கள். உபயோக முள்ள தன்னாட்சி யானது சன்மார்க்க மானதா யிருந்தாலும் சரி, மற்ற வழியானதா யிருந்தாலும் சரி, பிறவாட்சிக்கு இடந்தராத தென்று ஆரம்பத்தி லிருந்தே அறிந்திருக்கிறோம். அதன் முதற் பொருளிதுவே. அது பிறவாட்சி யில்லாமையை உணர்த்துகின்றது. சில மாதங்களுக்கு முன்னமே இங்கிலண்டிலுள்ள நமது நேசர்கள் இந்தியா கவர்ன்மெண்டை வெகுஜனப் பிரியமா யுள்ளதாக்க வேண்டுமென்றபோது, நல்ல காலத்திற்கோ, கெட்ட காலத்திற்கோ நம்ம பேப்பர் ஒன்றில் ஒரு விஷயம் வரைந்துவிட நேர்ந்தது. அதனால் அலஹாபாத்து பயனீரும், கல்கட்டா இங்லீஷ்மனும், இந்தியா டைம்ஸூம் கூத்தாடத் தொடங்கி, அவைகளெல்லாம் இக்குற்ற மற்ற பாராவைக் காட்டி, பிரிட்டிஷ் அதிகாரமே யில்லாத இத்தேசத்தின் தன்னாட்சியே தங்கள் முடிவான ராஜரிக்கொள்கையாகத் தீர்மானிக்கத் துணிந்த ஜனங்களை கவர்ன்மெண்டார் கவனிக்க வேண்டு மென்றன! தன்னாட்சியென்பதற்கே ஆக்ஷேபமில்லை யாயினும், உள்ளபடி எவ்விதமான பிறவாட்சியும் இல்லாமலிருப்ப தெனப்பொருள் படுவதே ஆக்ஷேபிக்கப் படுவதாயிற்று. அது முதலாக ஏராளமான நவீன கிரந்தங்கள் எவ்வகையான பிரிட்டிஷ் அதிகாரமு மற்ற தன்னாட்சியிலுள்ள இத்தேசத்து விருப்ப வகையில் வளர்ந்திருக்கின்றன. அது முதலாக இந்திய ராஜ தந்திரிகள் இரண்டு கட்சிகளாய், மிதவாதிகளெனவும், அமிதவாதிகளெனவும் சொல்லப்படுகிறார்கள். 'டைம்ஸ்' பேப்பர் தன்னாட்சி யென்பதைப் பிறவாட்சியின்றி வேண்டுவது அமிதவாதிகளின் நோக்கமான தென்றும், இந்தியாவில் பிரிட்டன்

ராஜாதிகாரம் எப்போதும் அவசியமாக விரும்பினவர்களாய்ப் பொது வாழ்க்கையில் மேலான அந்தஸ்துகளை வகித்து கவர்ன்மெண்டின் நம்பிக்கையைப் பெற்றும், அதற்கு அன்பாய் உதவியும் வருகிற மற்றவர்களே மிதவாதிக ளாவார்களென்றும் தீர்மானித்தது. அவர்களைக் குறிக்க மாட்டேன். 'டைம்ஸ்' அவர்களைக் குறித்து விட்டது. தன்னாட்சியே எமது நோக்கமென்று தீர்மானித்தோம். நடந்த காங்கிரஸின் நோக்கமும் அதுவேயா வென்று 'இந்தியா டைம்ஸ்' வற்புறுத்திக் கேட்டது, பிரிட்டிஷ் அதிகார மற்ற தன்னாட்சியே தங்களுக்கு வேண்டு மாயின், அப்படியே காங்கிரஸில் கற்ற இந்தியர்கள் தீர்மானம் செய்ய அது வற்புறுத்திக் கேட்டது. காங்கிரஸி லிருந்து அமிதவாதிகளைத் துரத்தவும், தங்கள் நோக்கமாவது பிரிட்டிஷ் ராஜரிக சாசுவதத்துக்கு இடமாகு மளவில் பரிபாலன யந்திரத்தை விருத்தி செய்வதே யாகுமென்று கிரமமாய்த் தீர்மானிக்கவும், அவர் (மிதவாதி)களின் நல்லறிவுக்குப் புகட்டியது. இதற்கு மறுமொழி காங்கிரஸி லிருந்து கிடைத்தது. முதலில் அது மிஸ்டர் தாதாபாய் நவ்ரோஜியின் அக்கிராசநாதி பத்ய வாசகத்தின் வழியாய் வந்தது. அதில் தன்னாட்சி யென்பதே தங்கள் நோக்கமெனத் தீர்மானித்தது மன்றி, அவர் தீர்மானித்த தன்னாட்சி யென்னும் வார்த்தையின் சரியான அர்த்தத்தைப் பற்றி ஒரு குழப்பமு மில்லாதபடி அவர் அதை விவரித்தார். இந்தியப் பிரஜைகள் நோக்கும் தன்னாட்சி யானது ஐக்கிய (பிரிட்டிஷ்) ராஜ்யத்திலும், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலும் கிடைத்திருக்கும் தன்னாட்சி வகையே யென்னப் பட்டது. தன்னாட்சி யென்பதற்கு பதிலாக ஸ்வாராஜ்யமென்னும் பதமே காங்கிரஸின் முறையாகக் குறித்தார். ஆகவே ஐக்கிய ராஜ்யத்து (பிரிடனு) க்கும், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுக்கு முள்ளது போன்ற தன்னாட்சி அல்லது ஸ்வாராஜ்ய மென்பதே நமது தாதாபாயின் வார்த்

தைகளா யிருக்கின்றன. தாதாபாய் உடலால் நமக்குத் தூரமா யிருக்கிறாரே யொழிய அவர் உயிர் இடை விடாது நம்மிடமே யிருக்கிறது மன்றி, அவர் தமது தேசக் கல்விமான்களின் நினைவுக்கு நெருங்கியே யிருந்து கொண்டிருக்கிறார். மிஸ்டர் தாதாபாயைப் போல இங்கிலண்டில் வேறெந்த இந்தியனாவது இருந்து வருகிறதாக வாவது, பொது வாழ்க்கைத் தலைமை பூண்டு இத்தேசத்தின் பல பகுதிகளிலும் அநேகமான நிரூபர்களை உடையவராக எங்கேனும் எவராவதிருக்கிறதாக வாவது நான் நம்பவில்லை. மிதவாதிகள், அமிதவாதிகளுள்பட அவருடைய நிரூபங்கள் மூலமாய் இத்தேயத்துப் பொதுச்சிந்தை, பொது நடவடிக்கை யிவற்றின் இசைவையும் போக்கையும் பற்றி வாரவாரம் அவர் அறிந்து வருகிறார். அந்தரங்கக் கடிதங்களின் ரகசியங்களை நான் வெளியிடக்கூடாமை யாயினும், 'புதிய இந்தியா' பத்திரிகைக்கு நான் எடிடராக சம்பந்தப் பட்டது முதலாகவும், விண்ணப்பங்களும் வேண்டுகோள்களு மான தற்கால முறைமை யானது பிச்சைக்கார முறைமையை யென்று நாம் வரை யறுத்து அப்பேப்பரின் பத்திகளில் ராஜரிக விஷயங்களில் நம்ம நோக்கத்தை சீர்திருத்திக் கொள்ளலான புது நடவடிக்கையை நாம் வற்புறுத்திய தின முதலாகவும், நமது உரிமைகளை அங்கீகரிக்கவும், குறைகளை ஒழிக்கவும் விண்ணப்பங்களையும் வேண்டுகோள்களையும் இங்கும் இங்கிலண்டிலு முள்ள கவர்ன்மெண்டுக்கு அனுப்பிக் கெஞ்சிக் கேட்பதற்குப் பதிலாக நமது தொகைகளையும், வகைகளையும் ஒழுங்கு படுத்திக் கொள்ளவும், நமது ராஜரிக வாழ்க்கை நிலைமையை உயர்த்தும்படி தன்னுதவியும், தன்னம்பிக்கையுமான நடவடிக்கைகளைக் கைக்கொள்ளவும் வேண்டுமென்று நாம் தீர்மானித்த நாள் முதலாகவும், இவ் ராஜரிகக் கக்ஷியையும் நமது பேப்பரையும் அவர் அபிமானித்த நாள் முதலாகவும் உங்களுக்கு எல்லாம் நான் சுகமா யெடுத்துக் கூறக்கூடும்.

ராஜரிகத்திலிருந்து சுதேசியம் வேறான தென்பாரு முள்ளார் அது செட்டு(Economic) நடவடிக்கையென்று வைத் கொண்டு, அதன் விருத்திகரமாகப் புதிய தொழில்களை யேற் படுத்தியும் நாட்டு சரக்குகளின் சவதரிப்பை அதிகப்படுத்தி முன்னேற்று வார்கள். இவ்வெறும் செட்டு நடவடிக்கையை ராஜரிகங்களில் கலக்க வேண்டாம். (1) தேசத்துத் தேவைக் குப் போதிய சவதரிப்பு நமக்கில்லாமை யாலும், ஒவ்வொரு வகையிலும் நாம் அந்நிய சரக்குகளை வாங்க அவசியம் நேரிட் டிருக்கிற படியாலும் அவ்வாறு வேண்டாமென்று நம்மைக் கேட்கிருர்கள். ஜனங்கள் தேவைக்குப் போதிய சவதரிப்பு உங்களுக்கு ஏற்படு மட்டில் நீங்கள் அப்படி செய்ய முடி யாது. உங்கள் தேவைச்குக் குறைவாய் சவதரிப்புள்ள போது உங்கள் விலக்கை சாதிக்க மாட்டீர்கள். அது செட்டு மூடான காரியமாகும். (2) சுதேசியத்தை ராஜ ரிகங்களோடு கலவா தேயுங்கள். அதற்கு ராஜரிகப் பொருள் கொண்டிருப்பீர்களானல் சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், இளிச்ச வாயர்களும் அதற்கு உதவி செய்ய மாட்டார்கள். அவர்கள் பின் வாங்கிகளாய், நீங்களதை வெறும் செட்டு நடவடிக்கையாக வைத்துக்கொண்ட போதிலும் மேம்பாடாக அதைவிருத்தி செய்ய மாட்டார்கள். இவர்களே 'விலக்கு' (Boycot) என்னும் பதப் பிரயோகமே கூடா தென்கிருர்கள் ஏனெனில் அது முற்றிலும் ராஜரிக வாசனையுடையதா யிருக் கிறது. லார்ட் மின்டோவின் சுதேசியத்தைக் கைக்கொள்ள அவர்கள் நம்மைக் கோருவார்கள். எதிரிடையாய் மிஸ்டர் தாதாபாய் நவ்ரோஜி தமது அக்கிராசனுதி பத்தியப் பேச்சில் சுதேசிய மானது செட்டு முறைக் குறை பற்றி மாத்திர மன்று; இங்கிலண்டுக்கு ராஜரிகமாய்த் தாழ்மையடைந்திருப் பது பற்றியும் கட்டாய அவசியமென்று தெளிவாகத் தீர்மா னித்தார். ஏனெனில் இந்தியவின் செல்வ வருவாய்ப் போக்கைப் பற்றி அவர் அடுத்த பத்தியில் குறித்திருக்கிருர்.

இன்னும் விவகரிக்கு மிடத்து செட்டு முறைக் (Economic) கோளாறுனது செல்வப் போக்கின் பயனும், அப்போக் கானது ராஜாங்கத் தாழ்மையின் பயனு மானுல், அது சுத்தமான செட்டு முயற்சி யாகாமல் ராஜாங்க சம்பந்த மான செட்டுமுறையாகும். சுதேசிய மானது அதற்கடுத்த வழியாக நிற்க வேண்டும். இதுவே மிஸ்டர் தாதாபாயின் சொந்த தாத்பரியம். அவருடைய ஆரம்ப வாசக (Opening Address) த்தைப் படித்தாலும், அவருடைய தெளிவான மொழியால் அது தெளிவாய் விளங்கி யிருக்கக் காண்பீர்கள். தாதாபாய் சொன்ன சுதேசிய மானது, வரியற்ற வர்த்தக (Free Trade) நியாயங்களுக்கு எதிரிடையாய் ஒரு வகையில் செட்டுமுறைக்கும், ஒரு வகையில் ராஜாங்கத்துக்கும், உரியதா யிருக்கிறது. விலக்கு (Boycot) என்ற வார்த்தை வெளிக்கு வந்த போது, முதலில் நானே அதை ஆக்ஷேபித்தேன். போகப் போக விலக்கென்று நாம் சொன்னது "வாங்கு வோரின் கட்டுப்பாடே" யன்றி வேறில்லை யென்று கண் டறிந்தேன். நான் அமெரிகாவி லிருந்த போது, நியூ யார்ச் கிலே இம்மாதிரிக் கட்டுக் கூட்டம் (League) ஒன்றிருப்பது எனக்குத் தெரிய வந்தது. வேலைக்காரர்களை இம்சித்து விளைவிக்கப்படும் எந்த சரக்கையும் வாங்குவதில்லை யென் பதே அவர்கள் கட்டுப்பாடு. அவர்களுடைய நோக்க மாவது முதலாளிகளின் அக்கிரமத்துக்கு எதிரிடையாய் வேலைக் காரர்களின் நன்மையைக் காப்பதே யாகும். அம்மாதிரியாக நமது பாய்காட்டும் நமது சுதேசத் தொழிலையும், நமது தொழிலாளிகளையும், தொழிற்காரர்களையும் காப்பாற்றிக் கொள்ளும் கருத்துள்ள வாங்குவோரின் கூட்டக் கட்டா கும். அந்நிய சரக்கு வாங்குவதை விலக்கிக் கூடிய மட்டில் நமது சுதேசப் பொருள்களையே உபயோகப் படுத்திக் கொண்டு வருவதினுல் நாம் கொடுக்கும் பணமெல் லாமாவது, ஒரு பகுதியாவது, நம்ம சுதேச ஜனங்கள், தொழிற்காரர்கள், நெசவுக்காரர்கள், செருப்பு செய்

வோர் முதலியவர்கள் கையில் சேருமே. ஆனால் நயத்த அந்நிய சரக்குகளை வாங்க வொட்டாமல் தடுப்ப தெதுவாகும்? அது ஒரு மனத் தத்துவ விஷயமா யிருக்கிறது. தாதாபாய் நௌரோஜி வீட்டில் கூடிய ஒரு கூட்டத்தில் பாய்காட் என்ற சப்தம் வெளிப்படு முன்னே ஐக்கிய மாகாணத்தார் (அயோத்திப் பிரதேசத்தார்) வெகு காலத்துக்கு முற்பட்டே சுதேசிகளா யிருந்தார்க ளென்று எனது நேயர் பண்டித மதன மோகன்மாளவ்யா பிரஸ்தாபித்தார். அது உண்மை யென்றே ஒப்புக்கொள்கிறேன். 30 வருஷத்துக்கு முன்னே அந்நிய சரக்குகளை நாம் ஆண்டதில்லை. நான் சிறுவனு யிருந்தபோது வங்காள கிராமத்திலே ஒரு சீமைத்துணியுங் கிடையாது உங்களைப் போல நாங்களும் சுதேசிகளாகவே யிருந்தோ மென்றாலும், நமது நெசவுக்காரர்கள் நயத்த மான்செஸ்டர் சீமைத் துணிகளின் போட்டியால் ஒதுங்கிக் கொண்டார்கள். இவ்விறக்குமதியை நீங்கள் நிறுத்தாமலும், அந்நிய சரக்கை வாங்க வொட்டாதபடி தடுக்க வல்ல தடைகளை நீங்கள் செய்யா விட்டாலும், மான்செஸ்டரின் கொடும் போட்டி யோடு சரியேற உங்களால் முடியாது. இதுவே வங்காளத்தின் தற்கால அநுபவம். இன்னும் 10 வருஷ மானல் ஐக்கிய மாகாணங்களும் இதே ஸ்திதிக்குவந்துவிடும். பரிகாரத்தைவிட தடுப்பதேமேலானது. நமது கடைத் தெருக்களிலிருந்து விதேசிய சரக்கை அப்புறப் படுத்துவதற்கு ஒழியாத சண்டை போடுவ தெப்படி? விதேசிய சரக்குகள் இப்போது கடைத்தெரு முழுமையும் நிறைந்து கிடக்கின்றன. பிரிட்டிஷ் சரக்குகளுக்கு உங்கள் கடைகள் இடந்தரா திருக்கும்படி உடனே யேற்பாடு செய்யத்தொடங்குவீர்களானல், அதனேடு நீங்கள் போரிடுவதில் பாதி போய் விடும். மத வைராக்கியங் கொண்டாவது, தேசாபி மான வைராக்கியங் கொண்டாவது எவ்வித தடையை யேனும் நீங்கள் உண்டு பண்ணுத பக்ஷத்தில் விதேசிய போகங்களின்

சயப்பில் ஈடுபடும் இன்பத்தை எவனும் நீக்கல் இயலாது. எப்போதும் ஜனங்களைத் தூண்டும் சிரத்தா (Motive Power) சக்தியைக் கண்டறியுங்கள். அது செய்ய வேண்டிய காலத்தைத் தவற விடாததா யிருக்க வேண்டும். அது சுதேசிய முயற்சி விருத்திக்காக எவனும் ஏதாவது ஒழிக்கா திருக்கத் தவறும்படி செய்வதா யிருக்கக்கூடாது. அப்படிப்பட்ட சிரத்தா சக்தியைக் கண்டு பிடிக்க வேண்டும். பிற்காலத்தில் நாம் கோருவது நடக்குமென்று இருந்து விடக்கூடாது. எந்த ஜனங்களும் வருங்காலத்துக்காகத் தற்கால இன்பத்தை வெறுத்து விடாது. மனித இயற்கையுள்ளது போல, தெய்வ பக்தி, தேசபக்தி யென்னும் இரண்டு சக்திகள் மாத்திரமே அதைத் தூண்டிக் கொண்டிருப்பதை நீங்கள் காண்பீர்கள். நமது கருத்தாகிய ஸ்வராஜ்யத் தீர்மானத்தில் பரித்தியாகஞ்செய்யும் ஒரு நோக்கைக் காண்கிறோம். சுதந்திரமானது ஸ்வராஜ்ய விருப்ப மானது ஒருவனை மிக்க வல்லவனாக்கி வருகிறது. நம் மத நோக்க மாவது யாது? மோக்ஷத்தையும், சுதந்திரத்தையும், சுயேச்சையையும் அடைவதேயாகும். அது தற்கால இன்பத்தை வெறுக்க மகா ஜனங்களைத் தூண்டி பந்தத்தைத்துறக்கும் விருப்பமாகிறது. எல்லாரும் அதீத சுதந்திரத்தைக் கோரி உலகப் பொரு ளின்பத்தை வெறுக்கிறார்கள். சுதந்திர வேதத்தைப் பிரசங்கிப்பீர்களானால் அது நேராய்த் தாக்கி, அவர்களுடைய அறிவைப் பரப்பி அவர்களுடைய விருப்பங்களை பலப்படுத்தும். பெரும் முடிவுகளுக்காகப் பெரும் அழிவுகள் செய்யப்படுகின்றன. ஜனங்கத்தின் முன்பாக ஸ்வராஜ்ய சம்பாத்திய மென்னும் ஒருயர்ந்த கருத்தை நாட்டுங்கள். இது சம்பந்தப்பட்ட மட்டில் மிதவாதிகளுக்கும், அமிதவாதி களுக்கும் வித்தியாசமே கிடையாது. மிதவாதிகள் நிர்ப்பந்தங்களுக்குப் பிரியப்பட மாட்டார்கள். அவர்கள் எங்களைப் போலவே பந்தத்தை வெறுப்பார்கள். அவர்கள் சுதந்த

ரத்தையே சாதாரணமாய் விரும்புவார்கள். அமிதவாதிகளைப் போல அவர்களும் அந்நியர் ஆளுகையில் விசார முற்றவர்களாகவே யிருக்கிறார்கள். கருத்திலே பேதமில்லை அப்படிக்கிருந்தால் மட்டுமே அவர்கள் ஸ்வராஜ்யத்தை யடையலாம்.

அம் மிதவாதிகளில் மூன்று பிரிவுகளுள்ளன: (1) கொள்கை மிதவாதி. இவ்வகுப்பார் சுதந்திர ஸ்வராஜ்யங்களை வேண்டுவாராயினும், அதற்காகப் பேசும் சமய மிதுவென்று அவர்கள் நினைக்கவில்லை, ஸ்வராஜ்ய மென்று கூவி வாயடக்கிக் கொள்கிறார்கள். கலகமோ வென்று பயந்து போய்ப் பேசாம லிருந்து விடுகிறார்கள். உங்கள் அபிப்பிராயத்தை உங்கள் எதிரிகளுக்கு ஏன் வெளியிடுகிறீர்கள்? அதை ரகசியமாய் வைத்துயோசித்து ஏற்பாடு செய்து கொண்டு தக்க சமயம் பார்த்திருந்து குபீலென்று வெளிப்பட்டு அதைச் சாதியுங்கள். உங்களுடைய உத்தேசங்களைக் காட்டி உங்கள் எதிரிகளை யேன் உஷார் படுத்துகிறீர்கள்? அதைப்பற்றி யேன் எழுதுகிறீர்கள்? அதற்காகத் தயார் செய்யுங்கள். உங்கள் அண்டை அயல்களை சரியேற்றுங்கள். அமைதியாய் வேலை செய்து வருவீர்களானால் அதை யடைவீர்கள். இவ்வகுப்பார் மேலுக்குக் கொள்கை மிதவாதிகளானாலும் உள்ளுக்கு அமிதவாதிகளே. இது காரணமாகக் காங்கிரஸில் அக்கிராசனாதிபத்யத்துக்கு வேறோர் ஆசாமி வேண்டியதாக நாங்கள் வற்புறுத்திய போதிலும், மனப் பூர்த்தியாய் மிஸ்டர் தாதாபாய் நவ்ரோஜியையே ஒப்புக் கொண்டோம். ஏனெனில் அவரிடத்திலிருந்தும், அவருடைய பிரசங்கங்களிலிருந்தும், வியாசங்களிலிருந்தும், ராஜரிகக் கல்வியையும், காதல்களையும் அடைந்துள்ளவர்களைக் கைவிடமாட்டாரென்றதினாலே. இந்திய ராஜரிக விஷயங்களில் அவர் உழைத்துள்ள மட்டில் ஏற்பட்ட அம்சமாவது, நமது ஓயாவறுமையும், பஞ்சமும், அது அடிக்கடி நேரிடுவதும்,

இங்கிலண்டுக்கு இந்நாட்டின் செல்வமானது ஓயாமல் ஒடிக் கொண்டே யிருக்கின்றது பற்றியே யென்பது. இப்போக்கானது ஒரு வகையில் இங்கிலண்டு இந்தியாவில் நடத்தி வரும் வியாபாரத்துக்கும், ஒரு வகையில் இங்கிலண்டு செலுத்தி வரும் ராஜ்யாதிகாரத்துக்கும், இந்தியாவின் பொருள்கள் விஷயமாய் பிரிட்டிஷ் முதலாளிகள் கொண்டு போகும் லாபத்துக்கும், இந்தியா கவர்ன்மெண்டின் சிவில் மிலிட்டெரி உத்யோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் ஜீவனும்சம் முதலிய வற்றுக்கும், உரித்தாயுள்ளது. இப்போக்கோ வருஷவாரி 35 முதல் 45 கோடிக் கெட்டுகிறது. இந்த அபிப்பிராம் எக்கேள்விக்கும் அசையாவாறு அவரால ஸ்திரப்படுத்தப் பட்டது. இது யாவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டது மன்றி, இந்திய ராஜ தந்திரிகளாலும் ஒப்புக்கொள்ளப் பட்டதே. நமது வறுமையும், பஞ்சத்தின் அடுத்தடுத்த சம்பவமும் இந்தியாவில் இங்கிலாண்டின் வியாபார மேன்மைக்கும், இந்தியாவின் மேல் இங்கிலண்டு செலுத்திவரும் ராஜரிக அதிகாரத்துக்குமே உரியவை யென்ற மட்டில் அவர் நிரூபித்திருக்கிறார். அமிதவாதிகளும் மிதவாதிகளும் ஆகிய இருதாரத்தாரும்இதை ஒப்புக் கொள்ளுகிறார்கள். மற்றோ ரம்சமாவது, நமது பொருள்களின் ஓயாப் போக்கை நிறுத்தாமல் இந்தியாவறுமை விஷயத்தை யெப்படி நாம் முடிவு செய்வோம்? பஞ்சமடக்கை யெவ்வாறு தப்போம்? இந்தியாவில் இங்கிலண்டின் கொடுங்கோன்மையுள்ள வரையில் அதை ஆட்சி நிர்வாகத்துக்கும் செல்வச் சேர்க்கைக்கும் அது பிரயோசனப் படுத்திக் கொண்டு தானிருக்கும். இதைப்பற்றி நம் மனதிலிருப்பதை நாம் வெளியிட வேண்டியதில்லை. ஒரு பேரதிகாரியாயிருந்த வைஸ்ராய் லார்ட் கர்ஸனுலே அது ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. அவர் ஜேரியா நிலக்கரி சுரங்கக்காரர்களை நோக்கிப் பேசியபோது, அவர்கள் வேலை பொருள் சொள்வதாயிருப்பது போல, தம் வேலை ஆட்சி

நிர்வாகமாக, இவ்விரண்டும் ஒரே காரியப் பகுதிகளாயிருக்கின்றன வென்றூர். சுரங்கக்காரர் பொருள் கொள்ளுமாறு தாம் ஆட்சி செய்ய, அவர்கள் தம் ஆட்சியின் பொருட்டுத் தொழில் செய்து பொருள் கொள்கிறூர்க ளென்றூர்; இந்தியா கவர்ன்மெண்டில் ஆளுகையும் பொருள்கொள்ளுதலும் ஒருமையாய்ச் செல்கின்றமையால், இவ்விரண்டும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் நலம்பேணும் ஏகாதிபத்தியத்தை நிலைப் படுத்துவதற்கு அவசியமானவை யென்றூர். இவ்வாறு தாதாபாயால் தீர்மானஞ் செய்யப்பட்டும், லார்ட் கர்ஸனுல்எடுத்துக் காட்டப் பட்டு முள்ள இவ்விஷயம், அதாவது, அன்னிய வியாபாரம் அரசாட்சிக்கும், அன்னிய அரசாட்சி வியாபாரத்துக்கும் ஆதாரவாயிருப்பது போய், அரசாட்சியிலும், வியாபாரத்திலும் கட்டுக் கடங்காத நம் பாதந்தரமானது குறைக்கப் படவேண்டிய தாகிறது. அத்தீர்மானப் படிதான் வியாபாரத்துக்கு சுதேசியமும், அரசாட்சிக்கு ஸ்வராஜ்யமுமாயுள்ளன. ஆகவே புதிய கூச்சலென்னப் படுவது புதிய கூச்சலல்ல வென்று நீங்களறியலாம். அமிதவாதிகள் மேலிருந்தாவது, கீழிருந்தாவது குதித்து வரவில்லை. இவர்கள் சென்ற தலைமுறையின் ராஜரிகக் கூச்சலின் கிரமவிளைவா யிருக்கிறூர்கள். புதுக்கக்ஷியாரின் கூட்டமும்கொள்கையும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டைப் பிரத்தி யேகப்படுத்திக் கொண்டு, ஜனங்கத் தன்னுட்சி சுதந்தரத்துக்கு அழைப்பதாகும். அந்தக் கூவலானது புதியதல்ல. புதிய கக்ஷி யென்பதினுல் பழைய கொள்கைகளில் புதைந்திருந்த தெதுவோ, அதுவே புதிய கொள்கையில் வெளிப்படையா யிருக்கிறதென்று நாம் அர்த்தம் பண்ணிக் கொள்ளா விட்டால் இது புதுக்கக்ஷி யாகாது. மிஸ்டர் தாதாபாய் நவ்ரோஜி இப்புதிய கக்ஷியை ஆதரிப்பா ரென்றும், லார்ட் மிண்டோவின் சுதேசியத்தைத் தள்ளி உண்மையான சுதேசியக் கொடியை யேற்று வாரென்றும், இந்த சுதேசிய முயற்சியை ஆசீர்வதித்துக் காங்கிரஸில் ஸ்வராஜ்யக் கொடியை விரிப்பா

ரென்றும் அறிந்தோம். இரண்டையும் அவர் செய்து விட்டார். ஸ்வராஜ்யமே காங்கிரஸின் கருத்தென பகிரங்கமாய் உறுதிப்படுத்தினதாக உங்களுக்கு நான் சொல்லி யிருக்கிறேன். அவருடைய அக்கிராசனாதிபத்ய மகோபந் நியாசத்திலே அது தானாகவே வந்து விட்டது: ஏனெனில் அது அக்கிராசனாதிபத்யப் பேச்சு. அவர் முழுமையும் தன் பேச்சாகவே பேசி விடக் கூடாமை. அவர் யாவருக்கும் முற்பட்டவராய்ப் பேச நின்றார். ஜனங்களின் பிரதிநிதியாகத் தான் பேச நின்றமற்றவர்களுக்காகத் தன் சொந்த அபிப்பிராயத்தைத் தாழ்த்திக்கொண்டார். ஸ்வராஜ்யமே தங்கள் கருத்தென வெளிப்படையாய் உறுதி கூறி வெளிவந்தவர்க ளிருக்கிறார்களென்றும், உண்மையில் சுதேசிய விருத்தியில் தங்களை ஒப்புக்கொடுத்து விரதங்கொண் டிருக்கிறவர்களிருக்கிறார்க ளென்றும், காங்கிரஸ் கருத்துகளை நிறை வேற்று முயற்சியில் உழைத்துக் கொண்டு காங்கிரஸை ஆதரிப்பதில் தண்ணீரைப் போல் பணத்தை செலவழிக்கும் இந்தியப் பொது வாழ்க்கைத் தலைவர்கள் உளரென்றும், ஸ்வராஜ்யமே தங்கள் கருத்தாகக் கொண்டிருந்தாலும் சுதேசியம், அந்நிய சாக்கு விலக்கு என்பவற்றில் சேர இஷ்ட மில்லா திருப்பவர்களு மிருக்கிறார்களென்றும், அவர் அறிந்திருந்தார். இவைகளையெல்லா மறிந்தே அவர் போனவழி சகஜமாக எச்சரிக்கை யானதா யிருந்தது! முற்றிலும் வெளிப்படையா யிருக்கவில்லை. அவர் மிதவாதிகளையும், அமிதவாதிகளையும் ஒரு வழிப்படுத்த வேண்டியதா யிருந்தது. ஆகவே அவர் தெளிவாக முடிவை வெளியிடவில்லை. அவருடைய நிலைமை விசேஷித்ததா யிருந்தது. அவருடைய ஆரம்பப் பேச்சு நாம் கோரியது போல அநேக விஷயங்களில் வெளிப்படையா யில்லை. இவ் வக்கிராசனாதி பத்ய மகோபந்நியாசங்கள் அவரவர் அபிப்பிராயங்களா யில்லாமல், நாட்டின் மொத்த அபிப்பிராயமா யுள்ளன. அவை வேதம் போலப் பிரமாணத்தையும், பொருளையும் உடையன. வேதங்கள் அம்சத்துக்கு அம்சம் அர்த்தம் பண்ணப் படுவது போல

அவை, அக்கிராசனுதி பத்திய சுதந்தரத்துக்குக் கேடில்லா மலும் ஏற்கெனவே அனுஷ்டிக்கப் பட்டு வரும் முறைக்குப் பங்க மில்லாமலும், பொருள் படுத்தப் படவேண்டும். எனக்கு வேண்டுவ தெல்லாம் அது பல அர்த்தங்களுக்கு இடங் கொடுக்க வேண்டு மென்பதே யாகும். அதில் எனக்குத் திருப்தி தான். சுதேசியத்தைப் பற்றி, "அது இந்தியாவில் பலவந்தமாயேற்பட்ட அவசியமாயுள்ளது" என்றவர் சொல்லு கிருர். ஏனெனில் நாட்டின் செட்டு (Economic) நிலைமை முற்றிலும் கெட்டிருக்கிறது. தற்காலச் செட்டுக் குழப்பத்தில் அது பலவந்த அவசியமா யுள்ளது. "நானே வரியற்ற வியா பாரி (Free Trader) யா யெப்போதுமிருந்து கொண்டிருக் கிறேன். காப்டென் கிளப்பில் நான் மெம்பராய்க் கவுன்ஸி லிலு மிருந்தாலும், இந்தியாவின் தற்காலச் செட்டுக் குழப் பத்தில் சுதேசியம் மேலிட்ட அவசியமா யுள்ள தென்று சொல்லுகிறேன்." என்ற இவ்வாக்கியத் தொகுதியில் விளங்கி யிருக்கிறபடி, அது அந்நிய சரக்கு விலக்கு என்று பொருள் படுகிறது. "இருந்தாலும்" என்றதின் வற்புறுத்தலினுல், பல வந்த அவசியமான தென்று அவர் அங்கீகரித்த சுதேசிய மானது வரியற்ற வியாபார முறைக்கு ஒத்ததல்ல வென்றும், அது லார்ட் மிண்டோவின் திறந்த வீட்டு (Open door) முறையல்ல வென்றும் அர்த்த மாகிறது. வரியற்ற வியா பாரத்துக்கு நேர் விரோத மாகிய இந்த சுதேசியமே தற்கால செட்டுக் குழப்பத்துக் கேற்க பலவந்த அவசிய மான தென்று நிரூபித்திருக்கிருர். அந்நிய சரக்கு விலக்கு என்பதை அவர் பிரயோகப்படுத் தாமையும் அறிவுடைமையே; ஏனெனில் அது பழைய மிதவாதிகளை நடுங்க வைக் கிறது. பாய்காட் என்ற வார்த்தையை அவர் உபயோ கிக்கா விட்டாலும், அவ்வார்த்தையின் தாத்பரியத்தை வெளி யிட்டு விட்டார். "செட்டுக் குழப்பத் (Economic Muddle) தைப் பற்றிய பலவந்த அவசியம்" என்றதே அதமாதம அறி வுக்கும் தெளிவான கருத்தைக் காண்பிக்கிறது. பிரிட்டன்

சரக்கு விலக்கு என்று நாம் கவடற்றுச் சொல்வதை யன்றி வேறெதையும் அது அர்த்தம் பண்ணவில்லை. (2) பயந்த மிதவாதிகள்-இவ்வகுப்பார் முதல் வகுப்பாருக்கு இரட்டைப் பிறவி யாவர். இவர்கள் ஸ்வராஜ்யப் பிரியர்களாயினும், அதைப் பிரசங்கிப்பவருக்கு நேரிடலாகும் சம்பவங்களுக்கு பயந்திருக்கிறார்கள். அதனால் நிர்ப்பந்தம் விளைந்து ஜனங்கள் கெட்டுப் போவார்கள். தக்க சமயம் வரட்டும்; அது வரை யில் உங்களுடைய யோசனையைச் சரிப்படுத்திக் கொண்டிருங் கள். (3) யோக்கிய மிதவாதிகள்—இவர்களுக்கு ஸ்வராஜயம் வேண்டியதில்லை. ஏனெனில் ஸ்வராஜ்யத்தில் தாங்களிப் போது அநுபவித்து வரும் பாத்யதைகளும், சுதந்திரங்களும் தங்களுக்கிராவென்று அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் ஜாதி மதாசாரங்களைச் சீர் திருத்தம் செய்பவர்கள். இவ்வகுப் பாருடன் நான் சம்பந்தப்பட்டவனு யிருக்க நேர்ந்து இன்னும் அதிலேயே யிருப்பது எனக்கு சந்தோஷந்தான். ஜனங் களுக்குப் பேச்சிலும் செய்கையிலும் சுதந்திர மளித்து கவர்ன் மெண்டு அழிவு தேடிக் கொள்ளாது. கவர்ன்மெண்டின் க்ஷேமத்துக்கும், அபிவிருத்திக்கும் பொருத்த மான மட்டில் அந்த சுதந்திரம் அளிக்கப்படும். பிரிட்டிஷ் கவர்ன்மெண் டானது உங்களுக்குப் பேச்சு சுதந்திரம் கொடுத்திருக்கிறது; ஏனெனில் அது கவர்ன்மெண்டின் வளர்ச்சிக்கு இடையூறுகா மல் உபயோகப் படுமென்று அவர்கள் அறிவார்கள். இந்தியர் மனமானது இங்கிலீஷ் காரருக்கு இரவிருளா யிருக்கிறது. அவர்கள் நமது இல்வாழ்க்கையில் ஆழ்ந்து பார்க்கக் கூடுவ தில்லை. நம்மை எரிமலை போல் நினைத்து, அதில் என்ன நடக்கிற தென்று அறிய அவர்கள் மிக்க ஆவலுடையவர்களா யிருக்கிறார்கள். பேச்சு சுதந்திரத்தை நமக்குக் கொடுத்திருப் பது அவர்களுடைய சொந்த சௌகரியத்துக்கே அவசிய மானது. கவர்ன்மெண்டார் அதை மறுத்து விடுவாரானல் வாயிற்படி வெளியிலுட்கார்ந்து கொண்டிருப்பதாகும். நமது

பேப்பர்களை நிறுத்தி விடுவதனால் அவர்கள் நம்முடைய வாயை யடக்கிவிடக் கூடாது; அந்தரங்க முயற்சி நடந்தேறிக் கலகம் விருத்தியாகும். எந்த சுதந்திரத்தாலாவது தங்கள் க்ஷேமம் அபாயமடைவதா யிருந்தால், அவர்கள் தக்ஷணமே தலையிடுவார்கள். நாம் அனுபவிக்கும் மட்டான சுதந்திரமானது கவர்ன்மெண்டுக்கு அநுகூல மாகையால் அது நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் அல்லது வேறெந்த கவர்ன்மெண்டாரும் பேச்சு சுதந்திரத்தை நமக்கு மறுக்க மாட்டார்கள். ஆகையால் ஸ்வராஜ்ய சம்பாத்தியத்துக்காக சுதந்திரத்தை யிழக்கும் பயமேதுங் கிடையாது. நம்மை நாமே ஆளுகை செய்ய விடப் படுவோமானல், இந்தியாவின் நிலைமை யென்னவாகும்? ஹிந்து மகமதிய வேற்றுமை விஷயம் முதலாவது முன் நிற்கின்றது. பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு எடுபட்டுப் போமானல், இவர்கள் ஒருவர்க்கொருவர் என்ன செய்து கொள்வார்கள்? பதில்முன்னேயேசொன்னேன். பிரிட்டிஷ்கவர்ன்மெண்டின் அமைதியும் ஒழுங்கும் மகமதியன் கழுத்தை ஹிந்து பிடித்துக் கொள்ளாமலும், ஹிந்துவின் கழுத்தை மகமதியன் பிடித்துக் கொள்ளாமலும் வைத்திருப்பதில் சந்தேக மில்லை. (ஜன) இனங்களில் சச்சரவு இருப்பதாக வைத்துக் கொண்டு ஸ்வராஜ்யத்தைப் பற்றிப் பேசுவது மடத்தனமே. ஆனல் இந்த சச்சரவை கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் குறைத்து வருகிறார்களா? அவர்கள் ஹிந்து மகமதியர்களை ஒருவர்க்கொருவர் எதிர்க்கும்படி விட்டிருக்க வில்லையா? இந்தக் கஷ்டமான விஷயத்தை சரிப்படுத்த அவர்கள் உதவினார்களா? கீழை வங்காளத்தில் மித்திர பேத தந்திர மானது முழு ஆட்டத்திலும் இருந்து வர வில்லையா? பரஸ்பர விரோதங்களை யுண்டு பண்ணுவதினல் நீடித்த கொடுங் கோன்மைக்கு இடமாக்கி விடுவதா யிருக்கிறது. இக் கொடிய வேற்பாடுகளுக்கு முற்பட்டு ஸ்வராஜ்யத்தையும், சுதேசியத்

தையும் பற்றிப் பேசுவதும் மடத்தனமே. ஆயினும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் உதவியைக் கொண்டு அதை முடிவு செய்யப் பார்ப்பது இன்னும் அதிக மடத்தனமாகும். இவ்விஷயத்துக்கு ஸ்வராஜ்யமும், சுதேசியமும், அந்நிய சரக்கு விலக்குமே பரிகார மானவை; ஏனெனில் ஸ்வராஜ்ய சம்பாத்திய மென்னும் ஒரு பெருங்கருத்து பொதுவாக முன்னிற்கு மல்லவா?

ஜனங்க ஸ்வராஜ்யக் கருத்துக் கிசையாத மகமதியன் எவன்? அதற்கு ஹிந்து இசைவானுனல், அவன் கொஞ்சம் பரித்தியாகஞ் செய்ய இணங்குவான்; மகமதியன் இசைவானுலும், அவனும் அப்படியே இணங்குவான். ஹிந்து மகமதியர்கள் நடந்தேறிய சங்கதிகளை மறந்து போய்ப் பொது நோக்கங் கொண்டு, தங்கள் வேற்றுமைகளை ஒழித்து விடவேண்டு மென்பதை விளம்பரப்படுத்துங்கள். பரஸ்பர விரோதங்கள் உண்மையில் எங்கே யுள்ளன? நாட்டுப் புறங்களிலுள்ளனவா? ஹிந்து மகமதிய விவசாயிகள் ஒருவர்க்கொருவர் சுய நய விரோதம் பாராட்டுவ தில்லை; அவர்கள் அமைதி யோடும் பிரியமா யிருக்கிறார்கள். வியாபார வாழ்க்கையிலும் ஹிந்து மகமதியர்களுக்குப் போட்டி கிடையாது. ஹிந்து மகமதியர் இருவருக்கும் வியாபார முயற்சிக்கு இந்தியா விஸ்தாரமான இடந் தரக்கூடியது. ஷை சுய நய விரோதம் கவர்ன்மெண்டு உத்யோகத்திலேயே வந்திருக்கிறது. ஹிந்து மகம்மதியர்களுக்கிடையே சுயநய விரோதத்துக்கு மூலமாயுள்ள சர்க்கார் உத்தியோகத்தில் ஜனங்களுக்கு அதிகமாய் அலுவல் வைக்கும்படிக் காங்கிரஸ் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறது. கவர்ன்மெண்டு மேலுத்யோகங்களில் நமது ஜனங்களை அதிகமாய் அமர்த்தும்படிக் கேட்கிறோம். நாம் கேட்பதற்குக் கல்வியே ஆதாரவா யிருக்கிறது. ஆகையால் மகமதியர் பக்குவமாய்க் காங்கிரஸுக்கு விலகி நின்றார்கள். கல்வி விஷயமட்டில் மகமதியன் இளைத்தவன். எங்கும் மகமதியர்கள் அநுபவத்தில் ஹிந்துக்களோடு வெளி

படைப் போட்டியாய் நிற்க மாட்டார்கள். ஆகவே கவர்ன் மெண்டு உத்தியோகங்களிலும், கவர்ன்மெண்டு கௌரவ ஸ்தானங்களிலும் தான் முட்டுப்படுகிறது. உங்கள் நடவடிக்கையிலே அதை வைத்துக் கொண்டிருக்கு மட்டில் சிறு தொகுதியார் நன்மையானது பெருந் தொகுதியா ரதோடு கைகூடி வராது. அதற்குப் பரிகாரமும் ஒன்றுண்டு. கவர்ன்மெண்டு உத்யோகத்தையும், கௌரவ ஸ்தானங்களையும், முனிஸிபல் லோக்கல் போர்டுகளையும் விலக்கி விடுங்கள். புரொவிண்ஷல் சூப்ரிம் சட்ட சபைகளுக்கு ஆட்களை அனுப்ப வேண்டாம். எல்லா உத்யோகஸ்தர்களும் ராஜிநாமா கொடுத்து விடுவது அசாத்தியமானால் அது போகட்டும். இந்த அம்சத்தை வற்புறுத்தக் கூடுமானால், அது முட்டுப்பாட்டைக் குறைத்து வரும். படித்த மகமதியன் யாராவது உத்யோகத்துக்கு முற்பட்டுவந்த போது போட்டியாக ஹிந்து சகோதரன் பிரவேசிக்கக்கூடாதென்று கொள்வோம். இவ்வாறு ஹிந்துக்கள் உத்யோகங்களை சட்டை பண்ணு திருந்து விட்டால் முட்டுப்பாடு வெகுவாய்க் குறைந்து விடும். மகமதியருடைய பூர்வ சரித்திரத்தைச்சரியாய் உணர்ந்துள்ள ஆதரவு கொண்டு அவர்களை நேசியுங்கள் ஆகவே அவர்கள் சரித்திரத்தையும் சாஸ்திரத்தையும் நீங்கள் படிக்க வேண்டும். ஹிந்துக்களின் பூர்வ விவேகத்தையும் ஆசாரத்தையும் மகமதியர்கள் படித்துஹிந்துக்களை நேசிக்கட்டும். ஒருவர் மற்றொருவரின் சாஸ்திரத்தையும் பூர்வ சரித்திரத்தையும் படிப்பதினால், இவர்கள் ஒருவர்க்கொருவர் பெருமை பாராட்டிக் கொள்ளும் ஆதரவைக் கொண்டு நேசித்துக் கொள்வார்கள். இவ்வாறு இவ்விரண் டினத்தவருக்குமுள்ள வித்தியாச மொழிந்து மிக்க உறுதியாய் இணைக்கப் பெறுவார்கள். சர்க்கார் ஸ்தானங்களில் பெறும் கண்ணியங்களையும் பெருமைகளையும் எறிந்து விட்டோமானால், இவைகளுக் குள்ள மதிப்பு குறைந்து விடும். டம்பத்துக்கென்றாவது இனப் பெருமைக் கென்றாவதின்றி தீரவில்லையே யென்று ஜனங்கள் சேவிக்கட்டும். சர்க்கார் சேவகமானது அதமதர்ம

மாக அவமதிக்கப் படுவது மன்றி, அந்நிய கவர்ன்மெண்டில் சேவிக்கிறவர்கள் பேரில் இனத்தார் அசட்டையா யிருக்கட்டும். இவ்வாறு கால கதியில் இந்த சங்கடத்தைப் பரிகரிப்போம்.

மற்றொரு ஆட்சேப மாவது: கவர்ன்மெண்டின் பயங்கரமான ராணுவ வல்லமைக்கும், அதன் மற்ற உபபலங்களுக்கும் முன்பாக ஸ்வராஜ்யத்தைப் பற்றி என்ன பேசுகிறது? நிராயுதபாணிகளாகிய ஜனங்கள் ஸ்வராஜ்ய மென்று பேசுவது மூடத்தன மல்லாது வேறில்லை யென்னக்கூடும். சரி, பிரிட்டன் வல்லமையை நாங்கள் மறந்து விடவில்லை; அதன் ராணுவ பலத்தை நாங்கள் அறியாதிருக்க வில்லை. ஆனால் அதன் மூல பலம் இவைகளில் இல்லை. கவர்ன்மெண்டின் வலுவானது குடி ஜனங்களின் அடக்கத்தைப் பொறுத்திருக்கின்றது. குடி ஜனங்களின் அடக்கத்தைக் கொண்டு கவர்ன்மெண்டார் ஆளுகை செய்து வரக் கூடியவர்களா யிருக்கிறார்கள். முழு ஜனமும் இணங்கி யிருப்பதின் மேல் கவர்ன்மெண்டார் வலுவு நிற்கிறது. இந்தியாவைப் போன்ற பெரும் விஸ்தீரணமான தேசத்தைக் கேவலம் படை வலுவாலேயே ஆண்டுவர எந்தப்பேர் அரசாலும் கூடாது. நாமெவ்வளவு பேர் இருக்கிறோம்?—30 கோடி யாச்சே. அவர்களோ?—இரு நூறாயிரம் பேரே. படை வலு வாலல்ல; மாயப்புரட் (Hypnotism) டாலே இங்கிலண்டு ஆளுகிறது. எனது மிதவாத நேயர்கள் ஸ்வராஜ்யத்தை நினைக்கிற போது ரத்த வாய்க்காலில் ஓடுகிறார்கள். எங்கள் எண்ணமோ சமாதானப் போக்கிலேயே போகிறது. சமாதான மார்க்கத்திலேயே ஸ்வராஜ்யத்தை அடைய நாங்கள் முயல்வோம்; அல்லது முயல்வதிலேயே சாவோம். இங்கிலீஷ் கவர்ன்மெண்ட் சாஸ்திரார்த்தப்படி ஜனக்கட்டா லாகிய கவர்ன்மெண்டாகும். அந்நாட்டாட்சியில் ஜனங்களுக்கு அதிகாரம் செல்லுகிறது. ஆகவே அங்கே ஜனக்கட்டா லாகிய முறைப்பாடு செழிக்கிறது. வேகு ஜன

அபிப்பிராயம் கட்டாயப் படுத்துகிற படிப் பார்லிமெண்டு மகா சபையார் எந்தச் சட்ட மசோதாவையும் அங்கீகரித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறார்கள். இவ்வகையாக இந் நாட்டில் ஜனக் கட்டாலாகும் எந்த முறைப்பாடும் இருத்தல் கூடாது. இவ்வகையில் எதிர்க்காமல் எதிர்த்தல் (Passive-resistance) முற்றிலும் ஞாயமான தாகும். ஞாய வழி யாலும், நம்ம சொந்த சக்திகளை ஒழுங்கு படுத்தி வைத்துக் கொள்வதினாலும், கவர்ன்மெண்டுக்குக் கடமைப் படாத எதையும் செய்யாமல் இருந்து விடுவதினாலும், ஸ்வராஜ் யத்தை யடைய நாங்கள் விரும்புகிறோம். நான் வரியைச் செலுத்தி விடுவேனானாலும் கவர்ன்மெண்டுக்கு கௌரவ வகையில் உதவி செய்ய மாட்டேன். அதனால் தவறாக வாவது, ஞாய விரோதமா வாவது நாங்களொன்றும் செய்ய வில்லை. கவர்ன்மெண்டாரிடம், உத்தியோகம் செய்ய நாம் கடமைப் பட்டவரல்ல. நமக்குள்ள ஆள் பொருள் சுதந் திரங்கள் கவர்ன்மெண்டால் மறுக்கப்படக்கூடாதவை, ஏனெ னில் அவை எந்தகவர்ன்மெண்டாலும் உண்டாக்கப் பட்டவை யல்ல. இந்தசுதந்திரங்களே ஒவ்வொரு கவர்ன்மெண்டையும் உண்டாக்குகின்றன. நமது முதன்மையான சுதந்திரங்கள் காப்பாற்றப் படுமட்டில் நாங்கள் கவர்ன்மெண்டாருக்குக் கீழ்ப் படிந்து நடப்போ மாயினும், அதற்கு கௌரவ வகையால் உதவி யேதும் செய்ய மாட்டோம். அப்போது கவர்ன் மெண்டு எங்கே நிற்கும்? எல்லா அமஞ்சி வேலைகளையும், முனிஸிபல் கவுன்சில்களையும், டிஸ்ட்ரிக்டு போர்டுகளையும், ஆனரெரி மாஜிஸ்ட்ரேட் உத்யோகங்கள் முதலியவைகளை யும் விலக்கி விடுவதனாலே நமக்கு ஸ்வராஜ்யத்தைக் கொடுக்க கவர்ன்மெண்டார் வணங்கி வரும்படி நாம் செய்யக்கூடும். நமக்கு எந்தப் படையும் வேண்டாம். தங்கள் நன்மைக்கு விரோதமான சில காரியங்களையும் செய்ய ஜனங்கள் துணி வதே நமக்குப் போதுமானது. இவ்விருப்பத்தை நாம் உண்டாக்கி நமது ஆட்களையும் பொருள்களையும் ஒழுங்கு

படுத்திக் கொள்ளக் கூடுமானால், சரித்திரத்துக்கு மெட்டாத ஒரு புரட்சியைக் உதிரக்களரின்றி சமாதானமாகவே கொண்டுவரக் கூடியவர்களாவோம். நம்ம ஜன விசேஷத்திலும், நம்ம தேச விஸ்தீரணத்திலும், நமது ராஜரிக சுதந்திரத்துக் காகத் தன் மறுப்பு ஊக்கத்தோடு கவர்ன்மெண்டில் சேவிக்கக் கூடா தென்ற உறுதிப்பாட்டிலும் அதிக வலுவுள்ளவர்களா யிருக்கிறோம். படை வலுவானது ஜனங்கள் தீர்மானத்தை மேற்கொள்ளக் கூடியதல்ல. உங்கள் பலஹீனம் உங்கள் அறியாமையினால் வந்தது. நீங்கள் அநாகரீகர்களாகவும் இங்கிலீஷ்காரர் நாகரீகர்களாகவும், நீங்கள் கோழைகளாகவும் இங்கிலீஷ்காரர் தீரர்களாவும, இவ்வாறு மதித்துக்கொள்ள உங்களுக்குக் கற்பித்திருக்கிறார்கள். உங்களுக்குப்புருஷத்துவமும் யோக்கியதையும் கிடையா தென்று உங்கள்மனதில் பதியவைத் திருக்கிறார்கள். தன்னுதவி யின்மையும் அபௌருஷேயமும் மேலேசொன்ன பிரிட்டிஷ் ஜாலத்துக் குரியனவாகும். நாம் மாற்றான மருந்தை (Counterpass) பிரயோகிப்போம். பிறகு நமது யோக்கியதை, பலம், அதிஷ்டம் இவற்றின் உணர்ச்சி யுண்டாகும். வெகு கம்பீரமும் மிக்க உசிதமுமான பரம்பரைக் கியாதியோடுங் கூடிய பெருஞ் செல்வ வந்தர்களா நாமிருந்தும், பிரிட்டிஷ் மாயா ஜாலத்தினால் இது வரையில் அங்கு மூஞ்சிகளாயிருந்துவிட்டதினின்றும் கிளம்பி தீரர்களாய் உங்கள் வலுவுக்கு வகை தேடுங்கள். 20 பேருள்ள விடத்தில் வேறொரு சோம்பேறி ஓடிப்போய் அவர்களெல்லாரையும் முன் பின் பாராமல் அறையத் தொடங்கினால், அவர்களுக்கு ஒன்றும் செய்யத் தோன்றாது. அவர்களுள் ஒருவன் தன் வலுவைக் காட்டக் கிளம்பி விடுவானானால் மட்டுமே மற்ற 19 பேரும் தீவிரமாய்த் தொடை தட்டிக் கொள்வார்கள். ஆகவே ஆவேசத்தை உண்டு பண்ணும் சுதேசிய ஸ்வராஜ்யங்களின் உபதேசம் வெகு ஜனங்களுக்கு எட்டும். எங்களுக்கு ராஜரிக சுதந்திரம்

வேண்டும். ஏனெனில் அதுவே மத சுதந்திரத்துக்குக் கொண்டு போவது. மனுஷ்யன் மாம்சக் கட்டல்ல. பிரம்ம ஞான தீபமானது மாயையினால் மறைக்கப்பட்டு உள்ளே ஒளிர்கிறது மாயையென்னும் திரையை நீக்கும். அறியாமையைப் போக்கும். உன்னை நீ யறியும் அறிவைப் பெறுவாய் அது போலவே இந்த ராஜரிக நிபந்தம் உண்மையான தல்ல; அது மாயா ஜாலமே. அதைக் கலைத்து விடு. உங்களிடத்தில் கடவுள் காட்சியைக் காண வேண்டினேன். ஆனால் நீங்கள் ஏழைகளாயும் அழுகுமூஞ்சிகளாயும் இருக்க, உங்களிடத்தில் கடவுள் விளங்க நான் காணவில்லை. பாசத்தைக் கிழித்தெறியுங்கள். உங்களிடத்தில் கடவுள் சவப் பிரகாசத்தோடும் விளங்குவார். இவ்வகையாக உழைப்பெடுத்துக் கொண்டு ஸ்வராஜ்யத்தை அடையும் நற்காலம் உங்களுக்கெதிரே நிற்கிறது.

ஸ்ரீ அம்பலால் சக்கர்லால் தேஸாய்

பொருளாதார சம்பந்தமான

சுதேசியம்.

என்பதைப்பற்றி (மாடர்ன் ரிவியுவில்) எழுதிய

ஓர் உபந்நியாஸம்.

இந்தியா ராஜப் பிரதிநிதியா யிருந்த லார்ட் கர்ஸன் சென்ற சில வருஷங்களிற் செய்த கொடுங்கோ லாசினால் இந்தியாவுக்கு நினைத்திராமல் விளைந்த அதி முக்கியமான பலன்களுள், இப்பொழுது நாடெங்கும் வியாபித்துப் பொது ஜனங்களுடைய மனத்தைக் கவர்ந்துவரும் சுதேசியமு மொன்றாகும். இந்தச் சுதேசிய முயற்சிக்கு முதற்காரணமாயிருந்த செயல் இன்ன தென்று இங்கே குறிப்பிடல் மிகையாகும் இவ்வாறு சுதேசிய சம்பந்தமாய்த் தோன்றி யிருக்கும் இப் புதிய ஊக்கமானது வங்காளத்திலும் மகாராஷ்டிர தேசத்திலும் மிகவும் மும்மரமாயும் தீவிரமாயும் வளர்ந்து வருவதாய்த் தோன்றுகின்றது. வட இந்தியா குஜராத்தி முதலிய பிரதேசங்களில் இவ்வூக்கமானது சிறிது மந்தமாகவே நடை பெறுகின்றது. ஆனால் கர்னடகம் ஸிந்து முதலிய பாகங்களில் இம்முயற்சி யொன்று இருக்கிறதா இல்லையா வென்று நிதானிப்பதற் கேற்ற குறிகளையே காணோம் எப்படி யிருந்தாலும், இம் மகா முயற்சியானது இந்தியாவின் கிழக்கு மேற்காக கல்கத்தாவிலிருந்து பெஷாவார் வரையிலும் தெற்கு வடக்காக லக்நௌவி லிருந்து திருவாங்கூர் வரையும் எட்டிப் பறந்துவிட்ட தென்பதை எந்தவகுப்பைச் சேர்ந்த

எந்த இந்தியனும் ஆக்ஷேபிக்க முடியாது. சிற்சில காலங்களில் சிற்சில காரணங்களால் உண்டாய் பின்னர் மழுக்கமடைந்து விடும் மியல்புள்ள மற்ற முயற்சிகளைப் போல், இந்த சுதேசிய முயற்சியானது கேவலம் தேசாபிமான ஆவேசத்தா லுண்டாகும் ஒரு கிளர்ச்சி யென்றாவது சமயத்துக் கேற்ற ஆடம்பர மென்றாவது நினைக்கப்படாது. இப்பொழுது இந்தியாவில் நமக்கெதிரே நடந்தனவும் நடக்கின்றனவுமாகிய எல்லா விஷயங்களையும் உற்று நோக்கி ஆராய்ந்து பார்த்தால் இச்சுதேசிய முயற்சியானது ஒவ்வொருவருடைய மனத்திலும் ஆழ்ந்த வேரூன்றி முளைத்திருக்கும் தேசாபிமான வைராக்கியமே யாகும். இவ்வைராக்கியம் நாளாக நாளாக அளவிலும் வலியிலும் பெருகிக் கொண்டே வருவதுமன்றி நம்மிந்தியா தேசத்தின் நன்மைகளையும் ஒருங்கே வளர்த்துக் காக்கத் தக்க பலனுடையதாகவும் இருக்கின்றது இத் தேசாபிமான மென்னும் சக்தியானது நம் இந்து தேசத்தில் தோன்றி நீடித்த காலம் நிலைத்திருக்கப் போகிறதுமன்றி இந்தியர்களின் தேசக் கட்டையும் பொருளாதாரத்தையும் அசைய வொட்டாது காக்கும் அச்சாணியாயு மிருக்கின்றது. ஆதலால் இந்த சக்தியின் இயல்பையும் அது செல்லும் விதத்தையும் மார்க்கத்தையும் நாம் ஆய்ந்துணர்ந்து அதை நாம் எவ்வாறு எவ்வழியில் செலுத்தினல் நமது குறைகளும் மனோபீஷ்டங்களும் எளிதில் நிறைவேறுமோ அவ்வாறே அவ்வழியில் அதை நடத்தி முடிவில் வெற்றி பெற வேண்டியது இந்தியர்களாகிய நம்மனைவருடைய கடமையாயு மிருக்கின்றது.

"சுதேசியம்" என்பதன் பொருளென்ன? அதன் விரிந்த கருத்தில் ஆலோசிக்கும் பொழுது தேசக் கட்டு அல்லது தேசாபிமானக் கட்டு என்பது அதற்குப் பொருளாகின்றது. ஆனல் இந்தப் பொருளில் தானே சுதேசிய மென்பதை எல்லோரும் உபயோகிக்கிறார்கள் என்பது சந்தேகமாகவே யிருக்கின்றது

ஆனால் சுதேசிய மென்பது தேசாபிமான வைராக்கிய மென்னும் கற்பாறையின் மேல் தான் அஸ்தி வார மிட்டுக் கட்டப் பட்டிருக்கின்றது. எனினும் அதற்குப் பொது ஜனங்கள் கொடுத்து உபயோகிக்கும் பொருள்கள் ஒன்றற் கொன்று பெரிதும் வேற்றுமைப் படலாம். உத்தியோகஸ்தர்களும் உத்தியோக வகுப்பைச் சார்ந்தவர்களும் இதன் பொருளை ஒருவாறு கருதுகின்றார்கள். புதிதாய், அதாவது, சுதேசத்தொழிற் சாலைகளும் கைத்தொழில் பாட சாலைகளும் ஸ்தாபித்து அவற்றால் உண்டாகும் சுதேச வஸ்துக்களை வாங்குவதே சுதேசிய மென்பது இவர்களுடைய கருத்தாகின்றது. இதுவே அவர்களுடைய எல்லாக் கருத்தாகவுமிருக்கின்றது.—ஆனால் சாதாரண பொதுஜனங்களோ அந்நிய தேசவஸ்துக்களை வாங்காது விலக்குவது சுதேசியத்தின் முக்கியமான கொள்கை யென்று அத்துடன் திருப்தி யடைகின்றார்கள். ஆனால் கல்வியும் ஆலோசனா சக்தியும் பெற்ற வேறுபலர் அந்நிய தேச வஸ்துக்களை விலக்குதல் ஒருவாறு சுதேசியத்துக்கு அநு கூல மாயிருந்தாலும், நமது சுதேசமாகிய இந்தியாவின் கைத்தொழிலை விர்த்தி செய்து சுதேசி வஸ்துக்கள் பெருகுவதற்கு சமயத்துக்கும் சக்திக்கு மேற்ற நம்மாலியன்ற பற்பல முயற்சிகளையும் செய்வதே சுதேசியத்தின் கொள்கை யாகுமென்று எண்ணுகின்றார்கள். ராஜரீக சம்பந்தமாய் ஜனங்களுக்கும் கவர்ன் மெண்டாருக்கும் இடையில் உண்டாகும் மனஸ்தாபங்களுக்கு ஜனங்கள் சுதேசியத்தை ஒரு ஆயுத மாகக் கொள்கின்றார்க ளென்பது இந்தியாவில் ஒரு பாகத்துக்கு அதாவது பங்காளத்துக்கே பொருத்தமா யிருக்கின்றதே யன்றி வேறு மாகாணங்களுக்குப் பொருத்த மாகாது. ஆனால் பொதுவாக சுதேசிய மானது இந்தியாவின் பொருளாதாரத்துக்கும் செல்வ நிலைக்கும் மிகவும் ஆவசியமானதென்றே ஒப்புக் கொள்ளுகிறார்கள். இன்னும் இச்சுதேசியத்தின் பெருமையையும் அதனால் விளையக் கூடிய நன்மைகளிவை யென்றும் உணர்ந்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட

அபிப்பிராய பேதங்கள் இருப்பினும் பொது ஜனங்கள் இவ் விஷய மாய்ப் போதுமான ஆராய்ச்சி செய்ய வில்லை யென் பதே அப்படிப்பட்ட அபிப்பிராய பேதங்களுக்குக் காரண மாகும். சுதேசிய மானது இந்தியாவின் பொருளாதாரத்திற் கும் செல்வ நிலைக்கும் இன்றி யமையா தென்னும் விஷய த்தை பற்றி முதல் பேசுவோம். பின்பு மற்ற விஷயங்களைப் பற்றி ஆராய்வோம்.

செல்வ நிலைக்கு ஆதாரமான சுதேசியத்தில் இரண்டு பாகங்களிருக்கின்றன. அதாவது, ஒன்று சுதேசிய உடன் முயற்சி மற்றொன்று எதிர் முயற்சி. சுதேசக்கைத்தொழில் களை விர்த்தி செய்வதும் அவ்வாறு விர்த்தி செய்வதால் உண்டாகும் சுதேச வஸ்துக்களை எல்லாரும் வாங்கும்படி தூண்டி அவற்றை ஆதரிப்பதும் உடன் முயற்சியாகும். சுதே சியத்துக்கு நேரே உதவி செய்வதே இதன் நோக்கம். ஆனால் சுதேசியத்தின் விர்த்திக்கு இடையூறாக விருக்கும் அந்நிய தேச வஸ்துக்களை விலக்குதலும் அவற்றை இந்தியாவில் விலையாக வொட்டாது தடுப்பதும் எதிர் முயற்சி யாகும். அந்நிய தேச வஸ்துக்கள் நாட்டுக்குள் வராமலிருப்பதால் சுதேசிய வஸ்துக் கள் அதிகமாய் விலையாகு மாதலாலும், சுதேசிய வஸ்துக்கள் அதிகமாய் விலையாகவே சுதேசியக் கைத்தொழில் தானே விர்த்தியடையு மாதலாலும் இவ்வாறு செய்யப்படும் எதிர் முயற்சியும் சுதேசியத்துக்கு அநுகூலத்தைச் செய்கின்றது. அந்நிய வஸ்துக்கள் விலகின வுடனே அவ்வாறு காலியாக்கப் படும் இடங்களில் சுதேசிய வஸ்துக்கள் வந்து பூர்த்தி செய் கின்றன. அந்நிய வஸ்துக்களாகிய பழய கட்டிடங்கள் இடி பட்ட உடனே அந்தக் காலியிடத்தில் சுதேசிய வஸ் துக்களாகிய புதிய கட்டிடங்கள் கட்டப் படுகின்றன. அந்நிய வஸ்துக்கள் விலக்கப் படவில்லை யானால் சுதேசிய வஸ்துக் கள் விலையாவதற்குப் போதிய இடமிராது. இனி அந்நிய வஸ்துக்களை விலக்கிக் கொண்டும் சுதேசிய வஸ்துக்களைச்

செய்யாமலும் இருப்போமாஞல் வஸ்துக்களே கிடையாமல் கஷ்டமடைவோம். ஆகவே சுதேசிய முயற்சி வளர்ந்து கொண்டு போகும் பொழுதே அந்நிய வஸ்துக்கள் விலக்கப் பட்டுக் கொண்டுவர வேண்டும். அந்நிய வஸ்துக்களை எப் பொழுது விலக்குகின்ருேமோ அப்பொழுதே சுதேசிய வஸ் துக்கள் உண்டாக்கப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும். இவ் வாருக சுதேசிய முயற்சியும் அந்நிய வஸ்து விலக்கமும் ஒன்றை யொன்று தழுவியே விலகாமல் நடை பெற வேண்டி யிருக்கின்றது. ஆகவே சுதேசியமும் அந்நிய வஸ்து விலக்க மும் ஒன்றற்கொன்று இன்றியமையா உதவியா யிருக்கின் றது. சுதேசிய மின்றி அந்நிய விலக்கம் நடை பெருது. அந்நிய விலக்க மின்றி சுதேசியம் நடை பெருது. அந்நிய விலக்க மென்னும் விஷயத்தில் பொது ஜனங்கள் அனைவரும் உழைக்க வேண்டியிருக்கின்றது. சுதேசிய விஷயத்தில் கற் றறிந்தவர்களும் பொருளுள்ள வியாபாரிகளுந் தொழிலாளி களும் உழைக்க வேண்டி யிருக்கின்றது. பொது ஜனங்கள் மனம் வைத்து சுதேசிய வஸ்துக்களை ஆதரித்து விடுவார்க ளாயின் அந்நிய வஸ்து விலக்க மென்பது வெற்றி யடையும். பொது ஜனங்கள் உதவியன்றி இது நடைபெருது. ஆனல் சுதேசியத்தின் பொருட்டே உழைக்க வேண்டியது விவரமறிந்த சிலரே யாகும். அந்நிய வஸ்து விலக்க மென் பது, சிலர் சொல்லுகிறபடி, அந்நிய வஸ்துக்களின் மீது கொண்ட விரோத பாவமன்று, அந்நிய வஸ்துக்களை விலக்கி ஞலன்றி சொந்தக் காரியம் நடை பெருது. ஆதலால் நம் சுதேசியமும் சுதேச கைத்தொழிலும் அபிவிர்த்தி யடைய வேண்டு மென்ற நோக்கத்துடன் அந்நிய வஸ்துக்களை விலக் குதல் எந்த விதத்திலும் குற்றமாக மாட்டாது. சுதேசியம் எவ்வளவு மட்டிலும் அவசிய மென்று நமக்குத் தோன்று கின்றதோ அவ்வளவு மட்டிலும் அந்நிய வஸ்து விலக்கமும் வேண்டியதே யன்றி வேறல்ல. இரண்டும் அவசிய மான

காரியங்கள் தான்· இந்த இரண்டு விஷயங்களையும் நாம் அநுசரிக்கும் பொழுது தற்செயலாய் உண்டாகக் கூடிய சில சம்பவங்கள் பிறர்க்குத் தீமை விளைப்பனவா யிருந்தாலும் அவைகளுக்கு நாம் உத்தரவாதிகளாக முடியாது.

இவ்விதமாக சுதேசியமும் அந்நிய வஸ்து விலக்கமும் ஒன்றோ டொன்று இணை பிரியாது வளர வேண்டு மென்பது கொள்கையா யிருந்தாலும் சில இந்திய தேசாபிமானிகள் அந்நிய வஸ்து விலக்க மென்ற கொள்கையை வைத்துக் கொள்ளாமலே சுதேசியத்தை விர்த்தி செய்ய முடியு மென்றும் ஆதலால் அந்நிய விலக்க மென்னும் அம்சத்தைப் பற்றிப் பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லுதல் கூடா தெனவும் ஆக்ஷேபிக் கின்றார்கள். ஆனால் இவர்கள் இவ்வாறு சொல்வது அந்தரங்கத்தில் கெட்ட எண்ணத் தோடல்ல. இதில் இவர்களுக்குச் சுதேசியத்தில் பற்றில்லை யென்றாவது சுதேசியம் வளர்வதில் அபிமான மில்லை யென்றாவது நிச்சயித்து விடக் கூடாது. ஏனென்றால் இப்படிச் சொல்லுகின்றவர்களே சுதேசியத்துக் காக உழைப்பதையும் சுதேசியத்தின் பொருட்டுத் தக்க பொருளுதவி செய்வதையும் நாம் எத்தனையோ முறை பார்த்திருக்கிறோம். ஆகையினால் இவர்கள் அபிப்பிராயங்கள் அவர்கள் மனச் சாக்ஷிக்குச் சரியானவைகளே யன்றி கெட்ட நோக்கத்துடன் செய்யப் பட்டவைகளென்று சொல்ல முடியாது. ஆகவே இப்படிச் சொல்லுகிறவர்களுடைய அபிப்பிராயங்களென்ன, அந்நிய வஸ்து விலக்கத்தை யேன் கூடா தென்கிறார்களென்பதைப் பற்றி நாம் கட்டாயம் தெரிந்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றோம். அவ்வாறு செய்யாமல் அவர்களுடைய அபிப்பிராயங்களை அலக்ஷியம் செய்வது நியாயஹீனமும் அதருமமுமாகும். அவர்களுடைய அபிப்பிராயங்களின் படி அந்நிய வஸ்து விலக்கத்துக்கு மூன்று ஆக்ஷேபனைகள் உள்ளன. முதலாவது ஆக்ஷேபனை யாவது:—அந்நிய வஸ்துக்களை

விலக்க வேண்டு மென்பது ஒரு தீச்செயலா யிருக்கின்றது: சுதேச வஸ்து நல்ல தாயும் மலிவாயு மிருந்தால் தானே விலையாகக் கூடியதாயிருக்கும், அந்நிய தேச வஸ்து மலிவா யிருந்தால் அது விலையாகும். அப்படி யிருக்க எது நன்றாயிருக்கின்றதோ அதை ஜனங்கள் வாங்குவார்கள். அந்நிய வஸ்து நயமாயிருந்தாலும் அதை வாங்கப் படாதென்றும் சுதேசிய வஸ்து கேவலமா யிருந்தாலும் அதையே வாங்க வேண்டு மென்றும் சொல்வது நியாயமாக மாட்டாது. அப்படிச் செய்வது ஏழை ஜனங்களுக்கு நஷ்டமா யிருக்கும். இரண்டாவது ஆக்ஷேபனையாவது:—அந்நிய வஸ்துக்களை விலக்க வேண்டு மென்று நாம் உபதேசிக்கும் பொழுது பொது ஜனங்கள் அந்நிய வஸ்துக்களோடு அந்நிய மான ஜனங்களையும் விலக்க வேண்டு மென்ற மட்டில் போய் விடுகின்றார்கள். இப்படிப்பட்ட எண்ணங்கள் உண்டாவது அந்நியர்க்கும் நமக்கு மிடையில் அநாவசியமான மன வருத்தங்களையும் விரோதங்களையும் உண்டாக்கி விடும். மூன்றாவதாக அந்நிய வஸ்துக்களை யெல்லாம் ஒன்றாய் விலக்கி விடுவோ மானால் அந்நிய தேசத்தாரின் கைத்தொழில்களின் திறமையையும் அவற்றிலுள்ள சூக்ஷங்களையும் அறிவதற்கு நமக்குச் சந்தர்ப்ப மில்லாது போய் விடுகின்றது.

மேலே கூறப்பட்ட ஆக்ஷேபனைகளைச் சிறிது யோசிப்போமானால் அவைகளுள் ஒன்றையாவது எந்த தேசாபிமானியாவது ஒத்துக்கொள்ளக் கூடிய தென்று தோன்ற வில்லை. தேசாபிமான மென்பது சிறிதேனு முள்ள யாருக்காவது அந்நிய வஸ்து விலக்கம் குற்ற மென்றாவது கூடாதென்றாவது தோன்றாது. எல்லாத் தேசங்களிலும் வரியற்ற வர்த்தகம் வேண்டு மென்று கொள்வார்க்கு மட்டும் அந்நிய விலக்கம் கூடா தென்னும் கொள்கையும் பிடித்திருக்கின்றது. [ஒரு தேசத்திலிருந்து இன்னொரு தேசத்துக்குப் போய் விலையாகும் சாமான்களுக்குத் தீர்வை போடப் படாமல்

தானே விலைப்பட வேண்டு மென்றும் வர்த்தகம் விர்த்தி யாவதற்கு வரிகள் தடையாயிருக்கப்படா தென்றும் கொள்ளும் கொள்கை வரியற்ற வர்த்தகக் கொள்கை (Free Trade Policy) என்று சொல்லப்படும். அவ்வாறின்றி அந்நிய தேசங்களுலிருந்து வரும் சாமான்களுக்கு வரி ஏற்படுத்தி அப்படிச் செய்வதனுல் சுதேச சாமான்களுக்கு அநுகூலம் செய்ய வேண்டுமென்ற கொள்கை காப்பு வர்த்தகம் (Protective Trade) என்னப்படும்] ஆனுல் ஒரு தேசத்தில் கைத்தொழில் தொடங்கும் பொழுது வரியற்ற வர்த்தகக் கொள்கை கூடாது. காப்பு வர்த்தகம் தான் நன்மையா யிருக்கும் ஏனென்றால் அன்னிய தேசத்திலுள்ளவர்கள் கைத்தொழிலில் தேர்ந்தவர்களா யிருப்பதால் அவர்கள் ஒரே விதமான சாமான்களைத் தானே நம்மிலும் இலகுவாகச் செய்து குறைந்த விலைக்கு விற்கவருகின்றார்கள். ஆனுல் அப்படிக் குறைந்த விலைக்கு விற்க நம்மால்முடியாது. ஆகவே அந்நியர் சாமான்கள் இலகுவாய் விலையாகும்; நம்முடைய சாமான்கள் விலையாக முடியாது. விலையாக வில்லை யானுல் நஷ்டமுண்டாகின்றது. கைத்தெழில் நின்று விடுகின்றது. ஆதலால் கைத்தெழில் தொடங்குகின்ற நமக்குக் காப்பு வர்த்தகம் தான் அனுகூலமானது. நாமும் அந்நிய தேசத்தாரைப் போல் கைத் தொழிலில் தேர்ந்த பிறகு தரும வரியற்ற வர்த்தகம் செய்தால் நஷ்ட முண்டாக முடியாது. அமெரிக்கா ஐரோப்பா முதலிய மற்ற பல தேசத் தாரும் தொடக்கத்தில் காப்பு வர்த்தகமே செய்து வந்தார்கள். ஆகையால் அன்னிய வஸ்து விலக்க முதலிய உபாயங்களால் நமது வர்த்தகத்தையும் காத்துக்கொள்ள வேண்டும். அப்படி யில்லாமல் தரும வர்த்தகம் செய்வதற்கு இந்தியர்களிடம் போதுமான விடுமுதலும் சாமர்த்தியமும் இப்பொழுதில்லை. ஆகையால் இந்தியர்களாகிய நாம் அனைவரும் நம்முடைய கைத்தொழிலிற் சாமார்த்தியமும் விடுமுதலும் விர்த்தியாகும் காலம் வரை அந்நிய வஸ்து விலக்கம் செய்யாமல், நம் கைத்தொழிலை

விர்த்தி செய்யவே முடியாது. ஆதலால் சிலர் அந்நிய வஸ்து விலக்கம் கூடாதென்று சொல்லும் ஆக்ஷேபனைகளெல்லாம் ஒருபொழுதும் நியாயமுமல்ல சரியுமல்ல. அந்நிய வஸ்துக்களை விலக்கித் தான் தீர வேண்டும்.

நாம் நமது சுதேசியக் கைத்தொழிலை விர்த்திசெய்ய வேண்டுமானால் அந்நிய வஸ்து விலக்கமென்னும் ஒரே ஆயுதந் தான் இருக்கிறது. நன்றாய் ஆலோசிக்குமிடத்து இந்த ஆயுதத்தைத் தவிர வேறே சாதனங்களொன்றையும் காணோம். அதனால் தற்சமயம் சில அசந்தர்ப்பமான மனஸ்தாபங்கள் நேரிடினும் இதை உபயோகித்தே தீரவேண்டியிருக்கின்றது. இதற்குதாரணமாக ஒரு விஷயம் சொல்லுகின்றோம். ஜப்பானிலிருந்து ஏராளமான தீப்பெட்டிகள் இந்தியாவில் வந்து விலையாய்க் கொண்டிருந்தன. ஆனால் ஆமதபாத்தில் தீப்பெட்டிக் கைத்தொழில் தொடங்கிவிட்டார்களென்பதைக் கேள்விப்பட்டவுடனே ஜப்பானியர் என்ன செய்தார்கள்? திடீரென்று தீப்பெட்டி விலையை இறக்கிவிட்டார்கள். அதாவது தீப்பெட்டிவிலையை இறக்கிவிட்டால் ஆமதபாத்தில் பெட்டி அவ்வளவு சரசமான விலைக்கு விலையாக முடியாமல் கைத்தொழில் நின்றுவிடுமென்பது தான் ஜப்பானியர் எண்ணம். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் தேசாபிமானமுள்ள ஒவ்வொரு இந்தியனும் என்ன செய்ய வேண்டும்? ஜப்பான் தீப்பெட்டி எவ்வளவு மலிவாயிருந்தாலும் அதை வாங்காமல் சுதேசியத் தீப்பெட்டியைத் தான் வாங்க வேண்டும். அப்படிச் செய்யவில்லையானால் சுதேசிக் கைத்தொழில் விர்த்தியடைய மார்க்கமில்லை இப்பொழுது ஜப்பான் தீப்பெட்டி முன் விலையின் முக்கால் விலைக்கு விற்கப்படுகின்றது. விலை சகாயமாயிருக்கிறதென்றெண்ணி இவைகளை வாங்கிக் கொண்டு சுதேசிய தீப்பெட்டிகளைப் புறக்கணித்து, அதனால் சுதேசியக் கைத்தொழில்களையும், அதனால் பிழைக்கும் ஆயிரக்

கணக்கான ஏழை ஜனங்களையும் கைவிட்டுவிடுவது தேசாபிமானமா, அல்லது இப்பொழுது தானே அந்நிய வஸ்துக்களவையா யிருப்பினும், அவை எவ்வளவு நயமாயும் மலிவாயுமிருப்பினும், அவற்றை விலக்கி வீட்டு நம்முடைய சுதேசத்தில் உண்டாகும் வஸ்துக்களை வாங்கி ஆதரித்து அதனால் நமது ஏழை சகோதரர்களுடைய வறுமையை நீக்கப் பாடுபடுதல் தேசாபிமானமா? இப்படிச் செய்வது கூடக் குற்ற மென்றுயாராவது சொல்வார்களானால் பின்பு நாம் செய்வ தெல்லாம் குற்றம் தான். நாம்இந்த இழிந்த நிலையை விட்டு எழுந் திருக்கமுடியவே முடியாது. இங்கிலாந்து இப்பொழுதிருக்கும் செல்வ நிலைக்கும் அதன் செழிப்புக்கும் முதற் காரணம் காப்பு வர்த்தகம் தான். இவ்வாறு காப்பு வர்த்தகம் செய்ய வேண்டு மென்பதை இந்தியாவில் பொது ஜனங்களாகிய நாமே சொல்லிக் கொள்ளுகிறோம். ஆனால் ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு தேசத்திலும் அந்தந்த தேசத்துக் கவர்ன்மெண்டாரே காப்பு வர்த்தகம் வேண்டு மென்று சட்டங்கள் ஏற்படுத்தி விடுகிறார்கள். ஆனால் அப்படியே நாமும் சுதேசிய வஸ்துக்களுக்கு அநுகூலமான சட்டங்க ளேற்படுத்த சக்தியற்றவர்களா யிருக்கின்றோம். எல்லா அதிகாரங்களும் கவர்ன்மெண்டார் கைக்குள் இருக்கின்றன. அவர்களும் என்ன காரணத்தினாலோ சுதேசியத்துக்கு அநுகூலமான சட்டங்கள் ஏற்படுத்தச் சம்மதமில்லாதவர்களா யிருக்கின்றார்கள். ஆகையால் இது விஷயத்தில் கவர்ன்மெண்டார் உதவியைப் பாராமல் நாமே முயற்சி செய்து நமது கைத்தொழில் விர்த்தி யடைந்து மற்ற தேசங்களோடு போட்டி போடக் கூடிய சமயம் வரும் வரை இதைக் கொண்டு செலுத்த வேண்டிய கடமை யுள்ளவர்களா யிருக்கின்றோம்.

ஆதலால் நமது சுதேசிகளாகிய இந்தியர்கள் சுதேச வஸ்துக்களை வாங்கி அதனால் தங்களுடைய கைத்தொழிலை விர்த்தி செய்வதில் ஏதேனும் சிறிது நஷ்ட மிருந்தாலும்

கூட அதற்காக ஆக்ஷேபனை செய்யப்படுமோ? அந்நிய வஸ்துக் களைப் பார்க்கிலும் சுதேச வஸ்து சிறிது விலை யதிகமா யிருப் பினும் அவ்வாறு கொடுக்கப்படும அதிகக் கிரயம் நமது ஏழை ஜனங்களுக்கே போய்ச் சேருவது மன்றி அவர்களுடைய கைத்தொழிலுக்கே ஆதரவா யிருக்கின்றது. விலை யதிகமா யுள்ள சுதேச வஸ்துக்களை வாங்கு வதனால் ஏழை ஜனங்கள் நஷ்ட மடைகின்றார்களென்று சொல்வது சிறிதும் பொருந் தாது: ஏழை ஜனங்கள் கொடுக்கும் விலையை மட்டும் கவ னிக்கப்படாது: அவர்களுக்கு முதலாவது பொருள் வரும்படி எப்படிக் கிடைக்கிறது என்பதையும் கவனிக்க வேண்டும், சுதேசியக் கைத்தொழில் விர்த்தியாகவே இது வரையும் வேலையின்றித் தூங்கிக் கொண்டிருந்த எண்ணற்ற ஏழை களுக்கு வேலையகப்படுகின்றது. தினந்தோறும் கிடைக் கும் கூலியும் அதிகப்படுகின்றது. சம்பாத்தியம் யாதொன்று மின்றி தினம் ஒரு ரூபாய் செலவு செய்வதைப் பார்க்கிலும் ஒரு ரூபாய் சம்பாத்தியம் செய்து கொண்டு ஒன்றே கால் ரூபாய் செலவு செய்வது நஷ்ட மென்று சொல்லப்படாது. அது போலவே முன் வேலையற்றுப் பட்டினி கிடந்த ஜனங் கள் இப்பொழுது வேலை செய்து பொருள் தேடி அவற்றைச் செலவு செய்து சாப்பிடுவதனால் அவர்களுடைய வறுமை நீங்குவதோடு சுதேசியக் கைத்தொழில் விர்த்தியாகின்றது. பொருளுள்ளவர்கள் சும்மா பாங்கிகளில் வட்டிக்குப் போட் டுக் கொண்டிராமல் பற்பல தொழில்களில் அப்பொருளை விட்டு அதனால் லாபமடைய மார்க்க மிருக்கின்றது. ஜனங்க ளுடைய கைத்தொழிற் பழக்கமும் தேர்ச்சி யடைகின் றது. சென்ற ஒரு வருஷத்திய அநுபவத்தைப் பார்த்தால் சுதேசியத்தினாலும் அந்நிய வஸ்து விலக்கத்தினாலும் அநேக ஏழை ஜனங்களுக்குப் பிழைப்புக்கு வழி யுண்டா யிருப்பதோடு இந்தியர்க்கு ஏராளமான லாபமும் கிடைத்திருக் கின்றது. ஆதலால் இப்பபப்பட்ட சாக்ஷியங்களை வைத்துக்

கொண்டு அந்நிய வஸ்து விலக்கம் கூடா தென்று சொல்வது சிறிதும் பொருந்தாத விஷய மாகும்.

நிற்க அந்நிய வஸ்துக்களை விலக்குவதனால் இவற்றின் மீது உண்டாகும் வெறுப்பும் பகையும் அந்நிய மனிதர் மீதும் உண்டாய் விடு மென்றும் அவ்வாறு உண்டாவது நியாய மல்ல வெனவும் சிலர் ஆக்ஷேபிக் கின்றனர்கள். ஆனால் நமது ஜீவாதாரமா யிருக்கும் கைத்தொழிலை விர்த்தி செய்யும் விஷயத்தில இப்படிப்பட்ட தாக்ஷண்யத்தை யெல்லாம் கொண்டு நிற்பது சிறிதும் இசையாது. நமது கைத் தொழில் விர்த்தியாகி நாமும் அந்நிய தேசத்தாரைப் போலாகும் வரை இவ்வித தாக்ஷண்யங்களைப் பொருட்டா யெண்ண முடியாது. இதற்காக நம்மைப் பாரபக்ஷ மற்ற எவனும் குறை கூற முடியாது.

இன்னும் அந்நிய வஸ்துக்களை விலக்குவதனால், நாம் பிற தேசக் கைத்தொழிலின் திறமையையும் அதன் சம்பந்தமான சூக்ஷமங்களையும் அறிய முடியாது போய்விடு மென்றும் ஆதலால் அந்நிய வஸ்து விலக்கம் கூடாதென்றும் சொல்லு கின்ற ஆக்ஷேபனையைப் பற்றிக் கவனிக்கும் பொழுதும், நமது தேசக் கைத்தொழில் விர்த்தி யடையும்வரை நாம் இப்படிப்பட்ட அற்ப காரணங்களை வைத்துக் கொண்டு முக்கியமான காரியங்களை அலக்ஷியம் செய்யக் கூடா தென்றே கொள்ள வேண்டி யிருக்கின்றது. நாமும் மற்ற தேசத்தளவு கைத்தொழில் வல்லமை யடைந்த பிறகு இப்ப டிப்பட்ட விஷயங்களைக் கவனிக்கலாம்.

இந்திய கைத்தொழிற் சாலைகள் விருத்தியாக வேண்டு மென்ற எண்ணம் மேற்கூறிய இருவிதக் கட்சிக்காரர்களுக்கு முண்டு. அன்னிய சாமான் விலக்கை ஒப்புக் கொள்ளாதவர் கள் விவசாயத் தொழிலைத் தவிர மற்றெவ்விதத் தொழில் களும் விருத்தி யடைவதற்கான கைவந்த வழிகள் இன்ன தென்று சொல்லாமல், கைத்தொழில் விருத்தியாக வேண்டு

மென்ற விருப்பத்தை மாத்திரம் வெளியிடுகிறார்கள். ஜனங்கள் இதைப்பற்றிச் சற்றுங் கவனியாமல் முன் போலவே சாமான்கள் எங்கெங்கே சரசமான விலைக்கு அகப்படுமோ அங்கேயே வாங்கி வர வேண்டு மென்று சொல்லுகிறார்கள். புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட கைத்தொழிற் சாலை யொன்று அதன் ஸ்தாபகரின் வல்லமையால் விருத்திக்கு வர வேண்டியதே தவிர நாம் அதற்கு ஏதாவது உதவி செய்ய வேண்டு மென்ற எண்ணம் அவர்களுக்குக்கிடையாது. அந்நியர்களோடு எதிர்த்துதாம் செய்கிற சாமான்களை அவர்கள் சாமான்களைப் போல சரசமான விலைக்கு கொடுக்க வேண்டு மென்றும் அப்படிக்கொடுத்து அதனால் நஷ்டம் வந்து இந்தக் கைத்தொழிற் சாலை யெடுபெட்டுப் போவதைப் பற்றி அக்கரை யில்லை யென்றும் சொல்கிறார்கள். ஆனால் மற்றக் கட்சியார்களுடைய அபிப்பிராயம் வேறுபட்டிருக்கின்றது. கைத்தொழில் விருத்தியாக வேண்டு மென்ற விருப்பதினால் மாத்திரம் என்ன பயனிருக்கின்றது. அதற்காக வேண்டிய வழிகளைத் தேடி அதை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர வேண்டிய தல்லவா சிறந்த விஷய மென்கிறார்கள். முதலில் அநேக கஷ்ட நஷ்டங்கள் நேரிடக்கூடும். இவற்றைச் சட்டை செய்யாமல் எடுத்த காரியத்தை ஊக்கத்தோடும் விடா முயற்சியோடுஞ் செய்து முடிக்க வேண்டியது. ஜனங்களுக்குள் எல்லாரும் அற்ப நஷ்டத்தைக் கவனியாமல் நம்முடைய தேசத்தில் செய்யப்பட்ட சாமான்களை வாங்க வேண்டு மென்று சபதஞ் செய்து கொள்வார்களானால், நம்முடைய கைத்தொழில் விருத்தியாகு மென்பதிற் சந்தேகமில்லை. இப்போப்பட்ட எண்ணம் எல்லாருக்கும் வரும் பட்சத்தில் புதிது புதிதாய் ஸ்தாபிக்கப்படும் கைத்தொழிற் சாலைகள் யாவும் தடுமாற்றமில்லாமல் தழைத்தோங்கி வளரும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெள்ளிதிற் புலப்படும். இவ்விதமாய் நோக்குங்கால் அந்நிய சாமான்களை விலக்குதல் அவசிய மென்பது புலப்படும்.

மேற்கூறிய காரணங்களால் அன்னிய சாமான் விலக்கு மிக ஒழுங்கான வழியென்றே அங்கீகரிக்கவேண்டியிருக்கிறது; ஆனால் மற்றக் கட்சியார் கூடாதென்கிறார்கள். அவர்களும் தேசத்திற்கு உண்மையோடு பாடுபடுபவர்களாகவே யிருக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிறதென்ன வென்றால் சாமான்களுக்குச் சொந்தக்காரர்களா யிருப்பவர்கள், தங்கள் சாமான்களை ஏழை ஜனங்கள் முதலாகிய யாவரும் வாங்கும்படியாய் சுளுவான விலைக்கே விற்க வேண்டு மென்பதே. இந்த நோக்கம் மிக சிலாக்கியமான தாயிருந்தாலும், எவ்வளவு தூரஞ் சரியான தென்பது மட்டும் தெரியாதிருக்கிறது. இந்திய சாமான்களின் விலை சாசமா யிருந்தால் எல்லாரும் அதை வாங்குவார்க ளென்பதும், அதனால் கைத்தொழிற் சாலைக ளெல்லாம் லாப மடைந்து மேன் மேலும் பெருகு மென்பதும் அவர்களது அபிப்பிராயம். இயற்கையிலேயே அந்நிய சாமான்களை ஜனங்கள் வாங்காமற்றள்ளி விடுவார்கள். மேலும் சுதேச சாமான்கள் அந்நிய தேச சாமான்களைப் போல நயமாயும் விலை சரசமாயும் இருந்தாலொழிய நீடித்த காலம் சாதாரண ஜனங்கள் சுதேச சாமான்களை நஷ்டத்திற்கு வாங்கிக் கொண்டிரார்களென்பதும் அவர்கள் அபிப்பிராயமே. இவர்களுடைய நோக்கங்கள் பார்ப்பதற்கு மிக அழகா யிருந்த போதிலும் இதற்குச் சமாதானமாக ஒரு விஷயம் இங்கே முக்கியமாய்க் கவனிக்கப் படத்தக்கது. சுதேச சாமான்கள் அந்நியவற்றைப் போலவே நயமாயும் விலை சுளுவாயு மெப்பொழுதும் இருக்கும் பட்சத்தில், அந்நிய சாமான்கள் தானாகவே இந்தியாவை விட்டு நீங்கி யிருக்கும். இப்பொழுது நமது தேசத்திலுண்டாயிருக்கிற ஸ்வதேசிய முயற்சியும் அனாவசியமே. இக் காரணம் பற்றியே நம்முடைய நெய்வு யந்திரங்களில் நயமான வஸ்திரங்களை நெய்வதால் லாபமில்லாமற் போகிறது. ஆரம்பத்திலேயே மிகவும் நயமானதும் விலை சரசமானதுமாயுள்ள சாமான்களைச் செய்வது அபூர்வமான காரியம்.

ஆகையினாற்றான் ஜனங்கள் நயமான சரக்கைக் கவனித்தால் பொருளைக் கவனிக்கக் கூடாது. பொருளைக் கவனித்தால் நயத்தைக் கவனிக்க கூடாது. அது காரணம் பற்றியே ஜனங்கள் இவ்விஷயத்தை நன்றா யறியும் பொருட்டு ஸ்வதேசியப் பிரசங்கங்களும் அவசிய மாகின்றன. வியாபார முறையைக் கவனிக்கும் பொழுது, சாமான்களுக் கேற்பட்ட விலையைக் கொடுக்க வேண்டுமே யல்லாமல், அவற்றின் சொந்தக் காரர்களை விலை குறைத்து விற்க வேண்டு மென்று சொல்வது உசித மாகத் தோன்ற வில்லை. அது மாத்திரமன்று இதை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருதலும் மிக அரிது.

வியாபார முறையைக் கவனிக்கும் பொழுது அந்நிய சாமான்களை விலக்குதலே சரியான வழியாக விருக்கிறது. இதனால் சுதேசச் சரக்குகளை யெங்கும் விரும்புவார்கள். ஆனால் சுதேச சரக்குகள் தற்காலத்தில் இருப்பு (Stock) குறைவாயிருப்பதால் விலை கூடாயிருக்கும். விலை யதிக மானாலுங் குற்ற மில்லை. ஏனெனில் அந்தப் பணம் நம்முடைய இந்திய வியாபாரிகள் கைக்குப் போய் பின்பு சரக்குகளாக வெளிக் கிளம்புகிறது. இப்பொழுது முன்னைப் பார்க்கிலும் அதிகமான சரக்கு விலைக்குக் கிடைக்கும். இப்படிக் கொஞ்ச காலத்திற்குள் சரக்குகள் அதிகப்பட்டு பின்பு மலிவாய் விடும். பிற்பாடு சரக்கு அதிகப்பட அதிகப்பட விலையும் சரசமாயிருப்பதோடு கூட வியாபாரிகளுக்குந் தகுந்த லாபம் கிடைக்கும். இப்படி லாபங் கிடைப்பதைப் பார்த்து அநேகர் புதிது புதிதாய் யந்திரங்களை ஸ்தாபித்து அதே சரக்குகளை யுண்டு பண்ணுவார்கள். இதனால் எளிய ஜனங்களுக்கு மில்லுகளில் வேலை ஏராளமாயகப்படும். இன்னும் பணம் விடு முதலாக விட்டவர்களுக்கும் மேலான வேலைக்காரர் களுக்கும் தகுந்தலாபங் கிடைக்கும். இவ்வழியைக் கடைப் பிடித்தால் சரியான ஸ்வதேசிய முயற்சி கைகூடும். இதுவே ஒழுங்கான வழியென்பது சென்ற வருஷத்தில் செய்வுத் தொழில் முதலிய

வைகளா லடையப்பட்ட லாபத்தால் ஸ்தாபிக்கப்படுகின்றது. ஆனால் முதலில் விலை உயர்ந்த படியே இருந்தால், மேற் சொன்ன பிரகாரம் கைத்தொழில் விருத்தி யடையாமலே யிருந்திருக்க வேண்டாம். உண்மையில் இப்பொழுது அநேக விதமான கைத்தொழிற் சாலைகள் தேச மெங்கும் புதிதாய் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. விலை உயர்ந்தபடியே எப் பொழுதும் நிற்கு மாயின், அந்நிய சாமான்களை விலக்கி னாலுங் கூட ஒன்றும் பிரயோசனப்படாது. ஆகையால் அந் நிய சாமான்களை விலக்கி அதனால் சுதேச சரக்குகளை அதிகப் படுத்த வேண்டு மானால், சுதேச சரக்குகளை ஆரம்பத்தில் அதிக விலை கொடுத்தே வாங்க வேண்டும். இல்லாவிடின் நாம் செய்யு முயற்சியினால் பயன் யாது மில்லை.

இது இப்படி நிற்க, உயர்ந்து போன விலையானது எப் பொழுதும் அதே நிதானத்தில் நிற்காது. மில்லுகளின் சொந்தக் காரர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து கட்டுப் பாடு செய்து கொண்டால் ஒரு வேளை இது சாத்தியப் படலாம். ஆனால் இந்தத்தேசத்தில் இப்பேர்ப்பட்ட ஒற்றுமைக்கு வழியில்லை. நெசவுத் தொழில் விஷயத்தில் துணிகளை நெய்ப வர்களுக்கும் அவற்றை உடுப்போர்களுக்கும் ஊடே அநேகர் நின்று ஒருவரைப் பார்க்கிலும் ஒருவர் சரசமான விலைக்கு வாங்கி விற்க முயற்சி செய்வதால் துணியின் விலையை யதிகப் படுத்த மார்க்க மில்லாமற் போகிறது. மேலும் குறித்த இடத்திலிருக்கும் நடப்பு விலைகளின் தன்மை லோக மெங் கும் இருக்கும் விலையின் ஏற்றத்தாழ்வுகளைப் பொருத்திருக் கிறது. சரக்குகளை யுண்டாக்குகிறவன் அவற்றிற்கு உயர்ந்த விலை யெங்கு கிடைக்கு மென்று தேடித் திரிகிறான். ஆனால் சாமான்களின் விலை யானது ஒரு குறித்த சமயத்திலும் ஒரு குறித்த இடத்திலும் இருக்கின்ற சாமான்களின் இருப்பையும் அச்சாமான்களுக்கு நாட்டிலிருக்கும் அவசி யத்தையும் பொருத்தியிருக்கிறது. உற்பத்தி (supply) அதிக

மாய் கிராக்கி குறைந்திருந்தால் விலை குறையும், உற்பத்தி குறைந்து கிராக்கி (demand) அதிகப்பட்டால்விலை அதி கப்படும்; ஆகையினால் சாமான்களின் விலையைச் சொந்தக் காரர்கள் இஷ்டப் பிரகாரம் கூட்ட முடியாது. அது போலவே வாங்குபவர்களுக்கும் தங்களிஷ்டப்படிக்குச் சாமான்கள் குறைந்த விலைக்கு அகப்படா. விலையின் உயர்வு தாழ்ச்சியானது தேசத்திலிருக்குஞ் சாமான்களின் குறைவு நிறைவுகளைப்பொறுத்திருக்கின்றது. இதனுண்மையை அறிய விரும்புவார் யாவராயினுஞ் சரியே, அவர் ஒரு மில்லுக்காவது அல்லது வியாபாரம் நடக்கும் இடத்திற்காவது சென்று அங்கே அலுவல்கள் எப்படி நடக்கிறதென்று பார்த்தால் அதன் தன்மை விளங்கும். எவ்விதமான முயற்சியும் வியா பார முறையை அனுசரியா விட்டால் கைகூடி வருமென் றெண்ண இடமில்லை. வியாபார முறைக்கும் தரும சிந்தனைக் கும் வெகு தூரம். வியாபாரத்தில் தருமத்தைக் கவனித்தால் வியாபாரம் முன்னுக்கு வாராமற் போவதோடு கூட இந்த தருமமுஞ் சரியான தருமமாக மாட்டாது தருமம் வேறு வியாபாரத்தோரணை வேறு. இவ்விரண்டும் வேறு பட்டிருந் தால் இவ்விரண்டிற்கும் க்ஷேமமுண்டு. இது வரையெழுதப் பட்டுள்ள சமாசாரத்தின் கருத்து என்னவென்று ஊகித் துப் பார்க்கும் பொழுது, 'அந்நிய சாமான் விலக்கு, என்ற விஷயம் எங்கும் உபதேசிக்கப் படுவதோடு கூட அதை அனுஷ்டானத்திற்குங் கொண்டு வர முயல வேண்டு மென்பது தான். ஸ்வதேசியம் தழைத் தோங்குவதற்கு இது சகாயமாயிருக்கிறது. இச்சங்கதி நிறைவேறப் பணம் வேண்டி யிருக்கிறது. இதற்கு வேண்டிய சாஸ்திரங்களிற் பயிற்சியும் அவசியம். ஆனால் இதற்கு மூலகாரண மாயிருப் பது அந்நிய சாமான்களை விலக்குதலே.

ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர்

"சுதேசியம் தானே முளைத்தது"

என்பதைப்பற்றி "மார்டன் ரிவியூ" வில்

எழுதிய

உ ப ந் நி யா ஸ ம்.

இந்தியா தேசத்தின் நன்மைக்காக இந்தியர்கள் எல்லாருஞ்சேர்ந்து செய்கின்ற முயற்சிக்கு ஸ்வதேசிய முயற்சியென்று பெயர் இத்தேசத்தின் காங்கிரெஸ் சபையால் உண்டான பிரயோஜனமாகத்தோன்றி இம்முயற்சி வளர்ந்து வருவதாயிற்று. எவை காங்கிரஸ் சபை யுண்டாவதற்குக் காரணமா யிருந்தனவோ அவையே காங்கிரஸைப் பார்க்கிலும் மிக விசாலமானதான சுதேசிய முயற்சிக்குக் காரணமாயின. தங்களுக்கு இராஜாங்க அதிகாரத்தில் கிடைத்திருக்கும் தாழ்மையான நிலையைநீக்கிக் கொள்வதற்காக இந்துக்களால் காங்கிரஸ் சபை கூடப்பட்டது. அதுபோலவே கைத்தொழில் விஷயங்களில் தாங்கள் அடைந்திருக்கும் அடிமைத்தனத்தை நீக்கிக் கொள்ள முயல்வதாலுண்டானதே ஸ்வதேசிய முயற்சியாம். உற்று நோக்கினல் இந்த முயற்சியானது கைத்தொழிலைத் தவிரவும் மற்றெல்லா விஷயங்களிலுமுள்ள அடிமைத் தனத்தையும் நீக்கக் கூடிய தாயிருக்கிறது. நம்மை ஆள்பவரிட மிருந்து சில ராஜாங்க ஸ்வதந்திரங்களை மாத்திரம் பெற்றுற் போதாது. சட்ட நிருபண சபையில் இந்திய மெம்பர்களை யதிக

மாக்குவதாலும் நிர்வாக சபையில் ஒன்றல்லது இரண்டு மெம்பர்களைச் சேர்த்துக் கொள்வதாலும் இன்னும் புதிதாய் எண்ணிஉயர்ந்தவேலைகளை இந்தியர்களுக்குக்கொடுப்பதாலும் ஒரு வேளை ஜனங்கள் கொஞ்சம் உயர்ந்த ஸ்திதியை யடையலாம். ஆனால் சென்ற இருபத்தைந்து வருடங்களாக இந்துக்கள் தங்களைப் பற்றி நினைத்துள்ள கௌரவமான எண்ணத்திற்கு இவ்வதிகாரங்க ளெல்லாந் திரணமாம். பிரான்சு தேசத்திலுண்டான இராஜ கலகத்திற்குப்பின் ஐரோப்பியர்களின் சரித்திரத்தில் எவ்விதமான அம்சங்கள் பொருந்தி யிருக்கிறதோ, அவ்விதமான அம்சங்களே வெள்ளையர்கள் இந்தியாவுக்கு வந்தது முதலுண்டான இந்து தேச சரித்திரத்திலுங் காணப்படுகின்றன. இந்தியா தேசமானது ஒரு குடைக் கீழ் மிகுந்த நாகரிகமான வழியில் ஆளப்பட்டு வந்ததனால் பல மாறுதல்களை யடைந்திருக்கின்றது. ஜனங்களுடைய கருத்துகளும் கோட்பாடுகளும் மாறுதலடைந்திருப்பதே இதற்குச் சான்றாம். இப்போப்பட்ட மாறுதல்கள் இவ்விதமான அரசாட்சியினாலேயே உண்டான தென்பதை இவ்வுலகத்தின் மற்ற பாகங்களிலும் நேரிட்டுள்ளவைகளால் நிலை நிறுத்தப்படும். சில ஆங்கிலேயர்கள் இந்த மாறுதல்கள் ஆங்கிலங் கற்றவர்களிட மாத்திரமே காணப்படுகிற தென்று கூறுகிறார்கள். இது முற்றிலும் பிசகு. ஆங்கிலங் கற்றவர்கள் ஒரு தனி வகுப்பினரென்றே வைத்துக் கொள்வோம். இவ்வகுப்புக் கொஞ்சஞ் சிறியதா யிருந்தாலும் நாளடைவில் பலவாய்ப் பெருகுவதோடு கூட இயற்கையிலே சாதாரண ஜனங்களுக்கும் இவர்களுக்கு முள்ள தொந்தம் அதிகரித்து வருகிறது. ஆனால் சாதாரண ஜனங்கள் நின்ற நிலையிலேயே நிற்கவில்லை. அவர்களுக்குங் கூட தங்களுடைய தேசமானது ஆதரவற்ற நிலையினின்றும் இப்பொழுது நீங்க வேண்டு மென்று விரும்புகிறார்கள். தென் ஆப்பிரிக்கா, ஜப்பான், ருஷியா முதலிய தேசங்களில் நடைபெற்ற சங்கதிக ளொன்றும் இந்தியர்களுடைய

மனதைக் கவர வில்லை யென்று யாராவது எண்ணுவார்களா? ஈஜிப்டு, பெர்ஷியா, சீனு, ஆப்கனிஸ்தான் நாடுகளில் நடக்கிற விஷயங்கள் இந்துக்களுடைய புத்திக் கெட்டி அவற்றால் அவர்களுடைய மனமும் எண்ணங்களும் மாறுதலடையாமலிருக்க முடியுமா?

சென்ற 25 வருஷங்களாக இம்முயற்சி அனுகூலமடைவதற் குண்டான ஏதுக்கள் பல விருக்கின்றன. பொதுக் காரியங்களில் மிக ஊக்கத்துடன் வேலை செய்வதால் இந்தியர்களாகிய நாம் ஒற்றுமை யடைந்து பலப்படுவோமென்பதை காங்கிரஸ் மகாசபை உபதேசித்து விட்டது. ராஜாங்கச் சீர் திருத்த முயற்சி முதல்முதல் பிரேரேபிக்கப்பட்டு அதிக இடையூறின்றி வளர்ந்து வருகிறது. ஆசாரச் சீர்திருத்த முயற்சியும், கைத்தொழில் முயற்சியும் பின்னல் ஏற்பட்டன. கடைசியாக கல்வி சம்பந்தப்பட்ட சீர் திருத்தங்களில் முயற்சி செய்யத் தலைப்பட்டனர். ஸ்வதேசியம் கைத்தொழில் விஷயத்தில் நாமடைந்துள்ள தாழ்மையை நேரே நீக்குவதா யிருந்த போதிலும், இத்தோடு அதன் பலன் நின்று போகவில்லை. இதன் மூலமாக அநேக ஆசாரச் சீர்திருத்தங்களும் ராஜாங்க விஷயமான சீர் திருத்தங்களும் ஏற்பட்டு இந்தியர்கள் ஒற்றுமைப்பட்டு இந்தியா உன்னத ஸ்திதிக்கு வருமென்று இம்முயற்சியாற் கருதப்படுகிறது. ஸ்வதேசியம் இந்தியாவில் நிலைப்பட்டது மல்லாமல் பற்பல விடங்களில் பரவி வளர்ந்தி வருகிற தென்பது சொல்லாமலே பெறப்படும். இம்முயற்சியின் வன்மையும் தன்மையும் வங்காளத்தில் அது அடைந்திருக்கும் மகா உன்னத ஸ்திதியின் மூலமாகவும், மற்ற மாகாணத்திலும் அது வளர்ந்து வரும் விதத்தின் மூலமாகவும் தெள்ளிதிற் புலப்படும். இம்முயற்சி தோன்றிய நாள் முதலாய் கண்டவர்கள் யாவரும் ஆச்சரியப் படும்படி மூலை முடுக்கிலிருந்தவர்க ளெல்லாரும் கிளம்பி யெழுந்து, புதிய புதிய முயற்சிகளிற் றலையிட

ஆரம்பித்து விட்டார்கள். இம்முயற்சியானது அலைபோல் தேசமெங்கும் பரவி விட்டது. ஆனால் இந்த அலையானது சில பாகங்களில் மிக உயர்வாய்க் கிளம்பியும் சில பாகங்களில் வலி குறைந்து மிக மட்டுப் பட்டும் பரவிக்கொண்டிருக்கிறது.

சில நாளைக்கு முன்பு வங்காளத்தில் பெயர் பெற்ற தேசாபிமானி யாகியபாபு சுரேந்திர நாத் பானர்ஜீ பம்பாயில் பிரசங்கஞ் செய்யும் போது பின் வருமாறு பேசினார். "இராஜாங்க விஷயத்திற்கு காங்கிரஸ் மகாசபை அனுகூலமா யிருப்பது போல கைத்தொழில விருத்தியாவதற்கு ஸ்வதேசிய முயற்சி ஏதுவாயிருக்கின்றதென்று அநேகர் சொல்லுகிறார்கள். கைத்தொழில் விருத்தி மாத்திரமன்று. இன்னும் பலவித நன்மைகள் இதனால் உண்டாகுமென்று நான் திட்டமாய்ச் சொல்வேன். இராஜாங்கம் ஆசாரம் கைத்தொழில் ஆகிய இம்மூன்று விஷயங்களில் ஏற்பட்டிருக்குங் குறைகள் மாத்திரமன்று. மற்றெல்லாவிதக் குறைகளையும் நம்மினின்றும் நீக்கி நாம் உயர்ந்த பதவிக்கு வரக்கூடியதற் கேதுவான பற்பல சாதனங்களை யளிக்கக் கூடிய சக்தி இந்த ஸ்வதேச முயற்சிக்கு அமைந்திருக்கிறது. ஆகையினால்தான் கனவான்களே நமக்கு விமோசனம் இராஜாங்கத்திலும் கைத்தொழிலிலும் உயர்ந்த பதவியையடைய விரும்புதலே யென்று நம்முடைய பூமிதேவியின் காதிலே ஒரு தேவதை ஊதியிருப்பது போல எனக்குத் தோன்றுகிறது. இம் முயற்சியானது இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியார்களாலும் போற்றப்பட்டு வருகிறது. இது எளியோர்களாலும் வலியோர் களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம். இது யாவரும் எளிதில் அறியக் கூடிய விஷயமே. வங்காளத்தி லானாலும் தக்ஷிணத்திலானாலும் உழுது பயிர்செய்பவர் ளாகிய குடியானவர்களுக்கு குடியரசைப் பற்றியும்நீதி நிர் வாக அதிகாரங்கள் துண்டுபட வேண்டியதைப் பற்றியும் பிர சங்கம் செய்தால் அவர்களுக்குச் சுலபமாய்ப் படாது. இவை

களை யறிய அவர்களுக்கு அறிவு போதாது. ஆனால் நமது தேசத்தின் பணம் நம் தேசத்தை விட்டுப் போகக் கூடா தென்றும், அப்படிப்போகாமலிருந்தால் நமக்கு லாபமிருக்கிற தென்றும், பணம் போகாம லிருக்கும் பொருட்டு நம்முடைய தேசத்தில் செய்யப்பட்ட சாமான்களையே வாங்க வேண்டு மென்றுஞ் சொன்னால் அவர்கள் நன்றாய்ச் செவிகொடுத்துக் கேட்பார்கள். இந்த விஷயத்தை யறிய விசேஷமான அறிவு வேண்டியதில்லை. சுதேசியம் மிக முக்கியமான தென்று அவர்களறிவார்கள். இம்முயற்சி பூர்த்தி யடைவதால் தங்களுடைய தரித்திரம் நீங்கித் தாங்களும் மற்றவர்களும் சுக மடையலாம் என்பது மவர்களுக்குத் தெரியும். சபையோர்களே, உங்கள் முயற்சியில் அவர்கள் உங்களுக்குத் துணையாய் வருவதோடு கூட அவர்கள் கஷ்டங்களை நீக்க வந்த மகா தர்மசாலிகளாக உங்களை நினைப்பார்கள்"

சுதேசியத்தைப் பற்றி யெடுத்துப் பேசுகின்றவர் யாவருக்கும் மேற் கூறப்பட்டுள்ள வார்த்தைகளின் கருத்தும் உண்மையும் நன்றாய்த் தெரியும். தென்னிந்தியாவிலுஞ் சுதேசியம் பரவியிருக்கிற தென்பது இங்கேற்படுத்தப் பட்டுள்ள "சுதேச நிதி" என்பதனால் தெரியவரும். இந்த நிதி எதற்காக ஏற்பட்டிருக்கிற தென்பதை யாவரும் அறிகிறார்கள். வலியவர்களும் எளியவர்களும் தங்களாலியன்ற மட்டுந் திரவிய சகாயஞ் செய்து வருகிறார்கள். நாட்டு வாசிகளும் நகர வாசிகளைப் போலவே இவ்விஷயத்தை நன்றாயறிகிறார்கள். அறிந்து அவர்களும் பணம் அனுப்பி வருகிறார்கள். ஆகவே தேசத்தின் எல்லாப்பக்கங்களிலு முள்ளவர்களும் இந்நிதியின் நோக்கங்களை தேச நன்மைக் கென்று நன்றா யறிந்து இது பெருகுவதற்குண்டான முயற்சிகளைத் தங்கள் தங்களால் இயன்ற மட்டுமுண்மையோடும் ஊக்கத்தோடுஞ் செய்து வருகிறார்கள். சுதேச நிதி விஷயத்திற்கு இராஜாங்க விஷயத்திற்கும் யாதொரு சம்பந்தமுங்

கிடையாது. கெட்டுப் போன கைத்தொழில்களை பழய நிலைமைக்குக்கொண்டு வருவதோடு கூட இன்னும் தற்காலத்திற் கேற்றபடி புதிதான கைத்தொழில்களை தேசத்தாருக்குச் சித்திக்கும்படி செய்வதே இந்த 'சுதேச நிதி' என்ற மூல தனத்தின் பயன். நகரங்களிற் பிரசங்கஞ் செய்வது போலவே நாட்டுப் புறங்களிலும், சுதேசியம், சுதேச நிதி முதலியவற்றைப்பற்றிப் பிரசங்கஞ் செய்யும் பொழுது ஜனங்கள் இவ்விஷயங்களை நன்றாய்க் கேட்டு அறிந்துகொள்ளுகிறார்களென்பதைப் நானே அநுபவத்தில் கண்டிருக்கிறேன். ஏனெனில் அன்னிய நாட்டார் வந்து இங்கேயே குடியாயிருந்து பெருத்த வியாபாரங்கள் பெரிய பட்டணங்களி லிருந்து செய்வதோடு கூட சிறிய பட்டணங்களிலும் கிராமங்களிலும் பட்டிகளிலும் தங்கள் சொந்த ஆட்களை வைத்தி ஏழைகள் உபாயமாய் செய்து ஜீவிக்கின்ற கைத்தொழில் முதலியவைகளைக் கெடுத்து எல்லாவிதமான வியாபாரங்கள் கைத்தொழில்கள் முதலியவற்றினின்றும் இந்தியர்களை ஒட்டம் பிடிக்கும்படி செய்கிறார்கள். அவர்களிடம் அதிகப்பணம் இருப்பதால் இந்தியர்கள் அவர்களோடு எதிர்க்க முடியாமல் ஜீனி ஆலைகளிலும் பஞ்சு முதலிய வியாபாரங்களிலும் நஷ்ட மடைந்து கெட்டுப்போகிறார்கள். இக் கொடுமைகளெல்லாம் ஜனங்கள் மனதில் நன்றாய்ப் பதிந்திருப்பதனாற் றான், சுதேசிய மானது இக்கொடுமையை நீக்க வந்த ஒரு கருவி யாகும் என்று பிரசங்கஞ் செய்யும் பொழுது காது கொடுத்து நன்றாய்க் கேட்டுக் கொண்டு, இம்முயற்சி சீக்கிரம் முன்னுக்கு வர வேண்டிய தென்று பிரார்த்தனை செய்கிறார்கள். இப் படிப்பிரார்த்திப்பதோடு கூட தங்களாலியன்ற உதவியையும் புரிந்து வருகிறார்கள். காங்கிரஸ் சபை யுண்டானது முதல் கற்றறிந்த மாந்தர்கள் எல்லாருந் தேசாபிமானகளாக ஆவேசங்கொண்டு இந்தியா தேசம் நல்லஸ்திதிக்கு வரவேண்டிய வழிகளைக் கைக்கொள்வாராயினர். சாதாரணஜனங்களுக்குத்தாங்கள் இந்தியர்கள் என்று கௌரவமாய்ச் சொல்லிக்

கொள்ளுகிற தன்மை "சுதேசியம்" உண்டானதால் வந்தது. தற்காலத்தி லடைந்திருக்கும் வறுமையான நிலைமையையும், அதை நீக்கக் காரணமா யிருப்பது ஒற்றுமையும் சுயநன்மை பாராட்டா திருத்தலுமே யென்பதையும் அவர்கள் இந்த சுதேசி யத்தின் மூலமாகத் தெரிந்து கொள்ளுகிறார்கள். படித்தவர்க ளுடைய க்ஷேமலாபத்தை மாத்திரங் கருதுகின்றது என்ற குற் றத்தை ஒரு வேளை காங்கிரஸ் சபைக்குச் சிலர் யோசியாமல் சாட்டி விடுகிறார்கள். ஆனால் ஸ்வதேச முயற்சிக்கு இப்பேர்ப் பட்ட குற்றஞ்சாட்ட இடமில்லை; படித்தவர்க்கும் மற்றவர்க்கும் கைத்தொழில் விஷயத்திற்போலவே இராஜாங்க விஷயத் திலும் அன்னியர்களால் அநேக இடையூறுகளும் கஷ்ட நஷ் டங்களுமிருக்கின்றன. இதையாவரும் ஒன்று போல் அறிந்து ஒற்றுமையாய் முயலும் விஷயத்தில் எல்லாருக்குஞ் சுக முண்டு. காங்கிரஸ் சபை யுண்டானதால் படித்தவர்களெல்லா ரும்ஒன்று சேர்ந்து முயற்சி செய்கிறது போல, சுதேசியத்தால் படித்த வர்களும் படியாதவர்களும் ஒன்றாய்க் கூடி ஒருவரை யொருவர் நேசித்துத் தேசத்திற்கு நன்மை யுண்டாகும் படியான ஏற்பாடுகள் செய்ய இடமிருக்கிறதென்று பாபு சுரேந்திரநாத் பானர்ஜி சொல்லியிருக்கிறார். சுதேசாபிமானி களா யிருக்கிறவர்கள் குறிப்பிட்ட சிலவழிகளிலேயே முயற்சி செய்தாலுங் கூட அவைகளால் மற்ற வழிகளிலுண்டாகும் நன்மைக்கும் சகாயமாகும். ஆகவே சுதேசியமானது முக் கியமாய் ஜனங்களுடைய வறுமையை நீக்குமோர் கருவி யாயிருப்பதோடு கூட, மேலைத் தேசத்தாரைப் போல் குடி களுக்குரிய சகல விதமான ஸ்வதந்திரங்களையும் பெறச் செய்து இந்தியர்களை மேன்மையாக்கவுஞ் சக்தி யுண்டு.

தங்களுடைய குறைகளைக் கண்டறிந்து அவைகளை மாற்றி நன்மை யானவைகளை நாளடைவில் விருத்திசெய்து கொள்ள வேண்டுமே என்கிற எண்ணம் கீழைத் தேயத்தார் களுக்கு எக்காலத்திலும் வரப் போகிறதில்லை யென்று ஒரு

குருட்டு நம்பிக்கை மேலைத்தேச வாசிகளுக்குண்டு. மேல் பாகத்தி லுள்ளவர்களுக்கும் கீழ்பாகத்தி லிருப்பவர்களுக்கும் மனிதனுக் கேற்பட்ட இயற்கையான சுபாவங்களில் மிகுந்த வித்தியாசமுண்டு என்பது பேராசை யுள்ள இராஜதந்திரி களும் வியாபாரிகளுமான மேலைத் தேயவாசிக ளுடைய துணிபு. இத்துணிபுக்கு யாதொரு பலமுமில்லை யென்பது தற் காலத்தில் நடக்கிற விஷயங் களால் தெள்ளிதின் புலப்படு கிறது. ஐரோப்பியர்களைப் போலவே மற்றவர்களும் தங்கள் தங்கள் இராஜ்யங்களில் நடக்குங் கொடுமைகளைப் பொரு ராகிக் கிளம்பி யெழுந்து இக் கொடுமைகளை நீக்க வேண்டிய வழிகளை அறியவும் அறிந்தபடி நடக்கவும் பிரயத்தினப் படு கிறார்கள். தேசமெங்கும்கல்விபரவிவருவதால் எப்பேர்ப்பட்ட ஜனங்களும் அறிவிலும் ஞானத்திலும் விருத்தி யடைந்து தங்களுக் கேற்பட்டிருக்குங் கஷ்ட நஷ்டங்களைக் குறித்து மிகவும் விசனிக்கிறார்கள். பின்பு மற்ற வர்களைப் போல் தாங் களுஞ் சுகமாய் வாழவேண்டு மென்ற அவாவும் அவர்களுக் கதிக மாயுண்டாகிறது. தங்கள் காரியங்களில் அன்னி யர்கள் பிரவேசித்து வீண கர்வத்தை வகித்து அவர்களுக்குக் கெடுதிகளை விளைக்குந் தோறும் இந்த அவாவானது விருத்தியடைந்து கொண்டிருக்கிறது. ஜப் பானே எல்லாருக்குந் தெரிந்த விஷயம். இதைத்தவிர சீனா, துருக்கி, ஈஜிப்டு, பெர்ஷியா, ஆப்கனிஸ்தான் முதலிய தேசங்களும் இங்கு கவனிக்கப்படத்தக்கன. இத்தேசத்தா ரெல்லாரும் அன்னியர்களால் தாங்கள் அடைந்திருக்கும் அவமானத்தைக் குறித்து மிகவிசனப் படுகிறார்கள். கொஞ்சக் காலத்திற்கு முன்புதான் ஐரோப்பாவும் அமெரிக்காவுஞ் சேர்ந்து இந்தத் தேசங்க ளெல்லாவற்றையுந் தங்களுடைய கட்டளைக்குள் கூடிய சீக்கிரத்தில் கொண்டு வந்து விடலா மென்ற எண்ணத்தைக் கொண்டவர்களா யிருந்தார்கள். இத்தேசங்களுக் குரிய இராஜ நீகத்தை அடியோடு நீக்கவும் இராஜாங்க வருமானத்தையும் வியாபார முதலிய வற்றால்

உண்டாகும் வருமானத்தையும் இத்தேசங்களினின்றுங் கொள்ளை யடித்துக் கொண்டிருக்கலா மென்றும் நம்பி யிருந்தார்கள். தர்மதேவதையானவள் இந்நோக்கங்களைக் கண்டு மிகவுங் கோபா வேசங்கொண்டு மற்றத் தேசத்தார்களுக்கு இந்நோக்கங்களை யறிவுறுத்தியது. இதனுண்மை அத்தேசங்களின் தற்கால நிலைமையை யுற்று நோக்குங்கால் தெரிய வரும். முக்கியமாய் ஜப்பான் தன்னுடைய செய்கையினல் ஐரோப்பியர்களுடைய எண்ணம் நிறை வேருமற் போகும்படி செய்ததோடு கூட கீழ்த் தேயத்தாருக்கு முன் ஏற்பட்டிருந்த பைத்தியகாரப்பட்டத்தையும் நீக்கித் தன்னைப்போல் மற்றவர்களும் ஐரோப்பியர்களை யெதிர்த்துத் தங்களுடைய குறைகளை நீக்கிக்கொள்ளும் படியான வழியையுங் காட்டி அவ்வழியிற் செல்வதற்கான ஊக்கத்தையும் ஊட்டிவிட்டது.

லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் ஒருவர் எழுதி இருக்கிறபடி, இந்தியாவில் நடைபெற்று வருகின்ற குழப்பங்களுக்குக் காரணமா யிருப்பது இங்கிலீஷ் அரசாட்சியினுடைய மகிமையேயாம். ஐரோப்பியர்களைப் போல இந்தியர்களும் கல்விபயிலஇடமுண்டாயிற்று. இராஜாங்கத்தார்இராஜாங்கம் செவ்வனே நடந்து வருதற் பொருட்டு இந்தியர்களுக்கு இங்கிலீஷ் பாஷையைக் கற்றுக் கொடுத்தார்கள். இந்த பாஷையின் மூலமாய் இந்தியர்களுடைய அறிவு விருத்தியடைந்து ஐரோப்பியர்களைப் போலவே தாங்களும் அநேக சாஸ்திரங்களைக் கற்கத் தொடங்கி விட்டார்கள். இவ்விதமாய்க் கல்வியில் ஐரோப்பியர்களைப் போல் இந்தியர்களும் மேன்மை யடைந்தார்கள். ஆனல் மற்ற விஷயங்களில் அவர்களடைந்திருக்கும் மேன்மையையடைய முடியவில்லை. இதற்குக் காரண மென்ன வென்று உற்று நோக்கிப்பார்க்கும் பொழுது இது தங்களுடைய முட்டாள் தனத்தால் தான் வந்த தென்று உணர்ந்தார்கள். இந்தியாவிற்கு வந்து போயிருக்கும் அநேக இங்கிலீஷ் துரைகள் இந்தியர்களுக்கு இங்

கிலீஷ் பாஷையைக் கற்றுக்கொடாமலிருந்திருக்கும் பட்சத்தில் நாம் அவர்களோடு எதிர் வாதம் செய்ய இடம் வந்திருக்காது என்று எண்ணுகிறார்கள். ஆனால் இங்கிலீஷ் படித்த இந்தியர்களில்லா விட்டால் இராஜாங்கத்தில் மிகத் தாழ்ந்ததும் அளவற்றதுமான சிறிய வேலைகள் சரியாய் நடந்தேறாவென்ற சங்கதியை அவர்கள் அறியார்கள் போலும். அந்நிய இராஜங்கத்தை ஒழுங்காய் அரசாள வேண்டுமானால் அந்நியர்கள் நம்முடைய தேசபாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டும். அல்லது நாம் அவர்கள் பாஷையைக் கற்றுக் கொள்ள வேண்டும். முன்னையது இங்கிலீஷ் காரர்களுக்கு அசாத்திய மாய்த் தோன்றியதால், நமக்கு இங்கிலீஷ் பாஷையைத் தெரியும்படி செய்தார்கள். கல்வி கற்றவன் ஒவ்வொருவனும் தான் அறிந்த விஷயத்தை தன்னைச் சுற்றிலு மிருப்பவர்களுக்குத் தெரிவிக்கிறான். நம்முடைய தேசத்தார் இராஜாங்க அதிகார விஷயங்களிலும் கைத்தொழில்களிலும் அடைத்திருக்குந் தாழ்மையை மிகத் தெளிவாய் எடுத்துக் காட்டி இதற்குக் காரணம் நாம் அந்நியர்களுடைய அதிகாரத்திற்குட் பட்டிருப்பதே என்றும் தன்னைச் சுற்றிலும் இருப்பவர்களுக்குப் பிரசங்கம் செய்கிறான். சிறுபிள்ளைகளுக்கு வாழைப்பழத்தைக் கொடுத்து ஏமாற்றுவது போல நாம் கோபக்குறி காட்டுந் தோறும் நமக்கு சில வாக்குத்தத்தங்களைச் செய்து பின்பு அவைகளை நிறைவேற்றாமல் இருக்கிறதொழில் இங்கிலீஷ் கவர்ன்மெண்டாருக்கு இயற்கைத் தொழிலாகக் காணப் படுகிறது. இதனாற்றான் ஜனங்களும் ஏமாறிப்போய் மிகுதியான விசனத்தையடைந்து தாங்களே தங்களுடைய குறைகளைநீக்கிக்கொள்ள வேண்டிய வழிகளைப்பார்க்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஜனங்கள் படுகிற கஷ்டம் இது மாத்திரமல்ல. இன்னும் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய இங்கிலீஷ் குடியேற்ற நாடுகளில் நம்முடையஜனங்களை வெள்ளையர்கள் நடத்தும் விதத்தையும் இதில் நம்முடைய இராஜாங்கத்தார் தலையிடாமலிருப்பதை

யுங் கவனித்துத் தான் ஜனங்களுக்கு இங்கிலீஷ் ஆளுகையில் மேன்மேலும் வெறுப்பு அதிகரித்துக்கொண்டு வருகிறது. அத் தேசங்களுக்குப் போய்த்திரும்பி வந்தவர்கள் தங்களுடைய பரிதாபத்தைச் சொல்லும்பொழுது புண்ணில் வேல் நுழைந் தாற் போன்ற வருத்தத்தை ஜனங்களடைகிறார்கள். இப் படிப்பட்ட விரோதமான எண்ணங்கள் வெள்ளையர்களுக் கும் இந்தியர் களுக்கும் வளர்ந்து கொண்டு வரும் பட்சத் தில் இங்கிலீஷ் இராஜாவுக்கு இப்பொழுதிருக்கிற சக்ர வர்த்திப்பட்டம் நீடித்திராது. நாளுக்குநாள் இப்படியே சில காலஞ்செல்லுமாயின் சுதேசீயம் நிலைபெற்று விளங்கும் என்பதிற் சந்தேகமில்லை.

சுதேசிய மென்ற மரம் எல்லாராலும் நன்றாய்ப் பாது காக்கப்பட்டு வருகிறது. இம்மரமானது அந்நியர்களுடைய நிர்ப் பந்தத்தினாலும் சண்டைகளாலும் சிந்தப்படும் உதிர வெள்ள மாகிய தண்ணீரால் வளர்க்கப்படவில்லை. அல்லது நம்முடைய ஜனங்களுக்குள்ளே பலவித்தியாசங்களுண்டாய் அதனால் ஒருவர்க்கொருவர் சண்டை யிட்டுக்கொள்வதனா லுண்டான இரத்தத்தினால் வளர்க்கப்படுகிறதோவெனில் அப்படியுமன்று. போன நூற்றாண்டில் ஐரோப்பா கண்டத்தில் சில தேசங் களில் ஜனங்கள் அந்நியர்களுடைய இம்சையையும் யுத்தங் களையும் பொறுக்க மாட்டாமல் தாங்கள் ஒன்று சேர்ந்து இதை நீக்க முயன்றார்கள். ஆனால் நம்முடைய தேசத்திலோ இப்பேர்ப்பட்ட காரணங்கள் ஒன்றுங்காணப்படவில்லை. இந்தியா சமாதானமா யிருக்கிற காலத்திலே சுதேசியம் உண்டாய் வளர்ந்து வருகிறது. நாளடைவில் நம்மைப் பார்க்கிலும் நாகரீகத்திற் சிறந்தவர்களான அந்நியர்க ளோடு பழகி வந்த விசேஷத்தால் அவர்களைப் போல் நாமும் நல்லஸ்திதிக்கு வரவேண்டுமென்று தோன்றினது. மேலும் முன்னொரு காலத்தில் இந்த அந்நியர்களைப் பார்க்கிலும் நல்ல நாகரிக ஸ்திதியில் இருந்து இப்பொழுது நாம் கேவலப்

பட்டிருப்பதை யுற்று நோக்குந் தோறும் நம்முடைய மனதில் வெகு காலமாய் நாம் விருத்தியடைய வேண்டு மென்ற எண்ணம் குடிகொண்டு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. இவ்வண்ண மெல்லாம் உருண்டு திரண்டு இப்பொழுது சுதேசியம் என நம்முடைய தேசத்தில் அவதரித்தது. நம்முடைய ஸ்திதி இன்னதென்பதையும் நமக்கு வேண்டிய பொருள்கள் இன்னதென்பதையும் நன்றாய் அறியக்கூடிய பக்குவமும் சக்தியும் நமக்கு இப்பொழுது வந்துவிட்டது. அறிந்தபடி எச்சரிக்கை யோடும் முன்னாலோசனையோடும் நாம் உயர்ந்தபதவியை யடைவதற்கான முயற்சிகளைச் செய்யவும் துணிவுண்டாய் விட்டது. முதலில் ஜனங்கள் இராஜாங்க அதிகார விஷயமான சீர்திருத்தத்தில் தலையிடச் சமயமும் காரணமும் ஒத்திருந்தது. ஆனால் முன் ஐரோப்பிய தேசங்களிற் சம்பவித்தது போல் இப்பொழுது நம்முடைய தேசத்திலும் மெல்லமெல்ல ஜனங்களுடைய ஊக்கமும் நோக்கமும் கைத்தொழில் சம்பந்த மான சீர்திருத்தங்களிற் செல்லுகிறது. நம்மை அங்கு மிங்கும் அசைய விடாதபடி காலிற்றளை பூட்டிக் கொண்டிருப்பது யாதெனில் நாம் அந்நிய அரசாட்சிக்குட்பட்டிருக்குந் தன்மையே யன்றோ? இப்படிக் கைதிப் புள்ளிகளைப் போல் இருப்பதால் நமக்கு வேண்டியன வற்றை நாம் இஷ்டப்படி செய்துகொள்ள வழியில்லாமற் போகிறது. நாம் முன்னுக்கு வரவேண்டிய வழிகளைக் கடைப் பிடித்துச் செல்ல வேண்டுமானால் மேற் கூறிய பந்தத்தி னின்றும் நீங்குவதே யுத்தமமான காரியம். இல்லாவிடின் நாம் எடுத்துக் கொள்ளும் எவ்விதமான முயற்சிக்கும் இடையூறுகள் சம்பவிக்கும். இராஜாங்க விஷயமான சீர்திருத்தங்களாயினுஞ் சரி, ஆசார சீர்திருத்தங்களாயினுஞ் சரி, அல்லது மற்றெவ்விதச் சீர்திருத்தங்களாயினுஞ்சரி, இவைகளெல்லாம்ஜனங்களுக்கு நன்மையும் சுகத்தையும கொடுக்கக் கூடிய சாதனங்களாகும். நல்ல இராஜாங்கம் நல்ல படிப்பு நல்ல தர்மவழிகள் என்பவற்றாற் பயனென்ன? இவைகளால் ஜனங்களுடைய துன்பங்

குறைந்து இன்பம் அதிகரித்தலே இவற்றாலுண்டாகும்பயன். கைத்தொழில்கள் விருத்தியாய் நல்ல ஸ்திதியை யடைந்ததின் பின்னே, இராஜாங்க விஷயங்களும் சீர்ப்படும் என்பது போன நூற்றாண்டு சம்பந்தப்பட்ட ஐரோப்பிய தேசச்சரித்திரத்தைப் பார்க்கும் பொழுது புலப்படுகிறது. மிஸ்டர்வெயர் (Weir) என்பவர் "Historical Basis of Modern Europe" என்ற புத்தகமொன்று எழுதியிருக்கிறார். அப்புத்தகத்தில் அவர் பின்வருமாறு சில சங்கதிகளைச் சொல்லுகின்றார் :—

"ஜனங்கள் அநாகரிகமான பழைய பந்தங்களினின்றும் கோட்பாடுகளினின்றும் நீங்கியபின், இராஜாங்க விஷயமான தர்க்கங்களாவது சீர்திருத்தங்களாவது அவர்களுடைய இராஜ்யத்தில் மிகுதியுங் காணப்படா. ஆனால் எவைகள் முக்கியமாய் காணப்படும்? ஜனங்களுக்கு அத்தியாவசியமாய் வேண்டியிருக்கும் உணவுகளும் உடைகளும், இதன்மேல் கொஞ்சம் சௌகரியமாய் வசிப்பதற்கு ஏற்ற சாமான்களும், இவற்றிற் கெல்லாம் மேலாக மிக உல்லாசமாய் அனுபவித்தற்கான விலை யுயர்ந்ததும் விநோதமுமான பதார்த்தங்களும், நானாவிதமாயும் எப்பொழுதும் நவீனமாயும் உண்டாக்கப் படுகின்ற வஸ்துக்களும் ஆகிய இவைகளை உண்டு பண்ணுவதற்கான முறைகளைக் கவனிப்பதையே நாம் பெரும்பாலும் காணலாம். இம்முறைகளைக் கவனித்து, எல்லாரும் ஒருமித்து நடப்பதற்கு அநேக கோட்பாடுகளும் இக்கோட்பாடுகளை யனுசரித்து நடக்கும் அநேக சங்கங்களும் உண்டாகின்றன. இப்பேர்ப்பட்ட இராஜ்யத்தில் இராஜாங்க விஷயமான சபை ஒரு சிறு பாகமேயாகும். அநாகரிகக் கோட்பாடுகளின் வலிமை குன்றிய பொழுதும், அக்கோட்பாடுகள் முற்றிலும் ஒழிந்த விடத்தும், அல்லது அவைகள் சமயத்துக்குத் தகுந்தபடி மாறுதலடைந்த காலத்தும், ஜனங்களுடைய சரித்திரத்தைக் கவனித்தால் அது பலவிதமான சரித்திரங்களைத் தன்னுள்ளே யடக்கிக்கொண்டிருப்பதை யறியலாம். இங்கு ஜனங்களுடைய சரித்திரமென்பது அவர்கள், தங்களுக் கேற்

பட்டுள்ள அறிவுக்கும் தங்கள் தேசத்திலுள்ள பொருளமைப் பிற்குந் தகுந்த பிரகாரம் செய்வதற்குப் பிரயத்தனம் செய்த எல்லாவித முயற்சிகளையும் பற்றிச் சொல்வதே. மேற்குறித்த நிலைமையை ஜனங்கள் அடைந்த பிற்பாடு உண்மையில் அவர்களுடைய சரித்திரம் பூராவும் வியாபாரம் வியவசாயம் கைத்தொழில் முதலியவைகள் சம்பந்தப்பட்ட சங்கதிகளா னிறைந்திருக்கின்றது. மனிதனுக்கு ஜீவ ஆதாரமாயிருப்பது பணமே. ஆகையினால் ஜனங்கள் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயம் யாதெனில் பணத்தைக் சேகரித்தலும் அதைத் தமக்குள் நியாயமாய்ப் பகுந்து கொள்ளுதலுமேயாம். ஜனங்களுடைய நிலைமையைக் கட்டுப்பாடுகளால் ஒழுங்கு படுத்திக்கொண்டு வருதற்கு ஆசாரக் கோட்பாடுகளுக்கும் மத சம்பந்தமான கோட்பாடுகளுக்குஞ் சக்தியில்லாமற் போனால் வேறு விதமான ஏற்பாடுகளாற்றான் அதைச் சீர்ப்படுத்த வேண்டியிருக்கும். தர்ம சாஸ்திரம் தத்துவ சாஸ்திரம் மற்று முண்டான பலவிதமான சாஸ்திரங்களை யறிந்து அவற்றின் பிரகாரம் நடந்தால் ஜனங்களுடைய வாழ்க்கை ஒழுங்குடன் நடந்துவரும். இவைகளெல்லாம் அவ்வவற்றின் ஆராய்ச்சிகள் சம்பந்தப்பட்ட மட்டில் மிகச் சிரேஷ்டமாய் விளங்கின போதிலும், அவைகளால் ஜனங்களுக்கும் நாட்டிற்கும் மிகுதியானதும் நீடித்ததுமான பலன் உண்டாக வேண்டுமானால், ஜனங்கள் கூடி வாழ்தற் காதாரமாயிருக்கும் ஐசுவரிய விருத்தி சம்பந்தப்பட்ட எல்லாவித முயற்சிகளையும் பற்றி அச்சாஸ்திரங்களை ஆராய்ந்து அதற்கு வேண்டிய வழிகளைக் கற்பித்தல் வேண்டும்.''

இங்கிலீஷ் இராஜாங்கம் நம்முடைய தேசத்தில் ஸ்தாபகமானது காரணமாக நமக்கு முன் ஏற்பட்டிருந்த அநாகரிகமான ஆசாரக்கோட் பாட்டுகளினின்றும் அநேக விதமான அறிவு சம்பந்தப்பட்ட குறைகளினின்றும் நாம்

நீங்கப்பெற்றதோடு கூட, இடையூறின்றி நமதிஷ்டப்பிரகாரம் நாம் விருத்தியடைய வேண்டுமென்று ஆவல் கொள்ளும்படியான ஸ்திதிக்கும் வந்து விட்டோம். சுவாதீனங் கொஞ்சங் கொஞ்சமாய்க் கிடைத்து வந்ததால், முதல் முதலில் இராஜாங்க விஷயமான சீர்திருத்தங்களிற் றலையிட்டோம். கைத்தொழில் முதலியவற்றை விர்த்தி செய்வதற்கான முயற்சிகளைச் செய்வது அதற்கடுத்த படியாய் தன்னிலைமைந்தது. ஐரோப்பியர்களுடைய நாகரிகமும் நம்முடைய நாகரிகமும் ஒன்றாய்க் கலந்து கொண்டுவருகிறது. இதனால் நம்முடைய தேசத்திலிருக்கிற கொடுமைகளெல்லாம் நன்றாய்ப் புலப்படுகிறது. ஆகவே நம்முடைய நோக்கம் பூராவும் நமக்கு ஏற்பட்டிருக்கும் எல்லாவிதக் குறைகளையும் அவமதிப்பையும் நீக்குவதிற்செல்லுகிறது. இந்தியாவிலிருக்கிற எல்லாவகைப் பட்ட பொருள்களையும் அனுபவிக்க இந்தியர்களைத் தவிர மற்றொருவருக்குஞ் சுதந்திரங் கிடையாது. ஆனால் அனுபவத்தில் இச்சங்கதி வேறாயிருக்கிறது. அன்னியர்கள் நம்முடைய பொருள்களை நாம் அனுபவிக்க இடங் கொடாமல் அவற்றைக் கொள்ளை கொண்டு போகிறார்கள். இதைப்போல் அநியாயமான காரியம் வேறே எத்தேசத்திலுங் காணோம். இந்தியர்களுக்கு இப்பொழுதுண்டா யிருக்கும் அறிவுக் கிளர்ச்சியால் தோன்றுவதியாதெனின், இப்பேர்ப் பட்ட அநியாயங்களை யடியோடு களைந்தெறிந்தாலல்லது அக்கிளர்ச்சியின் பரபரப்பு சாந்தப் படாது போல் தோன்றுகிறது.

தற்சமயத்தில் நம்முடைய கோறிக்கை நிறைவேறுவதற்கு முக்கிய ஆதாரமாயிருப்பது சுதேசியம் என்பது யாவருக்குந் தெளிவாய் விளங்கக் கூடிய விஷயம். சுய அரசாட்சியைப் பெற்றுள்ள எல்லா நாட்டார்களும் அந்நிய சாமான்கள் தங்கள் தேசத்திற்குள் வந்து சுதேச சாமான்களோடு போட்டி போடாமலிருக்கும் பொருட்டும் அதனால் தங்களுடைய தொழிற்சாலைகள் கெட்டுப் போகாமல் நாளுக்கு

நாள் விருத்தியடையும் பொருட்டாகவும் பரதேச வஸ்துக்க ளின் மேல் மிகுதியும் வரியைப் போட்டு அப்புறப்படுத்துங் கொள்கையை அனுசரித்து வருகிறார்கள். நம்முடைய நன் மையைக் கவனிப்பதினும் இங்கிலீஷ்காரர் நம்மை அரசாள் வதில் அவர்களுடைய நன்மையையே முக்கியமாய்க்கவனிக் கிறார்கள். இந்த நோக்கத்தோடு இந்தியாவானது அரசா ளப் படுவதால், இங்கிலீஷ்காரர்களுடைய வியாபாரங்கெடும் படியான சீர்திருத்தங்க ளொன்றையும் இந்தியாவுக்கு அவர்கள் செய்ய மாட்டார்கள். மேலும் இந்தியா தேசத்தில் தான் அவர்களாற் செய்யப்படுகிற பல விதமான சரக்குகளும் விலையாக வேண்டி யிருக்கின்றன நம்முடைய நன்மையை முக்கியமாய்க் கவனித்தால் அவர்கள் வியாபாரத்திற்கு நாசம் வந்து சம்பவிக்கும். பிரதி வருஷமும் நம்முடைய தேசத் தில் ஏற்றுமதியும் இறக்குமதியும் பெருகிக்கொண்டே வரு கின்றன. இதனால் துரைத்தனத்தாருக்குக்கௌரவமும், நமக்கு வறுமையும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. வறுமை யதிகப்படவே நமக்குக் கோபம் கிளர்ந்து எரிகிறது. சும்மா கோபப் பட்டதினால் நம்முடைய வறுமை நீங்கி விடுமா? அல்லது இவ்வறுமை நீங்குவதற்கான ஏற்பாடுகள் நமக்காகக் கவர்ன்மெண்டார் செய்யப் போகிறார்களா? நாமே இதற் கான வழியைத் தேடிக்கொள்ள வேண்டும். இந்த வழியிற் செல்வதைத் தடுக்கவும் அல்லது அதற்கு இடையூறுகளை நிகழ்த்தவும் அவர்களால் முடியாது. பர்க் (Buke) என்ற இங்கிலீஷ் ராஜ தந்திரி யொருவர் பின் வருமாறு கூறு கிறார்:—"குடிகளின் ஸ்வாதந்திரிய விஷயமாயும் இராஜாங்க விஷயமாயுஞ் செய்யப்படும் ஏற்பாடுகளினின்றும் உலகத் திற்கு நன்மை விளைகிறதாவது, தீமை விளைகிறதாவது அவ்வக்காலங்களின் நிலைமைகளைப் பொறுத்திருக்கிறது." இவ்விதமாகவே இந்தியாவிற்கு தற்கால ஸ்திதியானது சுதேசியம் நிலை பெறுவதற்கேதுவாயிற்று. ஜெர்மனி, அமெரிக்கா, தேசங்களில் அவ்வவற்றின் தொழிற்சாலைகளைப்

பாது காப்பதற்கும் அதனுற் பின் அவைகள் தழைத்தோங்கு வதற்கும் ஆதாரமாக ஜனங்களுக்கு வரியேற்படுத்துகிருர்கள். இந்தியாவிலும் இராஜாங்கத்தார் இதற்காக வரியேற்படுத்தா விட்டாலும், நாங்கொண்டிருக்கிற சுதேசியத்திளுல் நமக்கு நாமே வரியேற்படுத்திக் கொள்ளுகிறேரும். இங்கிலீஷ் குடியேற்ற நாடுகளிலும் மற்றெல்லா ஐரோப்பிய நாடுகளிலும் பாவஸ்து வரிகளேற்படுத்துவதன் நோக்கம் அந்நாடுகள் ஒவ்வொன்றும் விருத்தி யடைவதற்காகவே. இராஜங்க விருத்தி, பொருள் விருத்தி ஆகிய இவ்விரண்டு அம்சங்களும் பாவஸ்து வரியேற்படுத்தல் (Protection)என்ற கொள்கைக்கு ஒருங்கே அமைந்திருக்கிறது. இங்கிலீஷ் பொருள் சாஸ்திர நிபுணர்கள் (English Economists) கொண்டிருக்குங் கொள்கைகள் மற்ற ஐரோப்பிய தேசங்களுக்கு எவ்வாறு பொருந்தாது போகின்றனவோ அது போலவே நம்முடைய தேசத்திற்கும் அக்கொள்கைகள் பொருந்தற்கு இங்கிலாண்டு தேசத்திற்கும் நம்முடைய தேசத்திற்கும் பூமியின் இயற்கை அதனுடைய விளைபொருள்கள் மனிதர்களுடைய இயற்கை முதலியவற்றில் வெகு வித்தியாச மிருக்கிறது. இங்கிலீஷ் சாஸ்திரிகள் அவர்களுடைய தேசத்தின் நிலைமையைத் தான் முக்கியமாய்க் கவனித்து அதற்கேற்றபடி விதிகளை யேற்படுத்தி சாஸ்திரங்கள் எழுதி யிருக்கிருர்கள். ஆகையிளுல் இங்கிலீஷ் காரருக்குப் பொருந்துகின்ற கொள்கைகளெல்லாம் நமக்குப் பொருந்தா. ஆளுல் நாம் எவர்களுடைய கொள்கைகளை முக்கியமாய் அனுசரிக்க வேண்டுமென்ருல் ஜெர்மனி அமெரிக்கா முதலியவற்றின் கொள்கைகளையேயாம். ஏனெனில் இந்த நாடுகளுக்கும் நம்முடைய நாட்டிற்கும் மிகுதியான பொருத்தங்களுள. நம்மைப் போல் அவர்களும் பெருத்த வியவசாயிகள் நம்முடைய பல விளைபொருள்கள் ஏராளமா யிருப்பது போல் அவர்கள் தேசத்திலும் விளைபொருள்கள் பலவகைப்பட்டதாயும் ஏராளமாயுமிருக்கின்றன. இவைகளெல்லாம் நமக்குக்

கடவுளாற் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் நாம் நாளுக்கு நாள் ஏழைகளாகிக் கடைசியில் வறுமைக்கடலில் ஆழ்ந்து தத்தளிக்கிறோம். ஆனால் அத்தேசங்கள் நாளடைவில் லக்ஷ்மீ கரம் அதிகரிக்கப் பெற்று ஐசுவரிய மாகிய மதுவையுட் கொண்டு மிகுந்த ஆனந்தத்தோடு நடனஞ் செய்கின்றன. ஆகையால் இவர்கள் எவ்வழியிற்சென்று தங்களை மேம்படுத்திக் கொண்டார்களோ அவ்வழிகளை யுணர்ந்து நாமும் அவற்றின் மூலமாக நற்கதியடைய முயற்சி செய்வோமாக. இவர்கள் பொருள் தேடுங் கொள்கைகளையும் இராஜங்கக் கொள்கைகளையும் ஒன்று சேர இணைத்து, அதனால் பெரிதும் முன்னுக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் இங்கிலீஷ் காரர்களோ பொருள் சேகரிக்கும் வழிகளுக்கும் இராஜாங்கம் நடத்தும் வழிகளுக்கும் சம்பந்த மிருக்கக்கூடாது என்பார்கள். இக்கொள்கையானது இங்கிலாந்துக்குப் பொருத்தமாயிருக்கிறது. ஆனால் நம்முடைய தேசத்திற்கு மேற்சொன்ன காரணங்களாற் அது பொருந்தாது. இங்கிலாந்து தவிர மற்றெல்லாத் தேசங்களிலும் இரண்டு கொள்கைகளையுஞ் சம்பந்தப் படுத்தியே வேண்டிய சீர் திருத்தங்களைச் செய்து தேசங்களை விருத்தி செய்கிறார்கள். புதுத் தொழிற் சாலைகளை யேற்படுத்துவதும், ஜனங்களுக்குப் போதுமான வேலைகள் எக்காலத்திலு மிருக்கும்படி செய்வதும், ஜனத் தொகையையும் ஐசுவரியத்தையும் அதிகப் படுத்துவதும், ஜனங்கள் தொழில் செய்யும் சக்திகளை விருத்தி செய்வதும், தேசம் பூர்வ காலத்தில் அடைந்திருந்த கௌரவத்திற்கும் தன்னிடத்தி லமையப் பெற்றுள்ள சாதனங்களுக்குந் தகுந்த படிய நாகரிகத்தில் உயர்வை யடையும்படி செய்வதும், ஆகிய இவையே சுதேசியத்தினால் நிறைவேறச் செய்ய வேண்டுமென்று கொண்டிருக்கும் நோக்கங்களாம். இந் நோக்கங்களை நமக்குமுன்னால் ஐரோப்பிய பொருள் சாஸ்திர நிபுணர்களுங் கொண்டிருந்தார்கள். சுதேசியம் தொழில்கள் சம்பந்தப்பட்டதோ டல்லாமல் இராஜாங்க

விஷயமான சங்கதிகளையும் தன்னிடத்தில் அமைத்துளது நமக்கேற்பட்டிருக்கும் அடிமைத்தனமும் அதனால் நமக்குண்டா யிருக்குங் குறைகளும் கொரோங்களுமே சுதேசியம் ஜனனமாவதற்குக் காரணமாயின. நமக்கு கவர்ன்மெண்டார் மேல் ஏற்படும் வெறுப்புக்கும் அது காரணமாக நாம் செய்யும் செய்கைகளுக்கும் அவர்களுடைய சொந்த செய்கைகளே காரணமாயிருக்கின்றன. ஆகையினால் நாம் கொண்டிருக்கும் எண்ணங்கள் அவர்களுடைய இயற்கைக்கும் சட்டத்திற்கும் விரோதமாக மாட்டா. இவ்விதமாய் ஏற்பட்டுள்ள எண்ணங்களையும் முயற்சிகளையும் கவர்ன்மெண்டாரால் இலேசாய்த் தடுக்க முடியாது. அப்படித் தடுக்க முயல்வார்களானால், அவர்களுக்கே மிகுந்த தீமை விளைக்கும்.

Printed at the Swadesamitran Press, Madras.

Crely

1-11-90